
# ஆழ்வார்களின் ஆரா அமுது

27



பேராசிரியர்
டாக்டர் ந. சுப்புரெட்டியார்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# ஆழ்வார்களின் ஆராஅமுது

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

THIS BOOK IS

PUBLISHED WITH THE FINANCIAL ASSISTANCE OF

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

UNDER THEIR SCHEME

"AID TO PUBLISH RELIGIOUS BOOKS".

பேராசிரியர்

டாக்டர் ந. சுப்புரெட்டியார்

## ஆண்டாள் பாரிக்கும் இடம்

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்,
காடுவாழ் சாதியும் ஆகப்பெற்றான்,
பற்றி உரலிடை யாப்பும் உண்டான்,
பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக்கொலோ?
கற்றனபேசி வசவு உணாதே,
காலிகள் உய்ய மழைதடுத்துக்
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற
கோவர்த் தனத்துஎன்னை உய்த்திடுமின்[1]

—ஆண்டாள்

1. *நாச்.* திரு. 12:8

# ஆழ்வார்களின் ஆரா அமுது

(ஆசிரியரின் 70-வது அகவை நினைவு வெளியீடு)

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்
(எம். ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி)
தமிழ்ப்பேராசிரியர், துறைத்தலைவர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி

விற்பனை உரிமை :

ஐந்திணைப் பதிப்பகம்

ஐந்திணைப் பதிப்பகம்
222, பாரதி சாலை, Phone: 845712
திருவல்லிக்கேணி, சென்னை-600005.

முதற் பதிப்பு—1987


© டாக்டர் எஸ். இராமலிங்கம் டி. லிட்.,
(ஆசிரியரின் மூத்தமகன்)
"வேங்கடம்"
AD—13 (பிளாட் - 3354)
அண்ணாநகர், சென்னை - 600 040
தொலைபேசி : 615583

விலை ரூ. 25-00

VENKATAM PUBLICATIONS
AD—13 (Plot. No. 3354)
Anna Nagar, Madras - 600 040
Ph : 615583

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், 6, நல்லதம்பித் தெரு,
சென்னை - 600 002. தொலைபேசி : 847174.

கவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (குறள்-78)



பிறப்பு: 20—6—1900

டாக்டர் G. T. கோபாலகிருஷ்ண நாயுடு

மாவட்ட நலவாழ்வுத்துறை அதிகாரி, கோவை (ஓய்வு)
முன்னாள் தலைவர், இந்திய மருத்துவக் கழகம், தமிழ்நாடு
முன்னாள் துணைத் தலைவர், இந்திய மருத்துவக்
கழகம் (மையம்), புதுதில்லி

*டாக்டர்* G. T. கோபாலகிருஷ்ண நாயுடு *அவர்கட்கு*

## அன்புப் படையல்

வேங்கடத் தப்பன் திருவருட் டுறையில்
விருப்புடன் தோய்பவர்; ஆழ்வார்
பாங்குற வழங்கும் அமுதினை யுண்டு
பண்புறு நயமெலாம் நுகர்வோர்;
ஓங்குமா வட்டம் பலநலம் காண
ஒப்பிலாப் பணிகளைப் புரிந்தோர்;
தேங்குசீர் டாக்டர் கோபால கிருஷ்ணச்
செம்மலார்க் குரியதிந் நூலே.

## குலசேகரப் பெருமாள் ஆசை

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே.[2]

—குலசேகராழ்வார்.

## அரங்கனின் சயனத் திருக்கோல அழகு

கங்கையிற் புனிதமாய
காவிரி நடுவு பாட்டு
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழை யேனே.[3]

—தொண்டரடிப்பொடிகள்.

---

2. பெரு. திரு. 4: 9
3. திருமாலை - 23

## சிறப்புப் பாயிர மாலை

கவிஞர் நாரா. நாச்சியப்பன்,
(நாவல் ஆர்ட்ஸ் பிரிண்டர்ஸ்,
137, ஜானிஜான்கான் சாலை, சென்னை-600 014)

1. அண்ணலை மேக வண்ணன்
ஆகிய பெருமாள் தன்னை
எண்ணியே நாளும் நெஞ்சில்
இருத்தியே அன்பில் ஆழ்ந்து
நண்ணியே நின்ற தாலே
நலமுற ஆழ்வார் என்று
திண்ணமாய்ப் போற்றப் பெற்றார்
செல்வர்பன் னிருவர் தாமே!

2. துன்பங்கள் சூழ்ந்த போதும்
துயரிலே ஆழ்ந்த போதும்
அன்பிலே தாழ்ந்த தில்லை
அரவணை யானைப் போற்றும்
இன்பமே இன்ப மென்றே
இணையிலா வாழ்வு கண்டு
மன்பதைக் கெடுத்துக் காட்டாய்
வாழ்ந்தவர் ஆழ்வார் ஆவார்!

**பொய்கையாழ்வார் :**

3. தாமரைப் பூவில் தோன்றித்
தமிழிலே நூறு பாட்டுக்
காமுறும் வண்ணம் சொன்ன
கவிஞரைப் பொய்கை யாழ்வார்
ஆமெனச் சொல்லும் வையம்
அவர்முதல் திருவந் தாதி
தேன்மலர் மாலை போலும்
திருச்சுடர் ஆழி யாற்கே!

4. சங்கமே குழந்தை யாகித்
தாமரைப் பொய்கைப் பூவில்
தங்கியே பிறப்பெ டுத்துத்
தமிழிலே பெருக்கெ டுத்து
வங்கமே நிறையு மாறு
வடித்தநற் சொல்லின் மாயை
இங்கொரு திருவந் தாதி
இணையிலாத் தெய்வப் பாட்டே!

**பூதத்தாழ்வார் :**

5. மாதவிப் பூவில் தோன்றி
மாநிலங் காப்பான் மீது
காதலை வைத்தி ரண்டாம்
கவினுறு திருவந் தாதி
ஓதிய கவிஞர்; ஞான
ஒளிவிளக் கேற்றி வைத்தார்
பூதத்தாழ் வாரே! கண்ணன்
பொன்னடிக் காட்பட் டாரே!

6. கார்நிறப் பெருமாள் கையின்
கதையதே பிள்ளை யாகிச்
சேர்ந்தது பூவில் என்று
செப்புமோர் மரபுண் டாமே!

நேர்தமிழ்ப் பூதத் தாரின்
நிகரில்அந் தாதிப் பாடல்
யார்படித் தாலும் தோன்றும்
அறிவெனும் ஒளிப்பெ ருக்கே!

**பேயாழ்வார் :**

7. செவ்வல்லிப் பூவில் தோன்றித்
திருப்பொன்னின் மேனி யோடு
பவ்வத்து நீலந் தானும்
படிந்ததோர் வண்ணங் கண்டே
ஒவ்வொன்றாய் நூறு பாட்டுத்
தொடருமுன் றாம்அந் தாதி
செவ்வையாய்ப் பாடி வைத்த
சேவையார் பேயாழ் வாரே!

8. வாளொரு கூறாய் வந்து
வடிவுறு பூவில் தங்கி
நாளொரு மேனி யாக
நலமுற வளர்ந்து நின்று
ஆளுறு போது நெஞ்சம்
அழிந்துகண் சுழன்று பேய்போல்
நீளுற நகைத்துப் பாடி
நின்றுபேய் ஆழ்வார் ஆனார்!

**திருமழிசையாழ்வார் :**

9. தேவனை யாழி யானைத்
திருச்சந்த விருத்தம் பாடிப்
பாவனை செய்து போற்றும்
மழிசையார்; தேனைச் சிந்தும்
நாவினாற் சொல்லிப் போந்த
நான்முகன் திருவந் தாதி
பூவினும் எழில தாகும்!
புதுமணம் பொலிவ தாகும்!

10. ஆழியின் கூறாய்த் தோன்றி
அழகிய பிள்ளை யாகிப்
பாழுறு சமயந் தோறும்
பல்கலை நூல்கள் ஆய்ந்து
வாழுறப் பக்தி யொன்றே
வழியெனக் கண்டு கொண்டே
ஏழிசை பாடிப் பாடி
இறைவனை ஏத்தி நின்றார்.

நம்மாழ்வார் :

11. திருக்குருகூர்ச் சடகோ பன்சொல்
திவ்வியப் பிரபந் தங்கேட் (டு)
உருகாத நெஞ்சும் உண்டோ?
உலகெலாம் உடைய மூர்த்தி
திருப்பேறு வேண்டி வேண்டித்
திருவாயின் மொழிகள் யாவும்
உருப்போட்டு வந்தாற் போதும்
உய்யலாம் ஞாலத் துள்ளே!

12. தாய்முலைப் பாலுண் ணாமல்
தானாக வளர்ந்த பிள்ளை
பேய்முலைப் பாலை யுண்ட
பிள்ளையின் சீர்த்தி போற்றித்
தூயநான் மறையின் சாரம்
தொகுத்துநற் றமிழில் தந்த
ஆயிரம் மீறிப் போன
அழகுறு கவிகள் தாமே!

மதுரகவியாழ்வார் :

13. உய்யவே சடகோ பன்சொல்
ஒவ்வொன்றும் போற்றி வாழ்ந்த
மையிலார் அடியார்க் கன்பர்
மதுரநற் கவியார் அன்பின்

மெய்யினை யுள்ளுந் தோறும்
மேனிலை தோன்றும் இந்த
வையகம் திருத்தி வாழ
வளர்ந்திடும் இன்பந் தானே!

14. சித்ததின் வயிற் றிருந்து
சிறுகுட்டி தான்பி றந்தால்
எத்தைத்தின் றெங்கி ருக்கும்
என்றதோர் கேள்வி யாலே
அத்தைத்தின் றங்கி ருக்கும்
அதுவென்ற பதிலைப் பெற்றுத்
தத்துவப் பொருள்உ ணர்ந்து
'தாம்பு' அருள் கவிதை மன்னன்!

குலசேகராழ்வார் :

15. திருவஞ்சிக் களத்து மன்னர்
குலசேக ராழ்வார்; மூத்த
பெருமாளின் பித்தர்: சீதை
பிடியுண்ட கதையைக் கேட்டுப்
பொருமியே போர்க்கெ ழுந்தார்
பொசுக்குவேன் இலங்கை யென்று
கருவியே படை யெடுத்துக்
கடலிலே இறங்கிச் சென்றார்!

16. அடியவர் திருட ராகார்
அதனைமெய்ப் பிக்க வென்றே
கொடியபாம் படைந்தி ருக்கும்
குடத்தினுள் கையை விட்டுப்
படிமிசை உண்மை நாட்டிப்
பக்தரின் மேன்மை காட்டி
அடியவர்க் கடிய ராகி
அறுபத்தே ழாண்டு வாழ்ந்தார்!

பெரியாழ்வார் :

17. பூமாலை கட்டி வில்லிப்
புத்தூரான் மகிழச் சூட்டிப்
பாமாலை யாத்தும் அந்தப்
பரமனை வணங்கி நிற்பார்
மாமாலை சூடித் தந்த
மங்கையை வளர்த்த தந்தை
ஆமாமாம் பெரிய ஆழ்வார்
அவர்பெரும் புலவர் ஆவார்!

18. பல்லாண்டு பாடிப் பாடிப்
பாதாதி கேசம் பாடிச்
சொல்லாண்டு கண்ணன் பேரில்
சுவைகூட்டும் தமிழைப் பாடி
வல்லானைப் பிள்ளை யாக்கி
வளர்க்கின்ற தாயும் தானாய்ச்
சொல்லார அன்பு தேக்கிச்
சுடர்க்கவி பாடி னாரே!

ஆண்டாள் :

19. தனக்கொரு கணவன் வேண்டித்
தானேதேர்ந் தெடுத்துக் கொண்டாள்
வனக்குயில் ஆண்டாள் என்னும்
வஞ்சியாள் அரங்கத் தானை
மனத்திலே இன்பம் பொங்க
மணக்கோலம் கொண்டு சென்றே
நினைத்ததை நடத்திக் கொண்டாள்
நின்மல னொடுக லந்தாள்!

20. கண்ணனை மாயன் தன்னைக்
காதலால் ஏங்கி ஏங்கி
எண்ணத்துள் வைத்துக் கொண்டாள்
எப்போதும் அவன் நினைப்பில்

வண்ணங்கள் பாடி நின்றாள்
வளர்த்தனள் காதல் தீயை
கண்ணுக்குள் அவனே! காணும்
கனவிலும் அவனே யானான்!

தொண்டரடிப் பொடியாழ்வார் :

21. விலைமகள் வலையுள் பட்டு
வேதனைச் சிறையுள் பட்டு
நிலைதடு மாறிப் பின்னர்
நிமலனார் அருளி னாலே
அலைவிலா உள்ளம் பெற்றே
அடியவர்க் கடிய ரானார்
அலைகடல் மிதப்பான் தொண்டர்
அடிப்பொடி யாழ்வார் தாமே!

22. மாலையின் கூறாய்த் தோன்றி
மண்ணிலே பிறப்பெ டுத்துக்
கோலமா மாயன் தொண்டே
குறியெனக் கொண்டு வாழ்ந்து
சீலமே கடைப்பி டித்துத்
திருவடித் தொண்டர் தொண்டில்
ஞாலமே போற்ற வாழ்ந்த
நாரணப் பொடிக ளாரே!

திருப்பாணாழ்வார் :

23. தீண்டாத பாண்கு லத்தான்
துறைவழி நிற்கக் கண்டு
வேண்டாத கல்லை வீசிச்
சாரங்க முனிவர் சென்றார்
ஆண்டவன் நெற்றி தன்னில்
அதுபட்டி ரத்தம் கொட்ட
மீண்டோடி வந்து தோளின்
மீதேற்றிக் கொண்டு சென்றார்.

24. சாரங்க முனிவர் மீது
தாமேறிக் கொண்டு சென்று
சீரங்க நாதன் பள்ளித்
திருக்கோலம் கண்ட பேற்றில்
ஈரங்கொள் பக்திப் பாடல்
ஈரைந்தை அருளிச் செய்தே
பாரங்கொள் வினைகள் மாயப்
பரத்திலே கலந்து விட்டார்!

திருமங்கையாழ்வார் :

25. நாலாயி ரத்தில் ஒன்றை
நவில்பர காலர்; அன்பர்
வேலாயு தத்தை ஏந்தி
விழிப்புடன் காத்தி ருந்து
மாலான அண்ணல் தன்னை
வழிப்பறி செய்த கள்ளர்
ஆலிநன் னாட்டு தித்த
அருட்டிரு மங்கை யாரே!

26. அழகுறு குமுத வல்லி
அமுதவாய் பருக ஏங்கிப்
பழகுறு மணத்தால் பற்றிப்
பரமனுக் கடிய ராகி
வழிப்பறிக் கொள்ளை யிட்டு
வருத்துமோர் நெறியை விட்டு
எழில்மிகு மாயன் தொண்டில்
இணைதிரு மங்கை யாழ்வார்!

சுப்பு ரெட்டியார் :

27. தேவாரம் திருமுறைகள் சித்தாந்தம்
ஆகமங்கள் தேர்ந்த மேதை
நாவாரச் சிவனருளைப் பாடுகின்ற
அடியாரின் நலங்கள் பேசிப்

பூவாரம் சூட்டுகின்ற சுப்புரெட்டி
யாரென்னும் புலவர் கோமான்
ஆழ்வார்கள் ஆரமுதைப் படைக்கின்றார்
இந்நூலில் அழகு கூட்டி!

28. எப்போதும் திருநீறு பொலிகின்ற
திருமுகத்தார் இவரின் உள்ளம்
தப்பேதும் இல்லாத சமரசசன்
மார்க்கத்தில் தழைப்ப தாலே
முப்புரத்தை எரித்தானும் திருவரங்கத்
துறைவானும் முனைந்து பார்க்கில்
ஒப்பென்றும் ஒன்றென்றும் ஒருகடவுள்
தாமென்றும் உணர்ந்த மேதை!

29. தன்மதமே உயர்வென்று சாதிப்பார்
வாழுகின்ற தரணி தன்னில்
தொன்னூலாம் திருக்குறளின் நெறிபோற்றும்
சுப்புரெட்டி யாரோ தூய
நன்னெறியின் வழிப்படுத்தல் சமயங்கள்
பணியென்னும் நம்பிக் கையால்
பன்னூலும் கற்றிடுவார் கற்றவற்றைப்
பிறர்க்குரைத்துப் பயன்கொள் வாரே!

30. ஆறுசொற் பொழிவுகளில் ஆழ்வார்கள்
எட்டுப்பேர் அருமை பற்றிக்
கூறுகின்ற முறைநோக்கின் சுப்புரெட்டி
யார்சொல்லின் கூர்மை தோன்றும்
பேறுவகை, வளர்ந்தமுறை, சோதனைகள்
பரமபதம் பெற்ற வாறும்
வீறுகவி வெளிப்பாடும் இலக்கியமேம்
பாடும்மிக விளக்கிச் சொல்வார்!

31. பாடல்களில் படிந்துள்ள வேதாந்தக்
கூறுகளும் படிமம் தானும்
நீடுவழக் கத்துள்ள மரபுகளும்
உட்பொருளும் நினைத்துக் கூறி
ஏடுபடிப் பவர்க்குமுழுப் பயன்நல்கும்
தகவல்களும் எடுத்துச் சொல்வார்
பாடுபட்ட பலனெல்லாம் தருமத்தாய்
பரிந்தளிக்கும் பரிசு போலே!

32. சுப்புரெட்டி யார்வந்து நுழைந்துவிட்டால்
ஓரிடத்தில் சுறுசு றுப்பும்
கப்பென்று வந்துவிடும்; எழுபதிலும்
விறுவிறுப்பாய்க் கடமை யாற்றும்
அப்பரென்பேன்; திருநாவுக் கரையரென்பேன்;
எளிமையிலும் அவரே யென்பேன்!
இப்படியோர் தமிழாசான் கிடைத்ததுசெந்
தமிழ்த்தாயின் இன்பப் பேறே!

33. சிரிப்பள்ளித் தெளிக்கின்ற திருமுகத்தில்
வெண்ணீறு பொலியும் பாங்கும்
விரும்போடு தமிழமுதைச் சொற்பொழிவாய்
மன்றத்தில் விரிக்கும் பாங்கும்
உருப்போடும் மாணவர்கள் உணர்வோடு
கற்றிடவே உதவும் பாங்கும்
இருப்போடு வரவாகும் ஊதியம்போல்
பயன்மிக்க பணியின் பாங்காம்!

34. அறிவியலும் இலக்கியமும் கற்றவராய்
இருப்பதனால் அறிவு நூல்கள்
செறிவுள்ள தமிழ்மொழியில் திறமாகப்
படைத்தளித்தார்; இலக்கி யத்தில்

நெறியற்ற கற்பனைகள் தமைவிளக்கி
விலக்கிடுமோர் நேர்மை காட்டிக்
குறிக்கோளும் தூய்தாகக் கொள்கைகளும்
சீராகக் கொள்ளக் கண்டோம்!

35. துறையூரும் சீர்காரைக் குடிநகரும்
வேங்கடமும் துய்த்த பேறு
குறையில்லாப் பெரும்பேறாம் சுப்புரெட்டி
யார்தொண்டு கொண்ட தாலே!
நிறைபெறவே ஓய்வுநாள் இலக்கியங்கள்
ஆய்வெனவே நெறிப்ப டுத்தி
முறையாகத் தமிழ்நாடு முழுவதற்கும்
பயனீந்தார் நீடு வாழ்க!

வாழ்த்து :

36. தில்லைப் பதியானும் சீர்வேங் கடத்தானும்
இல்லைவே றொன்றாய் இருந்திங்கே—நல்ல
குணந்திகழும் சுப்புரெட்டி யார்க்குத் தருக
மணங்கமழும் பல்லாண்டு வாழ்த்து!

2/141, கந்தசாமி நகர்
பாலவாக்கம்
சென்னை-600 041
6-7-1987

நாரா. நாச்சியப்பன்

# அணிந்துரை

'சிந்தாமணிச் செம்மல்' 'ஸ்ரீவைணவச் செல்வம்'

புலவர் மு. இராமசாமி எம்.ஏ., பி.எட்.

' இருந்தமிழே உன்னால் இருந்தேன்—இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் '

என்று அமிழ்தச் சுவையை வேண்டாத தாக்கி தன் சுவையையே அறிஞர்களை வேண்டச் செய்யும் பெற்றியது தமிழ். தமிழ்ச்சுவை அமிழ்தத்தையும் சுவையற்றதாக்கும் இயல்பினை உணர்ந்தவர்கள் தமிழ்ச் சான்றோர்கள்.

'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' தென்னாட்டில் வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் சிறந்த பக்திப் பனுவல். இதன் கவிதைச் சுவையும் பக்திச் சுவையும் அழகும் நுகர்ந்து நுகர்ந்து இன்புறத்தக்கவை. தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாகக் கொள்ளுதற்கரிய பெருந் தகுதி வாய்ந்தது. பக்திப்பாடல் என்ற நூல் வகையில் இதனைப்போன்ற பெருமையுடைய நூல்கள் இலக்கிய உலகில் மிக மிகச் சிலவற்றைத்தான் கருதுதல் கூடும். ஆழ்வார் பெருமக்கள் பன்னிருவரால் அருளிச் செய்யப் பெற்ற பாசுரங்களின் தொகுப்பே இப் பிரபந்தம். 'அருமறை துணிந்த பொருள் முடிவை, இன் சொல் அமுது ஒழுகுகின்ற தமிழினில்' விளம்பி அருளியவர்கள் தாம் ஆழ்வார் பெருமக்கள்.

'ஆழ்வார்களின் ஆரா அமுது' என்ற இந்த நூல் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் தாம் திருப்பதியில் பணியாற்றிய ஒரு காலப் பகுதியில் திருப்பதியைச் சுற்றி யுள்ள ஐந்து இடங்களில் நிகழ்த்திய ஆறு சொற்பொழிவு கள் அடங்கியது. ஒரு காலத்தில் ஒரு சில இடத்தினருக்குப் பயன்பட்ட பொழிவுகள் எல்லா இடத்தினருக்கும் எல்லாக் காலத்தினருக்கும் பயன்படட்டும் என்னும் பெருநோக்கால் இந்த ஆறு பொழிவுகளும் நூல் வடிவம் பெற்றுத் தமிழ் மக்களிடையே உலா வருகின்றன.

ஆழ்வார்கள் அரா அமுதப் பெருமானை எப்படி அநுபவித்தார்கள், அவ்வநுபவ ஆனந்தத்தை வெளியிடு வதற்கு எத்தகைய உயர்ந்த பாசுரங்களைப் பயன்படுத்தி னார்கள், அப்பாசுரங்கட்கு ஆசாரியப் பெருமக்களின் மணிப்பிரவாள நடையிலமைந்த வியாக்கியானங்கள் எப்படி நுட்பப் பொருளைக் காட்டியுள்ளன என்பவை போன்ற கருத்துகளை தெள்ளத் தெளிந்த ஆற்றொழுக்கான தீந்தமிழ் நடையில் விளங்க வைக்கும் ஆற்றலை இயல்பாகப் பெற்றவர் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார். ஆழ்வார் பெருமக்கள் மங்களா சாசனம் செய்தருளிய திவ்விய தேசங்களை நேரில் சேவித்து அங்கு நடந்தும், நின்றும், இருந்தும், கிடந்தும் சேவை சாதிக்கும் எம்பெருமான்களின் திருவருளுக்குப் பாத்திரமானவர். எழுபது அகவையைத் தாண்டும் நிலையின் எழுபத்தெட்டு நூல்களைப் படைத்த திருக்கரத்தினர். வாழ்நாளில் ஒரு சிறுபொழுதும் வீழ்நாள் படாமல் நற்றொண்டாற்றும் நல் இயல்பினர். உலைவின்றித் தாழாது உஞற்றி ஊழையும் உப்பக்கம் கண்டவர்.

துறையூர் உயர்நிலைப்பள்ளியை உருவாக்கி, திரு வாக்கி, அதன் தலைமையாசிரியராக நின்று பணியாற்றி அப்பக்கப் பெருமக்களின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரரானவர். காரைக்குடி ஆசிரியப் பயிற்சிக்

கல்லூரியின் முதல் தமிழ்ப் பேராசிரியர் — துறைத் தலைவராகப் பணியேற்றுக் கல்லூரி வளர்ச்சியைப் பெரிதாக்கி தம் வளர்ச்சியையும் வளமாக்கிக் கொண்டவர். இவரிடம் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான இளம் ஆசிரியர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர். இக்காலத்தில் இவர் படைத்த பயிற்சி பற்றிய ஐந்து நூல்கள் 'அர்த்த பஞ்சகம்' போல் இன்றும் செல்வாக்குடன் திகழ்கின்றன. 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டல்' திருக்கோயில் கொண்டுள்ள திருமலை திரு அடிவாரத்தில் உருப்பெற்றுத் திகழும் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் வேங்கடவாணனின் துணை கொண்டு தன் சொந்த முயற்சியால் 'ஓரேர் உழவன்போல்' தமிழ்த் துறையை உருவாக்கி அதைச் சீரும் சிறப்புமாக வளர்த்துத் திருவாக்கிய செம்மல். இவரது திருப்பதி வாழ்வும் (17 ஆண்டுகள்) தமிழ்த் திருத்தொண்டும் பொன்னெழுத்து களால் பொறிக்கப் பெற வேண்டியவை. செம்மாந்த சமயப் பெரு வாழ்க்கையராகிய இப்பெருமகனார் 'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் — நம்மாழ்வார் தத்துவம்' என்ற தலைப்பை ஆய்வுப் பொருளாக்கிக் கொணடு ஆங்கிலத்தில் ஆய்வுக் கட்டுரையை உருவாக்கி டாக்டர் (பிஎச். டி) பட்டம் பெற்று வேங்கடவன் திருவருளையும் நிறையப் பெற்றவர்.

இத்தகைய பெருமையைப் பெற்ற இப்பேராசிரியப் பெருமகனார் படைத்த இப்பக்திப் பனுவல் பல சிறப்பு களைக் கொண்டது. நயம், நடை, உவமை, மேற் கோள், வைண சமயக் கருத்துகள், பொதுக் கருத்துகள், சொற் பொருள் விளக்கம், ஐயத்தைத் தெளிவுபடுத்துதல்— ஆகிய எட்டு வகைகளில் இந்நூலின் உயிரோட் டத்தைக் காணலாம். வைணவ சமய உயிரோட்டத்தின் அடக்கமும் எட்டெழுத்தில் தானே உள்ளது?

க. நயம்: ஆழ்வார் பாசுரங்களில் பயின்று வந்துள்ள சொற்களின் பொருள் நுட்பத்தைப் படிப்பவரின் அறிவுக்குத் தித்திக்குமாறு எடுத்துக்காட்டுவதே நயமாகும். இத்தகைய நயமான பகுதிகள் பல உண்டு இந்நூலில். அவற்றுள் சில.

(1) காட்டில் வேங்கடம்: தண்டகாரண்ய வனத்தில் இருடிகளோடு கூடியிருந்து வனவாச ரசம் அநுபவித்த படிக்கு ஒப்பாகும் திருமலை வாசம் என்பதைக் காட்டுகின்றது இத்தொடர். கண்ண புரநகர்: வனவாசம் முடிந்து திருவயோத்தியில் அனைவரோடும் கூடியிருந்து நகர் வாச ரஸம் அநுபவித்தபடிக்கு ஒப்பாகும் திருக்கண்ணபுரவாசம் (பக். 33). வாமனன்: தன் உடைமையைப் பெறு கைக்குத் தான் இரப்பாளனாய் அவதரித்தபடி யல்லவா வாமனாவதாரம்? இதனால் சேதநலாபம் ஈசுவரனுக்குப் புருஷார்த்தமேயன்றி ஈசுவர லாபம் சேதநனுக்குப் புருஷார்த்தம் அன்று என்ற ஸத்ஸம்ப் ரதாயர்த்தம் விளக்கும் (பக். 33-34). (2) அமல னாதிபிரான் (1) 'உவந்த உள்ளத்தனாய் (2) 'மந்தி பாய் வடவேங்கட மாமலை' (3) என்ற முதல் மூன்று பாடல்களின் முதல் எழுத்துகள் அ, உ, ம என்பனவாகும். இவை ஓம் என்னும் பிரணவத்தின் வடிவமாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம் (பக். 61).

(3) 'கோரமாதவம் செய்தனன் கொல்' - இந்த அடியிலுள்ள 'செய்தனன்' என்பதைத் தன்மை வினைமுற்றாகக் கொள்ளாமல் படர்க்கை வினை முற்றாகக் கொண்டு 'என்ன தவம் புரிந்தானோ?' என்பதாக்குக. — என்ன அழகான நுட்பம்? (பக். 68) (4) 'செய்யவாய் ஐயோ' — 'பச்சை மா மலை போன்ற மேனியின் அழகிற்குத் தப்ப முடிந்தாலும்

அடியார்களின் நலன்களை வினவத் துடித்துக் கொண்டிருக்கும் திருவாயின் அழகிற்குத் தப்ப முடியாது. 'ஐயோ!' என்பதற்கு ''பண்டே பறி கொடுத்த என்னை அநியாயம் செய்வதே! என்று கூப்பிடுகின்றார் ஆழ்வார்'' (பக். 70). (5) 'ஞாலம் ஏழும் உண்டான்' என்று சொல்வதைவிட 'வெண் ணெய் உண்ட வாயன், என் உள்ளம் கவர்ந்தான்' என்று கூறுவதில் இந்த ஆழ்வாருக்கு (திருப் பாணாழ்வார்) முற்றிலும் மனநிறைவு' (பக். 74). (6) 'மல்லர்களோடு போர் செய்யக் கற்றாயேயன்றி என்னோடு சிருங்கார ரஸாநுபவம் பண்ணக் கற்றிலை காண்!' என்ற வசை தோன்ற 'மற்பொரு தோளுடை வாசுதேவா!' என்று விளிக்கின்றாள் (பக். 256). இதில் குலசேகராழ்வார் நாயகியின் உள்ளம் பளிச்சிடு கின்றது.

உ. நடை: எழுத்தாளரது உள்ளத்துக் கிளர்ந் தெழும் உணர்ச்சிச் சரக்கு, நூலைக் கற்போரது உள்ளத் திற்குச் சென்று சேரும் வண்ணம் அதனை ஏற்றிச் செல்லும் வாகனமாக அமைவது நல்ல நடை அழகு. பாசுரங்களின் நயங்களைப் படிப்பவருக்குப் பயனுடையதாக்கும்போது தான் நடை அழகு பெறுகின்றது. இத்தகைய உரைநடை அழகினை இந்நூலுள் கண்டு மகிழலாம், சில எடுத்துக் காட்டுகள் :

(1) 'கீதமே ஓர் உருவம் கொண்டு சிந்திப்பதும், திகைப்பதும், தெளிவதும், கை கூப்புவதுமாக இருக் கின்றதோ?' என்று மயங்குகின்றார் மாமுனிவர் (பக். 57). (2) 'ஓதி ஓதி, உணர்ந்து உணர்ந்து, இன்புற்று அநுபவித்தால் ஒவ்வொரு சொல்லும் ஒரு படித் தேனாக இனிக்கும் (பக். 70). (3) 'புராணக் கதைகள் புதை பொருளோடு கூடியவை' (பக். 128). (4) முதலாழ்வார்கள் மூவரையும் ஒரு மாபெரும்

பக்தியுகத்தைத் தோற்றுவித்த மூல புருடர்களான மும்மணிகள் என்று கொள்வது மிகப் பொருத்தமாகும்' (பக். 150).

௩. உவமை : எழுத்தாளர்களை ஏந்திச் செல்லும் நடையை அழகுபடுத்த உதவுவது உவமை அணிகளாகும். கூறுவோனின் கருத்து நயத்தை கேட்போனின் உள்ளத்தில் எளிமையாக ஆழப் பதிய வைக்கும் ஒருவித யுக்தியே உவமையாகும். இதனால் கவிஞர்கட்கும் எழுத்தாளர் கட்கும் உவமையணி வலக்கையாக நின்று தன் பணியை நிறைவேற்றுகின்றது. இந்நூலில் உவமைகள் தக்க இடத்தில் தக்கவாறு அமைந்து கருத்துகளை எளிமையாக்கி இருப்பதைப் பலவாறாகக் காணலாம்.

(1) 'எழு ஞாயிறு இருளை ஓட்டுவதுபோல், இருட் சக்திகளான அஞ்ஞானம், அதர்மம் முதலியவற்றை ஈசுவர சக்தி ஓட்டிக் கொண்டிருப்பதாக உணர்ந்தார் இப்பரமஞானி' (பக். 51). (2) 'அமுதபானம் பண்ணி வைப்பவர்கள் பாலையும் சோற்றையும் பிறவற்றையும் கண்ணெடுத்துப் பார்ப்பார்களோ? — இவரும் 'மற்றொன்றினை' என்கின்றார்—வேறொன்றின் பேர் சொல்லவும் கூசுகின்றார்' (பக். 74). (3) ''வானநூல் அறிஞர்கள் பூமியின் சிறுமையையும் அதனை ஈர்த்து நிற்கும் கதிரவனின் பெருமையையும் உணர்வதுபோல், பக்தர்களும் சமுசாரத்தில் உழலும் தம் ஆன்மாவின் சிறுமையையும் எல்லா உயிர்களையும் புரக்கும் இறைவனின் பெருமையையும் பேராற்றலையும் உணர் கின்றனர் (பக். 110). (4) 'ஆட்டில் தாடையில் தொங்கும் முலை (அதர்) போலே என்னையும் என் தாய் வீணாக அன்றோ பெற்றாள்?' (பக். 251).

௪. மேற்கோள் : கூறும் கருத்துகளைத் தெளிவு படுத்துவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் உதவுவது பொருத்தமான மேற்கோள்களாகும். இத்தகைய உயர்ந்த

மேற்கோள்கள் கையாளப் பெற்றிருப்பதை இந்நூலில் பரக்கக் காணலாம். அவற்றுள் சில:

(1) 'வாமனன் ஓட்டராவந்து' : 'இந்த வாக்கியம் சந்தர்ப்பஸ்வாரஸ்யத்தால், பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்வது: ''ஓரடி மண்ணுக்குப்ப பதறுமவன், இவர்களைப் பெறும் போதைக்கு, ஆறியிரானிறே. ஆஸுரப்பிரகிருதியான மகாபலி முன்னே கழஞ்சு மண்ணுக்குப் பதறி நடக்குமவன், இவளோடு தலை யானால், ஆறியிரானிறே. காற்றில் முன்னம் கடுகி ஓடிவரக் கடவனிறே' என்பது (பக். 35). 'வாமனன்' என்ற சொற்பொருளை விளக்குவதற்கு எடுத்துக் காட்டப் பெற்ற மேற்கோள் எவ்வளவு பொருத்தம்! (2) 'கமல பாதம் வந்து என், கண்ணின் உள்ளது ஒக்கின்றதே' (1) என்கின்றார். இவ்விடத்தில் முமுட்சுப்படியின் (146) இரண்டு வாக்கியங்கள் அநுசந்திக்கத் தக்கனவாகும். 'பிராட்டியும், அவனும் விடினும், திருவடிகள் விடாது திண்கழலயாயிருக்கும்' என்பது ஒன்று (பக்.61). (3) 'இத்தனை காலமாய் பாவங்களுக்கு இருப்பிடமாயிருந்த என் நெஞ்சை அப்பாவங்களை யோட்டிவிட்டுத் தனக்கு இருப்பிட மாகக் கொண்டான்' என்கின்றார் முன் இரண்டு அடிகளில். இந்த இடத்தில் நம்மாழ்வாரின் 'கல்லும் கனைகடலும்' (பெரிய. திருவந். 68) என்ற பாசுரம் அநுசந்திக்கத் தக்கது' (பக். 67). (4) திருமலைக் காட்சிகள் : 'பெரும்பாலும் எல்லா ஆழ்வார்களும் அர்ச்சாவதாரத்தில்தான் அதிக ஈடுபாட்டைக் காட்டு வதைப் போல் இந்த மூவரும் (முதலாழ்வார்கள்) அந் நிலையிலேயே அதிகம் ஈடுபடுகின்றார்கள். 'பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரணஜலம் போலே பரத்வம்; பாற்கடல் போலே வியூகம்; பெருக்காறு போலே விபவம்; அதிலே, தேங்கின மடுக்கள் போலே

அர்ச்சாவதாரம் (ஸ்ரீவசனபூஷணம்-42) என்ற வாக்கியத்தைச் சிந்திக்கின்றோம்' (பக். 99.)

இந்த மேற்கோள்கள் யாவும் தக்க இடங்களில் எடுத்துக் காட்டியிருப்பது ஆசிரியரின் வைணவப் பெரு நூல்களின் பயிற்சியைக் காட்டுகின்றது.

ரு. வைணவ சமயக் கருத்துகள்: வைணவ சம்பந்தமான சம்பிரதாய, சாத்திர, தோத்திர நூல்களை ஆழ்ந்து கற்றவர்கள்தாம் இலக்கியங்களில் ஆங்காங்கு ஒளி விட்டுத் திகழ்ந்து கொண்டிருக்கும் சமய சம்பிரதாயக் கருத்துகளை தெளிவாக எடுத்துக்காட்ட இயலும். அப்பெரும்பணியைச் செய்துள்ளார் பேராசிரியர் இந்த நூலில். சில காட்டுகள்:

(1) 'அர்த்த பஞ்சகம்' என்பது என்ன? இதனை ஈண்டு விளக்குவேன்... திடமாயுள்ள பகவத, பாகவதபசாரங்கள் பொறுக்க முடியாத அபசாரங்களாகும்' (பக். 21, 22). (2) பேற்றுக்கு எம்பெருமான் சாதனமேயொழிய நாம் செய்யும் கிரியையால் லாபங்களொன்றும் சாதனமல்ல' (பக். 226). (3) இதனால் பரமான்மா சீவான்மாவுக்கு நன்மை செய்வதிலே ஊன்றியிருப்பதும், சீவான்மா பரமான்மாவிடம் நம்பிக்கை கொள்ள வேண்டியிருப்பதும் தெளிவாகின்றன' (பக். 280). (4) 'சீவான்மா பரமான்மாவை விட்டு விலகிப் போக முடியாத நிலையையும் பின்னது முன்னதற்கு ஆதாரமாயிருக்கும் நிலையையும் உணர்கின்றோம்' (பக். 281). (5) 'சீவான்மா பரமான்மாவின் உடைமை' (பக். 285).

சா. பொதுக் கருத்துகள்: எந்தச் சமயக் கருத்துகள் அந்தச் சமயத்திற்கு அப்பாற்பட்டவராய் வாழ்கின்ற மக்களுக்கும் பொருத்தமாக-ஏற்றுக் கொள்பவையாக-அமைகின்றனவோ அவைதாம் உயர்ந்த மக்கட் சமுதாயத்திற்குரியவையாகும். அத்தகைய பொதுவான கருத்துகளை

ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலிருந்து வடித்துக் கொடுத்துள்ளார் நூலாசிரியராகிய பேராசிரியர். சில காட்டுகள்:

(1) 'தண்டனையும் ஒரு முறையில் இறைவனின் திருவருளேயாகும்' (பக். 209). (2) 'இறைவனது கருணை வெள்ளம் துன்ப வடிவிலும் நம்மை வந்தடையும்' (பக். 280). (3) 'பரமான்மா இன்பம் தருபவன் என்பதையும் சீவான்மா இன்பம் துய்ப்பவன் என்பதையும் அறிகின்றோம்' (பக். 282). (4) 'உலகத்து உயிர்கட்கெல்லாம் பரமான்மாவே வாழ்வின் அடிப்படை' (பக். 283).

ஏ. சொற்பொருள் விளக்கம்: கையாளப்படும் சொற்களுக்குப் பொருத்தமான பொருள் விளக்கம் செய்வதும் நூலின் சிறப்புகளுள் ஒன்றாகும். இந்நூலில் இத்தகைய பொருள் விளக்கத்திற்குச் சில காட்டுகள்:

(1) நடலை-நிற்பது, இருப்பது, விழுவது, எழுவதாய்ப்படுகின்ற நோய் (பக்.40). (2) 'பிரசாதம் என்பது, அருளுக்கிடமான திருத்துழாய் முதலியவை' (பக். 45-46). (3) கிங்கரன்—அடிமையாள்; கிங்கரன் செய்யும் தொழில் அடிமைத் தொழில், அதாவது கைங்கரியம் (பக். 54). (4) 'பாரமாய பழவினைகள்—பொறுக்க முடியாத சுமையாகவுள்ள நெடுங்கால வினைகள்' (பக். 66). (5) 'பயின்றது—நித்தியவாசம் செய்தது' (பக். 87). (6) 'ஜன்ம உத்கர்ஷ அநுகர்ஷங்கள் தெரிவது'—சாதியும் ஆசிரமும் ஞானமும் ஒழுக்கமும் தள்ளத் தக்கவை என்கை' (பக். 220). (7) 'சலங்கொண்டு — தணியாத முற்றின வைரம் கொண்டு' (பக். 239).

ஐ. ஐயத்தைத் தெளிவுபடுத்துதல்: கற்பனவற்றைக் கசடறக் கற்பதுதான் கற்கும் முறையாகும். மயக்கமும் ஐயமும் இல்லாமல் உண்மையைத் தெளிவுபடுத்துவது

எழுத்தாளர்களின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். சில காட்டுகள்:

(1) 'அரங்கன், என் அமுதினைக் கண்ட கண்கள்'— இந்த அடியில் வருவது 'அமுதா, அமுதனா' என்பதில் ஐயப்பாடு. இதனைத் தெளிவுபடுத்துகின்றார் இந் நூலாசிரியர். 'உப்புச் சாறாய் எட்டா நிலத்தில் இருக்கும் தேவர்களின் அமுதம் போலன்றிப் பரமப் மதுரமாய் பரம சுலபமாயிருக்கும் நான் கண்ட அமுதம்' என்பார் 'என் அமுதினை' என்கின்றார். சிலர் 'அமுதனை' என்று ஓதுவது சுவையற்றது. ஆழ்வாருக்குப் பெரிய பெருமாள் அமுதத்தை யொத் திருத்தல் கருத்தேயல்லது 'அமுதனாகவே இருத்தல்' கருத்தன்று. திருமங்கையாழ்வாரும், 'அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய அந்தணனை' (திருநெடுந். 14) என்று போற்றுவது கண்டு மகிழத் தக்கது' (பக், 74). 'அமுதன்' அல்லது 'அமுது' என்ற மேற்கோள் காட்டித் தெளிவுபடுத்தியிருப்பது நூலாசிரியரின் மதி நுட்பம் நூலோடு இயைந்த ஒன்று என்பதை வாசகர்கட்குத் தெளிவாகின்றது. (2) 'அற்றமே ஒன்ற றியீர், அவனல்லால் தெய்வம் இல்லை' (திருமாலை-9) —இதில் 'அற்றம்' — மறைபொருள்; உட்கருத்து 'அவன் அல்லால் தெய்வம் இல்லை' என்பதால் தேவதாந்தரங்கள் இல்லை என்று மறுக்கின்றார் அல்லர் ஆழ்வார். எம்பெருமானுக்குச் சரீரமாகப் பல தேவதைகள் உள என்பதற்கு மறுப்பு இல்லை. 'சரணமாகப் பற்றத்தக்க தெய்வம் வேறில்லை' என் பதையே ஆழ்வார் உணர்த்துவது (பக் 216-17). இத் தெளிவிற்குப் பிறகு இப்பாசுரம் எச்சமயத்தினர் உள்ளத்தையும் புண்படுத்தாதிருப்பதைக் காணலாம்.

நிறைவாக: இந்நூலின் மூலமாக, ஆழ்வார்கள் வழிபட்ட ஆராஅமுதை மனதாரக் கண்டு தரிசிக்கலாம்;

அவர்கள் அருளிய தமிழ் அமுதினைச் சுவைத்து இன்புறலாம். இந்நூலாசிரியரின் அகத்தோற்றத்து வைணவப் பொலிவைக் கண்டு வியந்து போற்றி மகிழலாம்.

இவருக்கு வேங்கடத்தெம்மானின் திருவருள் வெள்ளம் கோத்து நிற்பதால், இப்பேராசிரியப் பெருந்தகை இது போன்ற பயனுடைய நூல்கள் பலவற்றை உருவாக்கி விரைவில் 78 என்ற எண்ணை 100க்கு (நூல் 78 ஐ 100 ஆக்குதல்) உயர்த்திவிடுவார் எனப் பெரிதும் நம்புகின்றேன். 100 நூல்களின் ஆசிரியராக இப்பேரறிஞர் விளங்கும் காலம் மிக அண்மையதாக அமையவேண்டி 'வேங்கட விளக்கினை' வழுத்தி வழிபடுகின்றேன். ஆரா அமுதாக இனிக்கும் இவ்வரிய நூலுக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பைக் கிடைத்தற்கரிய பேறாகக் கருதுகின்றேன். இதுவும் அவனிட்ட வழக்காகவே கொள்ளுகின்றேன்.

'திருவரங்கம்'
7, எல்லப்பச்செட்டியார் குடியிருப்பு
இராசுபுரம்-637 408
சூலை, 6, 1987

மு. இராமசாமி

# நூல்முகம்

மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத் தூர்உறை வான்தன்
பொன்னடி காண்ப தோர்ஆசை யினால்என்
பொருகயற் கண்இணை துஞ்சா
இன்னடி சிலொடு பால்அமுது ஊட்டி
எடுத்தஎன் கோலக் கிளியை
உன்னொடு தோழமைக் கொள்ளுவன், குயிலே!
உலகுஅளந் தான்வரக் கூவாய்[4]

—ஆண்டாள்

பன்னிரண்டு ஆழ்வார்களைப் பற்றியும் அவர்களின் அருளிச் செயல்கள் பற்றியும் எளிய நடையில் நூல்கள் எழுதிப் பொதுமக்கட்குப் பக்தி விருந்தளிக்கவேண்டும் என்ற என் பேரவா நிறைவேறும் பாங்கில் 'ஆழ்வார்களின் ஆரா அமுது' என்ற தலைப்பில் எட்டு ஆழ்வார்கள் பற்றியும், அவர்களுடைய அருளிச் செயல்களை விளக்கும் பாங்கிலும் இஃது இரண்டாவது நூலாக வெளிவருகின்றது. நான் திருப்பதியில் பணியாற்றியபொழுது திருவேங்கடவன் பல்கலைக்கழக விரிவுச் சொற்பொழிவுத் திட்டத்தின் கீழ் பாக்காலாத் தமிழ்ச் சங்கம், ஏகாம்பரக் குப்பம் கழக உயர் நிலைப்பள்ளி, நகரி கழக உயர் நிலைப்பள்ளி, குண்டக்கல் தமிழ்ச் சங்கம், கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் ஆகிய இடங்களில் நிகழ்த்திய ஆறு சொற்பொழிவுகளே இந்த நூலாக வடிவம் பெறுகின்றன. நூலின் பொருள் தெவிட்டாத ஆரா அமுதாக இருப்பதால் நூலுக்கு அதை வழங்கிய ஆழ்வார்களின் திருநாமத்தோடொட்டிய பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

---

4. நாச். திரு, 5:5

ஒவ்வொரு சொற்பொழிவிலும் தெரிந்த அளவு ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக உரைத்து அவர்தம் அருளிச் செயல்களைப் பல கோணங் களில் எடுத்துக்காட்டியுள்ளேன். வைணவப் பெருமக்க ளுக்கு இந்நூல் நல்லதொரு விருந்தாக இருக்கும் என்று கருதுகின்றேன். பொதுமக்களும் இந்த ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் ஆழங்கால்பட்டு அநுபவிப்பதற்கு இப்பனுவல் ஒரு தூண்டுகோலாக — ஏன்? ஊன்றுகோலா கவும் — அமையும் என்று நம்புகின்றேன். இந்த இரண்டு நோக்கங்களும் நிறைவேறினால் என்னுடைய இந்த முயற்சி பயனுள்ளதாயிற்று என்று மகிழ்வேன். தம்மையும் தமது அருளிச் செயல்களையும் அறிமுகப்படுத்திய என்னை ஆழ்வார்களும் வாழ்த்தி ஆசி கூறுவார்கள் என்றும் உறுதி கொள்ளுகின்றேன்.

திருப்பதித் தமிழ்ப் பணியிலிருந்து ஓய்வு பெற்று 1978 சனவரி 14 ஆம் நாள் சென்னையில் குடியேறியதிலிருந்து 'தேனாய், கன்னலாய், அமுதாய்'த் தித்திக்கும் ஆழ்வார் களின் பாசுரங்களை 'வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது' (நான். திருவந். 63) என்றவாறு என் காலம் கழிகின்றது. சொற் பொழிவுகள் நடைபெற்ற போதும், என் ஆராய்ச்சியின் போதும் நான் ஆழங்கால்பட்ட பாசுரங்களை மீட்டும் மனத்தில் இருத்தி அசை போடுவதற்குப் பெற்ற வாய்ப்பின் காரணமாக இந்நூல் பிறக்கின்றது. சொற்பொழிவுக்காக நான் தயாரித்து வைத்திருந்த குறிப்புகளை விரித்து எழுதும்போதும் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு அநுபவித் தேன். என் அநுபவம் இப்பனுவலைப் படிப்போரிடமும் எழுவதற்குக் காரணமாக இருக்குமானால் அதனை யான் பெற்ற பெரும் பேறாகவே கருதுவேன்.

தமிழகத்தில் ஏறக்குறைய 20 ஆண்டுகளும் ஆந்தி ரத்தில் ஏறக்குறைய 20 ஆண்டுகளும் பணியாற்றி ஓய்வு ஊதியம் கூடப் பெறாது தவிக்கும் அடியேனுக்கு ஏழுமலையான் ஓரளவு நிதி வழங்கி (நூலின் முட்டு வழியில் 50 விழுக்காடு) உதவி புரிந்திராவிடில் இந்நூல் அச்சு வாகனம் ஏறிக் கற்போர் கரங்களில் கவினுறத் தவழ்வ தற்கு வாய்ப்பே இருந்திராது. 'செல்வர்க்கு அழகு செழுங் கிளை தாங்குதல்' என்ற பேருண்மையை அறிந்து செல்வச் சீமானாகத் திகழும் ஏழுமலையான் 'அகலகில்லேன் இறையும்' என்று அவன் திருமார்பைவிட்டு அகலாதிருக்கும்

செல்வச் சீமாட்டியைத் தாங்கிக் கொண்டிருப்பவன். இந் நிலையில் நாடோறும் எண்ணற்ற பக்தர்கள் அவனுடைய கருவூலத்தை நிரப்பி வழியச் செய்து கொண்டுள்ளனர். இந்த உறுப்பெருஞ் செல்வத்தை அவனைப்பற்றியும் அவன் அடியார்கள் பற்றியும் எழுதப்பெறும் நூல்கட்கு வரையாது வழங்கும் நிதி உதவித் திட்டத்தில் இந்நூலும் நிதி உதவிபெற்று வெளிவருகின்றது. இந்த 'வேங்கடம் மேவிய விளக்கு' மேலும் நான் எழுதிவைத்திருக்கும் 'மாணிக்க வாசகர்', 'சடகோபன் செந்தமிழ்' 'தாயுமான அடிகள்' ஆகியவற்றிற்கும், எழுதிவரும் 'கீதைப் பொழிவுகள்' என்பதற்கும், எழுத நினைத்திருக்கும் 'வடலூர் வள்ளல்' 'பட்டினத்தடிகள்' முதலான பக்திப் பனுவல்கட்கும் நிதி ஒளிகாட்டி அவற்றை அச்சேறச் செய்வான் என்ற திடமான நம்பிக்கை என்றும் என்பால் உண்டு. இவனது கருவியாக இயங்கிவரும் திரு K. சுப்பாராவ், திரு N. S. இராமமூர்த்தி ஆகிய இருவருக்கும் என் அன்பு கலந்த நன்றி என்றும் உரியது.

இந்நூலைச் செவ்விய முறையில் அழகுற அச்சிட்டு உதவிய கற்பக அச்சக மேலாளர் திரு. க. நாராயணன் அவர்கட்கும், எழில் கொழிக்கும் முறையில் அட்டை ஓவியம் வரைதல், அச்சுக் கட்டை தயாரித்து, மூவண்ணத்தில் அச்சிடும் வரையிலும் பொறுப்பேற்று உதவிய ஓவிய மன்னர் திரு. P. N. ஆனந்தன் அவர்கட்கும், காப்புறை (Lamination) போட்டு உதவிய மாருதி லாமினேஷன் உரிமையாளர் திரு. பார்த்திபன் அவர்கட்கும், இவ்வளவும் ஆன நிலையில் அழகிய முறையில் கட்டமைத்துக் கற்போர் கையில் கவினுறத் தவழச் செய்த திரு. V. திருநாவுக்கரசுக்கும் என இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்த நூலுக்கு சிறப்புப் பாயிர மாலை நல்கிய கவிஞர் நாரா. நாச்சியப்பன் செட்டிநாட்டில் ஆத்தங்குடி முத்துப் பட்டணத்தைச் சேர்ந்தவர்; தனவைசிய மரபில் தோன்றியவர் (பிறப்பு 13—7—1927). அறுபது அகவையைத் தாண்டிய இவர் தம் வாழ்க்கையைத் தமிழகத்திலும் பர்மாவிலும் நடத்தியவர். 1960-முதல் சென்னையில பல்வேறு துறைகளில் பணியாற்றி நிலையாக அச்சுத் தொழிலை நடத்தி வருபவர். திருச்சி தேசியக் கல்லூரியில் இடைநிலை வகுப்பு வரை படித்திருந்தாலும் தமிழில் பெரும்

புலமையை எய்தி கவிபாடும் ஆற்றல் கைவரப் பெற்றவர். புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'பொன்னி' என்ற திங்கள் இதழின் துணையாசிரியராகவும் (1947-48), 'முத்து' என்ற சிறுவர் இதழின் ஆசிரியராகவும் (1948), சென்னையி லிருந்து வெளிவந்த 'தென்றல்' என்ற வார இதழின் துணை யாசிரியராகவும் (1959-60), 'இளந்தமிழன்' என்ற இலக்கியத்திங்கள் இதழின் ஆசிரியராகவும் (1972-74) பணி யாற்றியவர். இந்த அநுபவமே இவரை நிரந்தரமாக அச்சுத் தொழிலில் தள்ளிவிட்டது.

நகரத்தார் வாழ்க்கை 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று இருந்தாலும் சமய வாழ்வும், தமிழ்ப் பண்பாடும் அவர்தம் மூச்சாக இருந்து வருவதைக் காரைக் குடியில் பத்தாண்டுக்காலம் பணியாற்றிய காலத்தில் நன்கு அறிய முடிந்தது. பண்பாட்டின் உருவமாகத் திகழும் நாரா. நா. அவர்கள் குழந்தை எழுத்தாளர் சங்கம், சைவ சித்தாந்தப் பெருமன்றம், Dravidian Linguistic Assiociation என்பவற்றின் வாழ்நாள் உறுப்பினராகவும், தமிழ்க் கவிஞர் மன்றம், தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை இவற்றின் சிறப்பு உறுப்பினராகவும் இருந்து பணியாற்றுபவர். பர்மாவில் இருந்தபோது இரங்கூன் நகரத்திலுள்ள அகில பர்மா தமிழ்ச் சங்கத்தின் மேலாளராகவும் (1952), இரங்கூன் பர்மா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் (1954) பணியாற்றியவர்.

விரைந்து கவிபாடும் வேந்தராகத் திகழும் நாரா. நா. அவர்கள் 'காளி கோயில்', 'நீளமூக்கு நெடுமாறன்', 'ஒட்டுக்குடுமிப் பட்டுச்சாமி' முதலிய 36 சிறுவர் கதை நூல் களும்; 'சிறுவர் பாட்டு', 'மழலைச் சோலை', 'பாடு பாப்பா' முதலிய 10 சிறுவர் பாடல் நூல்களும்; 'மோகனக் கிளி', 'புதுவைக் கள்ளன்' முதலிய 6 புதின நூல்களும்; நாச்சியப்பன் பாடல்கள் தொகுதி - 1, 2, 'பொய்யாக் காதல்', 'ஈரோட்டுத் தாத்தா' முதலிய 7 கவிதை நூல் களும்; 'நான்கு பார்வைகளில் பாரதிதாசன்', 'குயிலும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலும்' என்ற 2 திறனாய்வு நூல்களும்; 'கடல் வீரன்', 'மூன்று திங்களில் அச்சுத் தொழில்' போன்ற 4 பிறநூல்களும் எழுதி வெளியிட்டவர்.

இத்தகைய பெருமை வாய்ந்த கவிஞர் நாரா. நா. அவர்கள் எட்டு ஆழ்வாரைப் பற்றிய இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரப் பாமாலை வழங்கிச் சிறப்பிக்கும்

போக்கில் எஞ்சிய நான்கு ஆழ்வார்களையும் அறிமுகப் படுத்திவைத்துள்ளார். பெரியாழ்வார், நம்மாழ்வார், மதுர கவிகள், திருமங்கையாழ்வார் இவர்கள் பற்றித் தனி நூல்கள் உருவாகி 'விட்டு சித்தன் விரித்த தமிழ்' மட்டிலும் வெளிவந்துள்ளது. 'சடகோபன் செந்தமிழ்' 'கலியன் குரல்' விரைவில் வெளிவரும்! மாலை வழங்கிய மாண்பார் கவிஞருக்கு என் இதயம் கனிந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய திரு மு. இராமசாமி நான் பிறந்த வட்டமாகிய துறையூர் வட்டத்தைச் சேர்ந்தவர். ஐந்தாண்டுகள் திருவையாற்றில் திரு பு. ரா. புருடோத்தம நாயுடு அவர்களின் அருமை மாணாக்கராகத் திகழ்ந்து 1946இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வித்துவான் (முதல் வகுப்பு) பட்டம் பெற்று 1947இல் சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் மாவட்டக் கழக உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியேற்று வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்து மாணவர்கள் மதிப்பீட்டில் நல்லாசிரியராகவும், தோழ ஆசிரியர்களிடையே நல்ல நண்பராகவும், பெற்றோர்கள் பொதுமக்கள் மதிப்பீட்டில் மதிப்பும் மரியாதைக்குரியவராகவும் திகழ்ந்து 35 ஆண்டுகள் நற்பணியாற்றி நற்புகழ் ஈட்டி 1974—1975 ஆண்டில் மாநில நல்லாசிரியர் விருதும் பெற்றவர்; 1979 முதல் சில ஆண்டுகள் துணைத் தலைமையாசிரியராகவும் பணியாற்றி 1983இல் ஓய்வும் பெற்றார். மாணவர்கள்பால் பேரன்பு கொண்டவர்; ஏழை மாணவர்கட்குப் பெரிதும் உதவியவர்.

இவர் பணிக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் (1964—66) விடுப்புடன் காரைக்குடி அழகப்பர் கல்லூரித் தமிழ் ஆய்வுத் துறை இயக்குநர் பெரும் புலவர் 'தமிழ்க் கடல்', 'சிவம் பெருக்கும் சீலர்' ராய். சொக்கலிங்கம் அவர்களின் கீழ் ஆய்வுப் பணி செய்து பெரும் புகழ் பெற்றவர். ராய. சொ. வின் தொடர்பு இவரைப் பல்லாற்றானும் உயர்த்தியுள்ளது என்பது என் கருத்து. 'பெரியாரைத் துணைக் கோடல்' என்பதே வள்ளுவத்தில் ஓர் அதிகாரம். இவர் தொடர்பால் இவருடைய புகழும் புலமையும் பெரியோர்களின் தொடர்பும் மிகுந்திருக்க வேண்டும். (காரைக்குடியில் பத்தாண்டு வாழ்வில் (1950—60) அடியேன் இப்பெரும் புலவரின் நெருங்கிய தொடர்பால் பெற்ற பயன் அளவிடற்கரியது). ராய. சொ. வின் தொடர்பால் தமிழக மெங்கும் சுற்றிப் பார்க்கவும், சிவ, வைணவத் தலங்

இந்த நூலை அன்புப் படையலாக்கும் பேறு பெறு கின்றேன். இதனால் இந்த நூலிலுள்ள எட்டு ஆழ்வார் களும் இவருக்கு ஆசி கூற, அந்த ஆசியின் கனத்தால் இவர் தம் பக்தி மேலும் மேலும் பெருகும் என்பது என் அதிராத நம்பிக்கை. இவருடைய ஆசியால் இந்நூல் தமிழ் மக்கள் பால் நல்ல செல்வாக்குடன் திகழும் என்ற நம்பிக்கையும் என்பால் உண்டு.

இந்த நூலை வெளியிடுவதற்கு என் இதயத் தேரை நடத்தி தமிழ்ப் பணி, அறிவியல் பணி, சமயப் பணி ஆற்று வதற்கு நல்ல உடல் நலத்தையும் மன வளத்தையும் நல்கி வரும் அந்தர்யாமியாக என் இதயத்தில் எழுந்தருளி யிருக்கும் 'முத்திக்கு வித்தகன் வேங்கடத்து அச்சுதனை' மனம் மொழி மெய்களால் வணங்கி வாழ்த்திச் சரண் அடைகின்றேன்.

வெற்பென்று வேங்கடம் பாடினேன்; வீடாக்கி
நிற்கின்றேன்; நின்று நினைக்கின்றேன்: கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன் காண். [5]

—திருமழிசையாழ்வார்

'வேங்கடம்'
சென்னை-600 040
10-7-1987

ந. சுப்புரெட்டியார்
தொ. பே. 615583

---

5. நான். திருவந். 40

களைச் சேவிக்கவும் வாய்ப்புகள் பெற்றவர். ராய. சொ. வின் நூல்களாகிய 'திருத்தலப் பயணம்', 'வில்லியும் சிவனும்', 'கம்பனும் சிவனும்' என்ற மூன்று அரிய நூல்கள் வெளிவரப் பேரளவில் உதவியவர். அவர் தொடர்பால் இவருக்குப் பேச்சாற்றலும் எழுத்தாற்றலும், மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் வளர்ந்தன என்பது அடியேனின் கணிப்பு. தனியாகப் பயின்று தமிழ் எம். ஏ., பி. எட். பட்டங்களைப் பெற்று உயர்ந்தவர். இப்போது பதினொரு நூல்களின் ஆசிரியர், சிறந்த வைணவர்; ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு அவற்றில் தோய்ந்தவர். கம்பனில் ஈடுபட்டு இராமகாதையின் ஆழத்தையும் அகலத்தையும் கண்டவர். தமிழகத்தில் நடைபெறும் எல்லாக் கம்பன் விழாக்களிலும் இவருக்குப் பெரும் பங்கு உண்டு.

ஒல்லும் வகையெல்லாம் இவர் ஆற்றி வரும் தமிழ்ப் பணி போற்றுதற்குரியது. ஒன்று பேச்சால், மற்றொன்று செயலால். ஓராண்டுக் காலம் ஈரோடு தமிழ்ப் பேரவையில் சிந்தாமணி பற்றி தொடர் சொற்பொழிவுகள் ஆற்றி 'சிந்தாமணிச் செம்மல்' (1963) என்ற விருதைப் பெற்றவர். இராசிபுரம் தெய்வநெறிக் கழகத்தில் கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றியவர். இப்பணியைப் பாராட்டி, ரிஷிகேசம் வேதாந்தப் பல்கலைக்கழகம் 'கம்பரா மாயண உபன்யாச ரத்னா' (1977) என்ற விருதை வழங்கியுள் ளது. அண்மையில் பண்ணுருட்டி வைணவ சபை இவருக்கு 'ஸ்ரீ வைணவச் செல்வம்' (1987) என்ற விருதை வழங்கிச் சிறப்பித்துள்ளது. கல்கத்தா, பம்பாய்த் தமிழ்ச் சங்கங் களில் இவர் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றி ஆங்கு வாழும் தமிழ் மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திர ரானவர். காஞ்சிகாமகோடி சங்கராச்சாரியரின் ஆசியும் (1979) பெற்றவர். இராசிபுரத்தில் பல இலக்கிய விழாக்கள் நடைபெறக் காரணமாயிருந்து மாணவர்கள்பாலும் இளைஞர்பாலும் மொழி உணர்வையும் நாட்டுப் பற்றை யும் வளர்த்தவர். இவர் திருவையாற்றில் பயின்றது முதல் (1941—46) இன்று வரை இவரது பல பணிகளைக் கவனித்தவனாதலால் இவரிடம் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவன். இதனால் என்னுடன் தம்பி முறையில் பழகும் இவருடைய அணிந்துரை இந்நூலுக்குக் கிடைத்தது இந்நூலின் பேறு; என் பேறும் கூடத்தான். நன்முறையில்

அணிந்துரை நல்கிய அன்பருக்கு என் நன்றி என்றும் உரியது.

டாக்டர் G. T கோபாலகிருஷ்ண நாயுடு அவர்களை அறிஞருலகம், மருத்துவருலகம், பக்தர் உலகம் நன்கு அறியும். பாமரரும் நன்கு அறிவர். மக்கள் நலவாழ்வுத் துறையில் தம் வாழ்க்கையைத் தொடங்கிய இப்பெருமகனார் 'பணியே பரமன் வழிபாடு' என்ற கொள்கைப் பிடிப்புடையவராக இருத்தமையால் தாம் பணியாற்றிய இடங்களிலெல்லாம் தம்முடைய பணி முத்திரையைப் பதித்து வந்தவர். ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தில் தாம் பணியாற்றிய இடங்களிலெல்லாம் தம்முடைய கடுமையான உழைப்பால் மக்கள் நலவாழ்வுக்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்கிப் பொதுமக்களும் அரசும், ஒருமுகமாகப் போற்றும் பெருமையுடையவராகத் திகழ்ந்தவர். கருவிலே ஆன்மிக நாட்டமுடைய இப்பெரியார், திருவரங்கம், சிதம்பரம், திருமலை போன்ற திருத்தலங்களில் பணியாற்றும் வாய்ப்புகள் ஏற்பட்டபோது திருத்தலப் பயணிகள் அதிகமாகக் கூடும் திருத்தல நகரங்களைத் தூய்மையாக வைத்திருக்கும் பொறுப்பு இவரைச் சார்ந்து விட்டது. இப்படிச் சொல்வதைவிட திருவரங்கத்துப் பெரிய பெருமாளும், தில்லைக் கோவிந்தராசனும் (ஏன்? நடராசப் பெருமானும் கூடத்தான்!) திருமலை சீநிவாசனும் தாம் கோயில் கொண்ட இடங்களில் இவர்தம் சேவையைப் பெற வேண்டும் என்று கருதியே இவரைச் சில ஆண்டுகள் தாம் இருக்கும் இடங்கட்கு வரவழைத்துக் கொண்டார்கள் என்று கருதுவது பொருத்தமல்லவா? குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்தானே சிறப்புப் பெறும்? இவரை ஆட்கொண்டு தமது சிறந்த அடியார்களில் ஒருவராக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று கருதியே இவருக்கு இந்த வாய்ப்புகள் கிடைக்கச் செய்தனர் என்றே எனக்குத் தோன்றுகின்றது. இது மட்டுமா? தொழிலாளர்களே நாட்டுச் செல்வத்தைப் பெருக்குபவர்கள் என்ற உண்மையை அறிந்து தொழிற்பேட்டைகள், தொழிற்சாலைகள் நிறைந்த கோவைக்கும் இவர்தம் திருப்பணி கிடைக்கச் செய்தான் காக்கும் கடவுளாகிய அந்த நாராயணன். இதனால் கோவையும் இவர்தம் அயரா உழைப்பால் நல்ல சூழ்நிலையைப் பெறும் வாய்ப்புப் பெற்றது. அதிக காலம் பணியாற்றிய அந்நகரிலேயே

ஒரு திருமாளிகையை அமைத்துக் கொண்டு அதற்கு 'வேங்கடம்' என்ற திருநாமமும் இட்டுக் கொண்டார். மேற் குறிப்பிட்ட மூன்று அர்ச்சாவதாரப் பெருமாள்களிலும் வேங்கடவாணனே இவர்தம் உள்ளத்தை அதிகமாகக் கொள்ளை கொண்டு விட்டான் என்று இதனால் கருத வேண்டியுள்ளது. காஞ்சி வரதராசர் ஏன் இவரை மறந்து விட்டாரோ? தெரியவில்லை!

உடையவரின் நியமனப்படி திருமலையில் அனந் தாழ்வான் அக்காலத்தில் ஏரி வெட்டியும் நந்தவனம் அமைத்தும் கைங்கரியம் செய்ததைப் போல டாக்டர் நாயுடுவும் 1940 வாக்கில் மலேரியா நோய் அதிகமாகப் பீடித்திருந்த திருமலையை நலவாழ்வுக்குகந்ததாகச் செய்து தமது கைங்கரியத்தைப் புனிதமாக்கிக் கொண்டார். 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விட்ட' ஏழுமலை அப்பனின் திருவுள்ளத்தை யார் தாம் அறிய முடியும்? எம்பெருமான் நம்மாழ்வாரைக் கொண்டு தன்னைப் பாடுவித்துக் கொண்டதுபோல் ஏழுமலையப்பனும் தன் நகரில் உள்ள மலேரியா நோயை இவரைக் கொண்டு ஒழித்துக் கட்டினானோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. இந்த நற்பெயர் தன் அடியானான டாக்டர் நாயுடுவுக்கு வர வேண்டும் என்பது அந்த சீநிவாசனின் திட்டம் போலும்; இந்தக் கைங்கரியத் தால் டாக்டர் நாயுடு உடையவரின் சீடர் அனந்தாழ் வானுடன் வைத்து எண்ணப்படுவாராகின்றார்.

திருத்தில்லையில் கோவிந்தராசரையும் நடராசரையும் ஏக காலத்தில் சேவிப்போருக்கு சைவ வைணவப் பிணக்கு ஏற்படாது என்பது அடியேனின் கருத்து. அவர்கட்கு அரியும் அரனும் ஒன்று என்ற எண்ணமும் உறுதிப்படும். இங்குப் பணியாற்றிய காரணத்தால்தான் டாக்டர் நாயுடுவின் உள்ளத்தில் இப்பரந்த நோக்கம் உறுதிப் பட்டது போலும்! இவருடைய பல நூல்களில் ஒன்றான 'அரங்கம் முதலான ஆற்றங்கரையினிலே' என்ற நூலில் சைவ வைணவத்தலங்களை அற்புதமாகக் காட்டி மகிழ்ந்து நம்மையும் மகிழ்விக்கின்றார். இவர்தம் இலக்கியப் படைப்புகள் சிலவாகவும் சிறியனவாகவும் இருப்பினும் அவற்றுள் அடங்கியுள்ள இவர்தம் பக்திப் பெருக்கு கங்கையாய், கோதாவரியாய், காவிரியாய் விரிந்து கிடப்பதைக் காணலாம். ஏன்? திரிவிக்கிரமன்போல் உயர்ந்தும் காணப்படுவதைக் கண்டு மகிழலாம்.

அறிவியலைப் பயின்று மருவத்துறையில் தேர்ச்சி பெற்று மக்கள் நலவாழ்வுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் நாயுடு அவர்கள் தமது இறுதிக் காலத்தைத் திருப்பதியில் தம் அருமை மகன் தாவர இயல்துறைப் பேரா சிரியர் திரு கோ. லீலாகிருஷ்ணனுடன் கழித்து வருகின்றார். திருப்பதியில் இவர்கள் தங்கும் பகுதி 'வைகுண்டபுரம்' என்ற குடியிருப்பு. பிறவியை அறுத்து வைகுண்டவாசம் இப்பெருமகனாருக்கு உறுதி என்பது இது சூசகமாக அமைந்து விட்டது என்பது அடியேனின் கணிப்பு. நான் திருப்பதிக்கு 1960-ஆகஸ்டில் பணியாற்றத் தொடங்கிய நாள் தொட்டு இவர்தம் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. 'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்ற வள்ளுவரின் வாய் மொழிக்கு இவர் இலக்கியமாய்த் திகழ்வதை இவரிடம் கண்டு மகிழ்கின்றேன். சுருக்கமாகக் கூறினால், 'அறிவியல் அறிஞர், எழுத்தாளர், உரையாடல் கலைஞர், உயர்ந்த பண்பாளர், மனிதாபிமான மிக்கவர் — இவர்கள் யாவரும் உருண்டு திரண்டவர்தாம் டாக்டர் G.T. கோபாலகிருஷ்ண நாயுடு என்பார் என்று கூறலாம். இவர்தம் சௌலப்பிய சௌசீல்ய குணங்கட்கும் இவர் அடைந்த பெரும் புகழுக்கும் அறிகுறியாகத்தான் இவர் இந்திய மருத்துவக் கழகத்தின் (சென்னை) தலைவராகவும், இந்திய மருத்துவ மத்திய கழகத்தின் (புது டில்லி) துணைத்தலைவராகவும் தேர்ந் தெடுக்கப் பெற்றார் என்று கருதலாம். இவற்றுள் பின்னது கிடைத்தற்கரிய பேறு. இப்பொறுப்புகளில் இவர் பணியாற் றியபோது தமிழக ரீதியிலும் அனைந்திந்திய ரீதியிலும் புகழ் மாலைகள் வந்து குவிந்தன. இவையெல்லாம் ஏழுமலை யானின் கருணையால் ஏற்பட்ட விளைவு என்பது என் கருத்து. 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற பொய்யாமொழிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். கடந்த 27 ஆண்டுகளாகப் பழகிச் சத்துவக் குணம் நிறைந்த இப்பெரியாரின் உயர் பண்புகளால் கவரப் பெற்றேன்; முதலாழ்வார்களிடம் காணப்படுவது போன்ற இவர்தம் அமைதியான போக்கு, சாந்தமும் புன்முறுவலும் தவழும் திருமுக மண்டலம், அதிர்ந்து பேசாத பண்பு இவை கண்டாரை ஈர்க்கும் தன்மையுடையவை. பக்தியின் சிகரமாகக் காணப்படுபவர். சீவன் முக்தர்நிலையிலிருப் பவர். இத்தகைய பெரியார் பால் அடியேன் கொண்டுள்ள பெருமைக்கும், மரியாதைக்கும் அறிகுறியாக

# பிழை — திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 5 | திகழ்கின்றது | திகழ்கின்றது. |
| 55 | 29 | துரத்தமால் | துரத்தாமல் |
| 153 | 15 | உம்மர் | உம்பர் |
| 176 | 18 | தன் | தம் |
| 190 | 4 | அனுட்டிக்க | அநுட்டிக்க |
| 211 | 23 | தனது | அவனது |
| 237 | 22 | வித்தர் | வித்தகர் |
| 239 | 25 | வீராவாதத்துடன் | வீரவாதத்துடன் |
| 249 | 30 | பற்றிப்பேசி | பற்றிப்பேசிக் |

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | அன்புப் படையல் | v |
| | சிறப்புப் பாயிர மாலை | vii |
| | அணிந்துரை | xviii |
| | நூல்முகம் | xxx |
| 1. | ஞானப்பூங்கொடி | 1 |
| 2. | பாணர்குல விளக்கு | 49 |
| 3. | மூவர் ஏற்றிய மொழி விளக்கு | 78 |
| 4. | பக்திசாரர் | 151 |
| 5. | தொண்டரடிப்பொடிகள் | 195 |
| 6. | குலசேகரப்பெருமாள் | 234 |


## பின்னிணைப்புகள்


| | | |
|---|---|---|
| 1. | பயன்பட்ட நூல்கள் | 286 |
| 2. | ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசங்கள் | 288 |
| 3. | 108 - வைணவ திவ்விய தேசங்கள் | 292 |
| | பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள் | 296 |

# 1. ஞானப் பூங்கொடி*

தமிழ்ச் சங்கச் சான்றோர்களே, ஊர்ப் பெருமக்களே! வணக்கம். தமிழ்கூறு நல்லுலகத்தில் ஒரு சிறந்த ஊராகத் திகழும் பாக்காலா தமிழகத்தையும் ஆந்திரத்தையும் இணைக்கும் ஓர் இருப்பூர்திச் சந்திப்பு நிலையமாகத் திகழ்கின்றது. இந்தத் தமிழ்ச் சங்கம் பல தமிழ் நிகழ்ச்சிகட்கு ஏற்பாடுசெய்து, பிழைப்பின் நிமித்தம் தமிழகத்திலிருந்து இங்குக் குடியேறியுள்ள தமிழ் மக்களுக்குத் தமிழ் விருந்து அளித்து வருவதைக் கண்டு மகிழ்கின்றேன். இதற்கு அரும்பாடுபட்டுச் சங்கத்தை நிறுவுவதற்கு ஒத்துழைத்த திரு. ஜி. கோபாலகிருட்டிணன் (ஆசிரியர்), திரு. சகதீசன் (இரயில்வே அலுவலர்) போன்ற உண்மைத் தொண்டர்களின் பணி தமிழர் வரலாற்றில் தக்க இடம் பெறும் என்பது அடியேனின் கணிப்பு.

இன்று உங்கட்கு முன் 'ஞானப் பூங்கொடி' என்ற தலைப்பில் பேச முன் வந்துள்ளேன். இந்த ஞானப் பூங்கொடி யார்? இவர்தாம் பெரியாழ்வார் வளர்த்த பெண் கொடி. "மானிடவர்க்கென்று பேச்சுப் படில்

---

* 26-1-67இல் பாக்காலா தமிழ்ச் சங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு. திருவேங்கடவன் பல்கலைக்கழக விரிவுச் சொற்பொழிவுத் திட்டத்தின்கீழ் அமைந்தது.

வாழகில்லேன்'[1] என்று மாநுட நாற்றத்தைப் பொறுக்காதவள். 'அன்றிப்பின், மற்றொருவர்க்கென்னை பேசலொட்டேன் மாலிருஞ்சோலை மாயர்க்கல்லால்'[2] என்று தாம் ஆண்டவனுக்கு வாழ்க்கைப்படுவதாக உறுதி பூண்டவள். இங்ஙனம் மணத்துடன் முளைக்கும் திருத்துழாய் போல் எம்பெருமான் திறத்து ஆராதகாதலுடன் அவதரித்தவள். ஞானத்துடன் பிறந்த இந்தப் பூங்கொடி தான் உறுதி பூண்டவண்ணமே திருவரங்கச் செல்வனையே கொள்கொம்பாகப் பற்றிப் படர்ந்து அப்பெருமானுடன் நிலைத்து வாழ்பவள். குழந்தைப் பருவத்திலேயே ஞானம் கைவரப் பெற்றவளாதலால் மணவாள மாமுனிகள் இவளைப் 'பிஞ்சாய்ப் பழுத்தாளை'[3] என்று புகழ்ந்துரைப்பர்.

**இவள் பிறப்பு:** இப்பெருமாட்டியின் பிறப்பு விநோதமானது. சீதாப்பிராட்டியாரின் பிறப்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். சனகன் யாகபூமியை ஏற்படுத்துவதற்காக நிலத்தை உழும்போது கொழுமுனையில் அகப்பட்டதாகப் பேசுவர். இதனைக் கம்பநாடன்,

> **உழுகின்ற கொழுமுகத்தின்**
> **உதிக்கின்ற கதிரின்ஒளி**
> **பொழிகின்ற புவிமடந்தை**
> **உருவெளிப்பட் டெனப்புணரி**
> **எழுகின்ற தெள்ளமுதோ(டு)**
> **எழுந்தவளும் இழிந்தொதுங்கித்**
> **தொழுகின்ற நன்னிலத்துப்**
> **பெண்ணரசி தோன்றினாள்[4]**

[கதிர் - சூரியன்; புவிமடந்தை - பூமிதேவி; உரு - திருவுருவம்; புணரி - கடல், இழிந்து - தாழ்வடைந்து.]

---

1. நாச். திரு. 1:5
2. பெரியாழ். திரு. 3.4:5
3. உ. ர. மா. 24
4. பால. கார்முகம். 17

என்று காட்டுவன். இவளை சீதேவியின் அம்சமாகக் கொள்வர். இது போலவே சிரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் திருத்துழாய் பாத்தியமைத்தற் பொருட்டுக் களைக்கொட்டு கொண்டு திருநந்தவனத்தைக் கொத்து கையில் கொத்தின நிலத்தடியில் சீதேவி — பூதேவியின் அம்சமாக ஒரு பெண் மகவு கிடைத்தது. கிடைத்த நாள் ஆடி மாதம்; பூர நட்சத்திரம்.

இன்றோ திருவாடிப் பூரம் எமக்காக
அன்றோ இங்காண்டாள் அவதரித்தாள்[5]

என்ற மணவாள மாமுனிகளின் திருவாக்கால் இஃது அறியப்படுகின்றது.

மக்கள் செல்வம் வாய்க்கப் பெறாத பெரியாழ்வாருக்கு இஃது "இறைவன் கொடுத்த செல்வமாகத்" தோன்றியது. இச் செல்வத்தை அவன் பெயரால் வளர்ப்பது தன் கடமை என்று கருதினார். குழந்தையும் கையுமாக இல்லத்திற்கு ஏகினார். அவர் தேவிகளான விரஜை அவரை எதிர் கொண்டு வந்து உள்ளம் உருகி, திருக்கோயிலிலிருந்து அவர் கொண்டுவரும் பிரசாதத்தைப் பெற்றுக் கொள்வதைப்போல் இரண்டு கைகளாலும் பயபக்தியுடன் வாங்கிக் கொண்டாள். குழந்தையை அணைத்துக் கொண்டே போய்த் தொட்டிலில் இட்டாள். ஆழ்வார் அந்தக் குழந்தை கிடைத்த விதத்தைச் சொல்லச் சொல்ல அவளுடைய பக்தியும் அதிசயமும் அதிகரித்தன. அந்தத் தெய்விகக் குழந்தையின் அழகை அள்ளி அள்ளிப் பருகினாள். "பிள்ளைக் கலிதீர இந்தப் பெண் கனியைப் பெருமாளே நமக்கு அளித்து விட்டார்" என்று எண்ணி அக் குழந்தையை நோக்க நோக்க அவள் உள்ளத்தில் உவகை புதிது புதிதாக ஊறிக் கொண்டிருந்தது. பெரியாழ்வாரும், "நாம் உய்யும்பொருட்டே இந்தக் குழந்தையை எம்பெரு

5. 2. ர. மா. 22

மான் நமக்கு அளித்திருக்கின்றான்!'' என்று ஆனந்தக் கடலில் மூழ்கினார்.

**பிள்ளைப் பருவம்:** இத்தெய்வக் குழந்தைக்கு கோதை என்று திருநாமம் சூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார்கள். இளமையில் கலைகள் முழுதும் தன்னடைவே நிரம்பப் பெற்று வளர்ந்து வந்தாள் கோதையார். ஆழ்வாரைப் போன்றே கோதையாரும் இளமை தொட்டே கண்ணன் பக்தியில் ஈடுபட்டாள். தந்தையாரால் குழந்தையாகக் கருதப்பெற்ற கண்ணன் இவளுக்குக் காதலனாக அமைந்து விடுகின்றான். தக்கவயது எய்தியதும் ஆழ்வாரே குழந்தைக்குப் பஞ்சசம்ஸ்காரங் களைச்[6] செய்து வைத்து பரஞானத்தையும் போதித்தார்.

கோதை தந்தையாரை அதிகமாக நேசித்து வந்தாள். பெரியாழ்வார் அதிகாலையில் துயிலெழுந்து நந்தவனத் துக்குப் பூக்கொய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கோதையும் அவருடன் சென்று பூ எடுப்பாள். அவர் அந்த மலர்களைக் கண்டு செண்டு, கண்ணி, தொடையல், பிணையல், இண்டை முதலிய பலவகை மாலைகளைத் தொடுப்பார். அதனை உற்றுக் கவனித்த கோதையும் அவற்றைத் தொடுக்க முயற்சி செய்வாள். ஆழ்வார் நந்தவன கைங்கரியம் செய்து கொண்டிருக்கும்போது

---

6. **பஞ்ச சம்ஸ்காரம்:** தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், யாகம் என்ற ஐந்தும் புறச் சுத்தியாக ஆசாரியன் மூலமாகப் பெறுதல். தாபம்—சங்க சக்கரங்களைத் தோளில் சுட்டுத் தரித்துக் கொள்ளல். புண்ட்ரம்—மேனோக்கி இட்டுக் கொள்ளும் திருமண்காப்பு அணிதல். நாமம் — இராமாநுசதாசன் என்ற தாஸ்ய நாமம் பெறுதல். மந்திரம் — எட்டெழுத்து மந்திர உபதேசம் பெறுதல். யாகம்—பகவதாராதனம்; எம்பெருமானை வழிபடுதல்.

கோதையும் சின்னஞ்சிறு குடமொன்றை ஒக்கலில் இடுக்கிக் கொண்டு தண்ணீர் எடுத்து வந்து துளசிச் செடிகட்கு ஊற்றுவாள்.

பெரியாழ்வார் தாம் தொடுத்த மாலைகளைச் சிறப்பான பக்தி விநயத்துடன் சிரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கும் ஆலிலைப் பள்ளியானுக்குச் (வடபத்திர சாயிக்கு) சாத்தி வருவதைக் கண்டுவரும் கோதைக்கும் அதைப் பார்த்துப் பார்த்து நாளடைவில் பக்தியும் விநயமும் பெருகி வந்தன. தன் தந்தையும் பல்வேறு அடியார்களும் பஜனை செய்வதையும், உருக்கமான பக்திப் பாடல்கள் பாடுவதையும் அவற்றிற்கேற்ப ஆனந்தக் கூத்தாடுவதையும் குழந்தைப் பருவம் முதற்கொண்டே பார்த்துக் கொண்டிருந்ததால் கோதையின் விளையாட்டு, விருப்பம், இலட்சியம் எல்லாம் பக்திமயமாகவே இருந்தன. இவளும் அவர்களுடன் பஜனை முதலிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வாள். அழகின் கொழுந்தாகவும் அன்பின் கொழுந்தாகவும் வளர்ந்த கோதை பக்தியின் கொழுந்தாகவும் விளங்குவது கண்டு பெருமகிழ்ச்சி கொண்டார் பெரியாழ்வார்.

கோதைக்கு ஆழ்வாரே கல்வி கற்றுத் தந்தார். அவளும் அழகிலும் பக்தியிலும் ஞானத்திலும் ஒருங்கே வளர்ந்து வருவது கண்டு ஆழ்வார் பூரித்துப்போனார். நாளடைவில் பெரியார் வளர்த்த செல்வி அக்காலத்திலுள்ள கலைகளெல்லாம் நிரம்பப் பெற்று ஒப்பற்ற ஞானசுந்தரியாக—ஞானப் பூங்கொடியாக—'கோல்தேடி ஓடும் கொழுந்தாக'[7] —விளங்கினாள்.

பெரியாழ்வாரைப்போல் இவளுக்கும் கவிதை பாடும் ஆற்றல் இருந்தது; கற்பனைக் கண்ணும் வாய்க்கப் பெற்றவளாக இருந்தாள். இந்த அருமைச் செல்வியின் ஞான

---

7. இரண். திருவந்: 27

பக்தி பெரியாழ்வாரின் ஞான பக்தியைக் காட்டிலும் பெரிதாயிருந்ததைக் கண்டு வில்லிபுத்தூர் வாசிகள் வியப்படைந்து மகிழ்ந்தார்கள். இத்தகைய பக்தி இவளுடைய அற்புதமான கவிதையில் வெளிப்பட்டுவருவதைக் கண்டு அவர்கள் பெருவியப்பு அடைந்தார்கள். கோதைப் பிராட்டியின் பக்தி காதலாகப் பரிணமித்தது. வயது ஏற ஏற இவளுடைய பக்திக் காதல் அதிகரித்துக் கொண்டே வந்தது. பிள்ளைப் பருவத்திலேயே தம் மகள் அடைந்து வரும் வளர்ச்சி நிலையைக் கண்டு ஆழ்வார் பூரித்துப் போனார்.

**இளமைப் பருவம்:** தந்தையைப் போலவே மகளும் இயற்கை யழகுகளிலெல்லாம் அழகனாகிய கண்ணனையே கண்டாள்.

தொண்டல்தான் மால்வரைதான்
    மாகடல்தான் கூர்இருள்தான்
வண்டுஅறாப் பூவைதான்
    மற்றுந்தான் கண்டநாள்
கார்உருவம் காண்தோறும்
    நெஞ்சு ஓடும்—கண்ணனார்
பேர்உரு என்று எம்மைப்
    பிரிந்து.

பூவையும் காயாவும்
    நீலமும் பூக்கின்ற
காவி மலரென்றும்
    காண்தோறும், பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே
    பூரிக்கும்—அவ்வவை
எல்லாம் பிரான்உருவே
    என்று.[8]

8. பெரி. திருவந். 49, 73.

[கொண்டல்-மேகம்; வரை-மலை; கூர்இருள்-செறிந்த இருள்; அறா-விட்டு நீங்காத; கார்-கறுத்த; பூவை-பூவைப் பூ; காயா-காயாம் பூ; நீலம்-கரு நெய்தல்; காவிமலர்-செங்கழு நீர்ப்பூ; ஆவி-உயிர்; பூரிக்கும்-பருத்து வளர்கிறது.]

என்ற நம்மாழ்வாரின் அநுபவம் இவளுக்கு ஏற்பட்டது. இந்தத் தெய்விக அழகை அவளுடைய கண்கள் ஆர்வத்தோடு பருகின. அந்த அழகு அவள் உள்ளத்தில் பாய்ந்து உயிரோடு கலந்து விட்டது.

ஒருநாள் இந்த ஞானப் பூங்கொடி நந்தவனத்திற்குப் போனபோது ஒரு மரத்தைச் சுற்றிப் படர்ந்திருந்த பூங்கொடியொன்று அவள் கண்ணில் பட்டது. தனக்கும் ஒரு கொள்கொம்பைப் படரவேண்டிய வயது வந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்டாள். ஆனால், இவளுடைய காதலனை எங்கே, எப்பொழுது காண்பது? கோதை விம்மினாள்; வாய் வெருவினாள்; பெருமூச்சு விட்டாள். தன் நெஞ்சை அருமைத் தந்தைக்கும் தெரியாமல் ஒளித்து வைத்துக் கொள்ள முயன்றாள். சிறு வயதில் கண்ணனின் நாமங்களைச் சொன்னதிலும், அவன் திவ்வியாயுதங்களை வரைந்து பார்த்ததிலும், தன் உள்ளத்தில் கண்ணன் உருவைச் சித்திரித்துப் பார்த்ததிலும்—பூரித்து மகிழ்ந்திருந்த ஆழ்வாருக்கு யுவதியான பிறகு அவள் மேற்கொண்ட செயல் அவருக்குக் கவலையைத் தரத் தொடங்கியது.

யுவதியாக வளர்ந்த பிறகு கோதையின் காதல் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்து வளரத் தொடங்கியது. நாளடைவில் காதல் இவளை முற்றும் விழுங்கிவிட்டது. தான் படர்வதற்கு வேண்டிய கோலைத் தேடிக் குழைந்து வளையும் பூங்கொடி போலானாள்.

கோல்தேடி ஓடும்
 கொழுந்ததே போனறதே
மால்தேடி ஓடும்
 மனம்.

என்ற நம்மாழ்வாரின் அநுபவம் இவளுக்கு ஏற்பட்டு விட்டது. புருடோத்தமனான வேணுகோபாலன்தான் தான் படரவேண்டிய கொள்கொம்பு என்பதை உணர்ந் தாள்; உறுதியும் கொண்டாள். ஒருநாள் கோதை கழுத்திலே காறை என்ற அணியைப் பூட்டிக் கொண்டாள்; கண்ணாடியில் தன் அந்த சேர்த்தியழகைப் பார்த்து மகிழ்ந்தாள். கைவளையல்களைக் குலுக்கிப் பார்த்துக் கொண்டாள். ஓர் அழகான நீலநிறப் புடவையை உடுத்திக் கொண்டாள். கோவைப்பழம் போன்ற தன் சிவந்த வாயை யும் கண்ணாடியில் பார்த்துத் திருத்திக் கொண்டாள். எப்படியோ தேறுதலடைந்தவளைப்போல் தன் காதலன் மணிவண்ணனின் பெயரைச் சொல்லிப் பிதற்றிக் கொண்டிருந்தாள். இப்படியெல்லாம் கலங்கித் தெளிந்து கொண்டிருந்த தன் அருமைச் செல்வியைப் பெரியாழ்வார் பார்த்து விட்டார்; திடுக்கிட்டுப் போனார். ஆனால் தன் திருத்தமப்பனார் இப்படிப் பார்த்தது இவளுக்குத் தெரியாது.

இந்த அநுபவத்தைப் பெரியாழ்வாரே நற்றாய் நிலையில் இருந்து கொண்டு,

காறை பூணும்; கண்ணாடி காணும், தன்
 கையில் வளைகு லுக்கும்:
கூறை உடுக்கும்; அயர்க்கும்; தன்
 கொவ்வைச்செவ் வாய்தி ருத்தும்;
தேறித் தேறிநின்(று) ஆயிரம்பேர்த்
 தேவன் திறம்பி தற்றும்:

9. பெரி. திருவந். 27

மாறில் மாமணி வண்ணன் மேல் இவள்
மால்உறு கின்றாளே.[10]

[காறை - கழுத்தணி; கூறை—ஆடை; அயர்க்கும் - மறக்கும்; தேறி - தெளிந்து; மாறுஇல் - ஒப்பற்ற; மால் - மோக.]

என்று பேசுகின்றார் ஆழ்வார். இத்தகைய பாசுரங்களும் கோதையின் காதில் விழுந்தவைதாம். இவை இவள் காதில் ரீங்காரம் செய்து இவளுடைய காதலை அதிகரிக்கச் செய்திருக்க வேண்டும். இப்படியெல்லாம் கோதையின் காதல் அதிகரிக்க, இவளைப் பற்றிய கவலை வைராக்கியம் நிறைந்து ஆழ்வாரின் உள்ளத்தில் ஆழ்ந்த கவலையை உண்டாக்கி இருக்கவேண்டும்.

**சூடிக்கொடுத்த சுடர்க்கொடி:** தான் கண்ணனுக்குத் தகுந்த காதலி என்ற கருத்து கோதையிடம் நாளுக்கு நாள் உறுதிப்பட்டு வந்து கொண்டிருந்தது. ஒரு சமயம் பெரியாழ்வார் இறைவனுக்குத் தொடுத்து வைத்திருந்த மாலைகளை எடுத்துப் பார்த்தாள். பலவகையான நிறமும் மணமும் உள்ள மாலைகளை உற்று நோக்கினாள். அவை யாவும் தன் திருத்தகப்பனாரின் கை வண்ணத்தால் தெய்விக அழகு பெற்றிருப்பதாகத் தோன்றியது. அவற்றைத் தான் சூட்டிக் கொண்டு நிலைக்கண்ணாடியின் முன் நின்று கொண்டு பெருமிதத்துடன் பார்த்து மகிழ்ந் தாள். பின்னர் அவற்றைக் கசங்காமல் அப்படியே பூக் கூடையில் வைத்து விட்டாள். இப்படிப் பல நாட்களாக நடந்து வந்தது. இதையறியாத ஆழ்வார் மாலைகளை வழக்கம்போல் ஆலிலைப் பள்ளியானுக்கு அணிந்து வந்தார். அவை என்றுமில்லாத மணமும் ஒளியும் பெற்றுத் திகழ்ந்ததை அருச்சகர்கள் கண்டு அதிசயித்தார்கள். ஆழ்வாரின் பக்தி முதிர்ச்சியே இந்தச் சிறப்புக்குக் காரணம்

10. பெரியாழ், திரு. 3.7;8. இந்தப் பதிகமும் அடுத்த பதிகமும் ஆழ்வார் நற்றாய் நிலையிலிருந்து பேசுபவை.

என்று கருதினார்கள். இதனால் அவர்களுக்கு ஆழ்வாரிடம் உள்ள பக்தியும் மற்றும் விசுவாசமும் அதிகரித்தன. உண்மையில் கோதையின் அன்பு மனந்தான் அப்படி அந்தத் தெய்வமாலைகட்கு மணமும் பொலிவும் ஊட்டியது என்பது அவர்கட்கு எப்படித் தெரியும்? அஃது ஆழ்வாருக்குக் கூடத் தெரியவில்லையே!

ஒருநாள் இவளது செய்கையைத் தந்தையார் பார்த்து விட்டார். அவளோ தன்னை மறந்த நிலையில் இருந்த மையால் சில நிமிடங்கள் அவரைக் கவனித்தாளிலள். ஆழ்வாரும் ஒன்றும் தோன்றாதவராய்ச் சிறிது நேரம் வாளாஇருந்தார். அவள் அப்படிச் செய்வாள் என்று அவர் கனவிலும் கருதவில்லை. அவளோ 'அவன் அழகிற்கு நாம் ஒத்தவளாகுமோ? காதலன் நம்மை அங்கீகரிப்பானோ?' என்ற பகற்கனவுகளில் தன்னை முழுக்க முழுக்க மறந்திருந் தாள். 'என்ன அபசாரம்?' என்று பதறினார் ஆழ்வார். அவர் உள்ளம் திடுக்கிட்டு நடுங்கியது. அருமை மகள் முன் சென்று தழுதழுத்த குரலில், 'அம்மா, குழந்தாய்! இங்ஙனம் செய்ய உனக்கு மனம் எப்படித் துணிந்ததோ? எத்தகைய குற்றம் செய்து விட்டாய்! பகவானுக்குத் தொண்டு செய்வதென்றால் எவ்வளவு பயபக்தியுடன் செய்ய வேண்டும்!' என்றுச் சற்றுக் கடிந்து கொண்டார்.

மீண்டும் நந்தவனம் சென்று பூக்களைக் கொய்தார். அவரது திருவுள்ளம் தம் அருமை மகள் செய்த அபசாரத் தையே எண்ணிக் கொண்டிருந்தது. விரைவில் பூக்களுடன் வீடு வந்து சேர்ந்து மகளை உற்சாகப் படுத்திக் கொண்டே மாலைகள் தொடுத்தார். கோதையும் ஒன்றும் பேசாமல் தந்தைக்கு உதவி செய்த வண்ணம் இருந்தாள். எனவே அவர், 'இனி இவள் திருந்தி விடுவாள்; பிழையை உணர்ந்து விட்டாள்!' என்று கருதினார். பெரியாழ்வாரும் ஆலிலைப் பள்ளியானின் சந்நிதிக்குச் சென்று வழக்கம் போல் மாலைகளை அருச்சகரிடம் தர, அவரும் அவற்றை வாங்கிப்

பெருமாளுக்குச் சாத்தினார். வீடு திரும்பும் போது தம்முடைய செல்வச் சிறுமியின் அடாத செயல் ஆலிலைப் பள்ளியானுக்கு எவ்வளவு அதிருப்தி உண்டாக்கியிருக்க வேண்டும்? என்று எண்ணிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தார்.

அன்றிரவு பெரியாழ்வாருக்கு உறக்கம் சரியாக வர வில்லை. பெருமூச்சுவிட்டு படுக்கையில் புரண்டு கொண் டிருந்தார். தம் மகள் செய்த அபசாரம் மன அமைதியைக் குலைத்து விட்டது. சிறிது நேரத்தில் கனவு வந்தது. அந்தக் கனவில் ஆலிலைப் பள்ளியான் தோன்றி, "ஆழ்வீர், நும் திருமகள் சூடிக்கொடுத்த மாலையே! நறுமணம் மிக்குநம் உள்ளத்திற்கு நனி உகப்பாவது காண்; ஆதலால் அத்தன் மைத்தான தொடை மாலையையே நாடோறும் நமக்குக் கொண்டு வருவீராக!" என்று அருளிச் செய்தனன். உறக்கம் கலைந்து எழுந்ததும் ஆழ்வார் தம் கனவை நினைந்து பெருவியப்புற்றார். தாம் கண்டது கனவு என்றே தோன்ற வில்லை. எல்லாம் நேர் காட்சியாக நடந்தனவாகவே தோன்றியது. அதை நினைக்க நினைக்க அது மீண்டும் மீண்டும் தம் கண் முன் நடைபெறுவது போல் இருந்தது. "என்ன பேறு பெற்றேன்? என் அருமைச் சிறுமியால் பெற்ற பெரும் பேறல்லவா இது?" என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்; மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார்.

அன்று முதல் ஆழ்வார் தாம் கட்டிய மாலைகளைக் கோதை முன் வைத்து "அம்மா, குழந்தாய்! நீ நேற்றுச் சூடிக் கொண்டதுபோல் இன்றும் கண்ணாடி முன் நின்று இந்த மாலைகளைச் சூடிப் பார்த்துக் கொடுத்தருள்க" என்று கொஞ்சியும் கெஞ்சியும் வேண்டினார். கோதை வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே அடைந்தவளாய் அவற்றைச் சூடிக் கொண்டாள்; பிறகு நாணத்தால் தலைகுனிந்து நின்றாள். பிறகு மாலைகளை எடுத்துப் பார்க்கும்போது அவை அபூர்வ மணமும் அழகும் கொண்டனவாக

அமைந்திருப்பதைக் கண்டார்; களி கூர்ந்தார். அவற்றை அப்படியே ஆலிலைப் பள்ளியான சந்நிதியில் சேர்ப்பித்தார். அன்றைய சேவையில் பெருமாளின் கண்களிலும் முகத்திலும் கண்ட தேசு கனவில் அவர் முகத்தில் கண்டதைப் போன்றே இருப்பதாக அவர் மனத்திற்குப் பட்டது! அருகில் இருந்த கோதையை நோக்கி ஆனந்தக் கண்ணீர் பொழிந்து, ""எம்பெருமானுக்குச் சூடிக் கொடுத்து, என்னை ஆண்டாள் இவளே!'' என்று சொல்லி ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார். அன்று முதல் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' 'ஆண்டாள்' என்ற திருநாமங்கள் அச் செல்விக்கு வழங்கி வரலாயின.

அருளிச் செயல்கள் : சூடிக் கொடுத்த நாச்சியார் தனது பருவம் வளரும் தோறும் ஞான பக்திகளும் உடன் வளர்ந்து வரலாயின. தான் கணவனாக வரித்த கடல் வண்ணன் விஷயமாக வேட்கை விஞ்சி நின்றது. அந்தக் காதலனைத் தப்பிப் போகவும் முடியாது, மறக்கவும் முடியாது என்பது தெளிவாகி விட்டது. சில சமயங்களில் அந்த அழகுத் தெய்வம் இவளுடைய அகக்கண்ணுக்கு இலக்காகிச் சேவை சாதிக்கவில்லை. கால வெள்ளத்தைப் பின்னோக்கிக் கடந்து சென்று அந்த அவதார காலத்தை எப்படி அடைவது? இஃது இயலாத காரியம் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவன் விளையாடின யமுனை நதிக்கரை, பிருந்தாவனம், நந்தகோபன் வாழ்ந்த இடம் இன்றளவும் உண்டு. அவற்றையாவது கண் குளிரக் கொண்டு ஆறுதல் அடைய நினைத்தாள். அங்குச் செல்வதற்கும் வாய்ப்பும் வசதியும் இல்லை. இந்நிலையில் பாவனா சக்தி துணை செய்தது. ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆயர் பாடியாகியது: அங்குள்ள பெண்கள் கோபியர் கன்னிகளாயினர்; ஆலிலைப் பள்ளியான் திருக்கோயில் நந்த கோபர் மாளிகையாகி விட்டது; வடபெருங் கோயிலுடையான் கண்ணனாகக் காட்சி தந்தான். இப்போது பிறந்தது திருப்பாவை என்னும் இன்பமயமான இசைத்

தமிழ்ப் பிரபந்தம். இது முதலாவதாக அருளிச் செய்யப் பெற்ற பிரபந்தமாகும்.

கண்ணபிரானைப் பெறுகைக்காக மார்கழித் திங்கள் முழுதும் நோன்பு நோற்ற ஆண்டாள் அவன் கலவியை எதிர்பார்த்தும் அவன் வந்து கலக்கவில்லை. இந்நிலையில் ஏற்பட்ட அநுபவங்களைத் தொகுத்து வெளியிடுவதாக அமைந்தது **நாச்சியார் திருமொழி** என்ற பிரபந்தம். இதுவும் பாவனா சக்தியின் விளைவே. இது பிந்திய பிரபந்தம். ஆண்டாளது காதலின் முறுகிய நிலையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**ஆண்டாள் திருமணம் :** திருமணத்திற்கு ஏற்ற பருவம் வந்தும் இவளுடைய திருத்தந்தையார் இவளுக்கேற்ற கொழுநனைக் காணப்பெறாது கவலையுற்றார். இவளை யழைத்து 'நீ யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகின்றாய்?" என்று வினவ,

**ஊனிடை யாழி சங்குத் தமர்க்கென்(று)**
**உன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்**
**மானிடவர்க் கென்று பேச்சுப் படில்**
**வாழகில்லேன்**[11]

என்று மறுமொழி பகர்ந்தாள். பட்டர்பிரான் 'பின்னை எங்ஙனம் நிகழ்வது?' என்று கேட்க, சூடிக் கொடுத்தாள், 'பெருமாளுக்கு உரியவளாவேன்' என்று மறுமொழி கூறினாள்.

பின்னர் விஷ்ணுசித்தர், 'நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான்களுள் யாருக்கு வாழ்க்கைத் துணைவியாக விரும்புகின்றாய்?' என்று விசாரித்தார். கோதையின் வேண்டுகோளுக்கிணங்க, பட்டர் பிரானும் ஒவ்வொரு எம்பெருமான்களுடைய சிறப்புகளை எடுத்துக் கூறிக் கொண்டே வந்தார். தந்தையார் வடமதுரையில் எழுந்

11. நாச். திரு. 1: 5

தருளியுள்ள கண்ணபிரானின் வரலாற்றை எடுத்துக் கூறினார்; அதனைக் கேட்ட ஆண்டாளுக்கு மயிர்ச் சிலிர்ப்பு ஏற்பட்டது. திருவேங்கடமுடையானது வர லாற்றைக் கூறியபொழுது முகமலர்ச்சி தோன்றியது. திருமாலிருஞ்சோலை மலை அழகரது வடிவழகை அறிந்த மாத்திரத்தில் மன மகிழ்ச்சி உண்டாயிற்று. அரங்கனது மகிமையைக் கேட்டவுடனே அளவற்ற ஆனந்தம் அடைந்து நின்றாள். அப்பொழுது அந்தந்தத் திருப்பதி எம்பெரு மான்கள் யாவரும் ஆண்டாளது சுயம்வரத்தை உத்தேசித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளி அவளது ஞானக்கண்ணுக்குப் பொருளாயினர். இவளோ அவர் களுள் அரங்கப் பெருமானிடமே உள்ளத்தைச் செலுத்தி அவனையே தனது கணவனாக உறுதி செய்தாள்; அவனையே நாடோறும் சிந்தித்திருந்தாள்.

இதனைக் கேட்ட ஆழ்வார் 'நம் பெருமாள் இவளை மணத்தல் கூடுமோ?' என்று சிந்தித்தவண்ணம் இருந்தார். இந்நிலையில் திருவரங்கப் பெருமான் இவர்தம் கனவில் எழுந்தருளி 'ஆழ்வீர்! உமது திருச்செல்வியைப் பெரிய கோயிலுக்கு அழைத்து வாரும்; அவளை நாம் ஏற்றுக் கொள்வோம்' என்று அருளிச் செய்தான். இதனால் ஆழ்வார் கவலை நீங்கியவராய் மகிழ்ந்திருந்தார். அரங்க நாதன் தன் கோயிற் பரிசனங்கள் கனவிலும் தோன்றி சகலவித மங்கள வாத்தியங்களுடனும் இதர ஏற்பாடு களுடனும் ஆண்டாளை நவரத்தினம் இழைத்த பல்லக்கில் ஏற்றி அழைத்து வருமாறு பணித்தான். அவர்களும் ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று பெரியாழ்வாரைச் சந்தித்து அரங்கன் கட்டளையை விண்ணப்பம் செய்தனர். செவிக்கு அமுதமான இச்செய்தியைக் கேட்ட அளவில் பெரு மகிழ்ச்சியுற்றார் ஆழ்வார். கோதையும் அவள் தாதையும் ஆலிலைப் பள்ளியான் சந்நிதி சென்று அரங்கனது நியமனத்தை விண்ணப்பம் செய்து இசைவு பெற்று திருவரங்கத்திற்குப் பயணப்பட்டனர்.

இச்செய்தி பாண்டிய மன்னன் செவியில் பட்டதும் தானும் திருமண விழாவை உடனிருந்து சிறப்பாக நடத்திக் களிகூர விரும்பினான். சிரீவில்லிபுத்தூரையும் திருஅரங்க நகரையும் இவ்விரண்டிற்கும் நடுவிலுள்ள நெடுவழியையும் பல்வேறு விதமாக அலங்கரித்து விழாக்கோலம் பூணச் செய்தான். தானும் தன் யானை, குதிரை, தேர், காலாட்படை பலத்துடன் ஆழ்வார் பக்கல் வந்து சேர்ந்தான்.

இவ்வளவு சிறப்புடன் ஆண்டாளை மணிச்சிவிகையில் எழுந்தருளப் பண்ணி மங்கல ஒலியுடன் திருவரங்கம் பெரிய கோயிலை அடைந்தான். பெரியபெருமாளின் முன் மண்டபத்தில் பிராட்டியை நிறுத்திப் பெருமாளைச் சேவிக்கச் செய்தனர். பெரியபெருமாளின் பேரழகு இரும்பை ஈர்க்கும் காந்தம் போல ஆண்டாளைக் கவர்ந்தது. அவளும் சிலம்பார்க்க சீரார் வளையொலிப்ப அன்ன மென்னடை கொண்டு ஆனந்தக் கடலில் ஆழ்ந்த வண்ணம் அரங்கன் திருவடி வருடக் கருதினாள். அரவப்படுக்கையை மிதித்தேறி பெரியபெருமாளின் திருமேனியில் கலந்து அவனை என்றும் பிரியாதிருக்கும் நிலையை அடைந்தாள்.

**ஆழ்வார் பெற்ற அருளிப்பாடு:** இந்த தெய்வக் காட்சியை ஆழ்வாரும் அவர் சீடனான பாண்டியன் உள்ளிட்டாரும் சேவித்து அதிசயித்து நின்றிருந்தனர். திருவரங்கமுடையான் அர்ச்சக முகமாக ஆழ்வாரை அருகில் அழைப்பித்து, "ஆழ்வீர், திருப்பாற்கடல் நாதன் போல் நீரும் நமக்கு மாமனாராகி விட்டீர்'" என்று முகமன் கூறி தமது தீர்த்தம், திருப்பரிவட்டம், திருமாலை, சடகோபன் முதலியவற்றைச் சாதிக்கச் செய்தான். 'வில்லிபுத்தூருறைவானுக்குத் தொண்டு பூண்டிரும்' என்று கூறி விடை கொடுத்தருளினன். ஆழ்வாரும் வில்லிப்புத்தூர் திரும்பி பல்வேறு மலர்களுடன் ஆர்வம் என்பதோர் மலரையும்

இட்டு எண்பத்தைந்து ஆண்டு காலம் வாழ்ந்திருந்து பேரானந்தப் பெரும்பதம் அடைந்தார்.[12]

அஞ்சு குடிக்கொரு
  சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும்
  தன்மையளாய் பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப்
  பக்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே
  மகிழ்ந்து.[13]

என்ற மாமுனிகளின் பாசுரத்தால் இப் பெருமாட்டியின் வரலாற்றை நிறைவு செய்கின்றோம்.

**அருளிச் செயல்களில் ஆழங்கால் படுதல் :** இப் பெருமாட்டி அருளிச் செய்த திருப்பாவையில் 30 பாசுரங்களும், நாச்சியார் திருமொழியில் 143 பாசுரங்களும் உள்ளன. இவை இரண்டும் முதலாயிரத்தில் பெரியாழ்வார் திருமொழியை அடுத்து அமைக்கப் பெற்றுள்ளன. இவை இரண்டும் முத்திரைக் கவிகளாகும்.[14] இந்த இரண்டு பிரபந்தங்களிலும் பொதுவாக அமையப் பெற்ற 'திரு' என்ற அடைமொழிக்குச் சிறப்புப் பொருள் உண்டு. ஒன்று எம்பெருமான் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்கட்கும் அவன் பெருமையைப் போற்றி

---

12. இந்த வரலாறு பின்பழகிய பெருமாள் சீயர் குரு பரம்பரை, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சார்ய சுவாமிகளின் திவ்வியார்த்த தீபிகை முதலியவற்றில் கூறப் பெற்றதாகும்.

13. உ. தே. ர. 24.

14. **முத்திரைக் கவிகள் :** ஆசிரியர் பதிக இறுதியில் அல்லது பிரபந்த இறுதியில் தம் பெயரையும் பாசுர எண்ணிக்கையும் தோன்றுமாறு பாடப் பெறுபவை.

யுரைக்கும் நூல்கட்கும் 'திரு' என்ற அடைமொழியை அமைத்தல் வழக்கு. எ-டு. திருக்குடந்தை; திருச்சந்த விருத்தம். சைவத்தில் திருக்கழிப்பாலை, திருச்சிற்றம்பலக் கோவையார் என்பன போன்றவை. இரண்டு: 'திரு' என்பதற்கு இலக்குமி, அழகு, செல்வம், தெய்வத்தன்மை என்ற பொருள் உண்டு. ஆகவே புருஷகார பூதையான'[15] திருமகள் வழிபாடு, பாகவத சேஷத்துவமான ஆன்ம அழகு, இறைவனுக்குத் தொண்டு பூண்டொழுகுதலாகிய கைங்கரியச் செல்வம், சீரிய பயனைத் தருதற்கேற்ற தெய்வத் தன்மை பலவும் இவ்விரு நூல்களுள்ளும் இடங்கொண்டிருத்தலின், 'திரு' என்ற அடைமொழி இந்நூற் பெயர்கட்கு வழங்கப் பெற்றுள்ளது.

திருப்பாவை: முதலில் திருப்பாவையில் ஆழங்கால் படுவோம் முதல் நூல், கருத்தன், அளவு மிகுதி பொருள், செய்வித்தோன் தன்மை என்பவற்றுள் ஏதேனும் ஒன்று ஒரு நூலிற்குப் பெயராய் அமையும் என்பது இலக்கிய மரபாகும். அவற்றுள் 'உட்பொருள்' இந்நூற்குப் பெயராய் அமைந்தது. 'நாமும் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்' (3), 'பிள்ளைகள் எல்லாரும் பாவைக்களம் புக்கார்' (13), 'எம்பாவாய்' என்பன இதனை வலியுறுத்தலைக் காண லாம். இங்குப் 'பாவை' என்பது பெண்; கன்னிப்பெண். பாவை என்பதற்குப் 'பதுமை' என்ற பொருளும் உண்டு. அவர்களால் நோற்கப் பெறும் நோன்பு 'பாவை நோன்பு'; மார்கழி நோன்பு.[16] பாவையைக் கொண்டு பாவையர்

---

15. புருஷகார பூதை — பரிந்துரை கூறுபவள். புருஷகாரம் — தகவுரை.

16. மார்கழி நோன்பு: இதன் விளக்கத்தை 'மார்கழி நோன்பின் வரலாறு' என்ற இந்த ஆசிரியரின் கட்டுரையால் தெளியலாம். 'ஆன்மிகமும் அறிவியலும்' (கட்டுரை 5) என்ற நூல் காண்க (பாரிநிலையம், 184, பிரகாசம்சாலை, சென்னை-600 108).

நோன்பு இயற்றப் பெறுவதனால், பாவையின் பெயர் நோன்பிற்கு ஆகி அது நோன்பைப் பற்றிக் கூறும் நூலிற்கு ஆகி வந்தது. இப்படி வருவதை இலக்கண ஆசிரியர் இரு மடியாகுபெயர் என்று கூறுவர். ஆயினும் ஆன்ம அணியாகச் சேஷத்துவச்[17] செல்வத்தையும் எம்பெருமான் முன் 'பதுமை' போன்று கிடக்கும் பாரதந்திரியப்[18] பெட்டையும் குறிக்கின்றமையின் இந்நூல் 'திருப்பாவை' என்று பெயர் பெற்றதாகவும் கொள்ளலாம். இது மிகச் சிறப்பு.

நூலில் புகுவதற்கு முன் உரைமன்னன் பெரியவாச்சான் பிள்ளை தமது திருப்பாவையின் 'மூவாயிரப்படி' வியாக்கியானத்தின் அவதாரிகையில் ஆண்டாளின் பக்திப் பெருக்கைக் கூறியிருப்பதைக் காட்டி மேலே செல்வேன். அவர் கூறுவார்:

> 'தேகாத்மாபிமாநிகட்கும், ஆத்ம ஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணு வோட்டை வாசி போரும்; ரிஷிகளுக்கும் ஆழ்வார் களுக்கும் அத்தனை வாசி போரும்; ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் அத்தனை வாசி போரும்; பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனை வாசி போரும்.[19]

இதனை விளக்குவேன். தேகத்தையே ஆன்மாவாகப் பாவிப்பவர்கட்கும் ஆன்ம சொரூபம் கைவரப் பெற்ற இருடிகட்கும் இறையன்பில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒப்ப நோக்கினால் முன்னவர் பக்தி அணுவளவாகவும் பின்னவர் பக்தி மலையளவாகவும் காணப்பெறும்,

---

17. சேஷத்துவம்: பிறருக்கு (எம்பெருமானுக்கு) அடிமையாக இருத்தல்.

18. பாரதந்திரியம்: பகவானுக்கு வசப்பட்டிருத்தல்.

19. மயிலை மாதவதாசன்: திருப்பாவை வியாக்கியானங்கள். பக்: 1 காண்க.

இங்ஙனமே இருடிகளையும் ஆழ்வார்களையும் ஒப்ப நோக்கினால் இருடிகளின் பக்தி அணுவளவாகவும் ஆழ்வார்களின் பக்தி மலையளவிலும் காணப்பெறும். இங்ஙனமே மற்றைய ஆழ்வார்களின் பக்தியையும் பெரியாழ்வார் பக்தியையும் ஒப்பிட்டு நோக்கினால் மற்றையோர் பக்தி அணுவளவாகவும் பெரியாழ்வாரின் பக்தி மலையளவாகவும் தோற்றம் அளிக்கும். பெரியாழ்வாரின் பக்தியையும் அவரது அருமை மகள் ஆண்டாள் பக்தியையும் சீர்தூக்கினால் பெரியாழ்வார் பக்தி அணுவளவிலும், ஆண்டாள் பக்தி மலையளவிலும் தோற்றா நிற்கும். தவிர, ஆண் ஆணைக் கண்டு நட்புக் கொள்வதைக் காட்டிலும் பெண் ஆணைக் கண்டு நட்புக் கொள்ளுதல் பள்ளமடையாக இருக்கும்.

இந்தப் பொழிவில் பாசுரங்களை விவரமாக ஆயப் போவதில்லை. பிரபந்தத்தின் அமைப்பை மட்டிலும் எடுத்துக் காட்டுவேன். இப்பிரபந்தம் மூன்று பகுதியாக அமைந்தது. முதற்பகுதி முதல் ஐந்து பாசுரங்களும் (1-5) பாயிரமாக அமைந்துள்ளன; இப்பகுதி நூலின் உயிர்நிலை; நூற்பொருளைத் தெளித்துக் காட்டும் ஆடிபோன்றது. இரண்டாம் பகுதி: ஆறுமுதல் பதினைந்து முடிய பத்துப் பாசுரங்கள் (6—15) ஆழ்வார்கள் பதின்மருக்கும்[20] ஊக்கமூட்டி உள்ளுறைப் பொருள் அமைந்திருப்பதாகக் கூறுவர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள்.[21]

---

20. ஆண்டாள் இறைவனோடு சேர்ந்து விட்டதால் அவளையும், மதுரகவிகள் இறைவனைப் பாடாமையால் அவரையும் நீக்கி ஆழ்வார்கள் பதின்மர் என்பதாகக் கொள்ளும் மரபு ஒன்றும் உண்டு.

21. திருப்பாவை-திவ்வியார்த்த தீபிகை காண்க. இந்த ஆசாரியர் 'திருப்பாவை-ஆழ்பொருள் விளக்கில்'-பாகவதர்களைப் பள்ளி யுணர்த்துவதாகவும் உள்ளுறைப் பொருள் கூறுவர். ஆண்டுக் கண்டு இது தெளியப்படும்.

இது சுவாபதேசப் பொருள்; அஃதாவது உள்ளுறைப் பொருள். செல்வம், செயல், குணம் இவற்றில் பத்து வகைப்பட்ட ஆயர் சிறுமிகளை அஞ்ஞானத் துயிலிலிருந்து ஞான விழிப்பிற்குக் கொணர்வது வெளிப்படைப் பொருள். மூன்றாம் பகுதி: ஆயமகளிரை எம்பெருமானின் கைங்கரியத் திற்குத் தகுதியுடையவராகச் செய்தல் இப்பகுதியாகும். ஆகவே, இப்பிரபந்தம் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மாக்களுக்கு ஞானம் ஊட்டி இறையுடன் கலந்து இன்பந்துய்க்கச் செய்தலை விளக்குவதாகக் கொள்ளலாம். அன்றியும், 'ஓம்' என்னும் பிரணவம், வைணவ மந்திரங் களாகிய திருமந்திரம், துவ்வயம், சரமசுலோகம் என்ப வற்றைத் தன்னுள் கொண்டுள்ளதைப் போல் 'மார்கழித் திங்கள்' எனத் தொடங்கும் முதற்பாசுரமும் மற்ற இருபத் தொன்பது பாசுரங்களின் பொருளையும் தன்னகத்தில் கொண்டுள்ளது. இவ்வொரு பாசுரத்தைக் கொண்டே எல்லாப் பொருள்களையும் அறியலாம். இவற்றை இங்கு விளக்குவதற்குக் காலம் போதாததால் இவற்றை விட்டு வைக்கின்றேன்.

மேலும் அர்த்த பஞ்சகங்களின் தத்துவங்களை ஆண்டாள் அமைத்துப்பாடும் அழகையும் இச்சிறு பிரபந் தத்தில் கண்டு மகிழலாம். அர்த்தப் பஞ்சகம் என்பது என்ன? இதனை ஈண்டு விளக்குவேன். (1) ஆன்மாவின் இயல்பு, (2) ஈசுவரனது இயல்பு, (3) ஆன்மா அடையும் பயன், (4) அப்பயனை அடைவதற்கு உபாயம், (5) அப்பயனை அடைவதற்குப் பகையாய் உள்ளவைகள்—என்ற ஐந்து பொருள்களை விளக்கமாக அறிதல் 'அர்த்த பஞ்சக ஞானம்' என்று சொல்லப்படும். ஆன்மாவின் இயல்பை அறியுங்கால் நித்தியர், முத்தர், பத்தர், கேவலர், முமுட்சுகள் என்ற ஐந்துவகை ஆன்மாக்களைப் பற்றிய ஞானம் ஏற்படும். இறைவனது இயல்பை அறியுங்கால் இறைவன் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித் துவம், அர்ச்சாவதாரம் என் ஐந்துவிதத் திருமேனிகளைக்

கொண்டிருத்தல் பற்றிய ஞானம் உண்டாகும். ஆன்மா அடையும் பயன் தர்மம், அர்த்தம், காமம், ஆன்மாநுபவம், பகவதநுபவம் என்ற ஐந்துவகைப் பொருள்களை விவரமாக அறிதலாகும். இப்பயனை அடையும் வழிகளாக கர்மம், ஞானம், பக்தி, பிரபத்தி, ஆசாரிய அபிமானம் என்பவை பற்றிய விவரங்களைத் தெளிவாக அறிதலாகும். இப்பயனை அடைவதற்குத் தடையாய் உள்ளவையும் ஐந்தாகும். இவற்றுள் ஆன்ம விரோதி என்பது தேகமே ஆன்மா என்ற மனமயக்கமும் எம்பெருமானையொழிந்தவர்கள் பக்கல் சேஷம் என்றிருக்கையும், தானே சுதந்திரன் என்றிருக்கையும் ஆகும். பரத்துவ விரோதி என்பது, பிறதெய்வத்தைப் பரம் என்றும், எம்பெருமானுக்குச் சமம் என்றும், திருமாலினது அவதாரங்கள் வெறும் மானிடத் தன்மையன என்றும், அர்ச்சைகளுக்குப் பயன்களைப் பயக்கும் சக்தி இல்லையென்றும் எண்ணுதலாகும். புருஷார்த்த விரோதி என்பது, பகவத் கைங்கரியங்களைவிட வேறு புருஷார்த்தங்களில் விருப்பமும், தனக்கு விருப்பமான பகவத் கைங்கரியத்தில் இச்சையும் ஆகும். உபாய விரோதி என்பது, ஏனைய உபாயங்கள் சிறப்புற்றன என்ற எண்ணமும், சித்தோபாயம் சிறு முயற்சியால் சாதிக்கத்தக்கதா யிருத்தலாலும், உபேயம் அரிய முயற்சியால் சாதிக்க யுக்தமாக இருத்தலாலும், இடையூறுகள் பலவகையாக இருத்தலாலும் உண்டாகும் ஐயங்களாலாகும். பிராப்ய விரோதி என்பது, இப்பிறப்பிற்கு ஏதுவாகிய பிராரப்த கர்மமாக வந்த சரீரத்துடன் சம்பந்தமும், அநுதாபலேசமும் இல்லாததாய், பெருத்ததாய், திடமாயுமுள்ள பகவதபசார பாகவதபசார பொறுக்க முடியாத அபசாரங்களாகும்.

இனி, திருப்பாவையில் இந்த அர்த்த பஞ்சகப் பொருள்கள் அமைந்திருப்பதைக் காட்டுவேன்.

**இறைவன் இயல்பு:** இஃது ஒன்று முதல் ஐந்து பாசுரங்களில் புலனாகின்றது. முதல் பாசுரத்தில் 'கார்மேனிச்

செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான் நாராயணன்' என்பதால் பரத்துவமும், இரண்டாவது பாசுரத்தில் 'பாற்கடலில் பையத்துயின்ற பரமன்' என்பதால் வியூகமும், மூன்றாவது பாசுரத்தில், 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்பதால் விபவமும், நான்காவது பாசுரத்தில் 'ஆழிமழைக் கண்ணன்', 'ஊழி முதல்வன்', 'பாழியந்தோளுடைப் பற்பநாபன்' முதலியவற்றால் மீண்டும் பரத்துவமும், இரண்டாவது பாசுரத்தில் பகவானை மனதில் பாவித்துக் கொண்டிருக்கும் (அந்தர்யாமித்துவமும்) பாவைக்கு (அர்ச்சை) செய்யும் கிரிசைகள் என்பவற்றால் ஏனைய இரண்டும் தெரிவிக்கப் படுகின்றன. இன்னும் ஐந்தாவது பாசுரத்தில்,

மாய னைமன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை

என்ற பகுதியால் மீண்டும் விபவமும் காட்டப் பெறுகின்றது. இவற்றில் ஐந்துதிருமேனிகள் காட்டப் பெற்றதால் 'ஈசுவர சொரூபம்' விளக்கமாயிற்று.

ஆன்மசொரூபம்: ஆறு முதல் பதினைந்து பாடல்களில் இது விளக்கம் அடைகின்றது. இவற்றுள் பகவானை மறந்து, அவனையடைவதற்குச் செய்ய வேண்டிய முயற்சிகளையும் மறந்து கிடக்கும் ஆன்மசொரூபமும், சீவர்கள் மாயையினால் பிரகிருதி நிஷ்டையில் உறங்கிக் கிடப்பதால் உபாய விரோதி சொரூபமும் தெரிவிக்கப் பெறுகின்றன. 'புள்ளரையன் கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?' (6) 'கீசுகீ சென்றெங்கும் ஆனைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ?...' 'காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து வாசநறுங் குழல் ஆய்ச்சியர் மத்தினால், ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ?' (7), 'கோது நலமுடைய பாவாய்

எழுந்திராய்' (8), 'மாமீர் அவளை எழுப்பீரோ?' (9), 'பண்டொருநாள், கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?' (10), 'எற்றுக்குறங்கும் பொருளே' (11), 'இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்?' (12), 'பள்ளிக்கிடத்தியோ பாவாய் நீ?' (13) 'எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும், நங்காய் எழுந்திராய்' (14) 'எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ?' (15) என்பவற்றால் உறங்குகின்ற விரோதி சொரூபம் காட்டப்பெறுகின்றது.

பகவத்சொரூபமாகிய இரட்சகத்துவம்: இது 16 முதல் 20 வரை உள்ள பாசுரங்களால் உணர்த்தப்பெறுகின்றன. சம்சாரக் கடலில் மூழ்கித் தம்மை மறந்து கிடக்கும் சீவர்களை மறந்து பகவான் தன்னை அடைந்த (ஆச்ரயித்த) நித்திய முத்தர்களிடையே மயங்கியவனாய் உறங்கிக் கிடப்பதை உணர்ந்து அவனை எழுப்புவது உணர்த்தப் பெறுகின்றது. "ஆயர்சிறுமியராய எங்கட்கு மணிவண்ணனாய மாயன் 'பறையைத் தருகின்றேன்' என்று நேற்றே சொன்னான். உறக்கத்தை விட்டு எழுந்திருக்கும் படி திருப்பள்ளி எழுச்சி பாடவேண்டும்" என்று வாயில் காப்பவனிடம் சொல்லுகிறார்கள் ஆயச்சிறுமிகள் (16). 'அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர்கோமானே உறங்காது எழுந்திராய், செம்பற்கழலடிச் செல்வா பல தேவா, உம்பியும் நீயும் உறங்கேல்' (17) என்பதனாலும், பின்னர் நப்பின்னைப் பிராட்டியையும் (18) எழுப்பு வதனாலும், 'கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல், வைத்துக்கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்,... மைத்தடங் கண்ணினாய் நீ உன் மணாளனை எத்தனை போதும் துயிலெழ வொட்டாய் காண்' (19) என்பத னாலும், 'முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று, கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்'... 'செற்றார்க்கு, வெப்ப கொடுக்கும் விமலா துயிலெழாய்' (20) என்பதனாலும்

இறைவனை எழுப்பி அவனுடைய இரட்சகத்துவத்தை நினைவூட்டுவதை அறியலாம்.

**கையற்ற நிலையும் பிரபத்தியும்:** இவை 21 முதல் 25 வரையுள்ள பாசுரங்களால் உணர்த்தப்பெறுகின்றன. 'மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண் ஆற்றாது வந்துன் அடிபணியுமா போலே, போற்றியாம் வந்தோம்' (21) என்பதனாலும், 'அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான, பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே, சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்' (22) என்பதனாலும், ஆன்மாக்களின் கையற்ற நிலை உணர்த்தப் பெறுவதை அறியலாம். அடுத்து, 'அடி போற்றி, திறல்போற்றி, புகழ் போற்றி, கழல் போற்றி, குணம் போற்றி, வேல்போற்றி' என்று போற்றுதல் செய்து 'என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான், இன்று யாம் வந்தோம்' (24) என்பதனாலும் 'அருத்தித்து வந்தோம்' (25) என்பதனாலும் பிரபத்தி உணர்த்தப் பெறுகின்றது.

**மோட்ச பிராப்தி:** இது 26 முதல் 30 முடியவுள்ள பாசுரங்களால் உணர்த்தப் பெறுகின்றது. கண்ணனைக் கண்டு நோன்புக்கு வேண்டிய சங்கு முதலிய பொருள்களை கேட்கின்றனர் (26). கண்ணனைக் காண்டலே மோட்ச மாகும். நோன்பிற்கு தாம் பெற வேண்டிய சூடகம் முதலிய பொருள்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்கள் (27). அறிவொன்றும் இல்லாத ஆய்குலத்து உன் தன்னைப் பிறவிப் பெறுந்தனையாம் உடையோம்'... உன் தன்னோடு, உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது' (28) என்பதனால் தாம் பெற்ற பேற்றைக் குறிப்பிடுகின்றனர். 'எங்களைக் குற்றேவல் கொள்ளாமற் போகாது... நாங்கள் வந்தது 'இவற்றைப் பறை கொள்வான் அன்று காண்', நாங்கள் 'நோன்பு' என்ற ஒன்றை வியாஜமாகக் (Pretext) கொண்டு வந்தோமேயன்றி 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு, உற்றோமேயாவோம் உனக்கே நாம்

ஆட்செய்வோம்' (29) என்பதனால் மோட்ச பிராப்தியான கைங்கரியம் வேண்டுவதைக் குறிப்பிடுவதை உணரலாம். இதுகாறும் கூறியவற்றால் தத்துவக் கருத்துகள் மட்டிலும் காட்டப்பெற்றன.

பாதகங்கள் தீர்க்கும்
பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும்
வித்தாகும் — கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும்
அறியாத மானுடரை
வையம் சுமப்பதும்
வம்பு.

*[வையம் - மனித சரீரமாகிய உயர்ந்த வண்டி; வம்பு - புதுமை]*

என்ற வெண்பாவாலும் இவற்றை அறியலாம்.

"திருவாய்ப்பாடியில் பெண்களுக்குக் கிருஷ்ணன் சமகாலமாகையாலே கிருஷ்ணனை நேரில் காணும் பேறு கிடைத்தது. இத்தகைய நேர் காட்சியை ஆண்டாள் பாவனாசக்தியால் பெற்றாள். அவளிலும் பிற்பட்டவர்கள் அப்பேறு பெறவேண்டில் இப்பாசுரங்களின் உக்தி மாத்திரம் போரும் என்க" என்பர் பிரதிவாதிபயங்கரம். "விடிவோடே எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுசந்தித்தல், மாட்டிற்றிலனாகில் 'சிற்றஞ் சிறுகாலே' (29) என்கின்ற பாட்டை அநுசந்தித்தல், அதுவும் மாட்டிற்றிலனாகில் நாம் இருந்த இருப்பை நினைப்பது" என்று பட்டர் அருளிச் செய்வர். 'நாம் இருந்த இருப்பை' என்றது — நாம் (பட்டர்) இப்பிரபந்தத்தை அநுசந்தித்து ஈடுபட்டிருந்த இருப்பை என்றபடி.

**இலக்கிய நயங்கள்:** இச்சிறு பிரபந்தத்திலுள் சில இலக்கிய நயங்களை மட்டிலும் சுட்டிக்காட்டுவேன்.

1. இயற்கை வருணனைகள்:

(i) நான்காவது பாசுரத்தில் முகிலை முன்னிலைப் படுத்தி,

ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் (4)

என்று காளமாமுகிலைக் கார்மேனி வண்ணனாக உருவகித்துப் பாடுதல் அறிந்து மகிழத்தக்கது. இறைவனுக்குக் 'காள மேகம்' என்ற பெயரும் உண்டல்லவா?

(ii) அதிகாலை நிகழ்ச்சிகள் அழகுபெறப் படம் பிடித்தாற்போல் காட்டப் பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுவேன். 'கீசுகீசென்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்' (7), 'வாசநறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால் ஓசைப்படுத்த தயிரரவம்' (7), 'கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு மேய்வான் பரத்தல்' (8), 'தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய தூபம் கமழ, துயிலணைமேல் கண் வளரும் மாமன் மகள்' (9), 'புள் சிலம்புதல்' (13), 'புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்புதல்' (14), 'வந்தெங்கும் கோழியழைத்தல், மாதவிப் பந்தல்மேல் குயிலினம் கூவுதல்' (18) முதலியன காண்க.

(iii) நாடோறும் நிகழும் நிகழ்ச்சிகள் நயம்படக் காட்டப் பெற்றுள்ளன. 'செங்கல் பொடிக் கூறை வெண் பல் தவத்தவர், தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் (திறக்கைக்காகப்) போதல்' (14), 'பிள்ளைகள் பாவைக் களம் புகல்'(13), 'ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப, மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்' (21) போன்றவை இவற்றுள் அடங்கும்.

2. இப் பெருமாட்டியின் பாசுரங்களில் உவமை, உருவகம் முதலிய அணி நயங்களைக் காணலாம். கார்மேனிச் செங்கண் கதிர மதியம் போல் முகத்தான், நாராயணன் (1), முகில் ஊழி முதல்வன்போல் மெய் கறுத்தல், ஆழிபோல் மின்னுதல், வலம் புரிபோல் நின்றதிர்தல் (4), குகையில் உறையும் சிங்கம் தீவிழித்து, வேரி மயிர் பொங்க எப்பாடும் போந்துதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் போதல் போல் கண்ணன் வர வேண்டும் எனக்கூறல் (23), அங்கண்மா ஞாலத்தரசர் அபிமான பங்கமாய் வந்து கண்ணனின் பள்ளிகட்டிற் கீழே சங்கம் இருப்பார் போல் ஆயச்சிறுமிகள் திரளுதல், கிண்கிணி வாய் செய்த தாமரைப் பூப்போல செங்கண் சிறுச்சிறிதே கண்ணன் ஆயர்மகளிரை நோக்குதல் (22), திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் அங்கண் இரண்டும் கொண்டு எங்களை (ஆயர் மகளிரை) நோக்க வேண்டுதல் (22), கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நிமிர்ந்த நெடுமால் (25), பாலன்ன வண்ணத்துப் பாஞ்ச சன்னியம் (26) — இவை யாவும் உவமையணிகள்.

யசோதை இளஞ்சிங்கம் (1), வெள்ளத்தரவில் துயிலமர்ந்தவித்து (6), அருங்கலமே (10), குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடி, புற்றரவல்குல் புனமயில் (11), கொம்பனார்க் கொழுந்து, குலவிளக்கு (17), கந்தம் கமழும் குழலி, பந்தார் விரலி (18), கப்பம் தவிர்க்கும் கலி (20), தோற்றமாய் நின்ற சுடர் (21), — இவை யாவும் உருவகங்கள்.

3. கண்ணனைப் பற்றிய செய்திகள்: இவை அதிக மாகக் காணப் பெறுகின்றன. ஆயர்குலத்தில் தோன்றி யமை (5), சகடாசுரனை யழித்தமை (24), சாணூரன், முஷ்டிகன் என்ற மல்லரைக் கொன்றமை, கேசியைப் பிளந்தமை (8), கன்று குணிலாகக் கொண்டு விளவெறிந் தமை, குன்றம் ஏந்தி குளிர்மழை காத்தமை (24) — முதலிய செய்திகளைக் காணலாம்.

4. திருமாலைப் பற்றியவை: இவையும் பாசுரங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. பாற்கடலுள் பையத்துயின்றமை (2), உலகளந்த வரலாறு (24), வெள்ளத்தரவில் துயில மர்ந்த நிலை (6), இராமனாய் வந்து தென்னிலங்கையை அழித்தமை (24) — ஆகியவற்றைக் காணலாம்.

நாச்சியார் திருமொழி: இஃது அருளிச் செய்த இரண்டு பிரபந்தங்களுள் பிந்தியது. இதனை முதலாயிரத்தில் நான்காவதாக அடைவுபடுத்தினார் நாதமுனிகள். இதற்குப் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த உரை ஒன்று உண்டு; இது மணிப்பிரவாள நடையில் உள்ளது. இதைத் தழுவி பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் எழுதியுள்ள எளிய தெளிய நடையிலமைந்த உரையும் உண்டு.

இத்திருமொழியில் 143 பாசுரங்கள் (14 பதிகங்கள்) உள்ளன. இப்பிரபந்தத்தில் திருமாலைத் தவிர வேறெ வரையும் கலவாதிருத்தல், இறைவனின் ஆண்மையிலும் தம் பெண்மையிலும் இடையறாது மனத்தைச் செலுத்துதல், தன் ஆன்மாவின் பெண்மை நிலைக்குத் தகச் செயல் புரிதல் ஆகிய பண்புகள் திகழ்வதைக் காணலாம். ஆண்பாலாரான மற்றை ஆழ்வார்கள் தம்மை நாயகியராக ஏறிட்டுக் கொண்டும் திருமாலை நாயகனாகக் கொண்டும் பாடிப் போந்தனராயினும் அவர்கள் மேற்கொண்ட பாவனை இயற்கையானதன்று என்றும், அதனால் அன்னோர் திருமாலிடம் செலுத்திய அன்பு மேட்டு மடைநீர் போன்றதென்றும் பெரியோர் பணிப்பர். ஆனால் ஆண்டாள் பெண்பாலராய்ப் பிறந்து ஒன்றையும் ஏறிட்டுக் கொள்ளாமல் அழகிய மணவாளனையே தம் நாயகனாக வரித்துக் கொண்டு அவனிடம் உள்ளுருகிச் செலுத்தும் இவருடைய இயற்கையான காதற் பெருக்கு பள்ளமடை நீர் போன்றதென்றும் அன்னார் கூறுவர். இஃது உபேய நூல் ஆயினும், திருப்பாவையில் உபேயமும்,

நாச்சியார் திருமொழியில் உபாயமும் இல்லாமல் போகாது. இரண்டிலும் மிகுதியான பகுதியைக் கொண்டே இங்ஙனம் வரையறுத்துக் கூறப் பெற்றது என்பதை அறிதல் வேண்டும்.

திருப்பாவையில் 'உன்றன்னைப் பிறவி பெருந்தனை புண்ணியம் யாமுடையோம்' (28) என்றும் 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே யாம் ஆட் செய்வோம்' (29) என்றும் இவ்வளவு பிரபத்தி ஆண்டாளுக்குப் பிறந்த போதிலும், இவளுடைய முறுகிய காதலுக்கேற்ப கண்ண பிரான் வந்து கலவி செய்து நிற்கக் காணாமையாலே, பிரிவைத் தரித்திருக்கமாட்டாமல் பிரிந்திருப்பவர்களைக் கூட்டிவிடவல்ல காமனை நோக்கி இரக்கின்றாள்; வழிபடு கின்றாள். 'திருவேங்கடமுடையானுக்கு என்னைக் கைங்கரியம் பண்ணும்படி கற்பிக்கவேண்டும்? (1) என்றும் 'புள்ளின் வாய்க்கீண்டானிடம் நான் சென்று சேரும்படி நீ என்னை சேர்ப்பிக்கவேண்டும்' (2) என்றும், 'திருவேங்கமுடையான் என்கின்ற விளக்கினிலே நான் சேரும்படி நீ என்னைச் செய்யவேண்டும்' (3) என்றெல்லாம் வேண்டுகின்றாள் முத்தாய்ப்பாக,

வானிடை வாழும்அவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தஅவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை ஆழிசங்(கு) உத்தமற்கென்(று)
உன்னித்(து) எழுந்தஎன் தடமுலைகள்
மானிட வர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய் மன்மதனே

[வானவர் - தேவர்கள்; வேள்வி - யாகம்; வகுத்த - கொடுத்த; அவி - அவிசு; ஊனிடை - மேனியில்; உத்தமன் - புருடோத்தமன்; உன்னித்து - ஆதரவுடன்]

என்று பேசுகின்றாள். மறந்தும் புறந்தொழா வேண்டி யிருக்க, தேவதாந்தரத்தின் காலில் விழுவது பொருந் துமோ? என்ற வினா எழுகின்றது. 'வழியல்லா வழியே முயற்சி செய்தாகிலும் கண்ணபிரானோடு கலக்கப் பெற வேண்டும்' என்ற முயற்சிகள் யாவும் உபேயத்தில் அடங்கி விடுதலால் அது குற்றமில்லை என்று பெரியோர் பணிப்பர்.

'நமக்கு உரியவர்கள், நம்மைப் பெற நினைப்பவர்கள், நம் காலில் விழாமல் ஒரு தேவதாந்தரத்தின் காலில் விழுந்து துவள்வதை நாம் பார்த்துக் கொண்டிருப்பது முறையன்று' என்று கருதி முகங் காட்டுகின்றான். அவர்கள் 'வட்டவாய்ச் சிறுதூதை (பானை) யொடு சிறு சுளகும், மணலும் கொண்டு இயற்றும் சிற்றிலைச் சிதைக் கின்றான். பிறகு புணர்ச்சி நேர்கின்றது; இதுவும் பிரிவில் தலைக் கட்டுகின்றது. எம்மைப்பற்றி மெய்ப் பிணக் கிட்டக்கால் (9) என்பதனால் புணர்ச்சி தோற்றும். ''இத்தால் ஸம்ச்லேசம் (புணர்ச்சி) பரவ்ருத்தமானபடி (தொடங்கினபடி) சொல்லுகின்றது'' என்பர் பெரியவாச் சான்பிள்ளை. ஆழ்வார்கள் ஆண்களாக இருந்தபடியால் பெண்ணுடை உடுத்து ''மின்னிடை மடவார்கள்'' (திருவாய் 6.2) போன்ற திருவாய்மொழிகளில் 'என்னுடைய பந்தும் கழலும் தந்து போகுநம்பீ'' (1)[22] 'ஒரு நான்று தடி பிணக்கே' (7)[23] என்றாற்போல சொல்லுவர்கள். இவற்றில் ஆண் சொரூபம் தெரிந்து விடுகின்றது. இங்கு 'பெண் பிள்ளை தனக்கு அதுக்கு மேலே மென்மை பிறந்து வார்த்தை சொல்லும் வீறுபாடு என்னே!' என்று நம் பிள்ளை ஈடுபட்டு உருகுவாராம். 'கோழி அழைப்பதன்

---

22 எனது பந்தையும் அம்மானைக் காய்களையும் திருப்பிக் கொடுத்துவிட்டு உனக்கு விருப்பமான விடத்தே போய் சேர்க நம்பீ என்பது பொருள்.

23. ஒருகால் உன்னைத் தடியிட்டுத் தகர்க்கும்படி யாகவும் நேர்ந்துவிடும் — என்பது பொருள்.

முன்னம், என்ற அடுத்த திருமொழியை (மூன்றாவது திருமொழி) நோக்குமிடத்து பிரிவில் தலைக் கட்டினபடி தோற்றும். இந்த இரண்டாவது திருமொழி காமஸமாச்ரயணத்தை (காமனைப் பற்றுதலை) அநுகாரமாக நடப்பதுபோல இது வேறொரு அநுகார வகையால் ('சிற்றில் சிதைத்தல்' என்ற வகையால்) செல்லுகின்றது என்பதை நாம் அறிதல் வேண்டும். இதில் ஐந்து பாசுரங்கள் (1 - 4, 7) 'எங்கள் சிற்றில் சிதையேலே'' என்று இறுகின்றன.

கண்ணபிரான் இரவின் முற்கூற்றில் பெண்களோடே புணர்ந்து கிடந்து பிற்கூற்றில் உறங்குபவனாதலால், கதிரவன் உதயமாகும் அளவும் கண்விழியான் என்று நினைத்து ஆய்ச்சிமார்கள் அவன் அறியாததொரு பொய்கைக்குப் பனி நீராட வருகின்றனர். கண்ணன் இருளன்ன மாமேனியனாதலால் அவர்கள் நிழலைப் பற்றிக் கொண்டு போய் அவர்கட்கு முன்னே பொய்கைக் கரை போய்ச் சேர்கின்றான். ஆய்ச்சியர்கள் அவன் வந்ததை அறியவில்லை. இடைப் பெண்களாகையாலே ஆடைகளையும் அணிகளையும் களைந்து கரையில் வைத்துவிட்டு நீரில் மூழ்குகின்றனர். இந்நிலையில் மாயக்கண்ணன் அவற்றையெல்லாம் வாரிச் சுருட்டிக் கொண்டு மிக விரைந்து குருந்த மரத்தின் மேலேறி மறைந்து நிற்கின்றான் — இந்த நிகழ்ச்சியை அநுகரித்து ஆண்டாள் பாடுவதாக மூன்றாம் திருமொழி அமைகின்றது. 'துகிலைப் பணித்தருளாயே', 'குருந்திடைக் கூறை பணியாய்', 'பட்டைப் பணிந் தருளாயே', 'கூறைதாராய்' என்று பாசுரங்கள் இறுகின்றன.

இதில் ஒரு பாசுரத்தைக் காட்டுவேன்.

**கோழி அழைப்பதன் முன்னம்**
**குடைந்துநீ ராடுவான் போந்தோம்;**
**ஆழியஞ் செல்வன் எழுந்தான்;**
**அரவணைமேல் பள்ளி கொண்டாய்!**

ஏழைமை ஆற்றவும் பட்டோம்;
　　இனிஎன்றும் பொய்கைக்கு வாரோம்;
தோழியும் நானும் தொழுதோம்;
　　துகிலைப் பணித்தரு ளாயே. (1)

*[குடைந்து-மூழ்கி; ஆழியன்-சூரியன்; அரவணை-பாம்புப் படுக்கை.]*

என்பது முதல் பாசுரம். ஆய்ச்சியர் 'குடைந்து நீராடுவான் போந்தோம்' என்று சொன்னதும், தமிழர்கள் கலவியைச் 'சுனையாடல்' என்று சொல்வது கண்ணனுக்கு நினைவு வருகின்றது. தான் அதை நினைத்து 'அங்ஙனே நீராடுகைக்கு தடை என்ன?' என்கின்றான். அவனது உட் கருத்தை ஆய்ச்சியர் அறிகின்றனர். 'பிரானே!' அந்த ஆசைக்கு இடமறும்படி பாழுஞ்சூரியன் வந்து தோன்றி விட்டானே!' என்கின்றனர். 'செல்வன் ஆழியன்' என்றது 'பாழுஞ்சூர்யன்' என்றபடி. சுனையாடலுக்கு விரோதி யாக வந்து தோன்றினபடியால் அவன் ஆய்ச்சியரின் வசவுக்கு இடமானான் என்பது கருத்து. இங்ஙனம் பாசுரங் கட்கு நயம் உரைத்து மகிழலாம்.

கண்ணன் ஆடைகளையெல்லாம் அவர்கட்குத் தந்தருளு கின்றான். இவர்களும் அவற்றைப் பெற்று புணர்ச்சிக்கும் இணங்குகின்றனர்; புணர்ச்சியும் நடைபெற்று விடுகின்றது. இந்தப் புணர்ச்சியும் பிரிவுடன் தலைக்கட்டுகின்றது. உடனே எப்போது மீண்டும் சந்தர்ப்பம் நிகழும் என்று பார்த்தறியக் கூடல் இழைக்கின்றனர். கூடல் இழைத்தல் என்பது என்ன? வட்டமாகக் கோடு கீறி அதற்குள்ளே சுழி சுழியாகச் சுற்றும் சுழித்து இரண்டிரண்டு சுழியாகக் கூட்டிப் பார்க்கும்போது இரட்டைக் கணக்காக முடிவு பெற்றால் கூடுகை, ஒற்றைக் கணக்காக முடிவு பெற்றால் கூடாமை என்று உத்தியை நிலை நாட்டிக்கொண்டு ஏற்படுத்தும் ஒருமுறையே கூடலிழைத்தல் என்பது (இது கண்ணை மூடிக் கொண்டு செய்யப்படுவது). இது 'கூடல்

வளைத்தல்' 'கூடற்குறி' என்ற திருநாமங்களாலும் வழங்கப் பெறும். திருமழிசை பிரானும் 'அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண, இழைப்பன் திருக்கூடல் கூட' (நான். திருவந். 39) என்றருளிச் செய்திருப்பது ஈண்டு நினைத்தல் தகும் — இச்செயலை அநுகரித்து ஆண்டாளின் நான்காவது திருமொழி அமைகின்றது. ஒவ்வொரு பாசுரமும் 'கூடிடுகூடலே' என்று முடிவு பெறுகின்றது.

இந்தத் திருமொழியிலும் ஒரு பாசுரத்தைக் காட்டுவேன்.

**காட்டில் வேங்கடம் கண்ண புரநகர்**
**வாட்டம் இன்றி மகிழ்ந்துறை வாமனன்**
**ஓட்டரா வந்துஎன் கைப்பற்றித் தன்னொடும்**
**கூட்டு மாகில்,நீ கூடிடு கூடலே (2)**

*[வாட்டம்-மனக்குறை; ஓட்டரா-ஓடி; ஓட்டம் தரா-ஓட்டரா.]*

'எம்பெருமான் என்னோடு அணைய வேண்டும் என்று திருவேங்கடமலை, திருக்கண்ணபுரம் முதலிய திருப்பதிகளில் வந்து நிற்கின்றான்; எனக்கு இசைவு உண்டோ? இல்லையோ? என்று ஐயுற்றுத் தாமதித்து நிற்கின்றான் போலும்! அப்பெருமான் என்னுடைய அதிக ஆவலை நன்கு அறிந்து சடக்கென்று ஓடிவந்து என்னைத் தன்னோடே அணைத்துக் கொள்ளுமாறு விதிவாய்க்க வேண்டும்' — என்று எண்ணுகின்றாள்.

**காட்டில் வேங்கடம் :** தண்டகாரண்ய வனத்தில் இருடிகளோடு கூடியிருந்து வனவாச ரஸம் அநுபவித்தபடிக்கு ஒப்பாகும் திருமலை வாசம் என்பதைக் காட்டுகின்றது இத்தொடர். **கண்ணபுரநகர்;** வனவாசம் முடிந்து திருவயோத்தியில் அனைவரோடும் கூடியிருந்து நகரவாச ரஸம் அநுபவித்தபடிக்கு ஒப்பாகும் — திருக்கண்ணபுரவாசம் என்பதைக் காட்டுகின்றது இத்தொடர். திருமலையை

விருந்தாவனத்துக் கொப்பாகவும், திருக்கண்ணபுரத்தை திருவாய்ப்பாடிக்கு ஒப்பாகவும் நிர்வகிக்கலாம். நகர வாசத்தோடு வனவாசத்தோடு வேற்றுமை தோன்றாத வாறு இரண்டையும் இனிதாகக் கொள்ளும் மனமாண்பு விபவாவதாரத்தில் இருந்தது போலவே அர்ச்சாவதாரத் திலும் இருக்கின்றபடியை இவற்றால் காட்டப்பட்ட தாகின்றது என்பதை அறிந்து மகிழலாம்.

வாட்டமின்றி மகிழ்ந்துறை : நித்தியசூரிகளின் சபை நடுவே மிகப் பிரகாசமாய் எழுந்தருளியிருக்கும் இருப்பைத் தவிர்ந்து மானிட நாற்றம் நாறும் இந்த இருள் தருமா வுலகில் — சம்சாரத்தில் — வந்து 'கானமும் வானரமும் வேடும்' ஆனவற்றிற்கு முகங்கொடுத்துக் கொண்டு நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதே என்று திருவுள்ளத்தில் வெறுப்பு இல்லாமல், இருட்டறையில் விளக்குப் போலே நம்முடைய கல்யாண குணங்களெல்லாம் நன்கு விளங்கு மாறு இங்கு வரப்பெற்றோமே என்று அளவற்ற மகிழ்ச்சி யுடன் எழுந்தருளியிருக்கின்றபடியை உணர்த்துகின்றது. இராமகிருஷ்ணாதி அவதாரங்கள் ஒரு காலத்திற் குரியவையாய் பின்னானார் வணங்கும் சோதியாகாமல் தன்னுடைய சோதிக்கு எழுந்தருளினாற் போலல்லாமல் நித்திய வாசம் செய்தருளுகின்ற இடங்களாக அமைந்தன அர்ச்சாவதாரத் திருப்பதிகள்.

எம்பெருமானை அடிபணிந்து பேறுபெற வேண்டிய வர்கள் சேதநர்கள்; இவர்கள் எம்பெருமான் எழுந்தருளி யிருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு செல்ல வேண்டிய வர்கள். இங்ஙனமிருக்க, இவர்களிடத்தை நோக்கி அவ்வெம்பெருமான் புறப்பட்டு வரும்படியான சந்தர்ப்பம் ஏற்படும் என்ற ஐயம் பிறக்கக்கூடும். அந்த ஐயத்திற்குப் பரிகாரமாக 'வாமனன்' என்கின்றாள். தன் உடைமை யைப் பெறுகைக்குத் தான் இரப்பாளனாய் அவதரித்தபடி யல்லவா வாமனாவதாரம்? இதனால் சேதநலாபம் ஈசுவரனுக்குப் புருஷார்த்தமேயன்றி ஈசுவரலாபம் சேத

நனுக்குப் புருஷார்த்தம் அன்று என்ற ஸத்ஸம்ப்ரதாயார்த்தம் விளங்கும்.

வாமனன் ஓட்டராவந்து: இந்த வாக்கிய சந்தர்ப்ப ஸ்வாரஸ்யத்தால் பெரிய வாச்சான் பிள்ளை அருளிச் செய்வது: ''ஓரடி மண்ணுக்குப் பதறுமவன் இவர்களைப் பெறும் போதைக்கு ஆறியிரானிறே. ஆஸுரப்ரக்ருதியான மகாபலி முன்னே கழஞ்சு மண்ணுக்குப் பதறி நடக்குமவன், இவளொடு தலையானால் ஆறியிரானிறே. காற்றில் முன்னம் கடுகி ஓடிவரக் கடவனிறே'' என்பது.

'கூடிடு கூடலே!': 'நீ கூடி என்னையும் கூட்டு' — என்பது வியாக்கியான ஸ்ரீசூக்தி — 'கூடலை' நோக்கிப் பேசுவது. 'அவன் எழுந்தருளி என்னைக் கூட்டிக் கொள்ளும்படியாக நீ அநுகூலிக்க வேணும்' என்றபடி.

'கூடல்' அசேதநம் ஆகையாலே அது சொல்ல மாட்டாது என்றறிந்தவள் அருகிலிருந்த ஒரு குயிலை நோக்கி 'எப்படியாவது அவன் என்னிடம் வந்து கூடும்படி கூவாய்' என்று அதன் காலின் வீழ்ந்து வேண்டுகின்றாள். 'பவள வாயன் வரக்கூவாய்', 'என் வேங்கடவன் வரக் கூவாய்', 'என் கருமாணிக்கம் வரக்கூவாய்', 'கருளக் கொடியுடைப் புண்ணியனை வரக் கூவாய்', 'உலகளந்தான் வரக் கூவாய்' என்று கூறுபவள்;

> **என்**
> **தத்துவ னைவரக் கூகிற்றியாகில்**
> **தலைஅல்லால் கைம்மாறு இலனே (6)**

என்கின்றாள். இங்கு, 'குயில் பேசுமோ?' என்ற வினா எழுகின்றது. தலைவனைப் பிரிந்த காம மயக்கத்தால் தலைவி அஃறிணைப் பொருள்களையும் கூட விளித்துக் கூறுதல் கவி மாவு. அஃறிணைப் பொருளை அங்ஙனம் விளித்துக் கூறுதல் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்று சொல்லப் பெறும். காமம் மிக்க — (பிரிவினால்) காதல்

விஞ்சுவதனால்; கழி — மிக; படர் — துன்புறுகின்ற; கிளவி — சொல் என்பது இதன் பொருளாகும். 'தலைமகனைக் காணலுற்று வருந்தாநின்ற தலைமகள் தனது வேட்கை மிகுதியால் கேளாதனவற்றைக் கேட்பனவாக விளித்து... கூறாநிற்றல் என்பர் பேராசிரியர்.[24] ஆதாவது, காமம் மிக்கதனால் உண்டாகிய பெருந்துன்பம் காரணமாகக் கேட்டலும் அதற்கு மறுமொழி கூறலும் இல்லாத புள் முதலியவற்றை நோக்கிக் கூறுதல்.

ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மானே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்[25]

என்ற தொல்காப்பிய நூற்பாவை, இதற்குரிய விதியாகக் கொள்ளலாம். மேலும், "ஒரு பயன் சிந்தித்துச் சொல்லுமோ எனின், சொல்லாள்; குழவி அழுதாற்போல் வேட்கை மிகுதியாற் சொன்னவிடத்து அப்பயன் நிகழும். குழவி அழுகின்றது, 'எனக்குப் பால் தம்மின்; நீர் ஆட்டுமின்' என்றழாது, தூக்கம் வந்ததாக அழும்; அழ,அறிவார் பயன் எய்துவிப்பர் என்பது"[26] என்ற இறையனார் களவியலின் உரையாலும் இஃது அறியப்படும். இங்ஙனம் ஆண்டாள் குயிலை வேண்டுவதாக அமைந்த பதிகத்தில் (5 குயிற்பத்து), ஒரு பாடலைக் காட்டுவேன்.

மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணி
வண்ணன் மணிமுடி மைந்தன்
தன்னை உகந்தது காரண மாகஎன்
சங்குஇழக்கும் வழக்கு உண்டே?

24. திருக்கோ. 173 இன் உரை.
25. தொல். செய்யு. 192
26. இறை. கள. 30 இன் உரை. எ-டு. குறள் 1210; குறுந். 107; திருக்கோ. 177 காண்க.

புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்
பொதும்பினில் வாழும் குயிலே!
பன்னி எப்போதும் இருந்து விரைந்துஎன்
பவளவா யன்வரக் கூவாய். (1)

[ஞாழல் — தாழை; பொதும்பு — பொந்து]

என்பது முதற்பாடல். இங்கு சங்கு இழத்தலாவது — கை வளை கழன்றொழிதல்; தலைமகனைப் பிரிந்து வருந்துவதனால் நாயகின் உடம்பு ஈர்க்குப் போல் இளைத்து கைகளில் பொருத்தமாக அணியப்பட்ட வளைகளும் அவலீலையாகக் கழன்று விழும். ஈண்டு வழக்காவது, நியாயம்; 'தன்னை யாசைப்பட்டவர்களுக்கு வளையிழந்து நிற்கைதான் பலன்' என்று இப்படி 'ஒரு நியாயம் அவன் தந்த சாத்திரங்களில் உண்டோ?' என்கின்றாள்.

'பன்னி...கூவாய்': என்ற ஈற்றடியில் அக்குயில் செய்ய வேண்டியதை நியமிக்கின்றாள். ஒரு கால் சொல்லி ஓய்ந்து விடாமல் அவன் திருவுள்ளத்தில் படும்படி பலகாலும் சொல்லி, அவன் விரைந்தோடி வந்து என்னோடே கூடும்படியாக அவனைக் கூவுமாறு வேண்டுகின்றாள். 'என் பவளவாயன்' என்ற ஸ்வாரஸ்யத்தை நோக்கிப் பெரியவாச்சான் பிள்ளையின் அருளிச் செயல்: "என்னோடே கலந்து போகிற சமயத்தில் அணைத்து ஸ்மிதம் (சிரித்தல்) பண்ணி, வருமளவும் ஜீவித்திருக்கும்படி விளை நீரடைத்துப் போன போதைச் செவ்வியோடும் அதரத்தில் பழுப்போடும் வந்தணைக்கும்படியாகக் கூவப் பாராய் என்கின்றாள்" என்பது.

குயிலும் அவள் விருப்பப்படி கூவவில்லை; கண்ண பிரானும் முகம் காட்டவில்லை. இவளுக்கு அடியோடு முகங்காட்டாதொழியில் இவள் தரித்திருக்க மாட்டாள் என்று கருதிய கண்ணன், கனவில் திருமணக் காட்சியைக் காட்டுகின்றான். திருமணத் தொடக்கம் முதலாகக்

காதலியைக் கைபிடித்தல் வரை நடைபெறும் நிகழ்ச்சிகளை ஆண்டாள் கனவில் கண்டு அநுபவித்தவற்றை அப்படியே தன் உயிர்த்தோழிக்குச் சொல்லுவதாக அமைந்தது 'திருமணக் கனவு' என்ற ஆறாம் திருமொழி.

வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம்எங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன், தோழீ நான் (1)

என்பது முதற்பாசுரம். நாரண நம்பி தன்னை மணம் புணருவதாக நிச்சயித்து ஆயிரக்கணக்கான யானைகள் சூழ்ந்து ஊரை வலம் வரவும், நகர் முழுவதும் மக்கள் பூரணகும்பங்களை வைத்து வரவேற்கவும் தோரணங்கள் நாட்டியிருக்கவும் கனாக்கண்டதாகத் தோழியிடம் கூறு கின்றாள். கண்ணபிரான் அலங்காரப்பந்தரின் கீழ் எழுந்தருளியிருக்கவும் (2), துர்க்கை என்ற நாத்தனார் தனக்குக் கூறைப் புடவை உடுத்த நறுமணம் மிக்க மலர் சூட்டவும் (3), அந்தணர்கள் காப்புநாண் (கங்கணம்) கட்டவும் (4), மதுரையார் மன்னன் பாதுகைகளைச் சாத்திக்கொண்டு பூமியதிர வரவும் (5), தன்னைக் கைத்தலம் பற்றவும் (6), தீவலம் செய்யவும் (7), அம்மி மிதிக்கவும் (8), கண்ணன் கையின் மேல் தன்கையை வைத்துப் பொரிகளை அள்ளித்தெளிக்கவும் (லாஜஹோமம்) (9), மங்கல வீதி வலம் வந்து மஞ்சனம் ஆட்டவும் (10) கனவு கண்டதாகக் கூறுகின்றாள்.

திருமஞ்சனம் ஆட்டுமளவும் கனாக் கண்டதாகச் சொல்லப்பட்டிருந்தாலும் அடுத்தபடியாக புணர்ச்சியும் கனவிலேயே நடைபெற்றதாகக் கொள்ள வேண்டும். இந்நிலையில் கனவு கலைகின்றது. மெய்யாகவே கண்ண பிரானுடைய திருவாயமுதத்தை நாடோறும் இடைவிடாது பருகும் திருச்சங்காழ்வானை நோக்கி வினவுகின்றாள். (பதிகம்-7).

கர்ப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண்சங்கே (1)

என்பது இத்திருமொழியின் முதற்பாசுரம். இவ்வநுபவம் பாவனையில் நடைபெற்றதாகக் கொள்ள வேண்டும். அஃறிணைப் பொருள்களுடன் பேசுவதற்கு தொல்காப்பிய விதி இடம் தருகின்றது என்பது மேலே காட்டியதை ஈண்டு நினைவு கூர்க. இந்த இரண்டு திருமொழிகளும் வைணவர் களின் திருமண வைபவத்தில் இன்றும் ஓதப் பெற்று வருகின்றன.

சங்கு மறுமொழி தரவில்லை. ஆண்டாளுக்கு ஆற்றாமை மீதூர்ந்து நிற்கின்றது. காலமோ கார்காலம். பண்டு எம்பெருமான் தன்னை விட்டுப் பிரிந்தபோது கார் காலத் தொடக்கத்தில் வருவதாகச் சொல்லிச் சென்றது நினைவிற்கு வருகின்றது. மேகவண்ணனும் மேகங்களுடன் வந்திருக்கக்கூடும் என்று நினைக்கின்றாள். 'மேகங்களே, எம்பெருமானும் வந்தானோ?' என்று கேட்கின்றாள். அவை மறுமாற்றம் சொல்லவில்லை; எம்பெருமானும் தென்படவில்லை. தன் நிலையை அவனிடம் சென்று உரைக்குமாறு இரக்கின்றாள். எட்டாம் திருமொழி வேங்கட வாணனின் மேகவிடுதூதாக அமைகின்றது. தூதில் நான்கு செய்திகளைச் சொல்லியனுப்புகின்றாள் கோதைப் பிராட்டி.

முதல்செய்தி :

என்னாகத் திளங்கொங்கை
விரும்பித்தாம் நாடோறும்
பொன்னாகம் புல்குதற்கு
என்புரிவுடைமை செப்புமினே (4)

[ஆகம் - மார்பு; தாம் - எம்பெருமான்; புல்குதல் - அணைதல்; புரிவுடைமை - ஆசையுடைமை]

என்பது பிராட்டியின் திருவாக்கு. "ஒரு பொருளின்மீது விருப்பமுள்ள சிறார்களைப் பெற்றோர் எவ்வளவு சமாதானப் படுத்தினாலும் அவர்கள் சமாதானம் அடைவதில்லை. விரும்பின பொருளைப் பெறும் வரையிலும் விடாத பிடிவாதம் கொள்வதுபோல் என் இளங்கொங்கைகளும் அவ்வெம்பெருமானுடன் அணைய வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கின்றன" என்கின்றாள். "சொற் கேளாத ப்ரஜைகளைப் (பிள்ளைகள்) போலேயாய்த்து முலைகளின்படி" என்பது வியாக்கியான வாக்கியம்.

இரண்டாவது செய்தி :

தான்கொண்ட சரிவளைகள்
 தருமாகில் சாற்றுமீனே (5)

என்பது. அவனுடைய மன ஈடுபாட்டை அறிந்து கொண்டு தன் நிலையைத் தெரிவிக்குமாறு வேண்டுகை என்ற குறிப்பும் புலனாகின்றது. "அவன் தரிலும் தருகின்றான், தவிரிலும் தவிர்கின்றான்; நீங்கள் அறிவித்துப் போருங்கள்" என்பது வியாக்கியான வாக்கியம். இஃது அநுபவித்து மகிழத்தக்கது.

மூன்றாவது செய்தி :

உலங்குண்ட விலங்கனிபோல்
 உள்மெலியப் புகுந்தென்னை
நலங்கொண்ட நாரணற்குஎன்
 நடலைநோய் செப்புமினே (6)

[உலங்கு - பெரும் கொசுக்கள்; நடலை - நிற்பது, இருப்பது, விழுவது, எழுவதாய்ப் படுகிற நோய்]

என்பது பிராட்டியின் திருவாக்கு. "உலங்கு என்கின்ற பெருங் கொசுக்கள் விளாம்பழத்தில் மொய்த்தால் அதன்

சாறெல்லாம் சுவறிப் போவதுபோல் என் உடம்புடன் அணைந்து என் ஆற்றல் முழுவதையும் கொள்ளை கொண்ட பெருமானுக்கு நான் இங்ஙனம் நோவு பட்டுக் கிடக்கும் நிலையை எடுத்துக் கூறுங்கள்'' என்கின்றாள்.

நான்காவது செய்தி :

கொங்கைமேல் குங்குமத்தின்
 குழம்பழியப் புகுந்து ஒருநாள்
தங்குமேல் என் ஆவி
 தங்குமென்று உரையீரே (7)

''அவர் என்னுடன் கலவி செய்ய வருவாரென்று நம்பி முலைத் தடங்களில் குங்குமக் குழம்பு பூசி அணி செய்து வைத்துள்ளேன்; அதனைப் பயனுடைய தாகும்படிச் செய்வாராகில் தரிக்கலாம் என்று சொல்லுங்கள்'' என்கின்றாள். 'ஆவிதங்கும்' என்ற சொல் நயம் நோக்கத்தக்கது. ''ஒரு நாள் அணைவது போகத்துக்குப் போதாது; அஃது உயிர் தரிப்பிற்கே சாலும்'' என்ற குறிப்பு அறிந்து மகிழத் தக்கது. ''ஒரு நாள் தங்குமேல் என்னாவி தங்கும் குணஜ்ஞானத்தாலே தரியாளோ என்றிருக்க வொண்ணாது; அணையுமாகில் தரிக்கலாம்'' என்பது வியாக்கியான சூக்தி.

இறுதியாகத் தன் நிலைமையை மீட்டும் ஒரு முறை புலப்படுத்தி உள்ளத்தைத் தொடுமாறு கூறும் செய்தி நம் உள்ளத்தையும் நெகிழச் செய்கின்றது. ''இராம நாமங்களைச் சொல்லி மழைக் காலத்தில் எருக்கம் பழுப்புகள் அற்று விழுவதுபோல் ஒசிந்து கிடக்கின்றேன். இந்நிலையில் கிடந்து தவிக்கும் எனக்கு நெடுகிச் செல்லுகின்ற காலத்தில் ஒரு நாளாகிலும் ஒரு வாய்ச்சொல் அருளமாட்டாரோ?'' (8) என்று தான் ஏங்கி நிற்கும் நிலையைப் புலப்படுத்துகின்றாள். அதன் பின்னர் அவள் பேசும் பேச்சுதான் நம் உள்ளத்தில் ஆழப் பதிகின்றது. இஃது

எம்பெருமான் திருவுள்ளத்தைக் கட்டாயம் தொடத்தான் செய்யும்.

மதயானை போல்எழுந்த
  மாமுகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்!
  பாம்பணையான் வார்த்தைஎன்னே!
கதியென்றும் தானாவான்
  கருதாதோர் பெண்கொடியை
வதைசெய்தான் என்னும்சொல்
  வையகத்தார் மதியாரே (9)

[பதி - இருப்பிடம்; தான் - எம்பெருமான்; வதை - கொலை; மதியார் - மதிக்க மாட்டார்கள்]

"திருவனந்தாழ்வானிடம் எல்லா வித கைங்கரியங்களையும் கொள்வதுபோல் என்னிடத்தும் கொள்வன் என்றிருந்தேன்; பாம்பணையைக் கை விட்டுத் திருமதுரையில் வந்து பிறந்த கண்ணபிரான் தேர்த்தட்டில் நின்று சொன்ன வார்த்தையை (சரமசுலோகத்தை)[27] மெய்யென்று நம்பி மோசம் போனேன் பாம்போடே அணைந்து பாம்பின் தன்மையே தனக்கும் உண்டாகப் பெற்றான். அதற்கு நாக்கு இரண்டாக இருப்பதுபோல் இவனும் இரண்டு நாக்குப் பெற்றான்; பொய்யனாகி விட்டான்" என்ற கருத்து தொனித்து நிற்பதைக் கண்டு மகிழ்கின்றோம். தன்னுடைய காக்கும் தொழிலை மறந்ததோடன்றி ஒரு பெண் பிள்ளையையும் கொலை செய்தான் என்ற கருத்து உலகில் பரவுமாகில் பின்பு அவனை மதிப்பார் உண்டோ? என்று அவன்மீது கழிபேரிரக்கமும் கொள்கின்றாள்.

ஒரு திருமொழியில் (9 - வது திருமொழி) திருமாலிருஞ்சோலைப் பெருமானை வழிபடுகின்றாள். இங்கு இரண்டு பாசுரங்கள் அற்புதமானவை.

---

27. கீதை 18: 66

நாறு நறும்பொழில்மா
　　லிருஞ்சோலை நம்பிக்குநான்
நூறு தடாவில்வெண்ணெய்
　　வாய்நேர்ந்து பராவிவைத்தேன்
நூறு தடாநிறைந்த
　　அக்கார வடிசில்சொன்னேன்
ஏறு திருவுடையான்
　　இன்றுவந்திவை கொள்ளுங்கொலோ (6)

'மணம் கமழாநின்ற சோலைகளாலே சூழப்பெற்ற திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு அடியேன் நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்காரவடிசிலும் வாசிக கைங்கரிய ரூபமாக சமர்ப்பிக்கின்றேன். இவற்றை அவ்வெம்பெருமான் திருவுள்ளம் பற்றுவானா?' என்கின்றாள்.

எம்பெருமானர் நாச்சியார் திருமொழி காலட்சேபம் நடத்தும் பொழுது இப்பாசுர அளவில் வரும்பொழுது, "ஆண்டாளுடைய எண்ணம் சொல்லளவில் நின்றதேயொழிய செயலில் முடிந்ததாக இல்லை; அதனை நாம் தலைக்கட்டவேண்டும்" என்று அப்போதே புறப்பட்டு திருமாலிருஞ்சோலை மலைக்கு எழுந்தருளி நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்கார வடிசிலும் அழகருக்கு அமுது செய்வித்தருளினார்; அங்கிருந்தவாறே சிரீவில்லிபுத்தூருக்கும் எழுந்தருளி ஆண்டாளை வணங்கி நிற்க, தன் நினைவறிந்து இவர் ஆற்றிய செயலுக்கு மனமுகந்து 'நம் அண்ணரே!' என்று சொல்லி அர்ச்சாவதார சமாதியையும் கடந்து ஏழடி நடந்து உடையவரைத் தழுவிக் கொண்டாள் என்று பெரியோர் பணிப்பர்; இதுபற்றியே இராமாநுசருக்குக் 'கோயில் அண்ணன்' (கோயில் — திருவரங்கம்) என்ற திருப்பெயரும் ஏற்பட்டது. இதுபற்றியே வைணவ உலகம் இவரை ஆண்டாள் வாழித் திருநாமத்தில்,

பெரும்பூதூர் மாமுனிக்குப்
பின்னானாள் வாழியே!

என்று குறிப்பிட்டு வாழ்த்துகின்றது.

"ஒரு பூர்ண கும்பத்துக்கு மேற்பட அதிகப்படியான வற்றை விரும்பாத எம்பெருமான் விஷயத்திலே நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்கார வடிசிலும் சமர்ப்பிக்க வேண்டுவானேன்?" என்று நஞ்சீயர் சந்நிதியிலே நம் பிள்ளை கேட்க, அதற்கு சீயர், "திருவாய்ப் பாடி செல்வத்திற்கு இதெல்லாம் கூடினாலும் ஒரு பூரண கும்பத்துக்குப் போராது காணும்!" என்று அருளிச் செய்தாராம்.

**'இன்று வந்து இவை கொள்ளுங் கொலோ?':** "அத்திரி பகவான் ஆசிரமத்தில் ஒரு மாலையில் சென்று 'நான் இராமன், இவள் மைதிலி, இவன் இலக்குவன்' என்று நின்றாப் போலே வந்து நின்று இவற்றை ஏற்றுக்கொள்ள வல்லனோ?" என்ற வியாக்கியான சூக்தியும் ஈண்டு அநுசந்திக்கத்தக்கது.

அடுத்துப் பேசுகின்றாள்:

**இன்றுவந் தித்தனையும்**
**அமுதுசெய் திடப்பெறில்நான்**
**ஒன்றுநூ றாயிரமாக் கொடுத்துப்**
**பின்னும் ஆளும் செய்வன் (7)**

என்று. "அந்த எம்பெருமான் இங்கு எழுந்தருளி இவற்றை அமுது செய்துவிட்டுப் போய்விடாமல் என் இதயத்தில் நிலையாக இருந்துவிடும் பட்சத்தில் 'ஒழிவில் காலமெல் லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்' என்று பெரியோர் எண்ணிய குறையறச் செய்திடு வேன்" என்கின்றாள். "இன்று இத்தனையும் அமுது செய்திடப்பெறில், நான் ஒன்று நூறாயிரமாகக் கொடுப் பேன்; அடியேன் மனத்தில் வந்து நேர்படில் பின்னும்

ஆளுஞ் செய்வேன்'' — என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒன்று நூறாயிரமாகக் கொடுத்தலாவது — தான் சமர்ப்பித்த தடாக்களில் ஒரு தடாவை அமுது செய்தால் அதற்குக் கைம்மாறாகப் பின்னும் நூறாயிரம் (இலட்சம்) தடா சமர்ப்பித்தல். இப்படியே கணக்கிட்டுப் பார்த்து அவளது பாரிப்பை அறிந்து கொள்ளலாம்.

ஒரு திருமொழியில் (திருமொழி — 12) தான் அவன் இருக்கும் இடத்தை நோக்கிப் போகப் பார்த்தும் தான் சக்தியற்றவளாய் இருக்கையாலே தன்னிடத்தில் பரிவுள்ள வர்களை நோக்கி அக்கண்ணபிரான் எழுந்தருளியிருக்கும் இடத்தில் கொண்டுபோய் விடுமாறு வேண்டுகின்றாள். ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வோர் உத்தேச்ய பூமியைக் குறிப்பிடுகின்றாள். மதுரை, ஆய்ப்பாடி, நந்தன் திருமாளிகை, யமுனைக்கரை, காளியன் இருந்த பொய்கைக் கரை, பத்தவிலோசனம்[28], பாண்டீரம்[29] என்னும் ஆல மரம், கோவர்த்தனம், துவரை — என்ற இடங்களைக் குறிப்பிட்டு மகிழ்கின்றாள்.

இவளிடம் பரிவுள்ளவர்களும் கால் நடையில் போக முடியாதபடி தளர்ந்திருந்தனர். "என்னை அவன் பக்கல் கொண்டு செல்ல இயலாவிடினும் அவனிடமிருந்து ஏதாவது ஒரு பிரசாதத்தைக் கொண்டு வந்து அவ்வழியாலே என்னை வாழ்விக்கப் பாருங்கள்'' — என்று கூறுவது 13 ஆம் திருமொழி. பிரசாதம் என்பது அருளுக்கிடமான திருத்

---

28. **பக்தவிலோசனம் :** பக்தம்-அன்னம், சோறு; விலோசனம்-பார்வை. சோறு பார்த்திருக்கும் இடம். யமுனைக் கரையில் இருடிகள் 'ஆங்கிரஸ' என்னும் வேள்வியை அநுட்டித்த இடம்.

29. **பாண்டிவனம்:** பாண்டீரவடம் என்ற வடசொல் திரிந்து பாண்டிவனம் என்றாயிற்று. யமுனையாற்றின் அருகில் பெரிய ஆலமரம் ஒன்று உள்ள இடம். பலராமன் பிலம்பன் என்ற அசுரனைக் கொன்ற இடம்.

துழாய் முதலியவை. இத்திருமொழியில் 'அரையிற் பீதக ஆடையைக்' கொண்டு தன்னுடைய வாட்டம் தணிவிக்குமாறு வேண்டுகின்றாள் (1). மேலே இட்ட உத்தரீயம் கூடாதோ? கூடாது. "ஆண்டாள் கண்ணபிரானுடைய ஸ்வேதபரிமளத்திலே மிகவும் ஆசை கொண்டவள் காணும்; மேலிட்ட உத்தரீயத்தில் இது விசேஷமாகக் கிடைக்காது; திருவரையிற் பீதாம்பரத்தில்தான் அஃது ஆசைதீரக் கிடைக்கும் என்று 'அரையிற் பீதக ஆடைகொண்டு' என்கின்றாள்" என்று பட்டர் அருளிச் செய்வர்.

கண்ணபிரான் சம்பந்தம் பெற்ற திருத்துழாய் மலரைக் கொணர்ந்து தன் குழலில் சூட்டுமாறு வேண்டுகின்றாள்(2). "அவனுடைய வனமாலையை வஞ்சியாது தந்தருளினால் அதனைக் கொண்டுவந்து என் மார்பில் புரட்டுங்கள்" (3) என்றும், "அமுதம் போன்ற அவன் திருவாயில் ஊறிக் கிடக்கின்ற ரசத்தை உலராமல் பசையோடு கொண்டுவந்து அதை நான் பருகும்படி செய்து என் ஆயாசத்தை நீக்கப் பாருங்கள்" (4) என்றும், "அவன் பசுக்கூட்டங்களின் பின்னே ஊதிவரும் புல்லாங்குழலின் துளையிலுண்டாகின்ற நீரைக் கொணர்ந்து என்னுடைய முகத்தில் குளிர்ச்சி உண்டாகும்படி தடவுங்கள்" (6) என்றும், "அந்தச் சுணைகேடன் நடந்துசெல்லும்போது அவன் திருவடிபட்டு மிதித்த இடத்திலுண்டான அடிப்பொடியையாவது கொணர்ந்து என் உடம்பில் பூசுங்கள்" (6) என்றும், "என்னுடைய கொங்கைகளை அழகியதாயும் கற்பகக்கிளை போன்றதாயுள்ள திருத்தோள்களோடே அமுக்கி அணைத்துக் கட்டிவிடுங்கள்" (7) என்றும் வேண்டுகின்றாள்.

காதல் முறுகிய நின்ற நிலையில் பேசுகின்றாள்:

உள்ளே உருகி நைவேனை
　　உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளி குறும்பனைக்
　　கோவர்த் தனனைக் கண்டக்கால்

கொள்ளும் பயனொன் றில்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட் டவன்மார்பில்
எறிந்துஎன் அழலைத் தீர்வேனே (8)

[நைதல்-வருந்துதல்; கொள்ளி-அபகரித்துக் கொண்டவன்; குறும்பன் - மகளிரிடம் வம்பு செய்பவன்; கிழங்கு - வேர்; அள்ளிப் பறித்திட்டு - பற்றிப் பிடுங்கி; அழல்-துக்கம்]

'கொள்ளும் பயனொன்றில்லாத' : (ஆட்டுக் கழுத்தில் தொங்கும்) பயனற்ற முலைபோல. அதாவது எம்பெருமானை அணைத்துக் கொள்வதற்கு உறுப்பல்லாத என்றபடி. கிழங்கோடும் அள்ளிப் பறித்திட்டு : இதனால் அவளது அளவற்ற ஆற்றாமை புலப்படும். இஃது உள்ளுள்ள சினமும் துக்கமும் தோன்றச் சொல்லுகின்றபடி. கிழங்கு — ஆன்மப் பொருள் என்று பணிப்பர். ''கொங்கை தன்னைக் கிழங்கோடும் அள்ளிப் பறித்திட்டு எறிந்து என் அழலைத் தீர்வேனே'' என்றால் போதாதோ? 'அவன் மார்பில் எறிந்து' என்பது எதற்காக? இம்முலைகளால் தான் படும் பாட்டை பெண்ணின் வருத்தமறியாத பெருமானான அவனும் படவேண்டும் என்ற கருத்தினால் என்பதை உணர்த்துவதற்காக; இம்முலைகள் அவன் மார்பில் ஏறி அவனைக் கும்மிக் குமைக்கவேண்டும் என்று நினைக்கின்றாள். இக்கஷ்டத்தை அவனும் பட்டானாகில் அதுவே இவளுடைய அழல் தீர்ந்தபடி போலே ஆகும் என்பது கருத்து.

பதினான்காம் திருமொழியாகிய இறுதித் திருமொழி ஆண்டாள் பட்ட வருத்தமெல்லாம் தீரும்படி கண்ண பிரான் வந்து சேவை தந்தருளினபடியைக் கூறுவதாக அமைகின்றது. 'என் அவாவறச் சூழ்ந்தாயே' (திருவாய். 10. 10: 10) என்று திருவாய் மொழியில் நம்மாழ்வார் பெற்ற பேற்றினை இவளும் பெறுகின்றாள்.

இந்தப் பேற்றினை நேராகப் பேசாமல் "கண்ணபிரானைக் கண்டதுண்டோ?" என்று கேட்பாரும், "ஓம், நன்றாகக் கண்டதுண்டு" என்று விடையளிப்பாருமாக வெளிப்படைப் பொருள் கூறும் முறையில் நடைபெறுகின்றது இத் திருமொழி.

இவர் தம் பாடல்களில் கொச்சகக்கலி, அறுசீர் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் ஆகிய யாப்பு வகைகள் பயின்று வந்துள்ளன.

தமிழ் கூறு நல்லுலகில் ஒரு பகுதியான பாக்காலா தமிழ்ப் பெருமக்களுக்கும் தமிழ்ச் சங்கத்தாரும் தமிழை மறவாமல் போற்றி வருவதற்கும், இத்தகைய பேச்சுகள் அமைக்க இடம் தந்து வருவதற்கும் என் சார்பாகவும் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் சார்பாகவும் என் உளங்கனிந்த நன்றி என்றும் உரியது.

திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்புதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க் கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே[30]

என்று இச்சீமாட்டியை வாழ்த்துகின்றது வைணவ உலகம். இத்துடன் என் பேச்சினையும் தலைக்கட்டுகின்றேன். வணக்கம்.

30. அப்புள்ளை; வாழித் திருநாமம் - 12.

# 2. பாணர்குல விளக்கு *

ஊர்ப் பெருமக்களே, ஆசிரியப் பெருந்தகையீர், மாணாக்க மணிகளே,

வணக்கம், இன்று உங்கள் முன்னர் பாணர் குலவிளக்காகத் திகழ்ந்த திருப்பாணாழ்வார் பற்றிப் பேச முன் வந்துள்ளேன். இந்தப் பாணர்கள் என்பவர் யாவர்? சங்க காலத்திலிருந்தே இசை பாடி மக்களுக்கு இசையமுதூட்டி வாழ்ந்து வருபவர்கள். சங்க இலக்கியத் தொகுப்பில் ஒன்றாகிய பத்துப்பட்டில் உள்ள சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்ற இரு பாட்டுகளும் இவர்தம் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுகின்றன. இவர்களுடைய வாழ்க்கை இலக்கியச் சிறப்பு பெற்றுத் திகழ்வதைக் கண்டு மகிழ்கின்றோம். திருநீலகண்ட யாழ்ப் பாணர் என்பாரும் அவர்தம் வாழ்க்கைத் துணைவி மதங்க சூளாமணியும் சம்பந்தப் பெருமானின் திருப்பாடல்களைப் பாடிக் கொண்டே சம்பந்தப் பெருமானுடன் திருத்தலப் பயணம் செய்து வந்தனர் என்பதை ஞானசம்பந்தர் வரலாற்றால் அறிகின்றோம். சம்பந்தரைச் சந்திக்கும் முன்பே, திருநீலகண்ட யாழ்ப்பாணர் உயர் பதவியாகிய நாயனார் பதவியைப் பெற்றுவிட்டார் என்பதைப் பெரியபுராணத்தால் அறிகின்றோம்.

---

* திருவேங்கடவன் பல்கலைக்கழகவிரிவுச் சொற்பொழிவுத் திட்டத்தின்கீழ் 27-1-67 இல் ஏகாம்பரக் குப்பம் கழக உயர்நிலைப்பள்ளியில் நிகழ்த்தப் பெற்ற சொற்பொழிவு.

வாழ்க்கை வரலாறு : இங்ஙனமே பாணர் குலத்தில் குலவிளக்காகத் திகழ்ந்த ஆழ்வார் ஒருவரையும் காண்கின்றோம். இவர் திருவரங்கத்திற்கு அருகிலுள்ள, காவிரியின் தென்கரையிலுள்ள, ஒரு காலத்தில் சோழப் பேரரசின் தலைநகராகத் திகழ்ந்த உறையூரில் திருவவதரித்தவர். அக்காலத்தில் இவர்கள் நகருக்கு வெளியே ஒதுக்குப்புறமாகக் குடிசைவாழ் பெருமக்களாகத் திகழ்ந்தனர். அக்காலத்து மக்கள் இப் பெருமக்களைத் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கியே வைத்திருந்தார்கள். இப் பெருமக்கள் நற்கலைகளான ஆடல் பாடல்களில் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள். யாழையே தெய்வமாகப் போற்றி வாழ்ந்து வந்தார்கள்.

இந்தத் திருக்குலத்தில் அவதரித்தவரே இன்று நாம் அறியப்போகும் இசைச் செல்வர். இவரை வேதாந்த தேசிகர் 'பாண் பெருமாள்'[2] என்றே சிறப்பித்துப் பேசுவர். இவர் பிறப்பே விநோதமானது. இவரைப் பெற்றெடுத்த தாய் — தகப்பன் யாவரெனத் தெரிந்துகொள்ள இயலவில்லை. ஓர் அந்தணப் பெருமகன் கழனியிலே நெற்பயிர்க் கதிர்களுக்கிடையே கிடந்த குழந்தையே இந்தப் பாண் பெருமாள்.[3] மக்கள் யோனியில் பிறவாது பிறந்த குழந்தையை அவ்வூரில் பாணர் குலத்தில் பிறந்தான் ஒருவன் அக்குழந்தையைக் கண்டு, தன் நல்வினைப் பயன் என்று மகிழ்ந்து, தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான்; இவனுக்கு மகப்பேறு வாய்க்கப் பெறாததால் இவனுடைய காதல் மனையாள் இக்குழந்தையை அன்புடன் ஏற்றுத் தன் மலட்டுத் தன்மையையும் போக்கிக் கொண்டாள். இக் குழந்தையை ஆவின்பால் போன்ற சத்துவகுண உணவையே

---

2. தே. பி. 130 (அமிர்தாசு வாதினி).

3. இவரைத் திருமாலினது ஸ்ரீவத்ச அம்சமாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். பிறந்த நாள் கார்த்திகை மாதம் உரோகிணி நட்சத்திரம்.

கொடுத்து வளர்த்து வந்தார்கள் அப் பாணர்த் தம்பதிகள். இங்ஙனம் வளர்க்கப் பெற்ற இக்குழந்தை, திருமால் அருளால் தோன்றியதால், வளர்ந்தபிறகு இயற்கையிலேயே உலகப் பற்றற்று எம்பெருமானுடைய திருவடித் தாமரைகட்கு தம் மனத்தை ஈடுபடுத்திக் கொண்டது.

வளர்த்த பெற்றோர்கள் இத் தெய்வக் குழந்தைக்கு என்ன பெயர் இட்டனர் என்பதும் அறியக் கூடவில்லை. தாம் புகுந்த குலத்திற்கேற்ற யாழ்ப்பாடலில் தேர்ச்சி பெற்று சிறந்த பாடகராகத் திகழ்ந்தார். அரங்கன் புகழை யாழ் கொண்டு பாடுவதையே பொழுது போக்காகக் கொண்டிருந்ததால், அக்காலத்து மக்கள் 'பாணன்' என்றே இவரை வழங்கி வந்தார்கள்; இயற்பெயர் இன்னதென்று கூட மறந்து விட்டார்கள்.

இந்தப் பாணருடைய உள்மனம் அரங்கநகர் அப்பனையே அல்லும் பகலும் பாவனை செய்து கொண்டிருந்தது. படைப்பின் செயல்கள் எல்லாம் இவருக்கு அந்த அப்பனுடைய அழகுகளையும் ஆச்சரிய சக்திகளையும் வெளியிட்டன. படைப்பு முழுவதும் அரங்கநாதனின் மாயக் கூத்தென்று அவர் உள்மனம் உணரத் தொடங்கியது.

**கருஅரங்கத் துள்கிடந்து**
**கைதொழுதேன்; கண்டேன்**
**திருவரங்க மேயான்**
**திசை[4]**

என்று பொய்கையார் கூறுவதுபோல் திருவரங்கப் பெருமானே இவருக்கு தாரக, போஷக, போக்கியமாக அமைந்து விட்டான். எழு ஞாயிறு இருளை ஓட்டுவது போல், இருள் சக்திகளான அஞ்ஞானம், அதர்மம் முதலியவற்றை ஈசுவர சக்தி ஓட்டிக் கொண்டிருப்பதாக உணர்ந்தார் இப்பரம ஞானி. வெண்ணெய் போல் உருகக்

4. முத. திருவந். 6.

கூடிய உள்ளத்தைக் கவர்ந்து அந்த மகா சக்தி அருள் செய்து கொண்டிருப்பதை அவர்தம் உள்மனம் தெளிவாக அறிந்து கொண்டது. ஆகவே, அவர் உள்ளம் அரங்கனின் அடித்தாமரைகட்கு வண்டாகி யாழ் கொண்டு இசை பாடிக் கொண்டிருந்தது வியப்பாகுமோ? இல்லை; இல்லை.

அக்காலச் சமூக நிலைப்படி இவர் மனம் தாழ்வுணர்ச்சியால் பீடிக்கப் பெற்றிருந்தது. உபய காவேரியின் நடுவிலுள்ள அரங்கன் திருக்கோயிலில் அடியிடுவதற்கு இவர் மனம் துணியவில்லை. ஆகவே, காவிரியின் தென் திருக்கரையில் திருமுகத்துறைக்கெதிரில் யாழும் கையுமாக நின்று கொண்டு நம் பெருமாளைத் திசை நோக்கித் தொழுவதை அன்றாட வழக்கமாகவே கொண்டிருந்தார். பெரிய பெருமாள் விஷயமாக அநேக திவ்விய கீர்த்தனங்கள் இவர்தம் திருவாயினின்றும் கண்டமும் கருவியும் ஒக்கப் புறப்பட்டவண்ணம் இருந்தன. இந்த இசையமுதம் கேட்பவர் செவியையும் மனத்தையும் குளிரச் செய்தது. எம்பெருமானின் திருவுள்ளமும் உகப்பில் ஆழ்ந்தது. கின்னரர், கிம்புருடர், கந்தருவர் முதலானோர் இவர்தம் இசை விருந்தைக் கண்டு வியப்புக் கடலில் ஆழ்ந்து போயினர்.

பேரன்பர்களே, இந்தப் பாணர் தந்த விருந்து இன்னொரு பாணனின் வரலாற்றையும் நினைவுகூரச் செய்கின்றது. திருக்குறுங்குடியை[5] அடுத்துள்ள மகேந்திர

5. பாண்டிநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. ஒரு சிறிய ஊர். மலையை யொட்டிய பகுதியாதலின் இவ்வூர் நல்ல குளிர் சோலைகள் நிரம்பியுள்ளன.

இரவும் பகலும் ஈன்தேன்
முரல வண் டெல்லாம்
குரவின பூவே தான்மண
நாறும் குறுங்குடி (பெரி. திரு. 9.6:4)

என்பர் திருமங்கையாழ்வார்.

கிரியில் யாழ் வாசிப்பதில் வல்ல பாணர்களுள் ஒருவன் திருக்குறுங்குடி நம்பியைச் சேவிக்க வருகின்றான். அவன் வந்த நாள் கார்த்திகை மாதம் சுக்கிலபட்ச ஏகாதசி. அவன் வரும் வழியில் பசியுடன் இருந்த பிரம்ம ராட்சசன் ஒருவன் இவனைப் பற்றிப் புசித்துப் பசி தீர்த்துக் கொள்ள விரும்புகின்றான். நம்பியைச் சேவித்த பிறகு தான் வந்து இராக்கதனுக்கு இரையாவதாகப் பாணன் உறுதி கூற, இராக்கதனும் அவன் சொற்களை நம்பி அவனை விடுவிக்கின்றான். பாணன் நம்பியைச் சேவிக்கின்றபோது கோயிலின் கொடிமரம் சந்நிதியை மறைக்கின்றது. பாணன் அதனைப் பொருட்படுத்தாமல் உளம் உருக உடல் புளகிக்கப் பாடுகின்றான். நம்பியின் அருளால் கொடிமரம் நகர்கின்றது.[6] இதனைக் கண்ட பாணன் மயிர்சிலிர்க்கப் பெற்று ஆழ்வார் பாசுரங்களைக் கைசிகப் பண்ணில் அமைத்துப் பாடுகின்றான்; பாடி அநுபவிக்கின்றான்.

பாசுரங்களைக் கேட்டு மகிழ்ந்த நம்பியும் அவனுக்கு 'நம்பாடுவான்' என்ற திருநாமமும் வழங்குகின்றார். பாசுரங்களை விரைவாகப் பாடுவதைக் கேட்ட நம்பி காரணத்தை வினவுகின்றார். பாணன் தான் அரக்கனுக்குக் கொடுத்து வந்த வாக்குறுதியைக் கூறுகின்றான். நம்பியின் அருளால் அரக்கனின் பசி நீங்குகின்றது. அவன் தன்னிடம் வந்த நம்பாடுவானைப் புசிக்க மறுக்க, இடைவந்த நம்பி சமாதானம் செய்து ஒரு பாசுரத்தின் இசைப் பலனைத் தாரைவார்த்து அரக்கனுக்குத் தருமாறு நம்பாடுவானிடம் நவில, அவனும் அவ்வாறே செய்கின்றான். இதனால் தான் இத்திவ்வியதேசத்தில் கௌசிக ஏகாதசி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது என்பதையும் ஈண்டு நினைவு கூர்கின்றோம்.

---

6. திருப்புன்கூரில் திருநாளைப் போவாருக்குத் (நந்தனாருக்கு) தேர் நிலையிலிருந்தே இறைவன் காட்சியளிக்கத் திருநந்தி தேவரை விலகியிருக்கும்படி கட்டளையிட, அவரும் அவ்வாறே விலகிவிட்டதாக வரலாறு.

இனி பாண் பெருமாளின் வரலாற்றுக்கு வருவோம். ஒருநாள் பாணர் தம் இசைக் கருவியை மார்பில் தாங்கிய வண்ணம் விரல்களால் தடவித் திருவரங்கன் சந்நிதியை நோக்கி நின்று, அகமும் முகமும் மலர எல்லாச் செல்வங் களையும் ஒருங்கே பெற்றவரைப் போல் பெருமிதங் கொண்டு பாடி நின்றார். அப்போது அவ்வழியாக அரங்கப் பெருமானுக்குத் தீர்த்த கைங்கரியம்[7] செய்யும் லோக சாரங்கர் என்பார் பொற்குடத்தில் திருமஞ்சனம் (நீர்) கொண்டு சென்றார். இவரும் உறையூரில் வாழ்பவர்; நாடோறும் அக்கரையிலுள்ள அரங்கனுக்கு கைங்கரியம் செய்து வருபவர். இவருடைய வித்தையையும் புத்தி யையும் நியம நிட்டைகளையும் அநுட்டான முறை களையும் கண்டவர்கள் இவரை 'லோகசாரங்க மாமுனிவர்' என்றே வழங்குவதுண்டு. பாணரைக் கண்டதும் இவருக்குச் சினம் பொங்கி எழுந்தது. துறைக்கு அருகிலுள்ள வழியில் நிற்கும் பஞ்சமன் ஒதுங்கிக் கொள்ளவில்லை என்பதே இவருக்குக் கோபம் எழக் காரணம். இவர் பாணரைப் பார்த்து அருவருத்து 'போ, போ, எட்டச்செல்' என்று பலமுறை கூவினார். பாணர் பக்தி வசப்பட்டு இவ்வுலகத் தொடர்பை மறந்திருக்கின்றார் என்பதுகூட அந்தக் கோப நிலையில் அவரால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

உள்ளத்தில் உள்ள வெறுப்பும் பகையுமே வெகுளியாய் வெளிப்படும். அஃது அருளுடைமைக்கு மாறானது. ஆகையால் அதற்கு இடம் இல்லாமல் காத்துக் கொள்வது சிறந்தது. சிலசமயம் வலியார் மேல் சினம் பிறப்பதுண்டு; ஆனால் அது பலிக்காது; வலியாரை அது ஒருசிறிதும் துன்புறுத்த முடியாது. மெலியார் மேல் சினம் பிறந்தால் அஃது அவர்களைத் துன்புறுத்தவல்லது. ஆகையால் சினம் பலிக்காதவிடத்தில் மட்டிலும் சினம் கொள்ளாமல் அடக்கிக் கொள்வது போதாது. இங்குச் சினம் காப்பதும்

---

7. கிங்கரன்-அடிமையாள்; கிங்கரன் செய்யும் தொழில் அடிமைத் தொழில்; அதாவது கைங்கரியம்.

காவாததும் ஒன்றுதான். சினம் பலிக்குமிடத்தில் காத்துக் கொள்பவனே சினம் காப்பவன் ஆகின்றான். இஃது அருளுடையவன் செயல்.

செல்லிடத்துக் காப்பான்
சினம்காப்பான்; அல்லிடத்துக்
காக்கின்என்? காவாக்கால்
என்?[8]

என்பது பொய்யாமொழி. இங்கு அருளுடைய லோகசாரங்க முனிவர் செல்லிடத்துச் சினம் கொள்ளுகின்றார். இதனால் அவருடைய மதிப்பு ஒருபடி கீழிறங்கிவிடுகின்றது. நமக்கும் அம்மாமுனிவர் மேல் வெறுப்புத் தோன்றுகின்றது. நெஞ்சிலே வெகுளியான நினைவை அகற்றினால்தான் தப்பித் தவறியும் சினம் பிறக்காமல் காத்துக் கொள்ள முடியும் என்பதை அநுபவத்தால்தான் அறிய முடியும்.

'செவியில் ஏறவில்லையோ? அல்லது காது செவிடோ? என்ன அசட்டுத்தனம் அந்த ஈனச் சாதிக்காரனுக்கு?' என்று அருவருப்புக் காட்டினார்கள் முனிவருடன் வந்தவர்கள். அவர்களில் சிலர் 'இங்குச் சண்டாளன் நிற்பது நீதியோ? வைதிகர்கள் தீர்த்தமாடும் இவ்விடத்திற்கு நீ வருவது முறையா? உன்குலத்திற்கும் இத்தலத்திற்கும் வெகுதூரமாயிற்றே! புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டது போல், தொண்டர் வேடம் தாங்கிக் கொண்டிருக்கின்றாயோ?' என்று வாயில் வந்தபடி வசை மாரி பொழிந்தார்கள். இஃதெல்லாம் 'ஆஷாடபூதி' நிலையிலுள்ள 'வைதிகர்களின் பேச்சு'. இவர்கள் இசைமாரி பொழியும் பாகவதோத்தமர்கள் மேல் வசைமாரி பொழிந்த அற்பர்கள். இவர்களில் ஒருவன் சற்று முரடன். இவன், 'அடா, அவனுக்குத்தான் என்ன செருக்கு? என்ன பிடிவாதம்? இவனைத் துரத்தாமல் விடுவதில்லை!' என்று 'வீரவாதம்' செய்து கொண்டே ஒரு கல்லை எடுத்துப்

---

8. குறள்-301 (வெகுளாமை)

பாணர்மேல் வீசினான். பாணர் திடுக்கிட்டு விழித்து 'பொறுத்தருள வேண்டும்' என்று சொல்லிக் கொண்டே பின்வாங்கிக் கடுநடையாகப் போய்விட்டார்.

கல் விழுந்த பாணரது உடம்பிலும் உள்ளத்திலும் சிறிதளவு கூட வருத்தம் காணப்படவில்லை. ஆனால் பாணர்மேல் கல் விழுந்ததைக் கண்ட லோகசாரங்க மாமுனிவரின் உள்ளம் திடுக்கிட்டது. 'அவர் குற்றமற்ற குணசீலர்; நாரதர் போன்ற ஞானயோகி போலும்!' என்று எண்ணினார். பிறகு இந்த நிகழ்ச்சியை மறந்து விட முயன்றார். திருக்கோயிலுக்குச் சென்று பெருமானைச் சேவித்ததும் 'அருளின் கோலமாய் எல்லாவற்றையும் உணர்ந்து கொண்டே உறங்குவான்போல் அறிதுயிலில் ஆழ்ந்து கிடக்கின்றானே!' என்று தமக்குள் தாமே சொல்லிக் கொண்டே வீடு திரும்பினார். வழக்கம்போல் நியம நிட்டைகளில் மனம் ஈடுபடவில்லை.

**மாமுனிவரின் கனவு:** மாலையில் செய்ய வேண்டிய நியம நிட்டைகளை முடித்துக் கொண்டார்; இரவு உணவு கொண்டார். பின்னர் உறங்கத் தொடங்கினார்; சரியான உறக்கம் இல்லை. கனவுதான் வந்தது. அரங்கத்தில் உறங்குவான் போல் யோகு செய்யும் பெருமான் மாமுனிவரின் வீடு தேடி வந்து விட்டான். இதோ (கனவில்) இவர் கண்முன்தான் இருக்கின்றான்! என்ன உற்பாதமோ? யார் இழைத்த தீங்கோ? நெற்றியில் குருதி ஒழுகும் நிலையில் உள்ளம் கலங்கியவனாகக் காணப்படு கின்றான்! 'நம்முடைய திருமேனியை இங்ஙனம் நோகச் செய்தது நீதியோ?' என்று சொல்லாமல் சொல்லி வினவு கின்றான். லோகசாரங்கமுனிவரும், "சர்வ சக்தியுள்ள பெரிய பெருமானை இப்படிச் செய்தவர் யார்? என்ன துணிவு அவருக்கு? ஐயோ! எப்படிக் காயம் ஏற்பட்டது? அறிதுயில் கொள்ளும் அரங்கநகர் அப்பனான உன்னையும் இப்படிப் பாடுபடுத்த எவருக்குத்தான் மனம் வந்தது?"

என்று கவலை நிறைந்த உள்ளத்தோடு வினாமேல் வினாவாக அடுக்குகின்றார். பகவான் 'பாணருடைய உள்ளத்தில் இருந்தேன்; அப்போது பட்ட காயந்தான் இது!' என்று மறுமொழி பகர்ந்ததும் முனிவர் நடுங்கிப் போகின்றார். 'முனிவரே! அஞ்சற்க. இன்றைய தினம் நீர் அவரை நம்முடைய சந்நிதிக்குக் கொண்டு வருக!' என்று கட்டளையிடுகின்றான் அரங்கநகர் அப்பன். முனிவர் வியர்த்துப் போய் கண் விழித்துக் கொள்கின்றார்.

விடிந்து விட்டதாகத் தெரிந்து கொண்டார் முனிவர். கனவை எண்ணி எண்ணி வியப்புற்றார். 'இன்றைய விடிவு நமக்கும் விடிவாயிற்று; இந்தப் பிறவி இன்றே பயன் பெற்றது!' என்று தீர்மானித்ததும் தமது இதயமும் தூய்மையாகி விட்டது என்று உணர்ந்து கொண்டார். கடுநடையாகப் படித்துறையை நோக்கி வருகின்றார். 'நேற்றைய அநுபவத்தால், இன்று துறையருகில் வருவாரோ? வரமாட்டாரோ?' என்ற ஐயம் உள்ளத்தை வருத்துகின்றது. தொலைவிலிருந்து வீணையொலி அவர் காதில் விழுகின்றது. கடுகி வந்தவர் ஓடலானார்.

முந்தைய நாள் கண்ட இடத்திலேயே யாழும்கையுமாக நிற்கும் பாணரைக் காண்கின்றார்; களிகொள்ளுகின்றார். பாணரின் திருவாயினின்றும் பொங்கிவரும் திவ்விய கீதங்கள் வீணையொலியோடு ஒன்றுபடும்போது கல்லும் கரைகின்றது. புல்லும் உருகுகின்றது; பட்ட மரங்களும் தளிர் விடுகின்றன. 'தும்புரு இயக்கும் வீணையொலியோ? நாரதர் இயக்கும் வீணையின் நாதமோ?' என்று செவியும் உள்ளமும் குளிர பாணரை நெருங்கி வருகின்றார் முனிவர். துளசி மணிகளால் இயன்ற தாழ்வடங்களை அணிந்து நெஞ்சம் நெக்குருக, கண்கள் ஆனந்த அருவி சொரியப் பாடும் பாடகரைக் காண்கின்றார். 'கீதமே ஓர் உருவங் கொண்டு சிந்திப்பதும், திகைப்பதும், நெளிவதும், கை கூப்புவதுமாக இருக்கின்றதோ?' என்று மயங்குகின்றார் மாமுனிவர்.

முனிவர் தம்மை நெருங்கி வருவதைக் கண்டுகொண்ட பாணர், 'அடியேன் பாணன், பாணன்!' என்றார். முனிவரும் 'அடியேன் லோகசாரங்கன்!' என்று பாணரின் திருவடிகளில் நெடுஞ்சாணாக வீழ்ந்து அரங்கநாதனின் நியமனத்தை விண்ணப்பம் செய்தார். பாணர் அந்தக் கருணை மொழியைக் கேட்டு வியந்தார். 'ஆனால் அடியேன் அந்தத் திருக்கோயிலை மிதிக்கக் கூடுமா?' என்று பின்வாங்கப் பார்த்தார். ஆயினும் முனிவர் அவரை விட வில்லை. 'தேவரீர் மிதிக்க வேண்டியதில்லை. அடியேன் தோளின்மீது ஏறிக் கொள்ளுங்கள். யான் சுமந்து கொண்டு செல்வேன்' என்று கூறி அவரைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டார். பாணரோ சொற்குழறி யாழை மீட்டிப் பாடியவண்ணம் தம்மை மறந்த நிலையில் இருந்தார்.

இப்போதுள்ள அம்மா மண்டபப் படித்துறையும் அங்கிருந்து திருக்கோயிலுக்குச் செல்லும் சாலையும் அன்றிருந்தனவோ? யாருக்குத் தெரியும்? துறையும் சோலை யுமாகவாவது இருந்திருக்க வேண்டும். அவர்கள் சோலை வழியாகச் செல்லும்போது செடிகளிலும் மரங்களிலும் பூத்துக் குலுங்கிய மலர்கள் வீழ்ந்தன. இது தேவர்கள் பூமாரி பொழிந்ததுபோல் தென்பட்டது முனிவருக்கு. முத்தனை ஆதிவாகிகர் எழுந்தருள்வித்துக் கொண்டு பரமபதத்தில் திருமாமணிமண்டபத்துக்குச் செல்லுமாறு போலச் சென்று அரங்கநாதனின் சந்நிதானத்தில் இறக்கி விட்டார். லோகசாரங்க முனிவரது திருத்தோளில் ஏறிக் கொண்டு அரங்கன் சந்நிதியை அடைந்த பாணருக்கு 'முநிவாகனர்' என்ற திருப்பெயரும் வழங்கலாயிற்று.

முநிவாகனர் அணி அரங்கனது திவ்விய மங்கள விக்கிர கத்தை (திருமேனியை) அடிமுதல் முடிவரைக் கண்குளிரச் சேவித்தார். அத்திருமேனியில் ஆழங்கால்பட்டு அதன் அழகை அநுபவித்து அந்த அநுபவத்திற்குப் போக்குவீடாக

பத்துப் பாசுரங்கள் கொண்ட 'அமலனாதிபிரான்'[9] என்ற திவ்வியப்பிரபந்தத்தை அருளிச் செய்தார். அதன் இறுதியில்,

அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே

என்று தம் துணிவினை வெளியிட்டு உலகத்தாரை வாழ்வித்தருளினார். பத்துப் பாசுரங்களையும் பாடிப் பரவி உகப்போடு நிற்கையில் பெரிய பெருமாளும் அவரை அங்கீகரிக்க அவரும் அனைவரும் காண அப்பிரானது திருவடிகளில் கலந்து மறைந்து இரும்புண்ட நீராயினார்.

கோபாலன் குழல் இசையால் கோக்களை மகிழ்வித்தது போல் அந்தக் கோவிந்தனை யாழிசையால் மகிழ்வித்த இந்த ஆழ்வார் இவ்வுலகில் நடையாடின காலம் ஐம்பது ஆண்டு.[10] இவர் திருநட்சத்திரம் கார்த்திகை-உரோகிணி.

கார்த்திகையில் ரோகிணிநாள்
காண்மின் என்று காசினியீர்!
வாய்ந்த புகழ்பாணர்
வந்துதிப்பால் — ஆத்தியர்கள்
அன்புடனே தானமல
னாதிபிரான் கற்றதற்பின்
நன்குடனே கொண்டாடும்
நாள்.[11]

---

9. அமலனாதிபிரான் — இப்பிரபந்தம் 'அமலனாதிபிரான்' என்று தொடங்குகின்றது. பிரபந்தமும் 'அமலனாதிபிரான்' என்று திருநாமம் பெற்றது. இது 'முதற் குறிப்பு' என்ற இலக்கணத்தால் பெற்ற பெயராகும்—திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு என்பனபோல.

10. இராகவையங்கார், மு. ஆழ்வார்கள் காலநிலை-பக். 150.

11. உ. ர. மா. 10.

என்பது உபதேச ரத்தின மாலை. லோக சாரங்கர் முதலிய பலர் இவ்வாழ்வாரின் திருவடி சம்பந்தம் பெற்று நற்கதி பெற்றனர் என்பது வரலாறு.

அமலனாதிபிரான்: இனி, இந்தத் திருப்பாணாழ்வார் அருளிச் செய்த பிரபந்தத்தில் ஆழங்கால் படுவோம். இப் பிரபந்தம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதலா யிரத்தின் இறுதியில் மதுரகவிகள் அருளிச் செய்த 'கண்ணி நுண் சிறுத்தாம்புக்கு' முன்னர் இடம் பெற்றுள்ளது. இத் திவ்வியப் பிரபந்தத்திற்கு பெரியவாச்சான் பிள்ளையும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் மணிப் பிரவாள நடையில் சிறந்த வியாக்கியானங்கள் அருளிச் செய்துள்ளனர். இவை தவிர, தூப்புல் வேதாந்த தேசிகனும், 'முநிவாகன போகம்' என்ற திருநாமம் பூண்ட வியாக்கியானம் ஒன்று இட்டருளியுள்ளார்.

வேதாந்த தேசிகர் இப்பிரபந்தம், வேதாந்திகள் கூறும் எல்லாப் பலன்கட்கும் விதையாக நின்று பலன் தருவதாகும் என்று பகர்வர்.

**வேதியர்தாம் விரித்துரைக்கும் விளைவுக் கெல்லாம்**
**விதையாகும் இதுவென்று விளம்பினோமே.**[12]

என்ற பாசுரப் பகுதியால் இக்கருத்தையறியலாம். இன்னும் அவர் "திருப்பாணாழ்வார் அருளிச் செய்த பிரபந்தம் 'தமிழ் வேதம்' எனப்படும் நாலாயிரத்தின் சாரம் முழுவதும் அடங்கியதாகவும் கூறுவர்.

**பாவளரும் தமிழ்மறையின் பயனே கொண்ட**
**பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்து**[13]

என்ற பாடற் பகுதியால் இதனை அறியலாம். இன்னும் அவர்,

---

12. தே. பி. 131.
13. ஷை 130.

காண்பனவும் உரைப்பனவும் மற்றொன் றின்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல்
பாண்பெருமாள் அருள்செய்த பாடல் பத்தும்
பழமறையின் பொருளென்று பரவுகின்றோம்.[14]

என்று போற்றுவதையும் கண்டு மகிழலாம்.

இனி, பிரபந்தத்திற்கு வருவோம். இப்பிரபந்தம் அரங்கன் திருவடி முதல் திருமுடிவரை ஆழ்வார் கண்ட காட்சியைச் சித்திரிப்பதாக அமைந்தது. இதனை முன்னரும் குறிப்பிட்டோம். இதில் முதல் மூன்று பாடல்கள் 'அமலனாதிபிரான்' (1) 'உவந்த உள்ளத்தனாய்' (2), 'மந்திபாய் வடவேங்கட மாமலை' (3) என்று தொடங்குகின்றன. இவற்றில் முதல் எழுத்துகள் அ, உ, ம என்பன வாகும். இவை 'ஓம்' என்னும் பிரணவத்தின் வடிவமாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

முதற்பாசுரத்தில் பெரிய பெருமாளின் திருவடியழகு ஆழ்வார்மீது அலை பாய்ந்து அவரைப் பரவசமாக்கிய நிலை கூறப்பெறுகின்றது.

கமலபாதம் வந்துஎன்
கண்ணின்உள்ளன ஒக்கின்றதே (1)

என்கின்றார். இவ்விடத்தில் முமுட்சுப்படியின் இரண்டு வாக்கியங்கள் அநுசந்திக்கத்தக்கனவாகும்.

பிராட்டியும் அவனும் விடினும்
திருவடிகள் விடாது திண்கழ
லாயிருக்கும்.[15]

என்பது ஒன்று. பிராட்டியார் சேதநனுடைய துன்ப நிலையைக் கண்டு மனம் இரங்கி அவனை அங்கீகரிக்குமாறு ஈசுவரனுக்குப் புருஷகாரம் (பரிந்துரைத்தல்) செய்வர்

---

14. ஷை 132
15. முமுட்சுப்படி — 146 (துவையம்)

என்பது தத்துவம். இங்ஙனம் அவர் இவனுடைய குற்றங்களைப் பகவானிடம் எடுத்துரைக்கவே மாட்டார் என்பது உண்மை. ஆயினும், ஈசுவரன் மனத்தில் இவனை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்தை ஊன்றுவிப்பதற்காக, ஒருகால் சில குற்றங்களை எடுத்துரைத்தல் கூடும்; இங்ஙனம் குற்றங்களை எடுத்துக் கூறும் முறையில் பிராட்டியார் சேதநனைக் கைவிடுவராகின்றார். இந்தச் சேதநனிடம் ஊன்றிய அன்பு கொண்ட பகவான், தனக்குள்ள வாத்சல்யம் முதலிய திருக்குணங்களால்,

> என்னடியார் அதுசெய்யார்
> செய்தாரேல் நன்றுசெய்தார்[16]

என அவரை அங்கீகரிக்க முன்வந்து நிற்பன். இத்தகைய எம்பெருமானும் ஒருகால் கைவிடுவதுமுண்டு. இங்ஙனம் சேதநனுக்கு நன்மை புரிபவராகிய இருவரும் கைவிடினும், தம் சேதநனைத் தம் அழகினால் அப்புறம் செல்லாதவாறு அகப்படுத்திக் கொள்ளும் அவன் திருவடிகளோ, அவனை விடாது பற்றிக் கொள்ளும் திண்மை வாய்ந்தனவாக இருக்கும். இதனை மனத்திற் கொண்டே நம்மாழ்வாரும்,

> வண்புகழ் நாரணன்
> திண்கழல் சேரே.[17]

எனக் கூறிச் சென்றார். இரண்டாவது வாக்கியம்,

> 'சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந்
> துறை, ப்ரஜை முலையிலே வாய்
> வைக்குமாப் போலே'[18]

[சேஷி - தலைவன்; சேஷபூதன் - சேதநன்; இழிதல் - சார்தல்; ப்ரஜை - குழந்தை]

---

16. பெரியாழ். திரு. 4. 9: 2.
17. திருவாய். 1. 2: 10
18. முமுட்சு — 147.

என்பது. பாலுண்ணும் பச்சைக்குழவி தாயின் மற்றைய அவயவங்கள் யாவையும் விட்டு, எங்ஙனம் தான் உயிர் வாழ்தற்கிடனாய் உள்ள அவள் கொங்கையில் வாய் வைக்கின்றதோ, அங்ஙனமே, சேஷியாகிய ஈசுவரனைப் பற்றப் புகும் சேதநனும் எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டுத் தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான். முந்திய செயல் குழந்தைக்கு இயல்பாமாறு போல, பிந்திய செயல் சேதநன் சொரூபத்திற்கு இயல்பாய் அமைந்ததாகும். இவற்றால் வைணவர்கட்கு எம்பெருமானின் திருவடிப் பேறே அடையத்தக்க குறிக்கோள் பொருள் என்பது ஈண்டு அறியத்தக்கது.

இரண்டாவது பாசுரத்தில் 'சிவந்த ஆடையின் மேலே சென்றதாம் என் சிந்தனையே' என்கின்றார். முதல் பாசுரத்தில் 'கமலபாதம்' என்பதும், இப்பாசுரத்தில் 'சென்றதாம் என் சிந்தனை' என்பதையும் நாம் நன்கு கவனிக்க வேண்டும். முதலில் எம்பெருமான் ஆழ்வாரை அடிமை கொள்ள மேல் விழுந்த நிலையும், பிறகு ஆழ்வார் சுவை கண்டு தாம் எம்பெருமான் மேல் விழுகின்ற நிலையும் தோற்றுவதைக் கண்டு மகிழலாம். புதிதாக ஈன்ற பசு முலைச் சுவை அறியாத தன் கன்றுக்கு முதலில் தன் முலையை அதன் வாயில் கொடுக்கும்; பின்பு சுவடறிந்தால் பசு உதைத்துக் கொண்டாலும் கன்று தானே அதன் மேல் விழும். அங்ஙனமே, திருவடிகள் தாமே வந்து போக்கியமானவாறு கூறினார் முதற் பாசுரத்தில்; இதில், தம்முடைய நெஞ்சு சுவடறிந்து மேல் விழுமாறு கூறுகின்றார் என்பதை அநுபவித்து மகிழ வேண்டும்.

ஆடையின் அழகை அநுசந்தித்த ஆழ்வார் மூன்றாவது பாசுரத்தில் படைப்பிற்கெல்லாம் மூலகாரணமான உந்திக் கமலத்தைப் பாடி அநுபவிக்கின்றார்.

அந்தி போல்நிறத்து ஆடையும் அதன்மேல்
  அயனைப் படைத்த ஓர்எழில்
உந்தி மேலன்றதோ அடியேன்
  உள்ளது இன்னுயிரே (3)

என்பது ஆழ்வாரின் அநுபவம். முந்தைய பாசுரத்தில் குறிப்பிட்ட 'சிவந்த ஆடை' இப்பாசுரத்திலும் 'அந்தி போல் நிறத்து ஆடை' என்று குறிப்பிடப் பெறுவதைக் காண்டல் வேண்டும். 'பீதக ஆடையின்' அழகு படைப்பிற் கெல்லாம் மூலகாரணமாகிய உந்தியத் தாமரையின் அழகிலே உள்ளத்தைக் கொண்டு முட்டுகின்றது! பரம பதத்திலே கைங்கரிய சாம்ராஜ்யத்துக்கு முடிசூடியிருக் கின்ற முத்தரும் நித்தியரும் தேசோசிதமான தேகங்களை ஏற்றுக் கொண்டு (பரிக்ரகித்துக் கொண்டு) திருமலையில் வந்து கைங்கரியங்கள் பண்ணுகின்றனர். 'வடவேங்கடமா மலை' என்ற தொடர் இதனைக் காட்டுகின்றது. அவற்றைப் பெறுதற்காக அங்கே நித்திய சந்நிதனா யிருக்கும் அரங்கநாதனுடைய திருப்பீதாம்பரத்திலும் திருநாபிகமலத்திலும் என் சிந்தை குடிகொண்டது' என்கின்றார் ஆழ்வார்.

'வடவேங்கடமாமலை நின்றான்' என்றவுடனே, 'வருந்தி ஏற வேண்டும்படியான திருமலையும் நம் போன்ற வர்கட்குப் பரமபதம்போல் அரிதேயன்றோ?' என்று சிலருக்குத் தோற்றும். இதனைத் தெளிவுறுத்தவே உடனே 'அரங்கத்து அரவின் அணையான்' என்று குறிப்பிட்டு அவனுடைய எளிமையை (சௌலப்பியத்தை) அருளிச் செய்கின்றார். 'அந்திபோல் நிறம்' என்பதற்கு — அடியாருடைய அஞ்ஞான விருளைக் கழிக்கவல்ல நன்ஞான மாகின்ற சூர்யோதயத்துக்குக் கிழக்கு ஸந்த்யை போலவும், அவர்களுடைய தாபத்ரயத்தை ஆற்றுதற்கு மேற்கு ஸந்த்யை போலவும் இரா நின்றது' என்று கருத்துரைப்பர் தூப்புற்பிள்ளை. முதற்பாசுரத்தில் 'அமலன் ஆதிபிரான்' என்பதிலுள்ள 'ஆதி' என்ற அடைமொழியால் எம்பெருமா னுக்குச் சொன்ன ஜகத்காரணத்துவத்தை இப்பாசுரத் திலுள்ள 'அயனைப் படைத்தது ஓர் எழில்' என்ற மூன்றாம் அடியிலுள்ள பகுதி நிலைநாட்டுவதையும் கண்டு மகிழலாம்.

திருவுந்தியின் அழகை அநுபவித்துக் கொண்டிருக்கும் போதே எம்பெருமானின் உதரபந்தத்தின்மீது ஆழ்வாரின் கண்கள் தாவுகின்றன.

மதுரமா வண்டு பாட
மாமயில் ஆடரங்கத்(து)
அம்மான் திருவயிற்(று)
உதரபந்தம்என் உள்ளத்துள்
நின்(று) உலாகின்றதே (4)

என்ற பாசுரத்தில் இதனைக் கண்ணுறலாம். திருவரங்கச் சோலையில் வண்டுகள் இனிமையாக இசை பாடுகின்றன; அதற்கேற்பச் சிறந்த மயில்கள் களிப்புடன் கூத்தாடு கின்றன. இந்தப் பசுஞ்சோலையில் கடல் வண்ணனாகக் காட்சியளித்து அடியவர்களின் சிரமத்தைப் போக்கும் எம்பெருமானின் 'உதரபந்தம்' (Waist girdle) என்ற அரைக்கச்சு ஆழ்வாரின் நெஞ்சில் நின்று உலவத் தொடங்கு கின்றது. இந்தத் திருமேனி அழகில் இராமனாக அவதரித்து இராவண வதம் செய்தபோது ஏற்பட்ட வீரப் பொலிவும் கலந்து காணப்பெறுகின்றதைக் குறிப்பிடு கின்றார் ஆழ்வார். இப்பாசுரத்தின் முதல் இரண்டடிகளில் 'ஸ்ரீவைகுண்டநாதன் பெரிய பெருமாள்[19] ஆனவாறே, நித்திய சூரிகள்—வைகுந்தத்தில் இறைவனுடன் உறையும் விண்ணவர்கள் (Eternals) —வண்டுகளுடன் மாமயில்களும் ஆனபடி' என்பது வியாக்கியானம்.

அடுத்து (ஐந்தாம் பாசுரத்தில்), அடியார்களைப் பரிந்து காத்தருள வல்ல பெரிய பிராட்டியாரும்,

---

19. பெரிய பெருமாள் என்பது அரங்கநாதன். இவரைத் திருவரங்கத்தில் ஸ்தாபித்தது பெருமாள் (இராமன்). அரங்கநாதனைப் 'பெரிய பெருமாள்' என்பதும், இராமனைப் 'பெருமாள்' என்பதும், இலக்கு வனை இளைய பெருமாள் என்பதும் வைணவ மரபு.

அனைத்தையும் காத்தளிக்க வல்ல பண்புக்கு அறிகுறியாக வுள்ள திருமாலையும் திகழப் பெற்ற அப்பனின் திரு மார்பின் அழகு ஆழ்வாரை ஆட்கொள்ளுகின்றது.

பாரமாய பழவினை
பற்(று) அறுத்(து) என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான்
வைத்தது அன்றி
என்னுள் புகுந்தான்
கோரமாதவம் செய்தனன்கொல்
அறியேன் அரங் கத்தம்மான் (திரு)
ஆர மார்புஅது அன்றோ
அடியேனை ஆட்கொண்டதே (5)

[பாரமாய பழவினை-பொறுக்க முடியாத சுமையாக வுள்ள நெடுங்காலவினைகள்; பற்று-சம்பந்தம்; வாரம்-அன்பு]

என்பது பாசுரம்.

இதில் இறைவன் தம்முள் புகுந்து நிற்கும் நிலையில் ஒன்றுபட்டுப் பேசுகின்றார் ஆழ்வார். இறையருள் தம்மீது வெள்ளம் கோத்துப் பாய்ந்து தமது (1) பாரமான பழவினைகளைப் (சஞ்சித கர்மங்களை)[20] பற்றறுத்தது; (2) இவரைத் தம்பால் அன்பாக்கிக் கொண்டது; (3) இந்த நன்மைகளுக்கு மேலாக இவருள்ளம் புகுந்தது என்று மூன்று வகைகளில் துணை செய்துள்ளது என்பவற்றைக்

---

20. வினை அல்லது கன்மம் மூன்று வகைப்படும். ஆகாமியம் (எதிர்வினை, வருவினை, மேல்வினை) இப் பிறப்பில் செய்யப்பெறுவது. சஞ்சிதம் (பழவினை, தொல்வினை, கிடைவினை) பல பிறப்புகளில் செய்யப் பெற்றுக் குவிந்த திரள். பிராரத்தம் (ஊழ்வினை, நுகர் வினை) ஒரு பிறப்புக்கென ஒதுக்கப்பெற்று உடலின்மூலம் அநுபவிப்பது.

குறிப்பிடுகின்றார். 'காலம் உள்ளவரைப் பிராயச்சித்தம் பண்ணினாலும் கழிக்க வொண்ணாதபடி வளர்ந்து என் தொல்லைத் தீவினைகளை வாசனையோடு கூட வேரறுத்து அடியேனைக் குற்றமற்றவனாக்கித் (நிஷ்கல்மஷனாக்கி) தன்னிடத்தில் பட்சபாத முடையவனாக ஆக்கிக் கொண்ட தோடன்றி, இத்தனை காலமாய்ப் பாவங்களுக்கு இருப் பிடமாயிருந்த என் நெஞ்சை அப்பாவங்களை யோட்டி விட்டு தனக்கிருப்பிடமாக்கிக் கொண்டான்' என்கின்றார் முன் இரண்டு அடிகளில். இந்த இடத்தில் நம்மாழ்வாரின்,

> **கல்லும் கனைகடலும்**
> **வைகுந்த வானாடும்**
> **புல்லென் றொழிந்தனகொல்**
> **ஏ பாவம்—வெல்ல**
> **நெடியான் நிறங்கரியான்**
> **உள்புகுந்து நீங்கான்**
> **அடியேன துள்ளத்**
> **தகம்.**[21]

என்று பாசுரம் அநுசந்திக்கத் தக்கது. பிராட்டியானவள் எம்பெருமானுடைய திருமார்பில் வந்து சேர்ந்து 'அகலகில் லேன் இறையும், அகலகில்லேன் இறையும்' என்று தானே எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருப்பது போலவே, எம்பெருமானும் ஆழ்வாருடைய திருவுள்ளத்திலே வந்து சேர்ந்து 'நான் இதனைவிட்டு நீங்கேன், நான் இதனை விட்டு நீங்கேன்' என்று உருச் சொல்லிக் கொண்டு கிடக் கின்றான் என்பது தோன்ற 'உள் புகுந்து நீங்கான்' என்று அருளிச் செய்த அழகு கண்டு அநுபவித்து மகிழத் தக்கது.

'தன் வீட்டைத் தான் ஆள வொண்ணாதபடி நெடுநா ளாக ஆக்கிரமித்துப் போந்த குறும்பர்களைச் சீற்றத்தோடு ஓட்டித் துரத்திவிட்டு மேனாணிப்புடன் — பெருமிதத்துடன்

---

21. பெரி. திருவந்-68

— தன் வீட்டில் வருகை புரிந்த பேரரசன் போல, அடியே னுடைய நெஞ்சை எம்பெருமான் தன்னதாக அபிமானித்து அரிய பெரிய காரியங்கள் செய்து வந்து புகும்படிக் கீடாக நான் எந்தப் பிறப்பில் என்ன தவம் பண்ணினேனோ? தெரியவில்லையே!' என்று தடுமாறுகின்றார் மூன்றாம் அடியில். 'கோரமாதவம் செய்தனன் கொல்?' என்றதால் இதனை அறியலாம்.

"பெண்ணுலாஞ் சடையி னானும்
பிரமனும் உன்னைக் காண்பான்
எண்ணிலா ஊழி யூழி
தவஞ்செய்தார் வெள்கி நிற்ப[22]

என்ற தொண்டரடிப் பொடிகளின் வாக்கின்படி மெய்யே தவம் புரிந்த பெரியோர்களும் இப்பேறு பெறாமல் வருந்தி நிற்கின்றனர். அப்படியிருக்க, நான் நினைக்காததாக இப்பேறு வாய்த்தது தீவிரமானதோர் அரிய தவப்பலனாக இருக்கவேண்டும். இந்தத் தவமும் அடியேனது முயற்சி யினால் நிகழ்ந்ததல்ல; எம்பெருமானே இதற்கு நோன்பு நோற்றவனாக இருக்கவேண்டும்" என்று கருதுகின்றார். "பின்னையும் ஆற்றாமையாலே விடாய்த்தவன் — பெரிதும் களைப்புற்றவன் — தடாகத்தை நீக்கி உள்ளே முழுகுமாப் போலே, என் உள்ளம் புகுந்தான்" என்பது வியாக்கினம். 'புலன்களை வென்று கொடுந்தவம் புரிந்தோனோ? என்று எண்ணிப் பார்ப்பவர் அடியேன் அறிய ஒன்றும் இல்லையே!' என்று குறிப்பிடுகின்றார். மூன்றாம் அடியிலுள்ள 'செய்தனன்' என்பதைத் தன்மை வினைமுற்றாகக் கொள்ளாமல் படர்க்கை வினைமுற்றாகக் கொண்டு என்ன தவம் புரிந்தானோ?' என்பதாக உரைத்தருளின தூப்புற் பிள்ளையின் வியாக்கியானமும் அநுபவித்து மகிழத்தக்கது. ஓர் அடியானைப் பெறுவதற்கு எம்பெருமான் படுகின்ற பாடு யார் அறிவார்?

22. திருமாலை - 44

பின்னர், பெரிய பெருமாளின் திருக்கழுத்தின் அழகு ஆழ்வாரின் அகக் கண்ணுக்கு இலக்காகின்றது.

அண்ட ரண்ட பகிரண்டத்(து) ஒரு
மாநிலம் எழுமால்வரை, முற்றும்
உண்ட கண்டம் கண்டீர்!
அடியேனை உய்யக் கொண்டதே (6)

[அண்டர் - தேவர்கள்; அண்டம் - உலகங்கள்; பகிரண்டம் - அண்டங்கட்கு அப்பாலுள்ள உலகங்கள்; கண்டம் - திருக்கழுத்து]

திருமார்பின் அழகு அண்டங்களையெல்லாம் திருவமுது செய்தருளின திருக்கழுத்தின் அழகிலே முட்டுகின்றது; இந்த அழகு தம்மை ஈடுபடுத்தியதாகப் பேசுகின்றார் பாணர் பெருமாள் இந்தப் பாசுரத்தில். காரணாவஸ்தையில் எல்லாக் காரியங்களையும் தன் பக்கலில் உபசம்ஹரித்துப் பின்பு சிருஷ்டிக்குமாறு, "வெற்றிப்போர் கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கி உய்யக் கொண்ட"[23] என்றவாறு சகல பதார்த்தங்களையும் பிரளயப் பெரு வெள்ளத்தில் நின்றும் தப்ப வைத்துத் தன் திருவயிற்றிலே அடக்கி நோக்கின பெருநன்றியையும், இப்போதும் தம்மை சம்சாரசாகரம் விழுங்காதபடி ஆட்படுத்திக் கொண்ட உபகாராதிசயத்தையும் ஆனந்தமாகப் பேசுகின்றார் மேற்குறிப்பிட்ட இதே பாசுரப் பகுதியில்.

அடுத்து, அனைவருக்கும் பட்சபாதமின்றி அபயம் அளிக்கும் 'நீதிவானவனின்' பவளவாயின் அழகு ஆழ்வாரை வசீகரிக்கின்றது.

செய்யவாய் ஐயோ! என்னைச்
சிந்தை கவர்ந்ததுவே! (7)

என்கின்றார். எம்பெருமானை முற்றிலும் அநுபவிக்க வேண்டும் என்று பாரித்திருக்கையில் 'இடையிலே நெஞ்சைக்

---

23. பெரி. திரு. 11. 6:3

கொள்ளை கொண்டு விட்டதே அதரம்! இதற்கு என் செய்வேன்?' என்பார் 'ஐயோ!' என்கின்றார். திருவாழி திருச்சங்குகளை யுடையவனாய், திருத்துழாய் மாலை அணிந்த நீள் முடியினால் அலங்கரிக்கப் பெற்றவனாய், திருவரங்கத்தில் திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொள்பவனாய், நம் போன்றவர்களும் ஊனக் கண்ணால் காணும் படியாகக் காட்சிதரும் பச்சைமாமலை போன்ற மேனியின் அழகிற்குத் தப்பமுடிந்தாலும், அடியார்களின் நலன்களை வினவத் துடித்துக் கொண்டிருக்கும் திருவாயின் அழகிற்குத் தப்ப முடியாது. 'ஐயோ!' என்பதற்கு "பண்டே பறி கொடுத்த என்னை அநியாயம் செய்வதே! என்று கூப்பிடுகின்றார்" என்பதும், "கல்லை நீராக்கி, நீரையும் தானே கொண்டது" என்பதும் வியாக்கியானம் (பெரிய வாச்சான் பிள்ளை). "ஐயோ! என்றது — ஆச்சரியத்தையாதல், அநுபவிக்க அரிதானபடியையாதல், அநுபவ ரசத்தையாதல் காட்டுகின்றது" என்பர் தூப்புற்பிள்ளை.

அனைத்திற்கும் மேலாக அரங்கத்து அமலனின் திருக்கண்கள் இவரைக் குளிர நோக்கி வசீகரிக்கின்றன. பலரும் 'இவன் பேயன்' என்று ஏசும்படியாக உன்மத்த நிலையை அடைந்து விட்டதாக அருளிச் செய்கின்றார். வாயால் சொல்ல முடியாததையும் பேசாத பேச்சாகக் கண்கள் உணரச் செய்து விடுகின்றனவாம். அந்தக் கண்களின் அழகு,

> கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து
> செவ்வரி யோடி நீண்ட அப்
> பெரியவாய கண்கள் என்னைப்
> பேதமை செய்தனவே! (8)

என்ற அற்புதமான செந்தமிழாக வடிவங் கொண்டுள்ளது இந்தப் பாசுரப் பகுதி. ஓதி ஓதி, உணர்ந்து உணர்ந்து, இன்புற்று அநுபவித்தால் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படித் தேனாக இனிக்கும். 'அந்தக் கண்களின் அழகு,

என்னைப் பைத்தியமாக்கி விட்டதே!' என்பதில் கடல் போலப் பெருகிவரும் இவரது பக்திக்காதலை நாமும் உணர்ந்து அநுபவிக்க முடிகின்றது. இல்லையா?

ஏழையர் ஆவிஉண் ணும்மிணைக்
 கூற்றங்கொ லோஅறியேன்
ஆழியங் கண்ண பிரான்திருக்
 கண்கள்கொ லோஅறியேன்
சூழவும் தாமரை நாண்மலர்
 போல்வந்து தோன்றும் கண்டீர்
தோழியர் காள்! அன்னை யீர்! என்செய்
 கேன்துய ராட்டியேனே![24]

என்று எம்பெருமானது பேரழகை உருவெளித் தோற்றத்தில் கண்டு அநுபவித்த நம்மாழ்வார் நாயகி நிலையிலிருந்து கொண்டு பட்டபாட்டை இவரும் படுகின்றார் போலும்!

இதுகாறும் தனித்தனி ஒவ்வொரு உறுப்பிலும் உள்ளத்தைப் பறிகொடுத்த ஆழ்வார், எல்லா உறுப்புகளின் சேர்த்தி அழகினை ஒருங்கே அநுபவித்துத் தமது நெஞ்சு பரவசமாகப் பெற்ற பெருமையைப் பேசுகின்றார்.

ஆலமா மரத்தின்
 இலைமேல்ஒரு பாலகனாய்
ஞாலம் ஏழும்உண்டான்
 அரங்கத்து அரவின் அணையான்
கோலமாமணி ஆரமும்
 முத்துத் தாமமும்
 முடிவுஇல்ல தோர்எழில்
நீலமேனி ஐயோ!
 நிறைகொண்ட(து)என் நெஞ்சினையே! (9)

[பாலகன் - குழந்தை; ஞாலம் - உலகம்; கோலம் - அழகிய; ஆரம் - மாலை; தாமம் - மாலை; எழில் - அழகு]

---

24. திருவாய். 7. 7:1

என்பது ஆழ்வாரின் அநுபவம். இந்தப் பாசுரத்தில், எல்லா அழகுகளையும் சேர்த்துக் கொண்டு, திருமேனி என்ற நீலச்சோதி ஆழ்வாரைப் படுத்திய பாடு வெளிப்படு கின்றது. ''ஓர் அவாந்தரப் பிரளயத்தில் கிளைகள் பலவாய், மிகப் பெரியதாய், வளர்ந்திருப்பதொரு ஆலமரத்தின் ஒரு சிறு பசுந்தளிரிலே தாயும் தந்தையும் இல்லாத ஒரு தனிக் குழவியாய்ப் பள்ளிகொண்டு எல்லா உலகங்களையும் தன் திருவயிற்றிலே வைத்து நோக்கி யருளின திருவரங்கப் பெருமானது சகல திருவாபரணங் களாலும் அலங்கரிக்கப்பெற்றுள்ள கரிய திருமேனி எனக்குச் சேவை சாதித்து என் நெஞ்சினது காம்பீர்யத்தைக் கொள்ளை கொண்டு போயிற்றே!'' என்கின்றார்.

நீலமேனியின் மாசற்ற அழகு கடலாக வெள்ளமிட்டு வர, அதனை நெஞ்சால் அநுபவிக்கப் பாரிக்கின்றார்; அந்த அழகினை 'முடிவில்லதோர் எழில்' என்று பாடிப் பரவசமாகின்றார். ஆனால், அந்த அழகு வெள்ளத்தில் சுருட்டிய பேரலையொன்று இவர் நெஞ்சை இழுத்துக் கொள்ள, 'ஐயோ! என் நெஞ்சையும் இழுத்துக் கொண்டதே!' என்று ஏங்குகின்றார். 'ஐயோ!' என்பதற்குப் பெரியவாச்சான்பிள்ளை, 'பச்சைச் சட்டை உடுத்துத் தனக்குள்ளதை அடையக் காட்டி எனக்குள்ளதை அடையக் கொண்டானே!' என்பர். ''நான் எல்லாவற்றை யும் நின்று நின்று அநுபவிக்க வேண்டும் என்றிருக்க அது பவபரிகரமான என் நெஞ்சைத் தன்பக்கலிலே இழுத்துக் கொள்வதே! ஐயோ! என்கின்றார்' என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். இந்த அநுபவத்தின் எதிரொலிதான்,

ஐயோ! இவன் வடிவென்பதோர்
அழியா அழ குடையான்[25]

25. கம்ப. அயோத். கங்கைப் படலம்—1.

என்று கம்பன் வாக்கால் இராமபிரானின் அழகாக வடிவங் கொள்ளுகின்றது.

இங்ஙனம் இறைவனது எழிலை அகக் கண்ணாலும், புறக் கண்ணாலும் அநுபவித்த ஆழ்வார்,

**கொண்டல் வண்ணனைக்**
**கோவல னாய்வெண்ணெய்**
**உண்ட வாயன்என்**
**உள்ளம் கவர்ந்தானை**
**அண்டர் கோன்அணி**
**அரங்கன்என் அமுதினைக்**
**கண்ட கண்கள்மற்(று)**
**ஒன்றினைக் காணாவே (10)**

என்று பாடி இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டுகின்றார். 'கொண்டல் வண்ணன்' என்பதில் இந்த ஆழ்வாரின் தாபம் தீர, விடாய் தீர அருள் பொழிந்த குறிப்பினைக் காணலாம். பெரிய பெருமாளின் திருமேனியில் முன்பு வீரப்பொலிவு கண்ட ஆழ்வார் இப்போது வெண்ணெயையும் வெண்ணெய் போன்ற உள்ளங்களையும் களவாடிய கண்ணபிரானின் அழகுப் பொலிவினை அநுபவிக்கின்றார். உற்று நோக்கினால் வெண்ணெய் உண்ட திருப்பவளமாகக் காணப்படுகின்றது என்கின்றார். "என்னைச் சிந்தை கவர்ந்த வாயில் இப்போது வெண்ணெய் மணக்கின்றது" என்பது குறிப்பு. கூரத்தாழ்வான் தன்னுடைய சுந்தர பாஹுஸ்வத்தில் பண்டு யசோதைப் பிராட்டி முத்தம் கொடுத்த சுவடு இன்னும் அழகரின் திவ்விய கன்னங்களில் திகழா நிற்கும் என்று அநுபவித்தாற்போல, இவரும் பண்டு கண்ணன் வெண்ணெய் உண்டமுடைநாற்றம் இன்றும் பெரியபெருமாள் திருப்பவளத்தில் கமழா நிற்பதாக அநுபவிக்கின்றார். அவருடைய உதட்டை முகர்ந்து பார்த்தால் இப்போதும் வெண்ணெய் நாறா நிற்கும் என்பது குறிப்பு.

தசரத சக்கரவர்த்தி தன்னுடைய அரச ஐசுவரியம் அனைத்தையும் புசிக்கைக்கு 'எனக்கு ஒரு பிள்ளை வேணும்' என்று நோன்பு நோற்றுப் பெருமாளைப் பெற்றாற் போலே, நந்தகோபனும்,

> கானாயன் கடிமனையில் தயிர்உண்டு
> நெய்பருக நந்தன் பெற்ற
> ஆனாயன்[26]

என்ற திருமங்கை மன்னன் வாக்கின்படி, திருவாய்ப்பாடி, பால்பண்ணையில் கிடைக்கும் பொருள்கள் அடங்கலும் பாழ் போக வொண்ணாதென்று இத்தை அமுது செய்கைக்காக நோன்பு நோற்றுப் பெற்ற பிள்ளையல்லவா கண்ணன்? 'ஞாலம் ஏழும் உண்டான்' என்று சொல்வதை விட 'வெண்ணெய் உண்ட வாயன் என் உள்ளங் கவர்ந்தான்' என்று கூறுவதில் இந்த ஆழ்வாருக்கு முற்றிலும் மன நிறைவு.

'உப்புச் சாறாய் எட்டா நிலத்தில் இருக்கும் தேவர்களின் அமுதம் போலன்றிப் பரம மதுரமாய்ப் பரம சுலபமாயிருக்கும் நான் கண்ட அமுதம்' என்பார் 'என் அமுதினை' என்கின்றார். சிலர் 'அமுதனை' என்று ஓதுவது சுவையற்றது. ஆழ்வாருக்குப் பெரியபெருமாள் 'அமுதத்தையொத்திருத்தல்' கருத்தேயல்லது 'அமுதனாகவே இருத்தல்' கருத்தன்று. திருமங்கையாழ்வாரும்,

> அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய
> அந்தணனை[27]

என்று போற்றுவது கண்டு மகிழத்தக்கது.

அமுதபானம் பண்ணினவர்கள் பாலையும் சோற்றையும் பிறவற்றையும் கண்ணெடுத்துப் பார்ப்பார்களோ? இவரும் 'மற்றொன்றினை' என்கின்றார் — வேறொன்றின்

---

26. பெரி. திரு. 5.5:3.
27. திருநெடுந். 14

பேர் சொல்லவும் கூசுகின்றார். பர, வியூகம், விபவம் மற்றுள்ள அர்ச்சாவதாரங்கள் ஒன்றையும் 'என் கண்கள் காணமாட்டா' என்பது குறிப்பு. முதலாழ்வார் திருமழிசை யாழ்வார் இவர்களைத் தவிர, ஏனைய ஆழ்வார்கள் யாவரும் தம் பேரையும் ஊரையும் பாசுரக்கணக்கையும் பரக்கச் சொல்லிக் கொண்டாற் போலே இவர் ஒன்றையும் சொல்லிக் கொள்ளவில்லை. 'மற்றொன்றினைக் காணா' என்ற 'மற்றொன்றில்' இவையும் அடங்கி விட்டன போலும்! 'அல்லாதார் திருநாமப் பாட்டுப் போலே தம்மைச் சொல்லிற்றிலர்...... தாம் போகப்ரவணராய்த் தம்மை மறக்கையாலே. பலம் இங்கே சித்திக்கையாலே பலத்துக்குப் பலம் வேணுமோ என்று பலம் சொல்லிற்றிலர்'' என்பது அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரின் வியாக்கியான சூக்தி.

பாண்பெருமாள் பாடிய 'அமலனாதிபிரான்' என்ற பிரபந்தத்தில் முதல் ஒன்பது பாசுரங்கள் தம் அகக்கண் கொண்டு அருளியவை என்றும், பத்தாவது பாசுரம் புறக் கண்ணால் நேரில் கண்டு அருளியவை என்றும் கொள்வது மரபு. 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே!' என்று இவர் பாடி முடித்ததும், அரங்கநகர் அப்பனாகிய பெரிய பெருமாள் இவரை அளவற்ற பெரு மகிழ்ச்சி நிலையில் அப்படியே அந்தத் திருமேனியுடன் ஏற்றுக் கொண்டானாம். ஆழ்வாரும் அனைவரும் காண அப்பிரானது திருவடிகளிலே காய்ந்த இரும்பு உண்ட நீராயினர்.

இங்ஙனம் இவர் பாடிய பாசுரங்கள் பத்தும் இவரது உருக்கமும் உண்மையுமான அடிமைத் திறத்தை விளக்க வல்லன. இராமநுசர் போன்ற மெய்ஞ்ஞானியரும், கம்பன் போன்ற பெருங்கவிஞர்களும் உச்சிமேல் கொள்ளத் தக்க சிறப்பு வாய்ந்தது இந்த ஆழ்வாரின் பிரபந்தம். முனி வாகனராய்ச் சென்று அணியரங்கமுடையானை அநுபவித்த

இப் 'பாண்பெருமாள்' போன்ற பேரடியார்களைத் திரு வுளத்திற் கொண்டே தொண்டரடிப்பொடிகள்,

இழிகுலத் தவர்க ளேனும்
எம்அடி யார்கள் ஆகில்
...................................
...நின்னொகும் ஒக்க
வழிபட அருளி னாய்போல்

என்றும்;

நுமர்களைப் பழிப்பர் ஆகில்
நொடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்[28]

என்றும் குறிப்பிட்டதாகக் கருதலாம். இங்ஙனம் ஞான பக்தி வைராக்கியமுடைய இந்த ஆழ்வார்:

குளித்துமூன் றனலை ஓம்பும்
குறிகொள்அந் தணமைக்[29]

குரிய பெருநிலையை அடைகின்றார் என்பது ஈண்டு உளங் கொள்ளத்தக்கது. இன்றும் திருப்பாணர் — பாண்பெருமாள் — பாணர்குல விளக்காகத் தமது திருவாக்கில் நம்மிடையே வாழ்கின்றார்.

காட்டவே கண்ட பாத
கமலநல் ஆடை உந்தி
தேட்டரும் உதர பந்தம்
திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி
முனியேறித் தனிபு குந்து
பாட்டினால் கண்டு வாழும்
பாணர்தாள் பரவி னோமே[30]

28. திருமாலை - 42, 43.
29. ஷை - 25
30. தனியன்

என்று திருமலை நம்பியுடன் சேர்ந்து பாணர் தாளைப் பரவுகின்றோம்.

உம்பர்தொழும் மெய்ஞ்ஞானம் உறையூரான் வாழியே!
உரோகிணிநாள் கார்த்திகையில் உதித்தவள்ளல் வாழியே!
வம்பவிழ்தார் முனிதோளில் வகுத்தபிரான் வாழியே!
மலர்க்கண்ணில் வேறொன்றும் வையாதான் வாழியே!
அம்புவியில் மதிளரங்கர் அகம்புகுந்தான் வாழியே!
அமலனாதி பிரான்பத்தும் அருளினான் வாழியே!
செம்பதுமை அருள்கூறும் செல்வனார் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே![31]

என்று அரங்கநகர் அப்பனை அகங்குளிரக் கண்ட ஆழ்வாரை வாழ்த்துகின்றது வைணவ உலகம். இத்துடன் என் பேச்சினையும் தலைக்கட்டுகின்றேன். வணக்கம்.

31. வாழித் திருநாமம் - 9. (அப்புள்ளை அருளிச் செய்தது)

# 3. மூவர் ஏற்றிய மொழிவிளக்கு*

தமிழ்ச் சங்கச் சான்றோர்களே, பாக்காலாப் பெரு மக்களே,

வணக்கம். பௌத்த சமயத்தில் சங்கம் மக்களை இணைக்கும் ஒரு பேரமைப்பாகத் திகழ்ந்ததை வரலாற்று மூலம் அறிகின்றோம். அங்ஙனமே மதுரையில் மூன்று சங்கங்களை அமைத்த பெருமை தமிழ் மக்களுக்கு உண்டு. இந்த நூற்றாண்டில் மதுரையில் நான்காவது சங்கம் அமைத்த பெருமை பாண்டித்துரைத் தேவருக்கு உண்டு. இந்த மரபினையொட்டி தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து பிழைப்பின் நிமித்தம் வந்தவர்களாகிய நீங்கள் பாக் காலாவில் தமிழ்ச் சங்கம் அமைத்த பெருமை பாக்காலா இருப்பூர்தித் துறையில் பணியாற்றுவோருக்கும், குறிப்பாக நலவாழ்வுத்துறை அலுவலர் திரு. சகதீசன் அவர்கட்கும் ஆசிரியர் திரு. ஜி. கோபாலகிருட்டிணன் அவர்கட்கும் இப் பகுதித் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

இன்று உங்கள் முன் மூவர் ஏற்றிய மொழிவிளக்குப் பற்றிப் பேச முன் வந்துள்ளேன், நடுநாட்டுத் திருப்பதி களுள் ஒன்றாகிய திருக்கோவலூரில் ஓரிரவு நடைபெற்ற நிகழ்ச்சி: கதிரவன் மறைந்த பின்னர் வானம் இருண்டு

* திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் விரிவுச் சொற் பொழிவுத் திட்டத்தின்கீழ் 5-2-1967 இல் பாக்காலா தமிழ்ச் சங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு.

விடுகின்றது. மழை பெய்யப்போகும் அறிகுறிகள் தோன்றுகின்றன. இந்நிலையில் தூறலில் நனைந்து கொண்டே மிருகண்டு என்ற ஓர் அந்தணர் இல்லத்திற்கு வருகின்றார் ஒருவர்[1]; மழைக்கு ஒதுங்கவும் இரவு நேரத்தைக் கடக்கவும் இடங்கேட்கின்றார். இல்லத்துக்குரியவர் வீட்டின் முன் புறமுள்ள இடைகழி (ரேழி என்பது உலக வழக்கு)[2] யைக் காட்டி அதில் 'ஒருவர் படுக்கலாம்' என்று கூறி இடம் கொடுத்துக் கதவினைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே போய் படுத்துக் கொள்ளுகின்றார். முதலில் வந்தவர் பொய்கையாழ்வார். மழையோ வலுக்கத் தொடங்குகின்றது. சிறிது நேரத்தில் இன்னொருவர் வந்து அதே வீட்டில் தங்க இடம் கேட்கின்றார். பொய்கையார் 'ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம்' என்று கூறிக் கொண்டே வந்தவருக்கு இடம் தருகின்றார். இவர்தான் பூதத்தாழ்வார். மேலும் சிறிது நேரம் கழிந்ததும் மூன்றாவதாக மற்றொருவர் அதே இல்லத்திற்கு வந்து ஒதுங்க இடம் வேண்டுகின்றார். இடைக்கழியிலிருந்த இருவரும், 'ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்' என்று கூறிக் கொண்டே அவரையும் அழைத்துக் கொள்ளுகின்றனர். இப்போது வந்தவர் பேயாழ்வார். இன்கவி பாடும் பரம கவிஞர்களாகிய இம்மூவரும் இறைவனுடைய திருக்குணங்களைப் போற்றிப் புகழ்ந்து பாடியவண்ணம் இருக்கின்றனர். இவர்கள் மூவரும் ஒருவரையொருவர் முன்பின் அறியாதவர்கள்.

இந்நிலையில் குரல் கொடுக்காது, உள்ளே நுழைவதற்கு இசைவும் பெறாது நான்காமவராக யாரோ

---

1. திருக்கோவலூர்: 108 திவ்விய தேசங்களுள் ஒன்று. விழுப்புரம் — காட்டுப்பாடி இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் 2 கல் தொலைவிலுள்ளது.

2. வாயிலுக்கும் வீட்டிற்கும் இடைப்பட்ட ஒடுக்கமான இடம். வடமொழியில் இது 'தேஹளி' என்று வழங்கப் பெறும்.

ஒருவர் நுழைந்து விடுகின்றார். நெருக்கத்தினால் இது தெரிகின்றது. இந்தப் புதியவரைத் தெரிந்து கொள்ள அந்த இருட்டிலும் மழையிலும் விளக்கு கிடைக்கவில்லை. பொய்கையாழ்வார் ஒரு விளக்கேற்றுகின்றார். இதுதான் விளக்கு:

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் — செய்யச்
சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே என்று.[3]

*[தகளி - அகல்; வார் - நீண்ட; வெய்ய - வெப்பமான; கதிரோன் - பகலவன்; செய்ய - சிவந்த சுடராழி யான் - ஒளி வீசும் சக்கரத்தையுடையவன்; இடர் ஆழி - துன்பக்கடல்]*

*உலகத்தை அகலாகவும், கடலை நெய்யாகவும், கதிரவனைத் திரியாகவும் கொண்டு ஒரு விளக்கை ஏற்றி விடுகின்றார். இந்தப் பாசுரத்தின் மகிமையால் அந்த இடைகழியில் 'பளிச்' சென்று ஏதோ ஒரு திரை விலகி எப்படியோ ஒளியும் வந்து விடுகின்றது; புறத்தே கவிந்து கிடக்கும் இருளும் நீங்கி விடுகின்றது. அதே சமயத்தில் பூதத்தாழ்வாரும் ஞான விளக்கொன்றை ஏற்றுகின்றார்.*

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக் (கு) ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்[4]

*[ஆர்வம் - விருப்பம்; நன்பு - ஆன்மா.]*

*அன்பை அகலாகவும், பொங்கி வரும் ஆர்வத்தை நெய்யாகவும், சிந்தையைத் திரியாகவும் கொண்டு ஞான*

---

3. முதல் திருவந் - 1

4. இரண். திருவந். 1

விளக்கை ஏற்றுகின்றார் பூதத்தார். இந்த விளக்கினால் அகத்தே மண்டிக்கிடந்த உள் இருட்டும் நீங்கி விடுகின்றது. உடனே அந்தப் பேயாழ்வார் நான்காவது ஆளைக் கண்டு பிடித்து விடுகின்றார். அந்த எக்களிப்பே ஒரு பாசுரமாக வடிவங்கொண்டு நான்காவது ஆள் எம்பெருமானே ('திருக்கோவலூர்த் தீங்கரும்பே') என்று காட்டி விடுகின்றது. பாசுரம் இது:

**திருக்கண்டேன் பொன்மேனி**
**கண்டேன்; திகழும்**
**அருக்கன் அணிநிறமும்**
**கண்டேன்; — செருக்கிளரும்**
**பொன் ஆழி கண்டேன்;**
**புரிசங்கம் கண்டேன்;**
**என் ஆழி வண்ணன்பால்**
**இன்று.**[5]

திரு - இலக்குமி; அருக்கன் - சூரியன்; செருகிளரும் - போரில் வல்லமை காட்டும்; ஆழி - சக்கரம்; ஆழி வண்ணன் - கடல் நிறத்தவன்]

பேயாழ்வார் முதன் முதலாகப் பெரிய பிராட்டியாரின் அருள் வடிவத்தைக் காண்கின்றார்; பொன்மேனியையுடைய அன்னையாருடன் கூடிய எம்பெருமானின் மரகதத் திருமேனி இப்போது பொன்மேனியாகவே காட்சியளிக்கின்றது. மரகத மலையில் உதித்து ஒளிவீசி வரும் இளஞாயிறு போலத் தோன்றி இருவரது ஒளியையும் — பொன் ஒளியும் மரகத ஒளியும் கலந்து ஒளிர்கின்ற அந்தக் கலப்பு ஒளியையும் — காண்கின்றார்; 'திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன்' என்பதால் இது பெறப்படுகின்றது. 'இருவர் சேர்த்தியால் பிறந்த முதாய சோபை' என்பது பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான விளக்கம்.

5. மூன். திருவந். 1

ஆழ்வார்கள் மூவரும் எம்பெருமானைக் கண்டதும் பக்திப் பெருக்கில் திளைத்துப் போகின்றனர். பொய்கையாழ்வார் தமது பாடலைத் தொடர்ந்து 'முதல் திருவந்தாதி'யை 100 பாசுரங்களாகப் பாடி முடிக்கின்றார்; பூதத்தாழ்வார் தமது பாடல் தொடங்கி 'இரண்டாம் திருவந்தாதியை' நிறைவு செய்கின்றார்; பேயாழ்வார் 'மூன்றாம் திருவந்தாதியைத் தலைக்கட்டுகின்றார் நூறு நூறு பாசுரங்களாக.' இங்ஙனம் 'குருபரம்பரை' என்ற நூல் கூறுகின்றது. இந்த மூன்று திருவந்தாதிகளும் (முதல், இரண்டு, மூன்று) நாலாயிரப் பிரபந்தத்தில் இயற்பாப் பகுதில் முதலாவதாக இடம் பெற்றுள்ளன. அஞ்ஞான இருள் அகலப்பெறின் இறைவன் காட்சியளிப்பான் என்ற உண்மையை முதலாழ்வார்களின் வரலாற்றால் அறிகின்றோம்.

**நீயும் திருமகளும்**
**நின்றாயால் குன்றெடுத்துப்**
**பாயும் பனிமறுத்த**
**பண்பாளா — வாசல்**
**கடைகழியா உள்புகாக்**
**காமர்பூங் கோவல்**
**இடைகழியே பற்றி**
**இனி.[6]**

[பாயும் - சொரிகின்ற; பாயும் பனி - மழை; காமர்பூ - விரும்பத்தக்க; வ ா ச ல் க டை - திருவாயிலுக்கு வெளியே; உள்புகா-உள்ளே புகாமலும்; இடைகழி - நடுக்கட்டு; பற்றி - விரும்பி.]

என்ற பொய்கையாழ்வாரின் பாசுரமும் இந்த நிகழ்ச்சிக்கு அகச்சான்றாக அமைந்து எடுத்துரைப்பதாக உள்ளது.

---

6. முதல். திருவந். 86.

இங்ஙனம் முதலாழ்வார்கள் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதிகள் அருளிச் செய்த திருக்கோவலூரை நினைந்து,

பாவரும் தமிழால் பேர்பெறு பனுவல்
பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக்கு ஏற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு.

[முகுந்தன் - திருமால்]

என்று போற்றிப் புகழ்வர் வில்லிபுத்தூராரின் திருமகனார் வரந்தருவார். வேதாந்த தேசிகரும்,

பாட்டுக்கு உரிய பழையவர்
மூவரைப் பண்(டு)ஒருகால்
மாட்டுக்(கு) அருள்தரும் மாயன்
மலிந்து வருத்துதலால்
நாட்டுக்(கு) இருள்செக நான்மறை
அந்தி நடைவிளங்க
வீட்டுக்(கு) இடைகழிக் கேவெளி
காட்டும்அம் மெய்விளக்கே.[7]

[பழையவர் - முதலாழ்வார்கள்; மாடு - செல்வமாகிய ஆன்மா; இருள் செக - அஞ்ஞானம் நீங்க; நான் மறை அந்தி - உபநிடதம்; நடை - வழி; வெளி - உபாயங்கள்.]

என்று வேதாந்த தேசிகரும் போற்றியுள்ளனர். அவரே இந்த வரலாற்றையும் 'தீங்கரும்பு கண் வளரும்'[8] என்ற திருமங்கையாழ்வாரின் திருவாக்கையும் அடிப்படையாகக் கொண்டு மூன்று ஆழ்வார்களைக் கரும்பினைப் பிழியும் மூன்று ஆலைகளின் உருளைகளாகவும், அவர்களால் நெருக்குண்ட எம்பெருமானை நெருக்குண்ட இடமாகிய

7. தே. பி. 89.
8. பெரி. திரு. 2.10:4

திருக்கோவலூர் அருகில் விளையும் கரும்பாகவும், அந்த எம்பெருமானின் சௌலப்பிய குணத்தைச் சாறாகவும் உருவகித்து ஒரு வடமொழிச் சுலோகத்தாலும்[9] பாராட்டியுள்ளார். மேற்குறிப்பிட்ட திருக்கோவலூர் நிகழ்ச்சிக்குப் பின்னர், இம்மூவரும் திருவல்லிக்கேணியில் திருமழிசையாழ்வாரைச் சந்தித்து அளவளாவியதாக வரலாறு கூறும். இவர்கள் சங்க காலத்தினை அடுத்த காலத்தில் வாழ்ந்ததாக வரலாற்று அறிஞர்கள் கருதுவர்.

இந்த மூவரும் யாவர்: பொய்கையாழ்வார் காஞ்சி மாநகரில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் சந்நிதியின் வடபுறத்தில் உள்ள பொற்றாமரைப் பொய்கையில் பூத்ததொரு நற்றாமரை மலரில் ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் திருவவதரித்தார். இவருடைய பெருமையைக் கண்ட அனைவரும் இவரைத் தேவிற் சிறந்த திருமாலின் பாஞ்ச சன்னியம் என்னும் திருச்சங்கின் அம்சமாக அறுதியிட்டனர். பொய்கையில் அவதரித்தது காரணமாகப் பொய்கையாழ்வார் என்று திருநாமம் பெற்றார். பூதத்தாழ்வார் திருக்கடல் மல்லையில் (மாமல்லபுரம்) குருக்கத்திப் பந்தரில் ஒரு குருக்கத்திமலரில் ஐப்பசித்திங்கள் அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தார். வடமொழியில் (பூ-சத்தாயாம்) என்ற தாது வடிவாகப் பிறந்தது பூதம் என்ற சொல். இது சத்தைப் பெற்றது என்று பொருள்படும். எம்பெருமானின் திருக்குணங்களை அநுபவித்தே சத்தைப் பெற்றார் என்னும் காரணம் பற்றியே பூதத்தாழ்வார் என்று திருநாமம் ஆயிற்று. 'கடல் வண்ணன் பூதங்கள்'[10] என்ற விடத்து 'எம்பெருமானுடைய சிரமஹரமான வடிவழகை அநுசந்தித்து அதனாலே சத்தையாம்படி இருக்குமவர்கள். இங்கு பூதம் என்ற சொல் அடியார்களைக் காட்டுகின்றது. (அவன் சத்தையே

---

9. தேகளீஸ்வரஸ்துதி - 7.
10. திருவாய், 5.2:1 ('பொலிக பொலிக பொலிக')

சத்தையாய் அறுகையாலே 'பூதம்' அடியார்களைக் காட்டு கின்றது). இந்த வியாக்கியாயனமும் ஈண்டுச் சிந்தித்தற் குரியது. இவரைத் திருமாலின் கௌமோதகி என்ற கதையின் அம்சமாகக் கருதுவர் வைணவப் பெருமக்கள். பேயாழ்வார் திருவல்லிக்கேணி என்னும் திவ்விய தேசத் திற்குத் தெற்கிலுள்ள மயிலாப்பூரில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் திருக்கிணற்றில் உண்டானதொரு செவ்வல்லி மலரில் ஐப்பசித்திங்கள் சதய நட்சத்திரத்தில் திருமாலின் நந்தகம் என்ற வாளின் கூறாக அவதரித்தார். இவர் ஒப்புயர்வற்ற பகவத் பக்தியையுடையவராய், பார்ப்ப வர்கள் கண்ணில் 'இவர் பேய் பிடித்தவர்' என்னும்படி நெஞ்சழிந்து கண் சுழன்று அழுதும் சிரித்தும் தொழுதும் எழுந்தாடியும் மகிழ்ந்து பாடியும் அலறியுமே பொழுது போக்கிக் கொண்டிருந்தமையால் பேயாழ்வார் என்ற திருநாமம் பெற்றனர். இந்த மூவரும் பார்ப்பனர் என்ப தற்குத் தக்க சான்றுகள் இல்லை.

**பஞ்ச சம்ஸ்காரம் பெறுதல்:** இந்த மூன்று ஆழ்வார்களும் இராமர், பரதர், இலக்குமணர்போல் அடுத்தடுத்த நாட் களில் அவதரித்தவர்கள்; மானிடயோநியில் (அயோநிஜர் கள்) பிறவாதவர்கள். இம்மூவருக்கும் வைகுந்தநாதனின் திருவாணையினால் சேனை முதலியார் இந்த இருள் தருமா நிலத்திற்கு எழுந்தருளிப் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து திருமந்திரப் பொருளையும் உபதேசித்ததாக வரலாறு. சத்துவகுணமே நிறையப் பெற்றவர்களாய் எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்வதையே பெரும் பேறாகக் கொண்டு ஞானபக்தி விரக்திகளுக்குப் பிறப்பிட மாய் விளங்கியவர்கள் இவர்கள். "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" (திருவாய். 6.7:1) என்றாற்போல பகவத் குணாநுபவத் தையே தாரக போஷக போக்கியமாகக் கொண்டு அன்ன பானாதிகளை ஒழித்தவர்கள். 'உண்டியே உடையே உகந்து ஓடுகின்ற இம்மண்டலத்தாரோடு கூடாமல்' (பெரு.

திரு. 3:4) ஒரு நாள் இருந்தவிடத்தில் மற்றொரு நாள் இராமல் ஓடித் திரியும் யோகியர்களாய் இருந்த இவர்கள் தம்மிலும் ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சாரம் செய்துகொண்டிருந்தவர்கள். இம்மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொண்டு இவர்கள் முகமாக உலகத்தை உய்விக்கவேண்டும் என்ற எண்ணம் எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் உண்டாயிற்று. இத்திருவுள்ளக்குறிப்பு நிறைவேறின இடமே திருக்கோவலூரில் மிருகண்டு என்பாரின் திருமாளிகையில் உள்ள இடைகழி என்பதை நாம் அறிதல் வேண்டும்.

திருக்கோவலூர் நிகழ்ச்சிக்குப் பிறகு இவ்வாழ்வார்கள் மூவரும் திருக்கோவலூர் ஆயனாரைத் தொழுது விடைபெற்று நெடுங்காலம் திருப்பதிகள் தோறும் சென்று மங்களாசாசனம் செய்து யோகபலத்தால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இம்மண்ணுலகில் வாழ்ந்திருந்து வையகத்தினரை வாழ்வித்தனர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. ஆனால் இவருக்குப் பின்னர் தோன்றின ஆழ்வார்களுள் ஒருவராவது இவர்களைச் சந்தித்தாகச் சான்றுகள் இல்லை.

**அருளிச்செயல்கள்:** இந்த மூன்று ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் முதல் மூன்று திருவந்தாதிகளைத் தவிர வேறு இல்லை. ஆகவே, இவ்வந்தாதிகளின் பொதுத் தன்மைகளையும் தனித்தன்மைகளையும் பற்றிச் சிந்திப்போம்.

**பொதுத்தன்மைகள்:** (1) இந்த ஆழ்வார்களின் பாசுரங்களில் திருவரங்கம், திருவெஃகா, திருக்கோவலூர், திருவிண்ணகர், திருவேங்கடம், திருக்கோட்டியூர், திருமாலிருஞ்சோலைமலை, திருத்தண்கால், தஞ்சைமாமணிக்கோயில், திருக்குடந்தை, திருவத்தியூர், திருப்பாற்கடல், திருவல்லிக்கேணி, திருவேளுக்கை, திருப்பாடகம், திருவட்டபுயகரம், பரமபதம் (பனிவிசும்பு) ஆகிய திவ்விய தேசங்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஒவ்வொரு ஆழ்வார் பாசுரங்களிலும் ஒவ்வொன்றைக் காட்டுவேன்.

**வேங்கடமும் விண்ணகரும்**
**வெஃகாவும் அஃகாத**
**பூங்கிடங்கின் நீள்கோவல்**
**பொன்னகரும் நான்குஇடத்தும்**
**நின்றான் இருந்தான்**
**கிடந்தான் நடந்தானே**
**என்றால், கெடுமாம் இடர்.**[11]

*என்பது பொய்கையார் திருவாக்கு. எம்பெருமான் ஒவ்வொரு திவ்விய தேசத்திலும் எழுந்தருளியிருக்கின்ற நிலைகளை நாம் அநுசந்தித்தால் நமது இடரெல்லாம் நீங்கிவிடும் என்கின்றார். திருவேங்கடத்தில் எம்பெருமானின் நிலை நின்ற திருக்கோலம்; விண்ணகரில் (வைகுந்தம்)*[12] *இருந்த திருக்கோலம்; 'வீற்றிருந்து ஏழ் உலகும் தனிக் கோல்செல்வ' என்பது திருவாய் மொழி காண்க (திருவாய். 4.5:1). திருவெஃகாவில் அவன் நிலை கிடந்த திருக்கோலம்; திருக்கோவலூரில் உலகளந்த திருக்கோலமாகச் சேவை சாதிக்கும் இடத்தை நடந்த திருக்கோலமாக அநுசந்திப்பது உண்டாதலால் 'பூங்கோவல்... நடந்தான்' என்கின்றார். இந்த நான்கு திருக்கோலங்களை அநுசந்தானம் செய்தால் இடரெல்லாம் நீங்கிவிடும் என்பது பொய்கையாழ்வாரின் கொள்கை.*

*அடுத்து பூதத்தாழ்வார் பாசுரம் ஒன்றைக் காண்போம்.*

**பயின்றது அரங்கம் திருக்கோட்டி; பல்நாள்**
**பயின்றதுவும் வேங்கடமே, பல்நாள் பயின்றது**
**அணிதிகழும் சோலை அணிநீர் மலையே**
**மணிதிகழும் வண்தடக்கை மால்.**[13]

*[பயின்றது - நித்தியவாசம் செய்தது]*

---

11. *முதல். திருவந். 77*

12. *ஒப்பிலியப்பன் சந்நிதியாகக் கொள்ளல் பொருந்தாது. காரணம் இங்கு வீற்றிருக்கும் திருக்கோலம் இல்லை. ஆனால் கச்சிமா நகரிலுள்ள பரமேசுவர விண்ணகரைக் கொண்டால் குறை வராது.*

13. *இரண். திருவந். 46*

இதில் அடியவர்கள் திருந்துவதற்காக — இலாப நட்டங்களில் உகப்பும் வெறுப்பும் கொள்ளாதிருப்பதற்காக — எம்பெருமான் உகந்து கோயில் கொண்டிருக்கும் திருப்பதிகள் பல்லாயிரம்; அவற்றுள் ஒருவரையறை இல்லை. அவற்றுள் கோயில், திருக்கோட்டியூர், திருவேங்கடம், திருநீர்மலை என்னும் நான்கு திவ்விய தேசங்களை மட்டிலும் இப் பாசுரத்தில் குறிப்பிட்டு அவ்விடங்களில் எம்பெருமான் நெடுங்காலமாக வாழ்கின்றான் என்கின்றார்.

மூன்றாவதாக, பேயாழ்வார் பாசுரம் ஒன்றையும் காட்டுவேன்.

> **விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்**
> **மண்ணகரம் மாமாட வேளுக்கை — மண்ணகந்த**
> **தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி**
> **தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு.**[14]

[மண் நகரம் - பூமியிலுண்டான வைகுந்த மாநகர் போன்ற; வேளுக்கை - கச்சியிலுள்ள ஆளழகிய சிங்கர் சந்நிதி; மண் அளந்த - பூமியில் உண்டான]

இதில் பேயாழ்வார் ஒப்பிலியப்பன் சந்நிதி என்கின்ற திருவிண்ணநகர், சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதி என்கின்ற திருவெஃகா, திருமலை, கச்சியிலுள்ள வேளுக்கை, திருக்குடந்தை, திருவரங்கம் பெரிய கோயில் — ஆகிய திருப்பதிகள் 'இறைபாடி'யாகவுள்ளன என்று குறிப்பிடுகின்றார். 'தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு' என்று ஈற்றடியில் அருளிச் செய்ததன் கருத்து — மாவலி பக்கல் யாசகனாகப் போகும்போது எவ்வளவு சௌலப்பியமும் சௌசீல்யமும் தோன்றிற்றோ அவ்வளவு சீலம் இத் திருப்பதிகளிலும் தோன்றும்படியாக இருக்கின்றான் என்பதைக் காட்டுவதற்காக.

---

14. மூன். திருவந். 62

(2) திருமாலின் அவதாரங்கள் பலவற்றினுள்ளும் திருவிக்கிரமாவதாரச் செயல்கள், ஏனமாகி இருநிலம் கீண்ட செய்தி, கிருட்டிணாவதாரத்தில் நிகழ்ந்த பல்வேறு வீரச் செயல்கள், இராமவதாரத்தில் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் இந்த ஆழ்வார்களின் பாசுரங்களில் அதிகமாக இடம் பெற்றுள்ளன. ஈண்டு ஒன்றிரண்டைக் காட்டுவேன்.

**திரிவிக்கிர மாவதாரம்:**

**பார்அளவும் ஓர்அடி வைத்து**
**ஓரடியும் பார்உடுத்த**
**நீர்அளவும் செல்ல**
**நிமிர்ந்ததே** (3),

**சேவடியை நீட்டி**
**திசை நடுங்க விண்துளங்க**
**மாவடிவின் நீஅளந்த**
**மண்** (9)

**அடியும் படிகடப்ப**
**தோள்திசைமேல் செல்ல**
**முடியும் விசும்பு அளந்தது**
**என்பர்** (17)

**நின்று நிலம்அங்கை**
**நீர்ஏற்று மூவடியால்**
**சென்று திசைஅளந்த**
**செங்கண் மாற்கு** (21)

**ஏழ்உலகும் தாயினவும்**
**எண்திசையும் போயினவும்**
**சூழ்அரவப் பொங்கணையான்**
**தோள்** (62)

என்று பொய்கையார் இந்த அவதாரத்தில் ஈடுபடுவதைக் காணலாம்.

அடிமூன்றில் இவ்வுலகம்
அன்று அளந்தாய் போலும்;
அடிமூன்று இரந்து
அவனி கொண்டாய் (5)

கொண்டது உலகம்
குறள் உருவாய் (18)

நீஅன்று உலகளந்தாய்
நீண்ட திருமாலே (30)

வகையால் அவனி இரந்து
அளந்தாய் பாதம் (34)

நின்றது ஓர்பாதம்
நிலம்புதைப்ப நீண்டதோள்
சென்றுஅளந்தது என்பர்
திசை எல்லாம் (61)

தரணி
நிவந்துஅளப்ப நீட்டிய
பொற்பாதம் (78)

இன்றா அறிகின்றேன்
அல்லேன் — இருநிலத்தைச்
சென்றுஆங்கு அளந்த
திருவடியை (87)

பரணியால் நீர் ஏற்று
பண்டுஒருகால் மாவலியை
மாணியாய்க் கொண்டிலையே (89)

என்று பூதத்தாழ்வார் இந்த அவதாரத்தில் தம் உள்ளத்தைப் பறிகொடுப்பதைக் காணலாம்.

இனி, பேயாழ்வார் இந்த அவதாரத்தில் ஈடுபடுவதைக் காண்போம்.

'அன்று உலகம் தாயோன்' (5)

'மண் அளந்த பாதமும்' (9)

படிவட்டத் தாமரை பண்டுஉலகம் நீரேற்று
அடிவட்டத் தால்அளப்ப நீண்ட முடிவட்டம்
ஆகாயம் ஊடறுத்து அண்டம்போய் நீண்டதே
மாகாய மாய்நின்ற மாற்கு (13)

வாய்மொழிந்து வாமனனாய்
மாவலிபால் மூவடிமண்
நீஅளந்து கொண்ட
நெடுமாலே (18)

முன்உலகம்உண்டு உமிழ்ந்தாய்க்கு
அவ்வுலகம் ஈரடியால்
பின்அளந்து கோடல்
பெரிதொன்றே? (20)

விரும்பிவிண் மண்ணளந்த
......பொன்னம் கழற்கே (23)

அன்று இவ்வுலகம்
அளந்த அசைவேகொல்? (34)

மன்னுமணி முடிநீண்டு
அண்டம்போய் எண்டிசையும்
துன்னு பொழிலனைத்தும்
சூழ்கழலே—மின்னை
உடையாகக் கொண்டு
அன்று உலகளந்தான் (41)

நின்ற பெருமானே!
நீர்ஏற்று உலகுஎல்லாம்
சென்ற பெருமானே! (47)

நீஅன்றே நீர்ஏற்று
உலகம் அடிஅளந்தாய்? (48)

*என்ற பாசுரப் பகுதிகளில் இந்த ஈடுபாட்டைக் கண்டு மகிழலாம்.*

ஏனமாகி இருநிலம் கீண்ட வரலாறு : இதனை இந்த ஆழ்வார்களின் பாசுரங்களில் கண்டு மகிழ்வோம். முதலில் பொய்கையார் பாசுரங்களில் இதனைக் காண்போம்.

பொருகோட்டுஓர் ஏனமாய்ப்புக்கு
இடந்தாய்க்கு அன்றுஉன்
ஒருகோட்டின் மேல்கிடந்தது
அன்றே......... .........
மாவடிவின் நீஅளந்தமண் (9)

கீண்டானை,
கேழலாய்ப் பூமி
இடந்தானை (25)

இடந்தது பூமி (39)

உராஅய் உலகுஅளந்த
நான்று, வராகத்து
எயிற்றுஅளவு போதா ஆறு
என் கொலோ? (84)

ஏனத்து
உருவாய் உலகுஇடந்த
ஊழியான் பாதம்
மருவாதார்க்கு உண்டாமோ
வான்? (91)

என்ற பாசுரப் பகுதிகளில் இந்த அவதாரம் அநுசந்திக்கப் பெறுகின்றது.

பூதத்தாழ்வார் இந்த அவதாரத்தில் ஆழங்கால் படுவதைக் காட்டுவேன்.

நீஅன்று உலகுஇடந்தாய்
என்பரால் (30)

**வராகத்து**
**அணிஉருவன் பாதம் பணியும் (31)**

*என்ற பாசுரப் பகுதிகளில் இந்த அவதார அநுசந்தானத்தைக் கண்டு மகிழலாம்.*

*பேயாழ்வார் வராக அவதாரத்தில் ஆழங்கால் படுவதைக் கண்டு மகிழ்வோம்.*

**கேழல்ஆய் மீளாது**
**மண்அகலம் கீண்டுஅங்குஓர்**
**மாதுஉகந்த மார்வற்குப்**
**பெண்அகலம் காதல்**
**பெரிது (54)**

*[மாது-பெரிய பிராட்டியார்]*

*இந்த ஆழ்வார் ஒரே பாசுரத்தில்தான் இந்த அவதாரத்தை அநுசந்திக்கின்றார்.*

**கிருஷ்ணாவதாரம் :** *பொதுவாக எல்லா ஆழ்வார்களையுமே இந்த அவதாரத்தின் திருவிளையாடல்கள் ஈர்த்துள்ளதைப் பாசுரங்களில் கண்டு மகிழலாம். பொய்கையாழ்வார் ஈடுபாட்டைக் காண்போம்.*

**மயங்க வலம்புரி வாய்வைத்து, வானத்து**
**இயங்கும் எரிகதிரோன் தன்னை முயங்கமருள்**
**தேர்ஆழியால் மறைத்தது என்?நீ திருமாலே**
**போர்ஆழிக் கையால் பொருது? (8)**

**மண்ணும் மலையும் மறிகடலும், மாருதமும்**
**விண்ணும் விழுங்கியது மெய்என்பர் (10)**

**பேய்முலை நஞ்சு**
**ஊன்ஆக உண்டான் (11)**

நான்ற முலைத்தலை
    நஞ்சுண்டு உறிவெண்ணெய்
தோன்ற உண்டான்
    வென்றிசூழ் களிற்றை ஊன்றிப்
பொருதுஉடைவு கண்டானும்
    புள்வாய் கீண்டானும்
மருதுஇடைபோய் மண்அளந்த
    மால் (18)

காம்பேய் மென்தோளி
    கடைவெண்ணெய் உண்டாயை
தாம்பேகொண் டார்த்த
    தழும்பு (22)

தழும்பிருந்த தாள்சகடம் சாடி (23)

விரலோடு வாய்தோய்ந்த
    வெண்ணெய்கண்டு ஆய்ச்சி
உரலோ டுறப்பிணிந்த
    நான்று குரல்ஓவாது
ஏங்கி நினைந்து
    அயலார்காண இருந்திலையே?
ஓங்குஓத வண்ணா
    உரை (24)

மலையால் குடைகவித்து மாவாய் பிளந்து
    ............................கொலையானைப்
போர்க்கோடு ஒசித்தனவும் பூங்குருந்தம்
    சாய்த்தனவும்
கார்க்கோடு பற்றியான் கை (27)

....................................நின்உருகிப்
பேய்த்தாய் முலைதந்தாள்
    பேர்ந்திலளால்; பேர்அமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்த
    ஆறு (34)

இடந்தது பூமி; எடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனை, முன் அஞ்ச (39)

அரவம், அடல்வேழம்,
ஆன், குருந்தம், புள்வாய்
குரவை, குடம்,முலை
மல்,குன்றம், — கரவுஇன்றி
விட்டு, இறுத்து மேய்த்து, ஒசித்து,
கீண்டு,கோத்து, ஆடிஉண்டு
அட்டு,எடுத்த செங்கண்
அவன் (54)

புணர்மருதின் ஊடுபோய்
பூங்குருந்தம் சாய்த்து,
மணம்மருவ மால்விடை ஓழ்
செற்று (62)

என்ற பாசுரங்களில் இந்த ஈடுபாட்டைக் காணலாம்.

பூதத்தாழ்வார் இந்த அவதாரத்தில் ஆழங்கால்பட்டு அநுபவிப்பதைக் காண்போம்.

உகந்துன்னை வாங்கி,
யொளிநிறங்கொள் கொங்கை,
அகங்குளிர, உண்என்றாள்
ஆவி உகந்து,
முலைஉண்பாள் போலே
முனிந்துஉண்டாய் நீயும்
அலைபண்பால், ஆனமையால்
அன்று (8)

பேர்த்தனை மாசகடம்
பிள்ளையாய் (10)

திரிந்தது வெஞ்சமத்துத்
தேர்கடவி (15)

விளங்கனிக்குக் கன்றுஎறிந்து (23)

மாவாய்ப் பிளந்த மகன் (28)

மகனாகக் கொண்டுஎடுத்தாள்
மாண்புஆய கொங்கை
அகன்ஆர உண்பன்என்று
உண்டு (29)

முலைசூழ்ந்த
நஞ்சுஊரத்துப் பெண்ணை
நவின்றுஉண்ட நாவன் (49)

ஏறுஏழும் வென்றுஅடர்த்த எந்தை (63)

கதவி கதம்சிறந்த
கஞ்சனை முன்காய்ந்து
அதவி போர்யானை
ஒசித்து (89)

*[கதவி - கோபித்து; கதம் - சினம்; அதவி - கொன்று]*

அடியால்முன் கஞ்சனைச் செற்று (92)

குடம்ஆடிக் கோவலனாய் மேவி (18)

விழவின்காய் கன்றினால்
வீழ்த்தவனே (100)

*என்ற பாசுரங்களில் ஆழ்வார் ஆழங்கால்பட்டு அநுபவிப்பதைக் கண்டு நாமும் அநுபவிக்கலாம்.*

*இனி, பேயாழ்வார் கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபட்டுக் களிப்பதைக் காண்போம்.*

தூநீர் உலகம்
முழுதுண்டு மொய்குழலாள்
ஆய்ச்சி — விழுதுண்ட

வாயானை மால்விடையேழ்
செற்றானை (25)

பேய்ச்சிபால் உண்ட பெருமானை (29)

கோவலனாய் ஆநிரைகள்
மேய்த்து குழல்ஊதி
மாவலனாய்க் கீண்ட
மணிவண்ணன் (42)

*[மா-கேசி என்னும் அசுரன்]*

துரகவாய் கீண்ட துழாய் முடியாய் (47)

நீஅன்றே நின்று
நிரைமேய்த்தாய்; நீஅன்றே
மாவாய் உரம்பிளந்து
மாமருதின் ஊடுபோய் (48)

பினனைக்காய் — முற்றல்
முரியேற்றின் முன்னின்று
மொய்ம்பொழிந்தாய் (49)

அவனே அருவரையால்
ஆநிரைகள் காத்தான்
அவனே அணிமருதம்
சாய்த்தான் (51)

பெற்றம் பிணைமருதம்
பேய்முலை மாச்சகடம்
முற்றக்காத்து ஊடுபோய்
உண்டுதைத்துக் கற்றுக்
குணிலை விளங்கனிக்குக்
கொண்டுஎறிந்தான் (60)

*[குணில் - எறிதடி]*

மண்உண்டும் பேய்ச்சி
முலைஉண்டும் ஆற்றாதாய்
வெண்ணெய் விழுங்க
வெகுண்டு ஆய்ச்சிகண்ணிக்
கயிற்றினால் கட்ட
தான்கட்டுண் டிருந்தான் (91)

என்ற பாசுரப் பகுதிகளில் இதனைக் காணலாம். கிருஷ்ணாவதாரம் எண்ணற்ற சேஷ்டிதங்களைக் கொண்டதாதலால் ஆழ்வார்கள் இவற்றில் தம்மையும் மறந்து ஈடுபடுவார்கள்.

இராமாவதாரம் : மூன்று ஆழ்வார்களும் இந்த அவதாரத்தில் ஈடுபட்டு மகிழ்வதைக் காட்டுவேன். முதலில் பொய்கையாழ்வாரின் ஈடுபாட்டைக் காண்போம்.

சிலையால் மராமரம்ஏழ் செற்று (28)

என்ற ஒரே இடத்தைத்தான் காணமுடிகின்றது. பூதத்தார் அநுபவித்த இடங்களாக,

சென்றது இலங்கைமேல்
செவ்வே;தன் சீற்றத்தால்
கொன்றது இராவணனை (25)

வாளரக்கன் போல்வானை
வானவர்கோன் தானத்து
நீள்இருக்கைக்கு உய்த்தான்
நெறி (52)

என்ற இரண்டே இடங்களைக் காணமுடிகின்றது. பேயாழ்வாரும்,

எய்தான் மராமரம் ஏழும் இராமனாய்;
எய்தான்அம் மான்மறியை
ஏந்திழைக்குஆய் எய்ததுவும்
தென்இலங்கைக் கோன்வீழ (52)

என்ற ஒரே பாசுரத்தில் இந்த அவதாரத்தை அநுபவித்து மகிழ்கின்றார். இந்த நிலையில் "இராமாவதாரத்தில்

மெய்யும் கிருஷ்ணாவதாரத்தில் பொய்யும் நமக்குத் தஞ்சம்'' — என்ற ஆன்றோர் வாக்கையும் சிந்தித்து மகிழ்கின்றோம்.

திருமலைக் காட்சிகள்: பெரும்பாலும் எல்லா ஆழ்வார்களும் அர்ச்சாவதாரத்தில்தான் அதிக ஈடுபாட்டைக் காட்டுவதைப்போல் இந்த மூவரும் அந்நிலையிலேயே அதிகம் ஈடுபடுகின்றார்கள்.

> **பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம்;**
> **ஆவரண ஜலம் போலே பரத்வம்;**
> **பாற்கடல் போலே வியூகம்;**
> **பெருக்காறு போலே விபவம்**
> **அதிலே**
> **தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்**[15]

என்ற வாக்கியத்தை சிந்திக்கின்றோம். இதில் 'அதில், தேங்கின மடுக்கள்போலே அர்ச்சாவதாரம்' என்பதே ஈண்டு நாம் சிந்திக்கவேண்டியது. 'பூமியில் இருக்கின்ற திருக்கோயில்களிலும் அடியார்களுடைய திருமாளிகைகளிலும்' என்று பல இடங்களிலும் எழுந்தருளியிருக்கும் நிலைகளை நினைந்து 'மடுக்கள் போலே' என்று பன்மையால் அருளிச் செய்தபடி. அவதாரங்களின் குணங்கள் எல்லாம் அர்ச்சையினிடத்து குறைவற்று நிறைந்திருக்கையாலும் அவதாரங்களின் திருவுருவங்களை அர்ச்சை வடிவமாகப் பலவிடங்களில் மேற்கொண்டிருக்கையாலும் 'அதிலே தேங்கின மடுக்கள் போலே' என்கின்றார்.

பெரும்பாலும் திருக்கோயில்கள் அமைந்திருக்கும் இடங்கள் இயற்கைச் சூழ்நிலையில் மிக அழகாக அமைந்திருக்கும். அதனால் கவிஞர்கள் அங்குள்ள கருப்பொருள்களை வைத்துக்கொண்டே அழகிய காட்சிகளைச் சித்திரித்துக் காட்டுவர். சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக

15. ஸ்ரீவசன. பூஷ. 42.

அமைந்திருக்கும். இந்த உறவினைச் 'சரீர - சரீரி பாவனை' என்று போற்றுவர் வைணவப் பெருமக்கள். அசித்தும் எம்பெருமான் படைப்பாதலால், அதுவும் வழிபாட்டிற் குரியது.

> **சென்று சேர்திரு வேங்கட மாமலை**
> **ஒன்று மேதொழ நம்வினை ஓயுமே**[16]

என்ற நம்மாழ்வார் பாசுரம் இக் கருத்திற்கு அரண் செய்வ தாக அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்ன வுடனேயே எம்பெருமான் மனம் மகிழ்ந்து நமக்குத் திருவருள் பாலிக்கும் பெருமை பேசப்பெறுகின்றது.

> **திருமா லிருஞ்சோலை மலைஎன்றேன்; என்னத்**
> **திருமால் வந்துஎன் நெஞ்சுநிறையப் புகுந்தான்**[17]

என்ற திருவாய் மொழிப் பாசுரப் பகுதி இதற்குச் சான்றாக நிற்கின்றது. எனவே, அன்பர்களே, அசித்தாகிய வேங்கட மலையில் சில காட்சிகளைக் காண்டலும் இறையநுபவம் பெறுவதாக அமைகின்றது. இத்தகைய பல அழகிய காட்சி களை நமக்கு ஆழ்வார் பெருமக்கள் காட்டிச் செல்கின் றனர். அவற்றுள் சிலவற்றை ஈண்டு எடுத்துக் காட்டுவேன்.

**பொய்கையார் காட்டுபவை : காட்சி - 1:** திருவேங்கட மலையில் வாழும் குறவர்கள் தங்கள் தினைப் புனங்களில் பட்டி மேயும் யானையைத் துரத்துவான் வேண்டி பரண் களிலிருந்தபடியே தங்கள் கையிலிருந்த பெரிய மாணிக்கக் கட்டியை யானையின்மீது எறிகின்றனர். அப்போது அங்குத் திரியும் மலைப்பாம்புகள் யானைமீது பட்ட இரத் தினத்தைக் கண்டு, யானையை மேகமாகவும் இரத்தி னத்தை மின்னலாகவும் எண்ணி மயங்குகின்றன; மின்ன லுடன் இடிதோன்றும் என அஞ்சி அப்பாம்புகள் புற்றினுள் புகுந்து கொள்கின்றன.

---

16. திருவாய் 3.3:8
17. ஷை. 10.8:1

ஊரும் வரிஅரவம் ஒண்குறவர் மால்யானை
பேர எறிந்த பெருமணியைக் — காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்
எம்மென்னும் மாலது இடம்.[18]

[ஊரும்-திரியும்; வரி-கோடு; அரவம்-பாம்பு; ஒண்-அழகிய; மால்-பெரிய; மணி-மாணிக்கம்; கார்-மேகம்; எம்-எங்களுடையவன்; மாலது-எம்பெருனுடைய]

என்பது பொய்கையாழ்வார் சித்திரிக்கும் சொல்லோவியம்.

காட்சி—2 : புனங்களில் பட்டிமேயும் யானையைத் துரத்தும் குறவர்கள் ஒரு கையில் அம்பு தொடுக்கப் பெற்ற வில்லையும் மற்றொரு கையில் கொளுத்தின தீவட்டியையும் கொண்டு யானையை அதட்டிச் செல்லுகின்றனர். யானை வெருவியோடுங்கால், விண்ணினின்றும் விழும் மீன் தானாக அதன் வழியில் பேரொளியுடன் விழுவதைக் கண்டு அதனைக் குறவர்களின் கைத்தீவட்டி என மயங்கி மேல் செல்லாது அப்படியே திகைத்து நின்று விடுகின்றது.

பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனந்துறந்த வேழம்—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று.[19]

[பகழி-அம்பு; செந்தீ-தீவட்டி; புனம்-கொல்லை; வேழம்-யானை; விசும்பு-ஆகாயம்; மீன்-நட்சத்திரம்; மேல்-முன் ஒரு காலத்தில்; அசுரர் கோன்-இரணியன்; உகந்தான்-மகிழ்ந்தான்; குன்று-திருமலை.]

என்பது பொய்கையாழ்வாரின் சொல்லோவியம்.

---

18. முதல். திருவந். 38
19. முதல். திருவந்-40.

பூதத்தாழ்வார் காட்டுபவை காட்சி : பூதத்தாழ்வார் காட்டும் காட்சி ஒன்றினைக் காண்போம். திருமலையில் மதப்பெருக்கால் செருக்கித் திரிகின்றது ஒரு களிறு. வழியில் அது தன் சிறந்த பிடியைக் காண்கின்றது. அதனை மீறி அப்பால் செல்லமாட்டாது அதற்கு இனிய உணவு ஈந்து அதன் மனம் நிறைவிக்க விரும்புகின்றது. அதன் முன் நின்று இரண்டே கணுக்களையுடைய மூங்கிற் குருத் தொன்றைப் பிடுங்கி அருகில் ஒரு மலை முழைஞ்சிலிருக்கும் ஒரு தேனடையில் தோய்த்து அப்பிடியின் வாயில் ஊட்டு கின்றது 'குளோபஜாமுனை' ஊட்டுவது போல. இதனை ஆழ்வார்,

> பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
> இருகண் இளமூங்கில் வாங்கி— அருகிருந்த
> தேன்கலந்து நீட்டும் திருவேங் கடங்கண்டீர்
> வான்கலந்த வண்ணன் வரை[20]

[வேழம்-யானை; பிடி-பெண்யானை; இருகண்-இரண்டு கணுக்களையுடைய; வண்ணன்-நிறத்தன்; வரை-மலை.]

என்று சொல்லோவியமாக்கிக் காட்டுகின்றார். இத்தகைய ஒரு காட்சியைத் திருமங்கையாழ்வார் இமயமலையில் காட்டுவார். திருப்பிரிதி என்ற திவ்விய தேசத்தை வருணிக்கும் இந்த ஆழ்வார் இக்காட்சியைக் காட்டு கின்றார்.

> வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர்முளை
> அளைமிகு தேன்தோய்த்துப்
> பிரசவாரிதன் இளம்பிடிக் கருள்செயும்
> பிரிதிசென் றடைநெஞ்சே[21]

[வரைசெய்-மலை போன்ற; களிறு-ஆண் யானை; வெதிர்-மூங்கில்; வளர்முளை-வளரும் இள மூங்கில்;

20. இரண். திருவந். 75.
21. பெரி. திரு. 1.2:5

அளை-முழைஞ்சு; பிரசவாரி-தேன் வெள்ளம்; அருள் செயும்-கொடுக்கும்.]

என்பது இக்காட்சியைச் சித்திரிக்கும் ஆழ்வாரின் சொல்லோவியம். இங்கு ஆண்யானை தன் பெண் யானைக்கு ஒரு தேன் தோய்ந்த மூங்கிற் குருத்தைத் தந்து அதனை மகிழ்விக்கின்றது. எம்பெருமான் பிராட்டியை உவப்பிக்கும் படியைக் கூறுதல் இதற்கு உள்ளுறைப் பொருள். எம்பெருமானார் திருமலைக்கெழுந்தருளித் துவயத்தின் பொருளைத் திருமந்திரத்தோடும் சரமசுலோகத்தோடும் உபந்யசித்த பொழுது அனந்தாழ்வான் இப் பாசுரத்தை உடையவர் பரமாக நிர்வகித்தருளினர்.

இந்தக் காட்சியை நினைவிற் கொண்ட கம்பநாடன், சித்திரகூடமலையில் இத்தகைய காட்சியொன்றினைச் சீதைக்கு இராமன் வாயிலாகக் காட்டுவான்.

உருகு காதலில் தழைகொண்டு
மழலைவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினை
முழைநின்றும் வாங்கி,
பெருகு சூல்இளம் பிடிக்குஒரு
பிறைமருப் பியானை,
பருக வாயினில் கையில்நின்று
அளிப்பன பாராய்[22]

[முருகு - மணம்; நாறு - வீசுகின்ற; முழை-கல் இடுக்கு; பெருகுசூல்-முதிர்ந்த கருப்பம்; மருப்பு-தந்தம்.]

இங்கு ஒருயானை சூல் கொண்டுள்ள தன் இளம்பிடியின் மீது அளவற்ற அன்பு கொண்டுள்ளது. ஒரு மலையிடுக்கில் தேன்கூடு கட்டப்பெற்று அடையில் தேன் ததும்பி நிற்கின்றது. உருண்டை வடிவில் காணப்பெறும் அதனைத்

22. கம்ப. அயோத். சித்திர. 10.

தேனீக்கள் சூழ்ந்து மொய்த்துக் கொண்டுள்ளன. ஆண்யானை அண்மையிலுள்ள மரத்தினின்று ஒரு தழைக் கொத்தினை ஒடித்து அதனைக் கொண்டு அம்மழலை வண்டுகளை ஓச்சுகின்றது பிறகு அந்தத் தேனடையினை அப்படியே அசையாமல் தன் துதிக்கையினால் வாங்கிச் சூல் நிறைந்து பருகுவதற்கும் சிரமப்படும் தன் பிடியின் வாயில் வைத்துப் பருகுமாறு செருகுகின்றது. இந்த யானை மூங்கில் குருத்தினை விரும்பவில்லை. கல்கத்தா 'ரஸகுல்லா' போல் தேனடையை மட்டிலும் அளிக்க விரும்புகின்றது போலும்.

முன்னோர் மொழிப் பொருளே
யன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவம்[23]

என்னும் தமிழ் இலக்கிய மரபினையொட்டிப் பாடும் இயல்பினையுடையவர் நம் கவிஞர்கள் என்பதை இப் பாசுரங்கள் காட்டுகின்றன. பூதத்தாழ்வாரைத் திருமங்கை யாழ்வாரும் இவர்கள் இருவரையும் கம்பநாடனும் பின்பற்றி இருப்பதைக் கண்டு மகிழலாம். இதனால் ஒருவரை யொருவர் பார்த்தெழுதினார் என்று கூறுதல் கூறுவோரின் கடுகுள்ளத்தைக் காட்டுகின்றது.

**காட்சி-2 :** திருமலையில் வாழும் வானரங்கள் எம் பெருமானுக்குச் செய்யும் பூசனைகளைக் காட்டுகின்றார்.

**போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு ஆங்கலர்ந்த**
**போதரிந்து கொண்டேத்தும் போதுஉள்ளம்—போதும்**
**மணிவேங் கடவன் மலரடிக்கே செல்ல**
**அணிவேங் கடவன்பேர் ஆய்ந்து.**[24]

[போது - விடியற்காலம்; போது - மலர்; அரிந்து- கொய்து; பேர் - திருநாமம்; போது - மலர்].

---

23. நன்னூல்-9.
24. இரண். திருவந்-72.

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. அதிகாலையில் முனிவர்கள் துயில் விட்டெழுமாப் போலே குரங்குகளும் எழுந்து பூத்த சுனைகளிலே சென்று நீராடி அங்குள்ள செவ்வி மலர்களைக் கொய்து கொண்டுபோய்த் தன் சாதிக் கேற்றவாறு ஏதேனும் ஒன்றைச் சொல்லித் துதி செய்து பணியா நிற்கும் என்கின்றார்.

இதனை அடியொற்றியே கம்பநாடனும் சித்திரகூடக் குரங்குகளின் செயல்களை எடுத்துக் காட்டுவான். இங்குள்ள குரங்குகள் மூப்படைந்து கண் இடுகிப் போய் வழியறியாது வருந்தும் மாதவர்க்கு அவர் செல்ல வேண்டிய அருநெறிகளைக் காட்டுகின்றன.

> **இடுகு கண்ணினர் இடருறு**
> **மூப்பினர் ஏக**
> **நெடுகு கூனல்வால் நீட்டின**
> **உருகுறு நெஞ்சக்**
> **கடுவன் மாதவர்க்(கு) அருநெறி**
> **காட்டுப காணாய்[25]**

[இடுகு - இடுகிய; இடர் - துன்பம்; ஏக - செல்ல; நெடுகு கூனல் - மிக்க கூனையுடைய; மாதவர் - தவசிகள்.]

என்பது கம்பன் படைத்த சொல்லோவியம். இங்கு இராமன் சீதைக்குப் பல சித்திரகூட மலைக் காட்சிகளைக் காட்டுகின்றான். இன்னும் சில மந்திகள் சிலம்பின் நூல், பஞ்சின் நூல் இவற்றை ஆராய்ந்து தெரிந்து அந்தணர்க்கு அளிக்கின்றன.[26] கடுவன்கள் முனிவர்கட்கு மாங்கனிகளை அளிக்கின்றன.[27] இங்ஙனம் குறிஞ்சி நிலக் காட்சிகள் வழிவழியாகப் புதிய புதிய கற்பனைப் போக்குகளுடன்

25. அயோ.சித்திர-30.
26. ஷெ-32.
27. ஷெ-33.

இலக்கியங்களில் புலவர்களால் காட்டப் பெற்று அறிவுக்கு விருந்தாக அமைகின்றன. குறிஞ்சி நிலக் காட்சிகளைச் சித்திரிப்பதில் கபிலர் வல்லவர். அவர்தம் சங்கப் பாடல் களில் இக்காட்சிகளைக் கண்டு மகிழலாம். தத்துவ ஞானியர் இந்த அசித்துக் காட்சிகளிலும் ஆழங்கால் படுகின்றனர்.

**பேயாழ்வார் காட்டுபவை: காட்சி-1** பேயாழ்வார் காட்டும் யானையோ 'ஆதிமூலமே!' என்று ஓலமிட்டழைத்த கசேந்திரன் மரபு வழி வந்தது போலும். அது புரியும் வழி பாட்டுச் செயலை ஒரு சமத்காரம் பொலியப் பேசுகின்றார் ஆழ்வார். வழிபாட்டுக்குச் செல்லும் அடியார்கள் வாய் கொப்பளித்துக் கைகால்களை நீரால் தூய்மை செய்து கொண்டு மலர்களை எடுத்துப் போவது வழக்கமாகும். திருமலையிலுள்ள ஆண்யானையொன்று இந்நெறியை மேற் கொள்ளுகின்றது. இக்காட்சியினை ஆழ்வார்,

> **புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி**
> **உகுமதத்தால் கால்கழுவிக் கையால்—மிகுமதத்தேன்**
> **விண்ட மலர்கொண்டு விறல்வேங் கடவனையே**
> **கண்டு வணங்கும் களிறு.**[28]

> [புகு - வாயில் புகும்; வாய்பூசுதல் - கொப்பளித்தல்; மிகுமதம் - அதிக மதம்; விறல் - மிடுக்கு; களிறு - ஆண் யானை]

என்ற பாடலால் காட்டுவர். கன்னத்திலிருந்தும் மத்தகத்தி லிருந்தும் பெருகி யொழுகும் மத நீரால் வாய் கொப்பளிக் கின்றது யானை. அருவிபோல் கால்வரை பெருகி வழியும் மத நீரினால் கால் கழுவுகின்றது. இங்ஙனம் திருமலை யிலுள்ள ஐயறிவு விலங்குக்கும் தன்னை வழிபடும் ஞானத்தைத் தரக்கூடியவன் திருமலையப்பன் என்பது ஆழ்வார் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்.

---

28. மூன். திருவந். 70

காட்சி — 2: இன்னொரு யானையின் செயலையும் அதன் முடிவையும் காண்போம். 'மதயானை போலெழுந்த மாமுகில்காள்!'[29] என்று ஆண்டாள் வருணித்ததை நாம் அறிவோம். திருமங்கை மன்னனோ,

> கரிய மாமுகில் படலங்கள் கிடந்துஅவை
> முழங்கிடக் களிறுஎன்று[30]

என்று திருப்பிரிதித் திருமொழியில் மேகத்தை யானையோடு ஒப்பிட்டுப் பேசுவர். திருமலையில் ஆண் யானையொன்று கரிய மலை முகட்டில் படிந்திருந்த முகிற் படலத்தை எதிரியான ஒரு யானையென்று மயங்கிப் பெரிய வேகத்துடன் சென்று துதிக்கையால் குத்துகின்றது. இதனைக் கண்ட யாளி ஒன்று 'இக்களிற்றுக்கு இவ்வளவு மதமா' என்று சினந்து ஓடிவந்து அந்த யானையின்மீது பாய்ந்து ஓங்கி அறைந்து அதன் கொம்புகளை முறிக்கின்றது. யானையும் வாய் விட்டுப் பிளிறிக் கொண்டு மடிந்தொழி கின்றது. ஆயினும், அது சினந்தணியாமல் அங்கேயே நின்ற வண்ணம் பெரு முழக்கம் செய்து மலையையே அதிர வைக்கின்றது. இப்படியொரு காட்சி.

> களிறு முகில்குத்தக் கையெடுத் தோடி
> ஒளிறு மருப்பொசிகை யாளி—பிளிறி
> விழகொன்று நின்றதிரும் வேங்கடமே! மேனாள்
> குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று.[31]

[களிறு - ஆண் யானை; முகில் - மேகம்; கை - துதிக்கை; ஒளிறு - விளங்குகின்ற; ஒசி - முறிக்கின்ற; குழ கன்று - இளங் கன்று (வத்சலாசுரன்)]

என்பது ஆழ்வார் காட்டும் சொல்லோவியம்.

---

29. நாச். திரு. 8:9
30. பெரி. திரு. 1.2:10
31. மூன். திருவந். 71.

காட்சி—3: திருவேங்கடமலையில் களிறொன்று தன் பிடியுடன் கலந்திருக்கும்பொழுது ஊடல் நிகழ்கின்றது. உடனே அது தன் பேடையை விட்டுப் பிரிந்து இங்குமங்கும் திரிகின்றது. தன் சினத்திற்குப் போக்கு வீடாகத் தன் கொம்பினை மணிப் பாறைகளில் குத்துகின்றது. அப் பொழுது அதன் கொம்பினின்றும் முத்துகள் உதிர்கின்றன.

**புரிந்து மதவேழம் மாப்பிடியோ டூடி**
**திரிந்து சினத்தால் பொருது—விரிந்தசீர்**
**வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே! மேலொருநாள்**
**மண்கோட்டுக் கொண்டான் மலை.**[32]

[வேழம் - யானை; பிடி - பெண் யானை: கோடு- கொம்பு; மண் - பூமி(ப்பிராட்டி)]

என்பது ஆழ்வார் காட்டும் சொல்லோவியம். திருமலையி லுள்ள பளிங்குப் பாறைகளிலே யானை தன் நிழலைக் கண்டு எதிரி யானை என்று மயங்கி அதனோடு போர் செய்ததென்றும் கொள்ளலாம்.

காட்சி — 4: திருவேங்கட மலையின் உயர்ச்சியைக் காட்டும் போக்கில் மூங்கில்களின் வளர்ச்சியையும் காட்டு கின்றார் இந்த ஆழ்வார். திருமலையின் மூங்கில் மதி மண்டலத்தளவும் நீண்டு வளர்ந்துள்ளது. அது மதியைப் பற்றிக் கொண்டிருக்கும் இராகுவையும் தகர்த்துக் கிரகணத்தையே விடுவித்து விடுகின்றது. "தீங்கழை போய் வென்று, விளங்குமதி கோள் விடுக்கும் வேங்கடமே!"[33] என்பது ஆழ்வாரின் திருவாக்கு. இத்தகைய பல காட்சிகளை திவ்விய கவி பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் காட்டுவார். (அஷ்டப் பிரபந்தம் காண்க).

---

32. மூன். திருவந். 45
33. மூன். திருவந். 72. கோள் - கிரகணம்

**காட்சி — 5:** இந்த ஆழ்வாரும் ஒரு குரங்கின் செயல்களைக் காட்டி மகிழ்கின்றார். தெளிவான கற்பாறையின் மீது உட்கார்ந்து கொண்டுள்ளது பெண் குரங்கொன்று. அது தனக்கு நட்பாகவுள்ள ஆண் குரங்கொன்றை நோக்கி விண்ணில் வெண்மையாகத் தோன்றும் திங்களைப் பிடித்துத் தருமாறு வேண்டுகின்றது.

**தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி**
**அளிந்த கடுவனையே நோக்கி—விளங்கிய**
**வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே[34]**

[சிலாதலம் - கற்பாறை; மந்தி - பெண் குரங்கு; கடுவன் - ஆண் குரங்கு; மதியம் - திங்கள்]

என்பது பேயாழ்வாரின் சொல்லோவியம். இப்பாடலால் திருமலையின் உயர்ச்சியை அறிகின்றோம்.

**மூன்று ஆழ்வார்களின் பக்தி நிலைகள் :** இனி, இந்த மூன்று ஆழ்வார்களின் பக்தி நிலைகளை எடுத்துக்காட்டுவேன். பக்தி நெறி கர்மயோகம், ஞானயோகம், பக்தி யோகம் என்ற மூன்று நிலைகளில் பயிற்சியடைய வேண்டிய நெறி. முதல் இரண்டும் மூன்றாவதன் படிகள். இவை வைணவ நூல்களில் கண்டு தெளியப் பெற வேண்டியவை[35]. முதிர்ந்த பக்தி நிலையை 'ஞானம் கனிந்த நலம்'[36] என்று குறிப்பிடுவர் திருவரங்கத் தமுதனார். இந்த நிலையில் முமுட்சுகள்[37] தம் முனைப்பை அகற்றி இறைவனுடைய சங்கற்பத்துக்கு அடிபணிந்து இறைவனுடன் நிரந்தரத் தொடர்பு கொள்வதற்குத் தயாராகின்றனர். இந்நிலையில்தான் தமக்கும் இறைவனுக்கும் அறுபடாத

---

34 ஷெ. 58

35. முத்தி நெறி - பக். 95 - 100 காண்க.

36. இராமாநு. நூற். 66

37. முமுட்சுகள் - மோட்சத்தில் விருப்பமுடையவர்கள்

தைல தாரை போன்ற தொடர்பு ஏற்படுகின்றது. நாளாக நாளாக இந்நிலையில் ஒரு புதிய ஆற்றல் தோன்றுகின்றது. வானநூல் அறிஞர்கள் பூமியின் சிறுமையையும் அதை சார்ந்து நிற்கும் கதிரவனின் பெருமையையும் உணர்வது போல், பக்தர்களும் சமுசாரத்தில் உழலும் தம் ஆன்மாவின் சிறுமையையும், எல்லா உயிர்களையும் புரக்கும் இறைவனின் பெருமையையும் பேராற்றலையும் உணர்கின்றனர். இந்நிலையில் சீவான்மா பரமான்மாவுடன் கலக்கின்றது; அப்பொழுது அது கடலில் கிடக்கும் கடற்பஞ்சு போன்ற நிலையினை அடைகின்றது.

இந்நிலையிலும் மூன்று பிரிவுகள் இருப்பதாகக் காட்டுவர் வைணவப் பெருமக்கள். அவை, பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்பவையாகும். 'பரபக்தி' என்பது, எம்பெருமானை நேரில் காணவேண்டும் என்கின்ற ஆவல்; அவனை நேரில் காணல் 'பரஞானம்'; பின்பு மேன்மேலும் இடையறாது அநுபவிக்க வேண்டும் என்னும் ஆவல் 'பரமபக்தி'. இவற்றை மற்றொரு விதமாகவும் பண்டைய ஆசிரியர்கள் விளக்குவர். எம்பெருமானோடு கலந்த போது சகிக்கும்படியாகவும், பிரிந்தபோது துக்கிக்கும்படியாகவும் இருக்கும் நிலை 'பரபக்தி'; எம்பெருமானுடைய முழு நிறைவு நேர் காட்சி 'பரஞானம்'; அவனுடைய அநுபவம் பெறாவிடில் நீரைவிட்டுப் பிரிந்த மீன்போல மூச்சு அடங்கும்படி இருத்தல் 'பரமபக்தி' என்று விளக்கம் தருவர் அவர்கள்.

இந்த மூன்று நிலைகட்கும் முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூன்று ஆழ்வார் பெருமக்கள் எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றனர். ஆயினும் இம்மூன்று நிலைகளும் இந்த மூவர்க்கும் தனித்தனியே குறைவின்றி இருக்குமாயினும் ஒவ்வொரு நிலையும் ஒவ்வோரிடையேயும் தலையெடுத்து மற்றவை அடங்கியிருக்கும். இதனையும் தெளி

வாக்குவேன். பொய்கையாழ்வாருக்குப் பரஞானம், பரம பக்திகளின் சாயை மாத்திரம் தோன்றி பரபக்தியே விஞ்சியிருக்கும். பூதத்தாழ்வாருக்குப் பரபக்தி முற்றிப் பரிபக்குவமாகி மேலே பரமபக்தி தோன்றக் காரணமான பரஞானமே விஞ்சியிருக்கும். பேயாழ்வாருக்குப் பரம பக்தியே விஞ்சிப் பரபக்தி, பரஞானம் ஆகிய இரண்டும் அதற்குள்ளே மறைந்து கிடக்கும். இம்மூவருடைய அருளிச் செயல்களினின்றும் இந்த நிலைகளை நம் பண்டையோர் கண்டறிந்து தாம் கண்டவாறே இங்ஙனம் வகுத்தருளி யுள்ளனர். இங்ஙனம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றின் ஒளியும் மற்றவற்றின் ஒளியின்மையும் எம்பெருமானுடைய சங்கற்பத்தினால் உண்டானவை என்பது இவர்தம் உள்ளக் கிடக்கையாகும். ஆகவே, இதில் எவ்வகையான மறுப் புக்கும் இடம் இல்லை. இந்த மூன்று நிலைகளும் முத்தி யிலேயே உண்டாகக் கூடியவையேயாயினும் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கட்கு மாத்திரம் இங்கிருக்கும்போதே எம்பெருமானுடைய திருவருளால் விளைந்தனவாகும். இனி, இவற்றை எம்பெருமானிடம் வேண்டிப் பெறுதலும் உண்டு.

**பொய்கையாரின் பரபக்தி :** எம்பெருமானை நேரில் காணவேண்டும் என்கின்ற ஆவலே பரபக்தி என்று கூறினேன். இதை பிறந்தபோதே அவர் அவனுடைய திருவருளால் அடைகின்றார். அறிவு நடையாடுகைக்குத் தகுதியில்லாத காலத்திலே — கருவறை வாழ்க்கைக் காலத் திலே — திரு அரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெரிய பெருமாளின் பெருமைகளையெல்லாம் நேரில் கண்ட தாகக் கூறுவார்.

> **கருவரங்கத் துட்கிடந்து**
> **கைதொழுதேன் கண்டேன்**
> **திருவரங்க மேயான்**
> **திசை**[38]

38. ஷை - 6.

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. கடவுளுக்கு உருவம் உண்டா? இல்லையா? என்ற வினாவுக்கு ஆழ்வார் கூறும் மறுமொழி இது.

தமர்உகந்த(து) எவ்வுருவம்
அவ்வுருவம் தானே
தமர்உகந்த(து) எப்பேர்மற்(று)
அப்பேர்[39]

[தமர் - அடியார்கள்; உகந்தது - விரும்பியது; பேர் - திருநாமம்]

பக்தர்கள் எந்த உருவத்தை விரும்புகின்றார்களோ அந்த உருவத்தையே இறைவன் தன் உருவமாக அங்கீகரிக்கின்றான். பக்தர்கள் அவனையே சார்ந்திருப்பவர்கள்; அவன் சொரூபமோ பக்தர்களின் விருப்பத்தைச் சார்ந்திருக்கின்றது; அவனையே நம்பி அன்பு செய்கின்றவர்கள் உகப்பதுதான் அவனுக்குத் திருமேனி — அவனுக்குத் திருநாமம்! எவ்வளவு பொருத்தமான கொள்கை! 'கடவுள் தன் சாயலில் மனிதனைப் படைத்தான்' என்று விவிலியம் விளக்குகின்றது. 'மனிதன் தன் சாயலில் கடவுளைப் படைத்துக் கொள்ளுகின்றான்!' என்ற கொள்கையையும் ஆழ்வார் அங்கீகரிக்கின்றார்.

ஞானம் என்பது உலகில் பலவிதம்; அளவை நூல் (தருக்கம்) படித்து வாதங்கள் செய்யத் தேர்ச்சி பெற்றவனும் தன்னை ஞானி என நினைக்கின்றான்; ஆயுர்வேதம், மந்திரம், தந்திரம் முதலியவற்றில் கை தேர்ந்தவனும் தன்னை ஞானி என நினைத்துக் கொள்ளுகின்றான். இப்படி ஒவ்வொரு தகுதி பெற்றவனும் தன்னை ஞானி என நினைத்துக்கொண்டால் உண்மையான ஞானம் எது? உண்மையில் ஞானி என்பவன் எவன்? என்கின்ற வினாக்களுக்கு சாத்திரங்கள் கூறும் விடை — எம்பெருமானை

39. முதல். திருவந். 44.

அறிகின்ற அறிவு ஒன்றுதான் ஞானம் எனப்படும் என்பதே யாகும்.

> '...ஒண் தாமரையாள் கேள்வன்
> ஒருவனையே நோக்கும் உணர்வு.'[40]

[உணர்வு-ஞானம்; நோக்கும்-சென்று பற்றும்.]

என்பது ஆழ்வார் திருவாக்கு.

உண்மையில் இறைவனையாவது, அவன் சாயல் அல்லது உருவத்தையாவது அறிந்து கொள்வது அருமை. இவற்றை அறிய முயலும்போது அறிவு அறியாமையாகி விடுகின்றது!

> 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'[41]

என்று இன்பத்திற்குக் கூறும் கூற்று இறைவனை அறிவதற்கும் பொருந்தும்.

> உணர்வார் ஆர் உன்பெருமை
> ஊழிதோறு ஊழி?
> உணர்வார் ஆர் உன்உருவம்
> தன்னை? — உணர்வார் ஆர்?
> விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்!
> வேங்கடத்தாய்! நால்வேதப்
> பண்ணகத்தாய் நீகிடந்த
> பால்?[42].

[ஊழிதோறு ஊழி-காலம் உள்ள அளவும்; பால்-திருப் பாற்கடல்].

என்று பாடுகின்றார் ஆழ்வார் இறைவனை நோக்கி. 'யுகக்கணக்காக ஆராய்ச்சி செய்து கொண்டே போனாலும்

40. முதல். திருவந். 67.
41. குறள்-1110.
42. முதல். திருவந். 68.

இறைவனுடைய பெருமையையும் அறிய முடியாது; எளிமையையும் உள்ளபடி அறிய முடியாது. 'உணர்வார் ஆர்?' என்ற வினாவினால் எல்லாம் அறியவல்ல இறைவனாலும் தன்னை அறிய முடியாது என்று சூசகமாகத் தெரிவிக்கப்படுகின்றது. 'அவன் அருளால் அவன் தாள் வணங்கிய' (திருவா. சிவபுராணம்-18). வேத இருடிகள்தாம் முதன் முதல் இந்த உலகில், மனித நாகரிக அருளோடிய காலத்தில் இப்படிப்பட்ட உண்மையை வெளியிட முயன்றார்கள். வேத வடிவிலும் கவிதை வடிவிலும், இதைத்தான் வேதாந்திகள் தத்துவரூபமாக வெளியிட முயன்றார்கள். புராண ஆசிரியர்கள் பல்வேறு கதைகளாக வெளியிட முயன்றார்கள்.

இவ்விடத்தில் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியாரின் பாடல் ஒன்று சிந்தித்தல் தகும்.

**ஏத்திமத மெல்லாம்**
**எதைய றிந்தேம் என்னும்? எதைச்**
**சாத்திரம்நன் காய்ந்து,**
**சலிக்கும்? எதை — நாத்திகமோர்**
**சற்றுமே ஓர்ந்திலதாச்**
**சாதித் திடும்? அதையே**
**பற்றுவாய் நெஞ்சே**
**பரிந்து.**[43]

இதன்கண் நாத்திகம் தான் துணிந்து கொண்ட நேர் காட்சி அளவையால் ஆராய்ந்து காணாமையான், ஒரு சிறிதும் இல்லாததாகவே சாதித்திடும் என்றதனால் பரம்பொருள் புலன்கட்கு எட்டாதவன் என்பது உணர்த்து கின்றார். அளவை நூல் முதலிய சாத்திரங்கள் அநுமான அளவையாலும், கண்டவர் சொல்லாலும், பரம்பொருள் உண்டென்று கண்டும், அநுபவத்திற்கு விஷயமாதல் இல்லாமையால் காணாதும் சஞ்சலிக்கும் என்கின்றார்.

43. அகலிகை வெண்பா-கடவுள் வாழ்த்து

'சலிக்கும்'[8] என்ற வினையால் கண்டும் காணாமை குறித்தவாறாகும். இனி, 'மதம் எதை ஏத்தி அறிந்தேம் என்னும்'[9] என்றது நாத்திகத்திற்கு இல்லதாகவும், சாத்திரங் கட்கு, உள்ளதும் இல்லதுமாகவும் இருக்கும் பரம்பொருள், ஏத்திய மதங்கட்கெல்லாம் உள்ளதேயாம் என்று புலப் படுத்துகின்றார். இதனை அறிதற்கு வாயிலும் கூறு கின்றார். 'ஏத்தியறிந்தேம்' என்றலால் பரம்பொருளை அறிதற்கு அதனை ஏத்துதலே வாயில் என்று காட்டியதைக் கண்டு மகிழலாம். இஃது இடைப்பிறவரலாக இருப்பது போல் தோன்றினும் சிந்தனைக்குரியது.

விண்ணும் மண்ணும் படைப்பு அழகுகளாலும், வேத இருடிகளின் கவிதைப் பண்ணழகாலும், புராணங்களும் இதிகாசங்களும் அழகான கதைகளாலும் சுட்டிக் காட்டும் 'வேதாந்த உண்மை'க்குத்தான் பக்தர்கள் திருமலை, திருவரங்கம், திருமாலிருஞ்சோலைமலை முதலான திருத் தலங்களில் அழகான திருக்கோயில்களை எழுப்பியுள்ளார் கள். இந்த 'மந்திரப் பிரதிட்டைகள்' யாவும் வேதாந்த ஞானிகட்கு, சிறு பிள்ளைகள் வரைகீறிக் கோயிலும் பெருமாளும் அமைத்துக் காட்டியது போலவே தோன்றும். எனினும், அந்தப் பிரதிட்டைகளைத் தனக்குப் 'பிராண பிரதிட்டைகளாகவே' கொண்டு எல்லாம் வல்ல இறைவன் சம்சாரிகளுடைய கலக்கங்களைப் போக்குவதற்கு அங்கே வந்து தங்கி விடுகின்றான் என்று பேசுகின்றது சித்தாந்தம்.

இதனால் இறைவனை 'வேங்கடத்தாய்!' 'விண்ண கராய்!' 'வெஃகா உள்ளாய்!' என்று வாய் குளிர அழைப்பதில் பொய்கையாழ்வார் மிக்க மன நிறைவு கொள்ளுகின்றார். 'எங்கும் அந்தர்யாமியாக இருக்கும் எம்பெருமானை உணரவும் முடியாத ஒரு மாக்கடலாக உவமித்தால், அதிலும் செல்வதற்குரிய இன்பப்படகாகக் கொள்ளலாம். பத்தர்கள் வழிபடும் திருத்தலங்களையும் 'அவன் பாற்கடலில் அறிதுயில் கொண்டிருக்கின்றான்!'

போன்ற புராணக் கதைகளையும்! வைணவர்கட்குத் திருமாலின் உறைவிடமான பாலும் நீரும் அவனுடைய தெளிந்த — குளிர்ந்த — அருளுக்கு அறிகுறியாகும்.

சில அழகான புராணக்கதைகள் இறைவனுடைய அருளுக்கும் பெருமைக்கும் சான்றுகளாக அமைந்துள்ளன. இவற்றுள் கடல் கடைந்த கதை ஒன்று.

..........................வரைநட்டு நீள்அரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயரன்றே, தொல்நரகைப்
பற்றிக் கடத்தும்
படை;[44]

[வரை-மந்தரமலை; நீள் அரவு-வாசுகி; தொல்-பழமையான; பற்றி-அள்ளி எடுத்துக்கொண்டுபோய்; நரகு-சம்சாரம்; படை-சாதனம்.]

என்பது பொய்கையாழ்வாரின் கொள்கை. எம் பெருமானுடைய பெயர் அவனுடைய குணங்களுக்கும் ஆற்றல்கட்கும் வாசகம். இந்தப் பெயரைச் சொல்லவே, பக்தர்கட்குத் துன்பங்கள், தொல்லைகள், கவலைகள் எல்லாம் போய்விடுமாம், குழந்தைக்குத் 'தாய் பேர் சொல்லக் கிலேசம் போமாப்போலே.' ஏதோ ஒன்றால் சங்கடப்படும் குழந்தை 'அம்மா!' என்று கூப்பிட்டு ஓடி வந்து அதனைத் தீர்த்துக் கொள்வதை நாம் கண்டிருக்கின்றோம் அல்லவா?

வாய் அவனை அல்லது வாழ்த்தாது[45]

பேரே வரப் பிதற்றல்
அல்லால், என்பெருமானை
ஆரே அறிவார்?[46]

---

44. முதல். திருவந். 81.
45. ஷை-11.
46. ஷை-56.

'நமோ நாரணா' என்னும்
சொல்மாலை கற்றேன். [47]

என்பனவற்றைக் காண்க.

கடல் கடைந்த கதையைப்போல் உலகளந்த கதையும் இறைவனுடைய பெருமையை வெளிப் படுத்துகின்றது.

அடியும் படிகடப்ப தோள்திசைமேல் செல்ல
முடியும் விசும்பளந்த தென்பர். [48]

[படி-பூமி; முடி-கிரீடம்; விசும்பு-ஆகாயம்.]

என்ற ஆழ்வாரின் வாக்கு எவ்வளவு அழகாக வருகின்றது! இத்தகைய திருமுடியை நீள்முடி என்றும், திருவடியை நீள்கழல் என்றும் இவரே குறிப்பிடுகின்றார்.

கழல்ஒன்று எடுத்துஒருகை
சுற்றிஓர் கைமேல்
சுழலும் சுராசுரர்கள்
அஞ்ச — அழலும்
செருவாழி ஏந்தினான்
சேவடிக்கே செல்ல
மருவாழி நெஞ்சே
மகிழ். [49]

[கழல்-திருவடி; ஆழி-சக்கரம்].

இதிலும் உலகளந்த பெருமானுடைய திருவடியைப் பணிந்து மகிழ்ந்திருக்குமாறு திருவுள்ளத்தைத் தேற்றுவதைக் காணலாம்.

எவ்லா ஆழ்வார்களைப் போலவே இந்த ஆழ்வாரும் எம்பெருமான் திருவடிகளில்தான் அதிகமாக ஆழங்கால் படுகின்றார். இவ்விடத்தில்,

47. முதல். திருவந்-17.
48. ௸-57.
49. ௸-48.

**சேஷிபக்கல் சேஷபூதன் இழியும் துறை,**
**பிரஜைமு லையிலே வாய்வைக்குமாப்**
**போலே.**[50]

*[சேஷி-தலைவன்; சேஷபூதன்-அடிமை; பிரஜை-குழந்தை.]*

*என்ற முமுட்சுப்படியின் வாக்கியமும் சிந்திக்கத் தக்கது. பாலுண்ணும் பச்சைப் பசுங்குழவி எங்ஙனம் தாயினுடைய மற்ற உறுப்புகள் யாவையும் விட்டு, தான் உயிர் வாழ்தற் கிடனாய் உள்ள அவள் கொங்கையில் வாய் வைக்கிறதைப் போலவே, சேஷியாகிய ஈசுவரனைப் பற்றப் புகும் சேஷ பூதனும் எம்பெருமானின் பல உறுப்புகளையும் விட்டுத் தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவன் திருவடிகளையே பற்றுகின்றான். முந்திய செயல் குழந்தைக்கு இயல்பாக இருப்பதைப்போல பிந்திய செயல் சேதநன் சொரூபத் திற்கு இயல்பாய் அமைகின்றது.*

**மெய்ஞ்ஞானத்தால் உணர்வார்**
**காண்பரே மேல்ஒருநாள்**
**கைந்நாகம் காத்தான்**
**கழல்.**[51]

*உண்மையான பக்தி பொருந்திய ஞானத்தாலே அவனை உள்ளபடி உணர வல்லவர்கள்தாம் அவனுடைய திருக்கழல் களைக் கண்டு அநுபவிப்பர் என்று கூறுவதால், ஆழ்வாரின் திருக்கழல் நாட்டம் அறியப்பெறுகின்றது. இக்கருத்தையே இன்னொரு பாசுரத்தில்,*

**தாய்நாடு கன்றேபோல்**
**தண்துழா யான்அடிக்கே**
**போய்நாடிக் கொள்ளும்**
**புரிந்து.**[52]

*என்று தெளிவாக விளக்குகின்றார்.*

---

50. முமுட்சு-147.
51. முதல். திருவந். 47.
52. ஷை. 30.

**திருமாலே! நின் அடியை**
**வந்திப்பார் காண்பர் வழி.**

என்பதில் "நின் அடியை ஆச்ரயிப்பவர்கள் அர்ச்சிராதி கதியைக் கண்டு அநுபவிப்பர்" என்று கூறுவதைக் காணலாம்.

எம்பெருமானின் வீர சரித்திரத்தைக் காட்டிலும் அவனது சௌலப்பிய சரித்திரமே இந்த ஆழ்வாரின் உள்ளத்தை வசீகரிக்கின்றது. மறைகளும் தொடர்ந்து வர முடியாமல் ஒங்கும்படி மறைந்து போனவன் ஆநிரைகளுக்குப் பின்னே காணப்பட்டான் என்றால் அந்த மேன்மையையும் நீர்மையையும் அடியவர்களால் மறக்க முடியுமா?

**வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்த்**
**தேனாகிப் பாலாம் திருமாலே — ஆனாய்ச்சி**
**வெண்ணெய் விழுங்க நிறையுமே, முன்னொருநாள்**
**மண்ணை உமிழ்ந்த வயிறு.**[53]

[வான்-ஆகாயம்; மறிகடல்-அலை மறிந்து விழுகிற கடல்; மாருதம்-காற்று; ஆய்ச்சி-இடைச்சி; நிறையுமே-நிறையுமோ]

என்ற இப்பாசுரத்தில் ஆழ்வார் கிருட்டிணன் உறி வெண்ணெய் விழுங்கிய குழந்தைத் திருவிளையாடலில் தம் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றார். இந்த வயிறு பிரளய காலத்தில் உலகத்தை வைத்துக் காப்பாற்றிய பிறகு 'வெளிநாடு காண' உமிழ்ந்து விட்ட வயிறுதான். அந்தப் பெருமையை ஒளித்து வெண்ணெயோடு வெண்ணெய் போல் உருகும் உள்ளங்களையும் களவு கொண்ட சீலம் பொய்கையாழ்வாரின் சிறந்த உகப்பிற்குப் பொருளாவதில் என்ன வியப்பு? வெண்ணெய் முதலியவற்றைக் களவு செய்து உண்டதெல்லாம் பசி நீங்கி வயிறு நிறைவதற்காக

---

53. முதல்: திருவந். 92

அன்று; அடியார்களின் கைதீண்டப் பெற்ற பொருளை உட்கொண்டாலன்றித் தரிக்க முடியாமையினால் செய்த காரியம் இது. 'தேனாகிப் பாலாந்திருமாலே'—என்றது, "பரமபோக்கியனான உன்னை ஞானிகள் உட்கொள்ளக் கருதா நிற்க நீ வேறொரு பொருளை போக்கியமாக நினைத்து உட்கொள்வது என்னே?" என்பது குறிப்பு.

இப்படிப்பட்ட எம்பெருமானை இந்த ஆழ்வாரின் உணர்வு நோக்கிக் கொண்டே இருக்கின்றது, திசையறி கருவி வடக்கு நோக்குவது போல.

**பெயரும் கருங்கடலே நோக்கும்ஆ(று); ஒண்பூ**
**உயரும் கதிரவனையே நோக்கும்; உயிரும்**
**தருமனையே நோக்கும்; ஒண்தாமரையாள் கேள்வன்**
**ஒருவனையே நோக்கும் உணர்வு.**[54]

[பெயரும் - பொங்கிக் கிளருகின்ற; ஒண்பூ - தாமரைப் பூ; நோக்கும் - கண்டு மலரும்; தருமன் - எமன்; உணர்வு - ஞானம்; நோக்கும் - சென்றுபற்றும்]

என்பது ஆழ்வாரின் வாக்கு. இதில் 'ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு' என்ற அடியே முக்கியமானது. ஆறுகளானவை கடலையே நோக்கிச் செல்வதும், தாமரை மலர் கதிரவனையே நோக்கிமலர்வதும், உயிர்கள் எமதர்மனையே சென்று கிட்டுவதும் முறையாக நிகழ்வதைப் போலவே, ஞானம் என்பதும் திருமாலைப் பற்றியல்லது பிறவற்றைப்பற்றி நில்லாது. எம்பெருமானை யன்றி இதர பொருள்களைப்பற்றி உண்டாகும் அறிவு அறிவல்ல என்பது ஆழ்வாரின் கருத்து. ஆகவே, "மனத்தினால் தேடும்போது நின் திருவடிகளையே தேடுவேன்; வாயினால் நின் புகழ்களையே பாடுவேன்; உன்னுடைய அழகிய திருவடிகளையே சூடுவேன்"[55] என்று கூறுவார்.

---

54. முதல். திருவந். 67
55. ஷை - 88.

இங்ஙனம் மனம் மொழி மெய் ஆகிய மூன்றும் இறைவனிடமே மூழ்கியிருத்தலை அருளிச் செய்கின்றார். இந்த உணர்வினால்தான் 'என்னாகில் என்னே எனக்கு?'— திரிகரணங்களும் எம்பெருமானைப் பற்றின பின்பு நான் இவ்வுலகிலிருந்தால்தான் என்ன? பரமபதத்திற்குப் போனால்தான் என்ன? எல்லாம் ஒன்றேதான்! எப்படிப்பட்ட இன்ப துன்பங்களையும் சமமாக அநுபவித்துக் கொண்டு சிறிதும் கவலையற்ற நிலையில் இறுமாந்திருக்கும் நிலையைத் தெரிவிக்கின்றார்.

எம்பெருமானைப்பற்றி அறியும் அறிவே அறிவு என்று பொய்கையார் கூறியதைச் சிந்திக்கும்போது,

**தொக்கு இலங்கி யாறுஎல்லாம்**
**பரந்துஓடித் தொடுகடலே**
**புக்குஅன்றிப் புறம்நிற்க**
**மாட்டாத; மற்றுஅவைபோல்**
**மிக்குஇலங்கு முகில்-நிறத்தாய்!**
**வித்துவக்கோட் டம்மா!உன்**
**புக்குஇலங்கு சீர்அல்லால்**
**புக்குஇலன்காண்! புண்ணியனே!**[56]

[தொக்கு - திரண்டு; பரந்து - பரவி; தொடுகடல் - ஆழ்ந்த கடல்; புறம்-மற்றோரிடத்தே; புக்கு - என் நெஞ்சினுள்; சீர் - கல்யாண குணங்கள்]

என்ற குலசேகராழ்வாரின் பாசுரம் நினைவுக்கு வருகின்றது. இதில் ஆழங்கால் படுகின்றோம்.

இந்நிலைக்குக் காரணமாக இருக்கும் உறுதியான நம்பிக்கையையும் காண்போம்.

**உளன்கண்டாய் நன்னெஞ்சே!**
**உத்தமன்; என்றும்**
**உளன்கண்டாய்; உள்ளுவார்**
**உள்ளத்(து) — உளன் கண்டாய்;**

56. பெரு. திரு. 5:8

வெள்ளத்தில் உள்ளானும்
வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான்என்று
ஓர்.[57]

[உள்ளுவார் - நினைப்பவர்கள்; வெள்ளம் - கடல்;
மேயான் - வசிக்கின்றான்; ஓர் - அறிந்துகொள்]

என்பது பாசுரம். ''புருடோத்தம் ஒருவன் உளன்; அவன் என்றும் உள்ளவன்; அன்போடு நினைப்பவர் உள்ளத்தைப் பாற்கடலாகவும், திருமலையாகவும் கொள்ளுகின்றான்!'' என்று தமக்குத்தாமே சொல்லிக் கொள்வதுபோல், பிறரோடும் அந்த மகாவிசுவாசத்தையும் இதய சாந்தியையும் பகிர்ந்து கொள்ளுகின்றார்.

உள்ளம் தெளியத் தெளிய கடவுள் உண்மையும் தெளிவாகும் என்பது இந்த ஆழ்வார் காட்டும் வழி. உண்மை தெளிவுபெறப் புலன்களை வென்றாகவேண்டும்; அப்போது தான் ஞானம் மெய்ஞ்ஞானம் ஆகும்.

புந்தியால் சிந்தியா(து) ஓதி உருஎண்ணும்
அந்தியால் ஆம்பயன் அங்குஎன்?[58]

[புந்தி - புத்தி; அந்தி - சந்தியா வந்தனம்.]

— எம்பெருமானை உள்ளீடாகக் கொள்ளாது செய்கின்ற 'செபம் — தவம்' முதலியவை யாவும் பயனற்றவை யாகும் என்று கூறுவார். ஞனபக்தியால்தான் 'மனமாசு தீரும்'.[59]

இந்த பக்தி ஒழுக்கமாகவும் கைங்கரியமாகவும் கனிய வேண்டும். அப்படிக் கனியாத பக்தி மலட்டுப் பக்தி. கைங்கரிய இலக்கணத்தை;

57. முதல். திருவந். 99
58. ஷை - 33.
59. ஷை - 43.

சென்றால் குடையாம்; இருந்தால்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம்; நீள்கடலுள் — என்றும்
புணையாம்; மணிவிளக்காம்; பூம்பட்டாம்; புல்கும்
அணையாம்; திருமாற்கு அரவு.[60]

[மரவடி - பாதுகை; புணை - மெத்தை; அணி விளக்கு-மங்கள தீபம்; பூம்பட்டு-திருப்பரிவட்டம்; அணை - தலையணை]

என்று சேஷசயனத்தின் உட்பொருளாகக் காட்டுவர். இவர் கவிதையைத் தமிழ்ப் புலவர்கள் பொய்கையார் வாக்கு என்று பாராட்டுவர். வைணவப் பெருமக்களோ,

... ......எம் பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும்
கூட்டி, ஒன்றத்
திரித்(து), அன்(று), எரித்த திருவிளக்கு.[61]

[மறையின் குருத்து - வேதசாரம்]

என்று போற்றுவர். ஸ்ரீ பாஷ்யம் என்ற பேருரை கண்டு வைணவ சமயத்தை ஒழுங்குபடுத்தி நிறுவிய எம்பெருமானாரும் இத்'திருவிளக்கை'த் தமக்கு ஒரு வழிகாட்டியாகக் கொண்டார் என்று அமுதனார் தெரிவிப்பர். முதலாழ்வார்களிலும் முதலானவரான பொய்கையாழ்வாரை ஸ்ரீ வைணவத்தின் 'விடிவெள்ளி' என்று சொல்லினும் அது மிகையாகாது. இந்த விடிவெள்ளியை,

செய்யதுலா வோணத்திற் செகத்துதித்தான் வாழியே!
திருக்கச்சி மாநகரம் செழிக்க வந்தோன் வாழியே!
வையம்தகளி நூறும் வகுத்துரைத்தான் வாழியே!
வநசமலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே!

---

60. ஷை - 53
61. இராமாநுச. நூற்றந். - 8

வெய்யகதி ரோன்றன்னை விளக்கிட்டான் வாழியே!
வேங்கடவன் திருமலையை விரும்புமவன் வாழியே!
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே!
பொன்முடியும் திருமுகமும் பூதலத்தில் வாழியே![62]

என்று வாழ்த்தி மகிழ்கின்றது. நாமும் 'திருக்கச்சி மாநகரம் செழிக்க வந்தோனை' வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றோம்.

பூதத்தாழ்வாரின் பரஞானம் : இந்த ஆழ்வாரும் கருவறை வாழ்க்கையின்போதே எம்பெருமானால் ஒரு காரணமுமின்றி கடாட்சிக்கப் பெற்றவர். ஆழ்வார் கூறுவார்:

இன்றா அறிகின்றேன்
அல்லேன் இருநிலத்தைச்
சென்றங்(கு) அளந்த
திருவடியை—அன்று
கருக்கோட்டி யுள்கிடந்து
கைதொழுதேன் கண்டேன்
திருக்கோட்டி எந்தை
திறம்.[63]

[கருக்கோட்டியுள்-கருப்பத் தானத்துள்; இருநிலம்-விசாலமான நிலம்; திறம்-தன்மை.]

என்று. ''எல்லாரும் பகவானை மறந்திருக்கும்படியான கருப்ப வாசத்திலும்கூட அடியேன் அவனை மறவாது வாழ்த்திக் கொண்டிருப்பவன்; ஆகவே அவனை நெடு நாளாக அறிந்தவன்; இன்று புதிதாக அறிந்தவன் அல்லேன்'' என்கின்றார். 'இருநிலத்தைச் சென்று ஆங் களந்த திருவடியை' என்பது சிறப்பான பொருளை

---

62. அப்புள்ளை - வாழித் திருநாமம் - 1
63. இரண். திருவந். 87. திருக்கோட்டியூர் என்ற திவ்வியதேசம் திருப்பத்தூர்—சிவகங்கை பேருந்து வழியில் உள்ளது.

யுடையது. "அவன் அளக்கிற இடத்திலே பூமி சென்றதோ? பூமி கிடந்தவிடமெல்லாம் தானே சென்று அளந்தானித் தனையன்றோ" என்பது பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான சூக்தி. —அதாவது "உலகமுள்ள விடமெல்லாம் தானே சென்று அடிப்படுத்திக் கொண்டது போல, அவன் தானே மேல் விழுந்து விஷயீகரிக்கப் பெற்றேன் அடியேன்"— என்பது இதன் பொருளாகும். இவ்விடத்தில், "குருக்கத்தி மலரில் திருவவதரித்த வருக்கு கருப்பவாசம் எப்படி வந்தது?" என்ற வினா எழுகின்றது. "தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும் வேண்டா நாற்றம் மிக்கிருக்கின்ற" (திரு. கலம்பகம்-17) கருவறையில் நின்றும் ஆழ்வார் பிறந்தார் என்று கொள்ள வேண்டிய அவசியம் யாதும் இல்லை; அவர் எவ்விடத்தில் அவதரித்தாரோ அவ்விடமே கருப்ப இடமாகும். "நான் இவ்விருள்தருமா ஞாலத்தில் வந்து தோன்றுவதற்கு முன்பே எம்பெருமானின் கடைக்கண் பார்வை பெற்றவன்" என்பதுவே சொல்ல வேண்டுமென்ற விருப்பம். "அன்று நான் பிறந்திலேன்; பிறந்தபின் மறந்திலேன்" (திருச்சந்த-64) என்றாற்போலக் கொள்ளுமாம்.

பொய்கையாழ்வாரின் பாசுரங்கள் பூதத்தாழ்வாரின் பாசுரங்களுக்கு முன் மாதிரியாக அமைந்தன என்று ஊகம் செய்யலாம். மாமல்லபுரச் சிற்பங்களுக்குக் காஞ்சி கைலாசநாதர் கோயில் முன்மாதிரியென்று கலைச் சுவைஞர்கள் ஊகிக்கின்றார்களல்லவா? அதுபோல என்க.

பொய்கையாழ்வாரைப் போலவே பூதத்தாழ்வாரும் 'அகலகில்லேன் இறையும்' என்று பெரியபிராட்டியார் நித்திய வாசம் செய்யும் நாராயண மூர்த்தியைக் கடவுளாக வழிபடுகின்றார்.

**திருமங்கை நின்றருளும் தெய்வம்நா வாழ்த்தும்**
**கருமம் கடைப்பிடிமின் கண்டீர்—உரிமையால்**

**ஏத்தினோம் பாதம், இருந்தடக்கை எந்தைபேர்**
**நாத்திசையும் கேட்டீரே நாம்.**[64]

[திருமங்கை-பெரியபிராட்டியார்; நின்றருளும்-நித்திய வாசம் செய்யும்; இருதடக்கை-நீண்ட கைகள்; பாதம்-திருவடிகள்]

"பிராட்டி சம்பந்தத்தால் மேன்மை பெற்றவன் சீமந் நாராயணன். அவனை நாவினால் வாழ்த்துவதை உறுதி யாகக் கடைப்பிடியுங்கள்" என்று முன்னிரண்டு அடிகளில் கூறியவர், தானும் அவனுடைய திருநாமங்களையும் திருவடிகளையும் போற்றுவதாகத் தெரிவிக்கின்றார் பின் இரண்டு அடிகளில். இதையே உறுதிப்படுத்துவதுபோல்,

**நகர்இழைத்து நித்திலத்து**
**நாள்மலர்கொண்டு, ஆங்கே**
**திகழும் மணிவயிரம்**
**சேர்த்து—நிகர் இல்லாப்**
**பைங்கமலம் ஏந்திப்**
**பணிந்தேன் பனிமலராள்**
**அங்கம்வலம் கொண்டான்**
**அடி.**[65]

[நகர் இழைத்து-என் நெஞ்சை அவனுக்கு உறைவிட மாக்கி; நித்திலம்-முத்து; மணிவயிரம்-நல்ல மாணிக்கம்; நிகர் இல்லா-ஒப்பில்லாத; கமலம்-தாமரை; பனிமலராள்-பெரியபிராட்டி.]

என்று பேசுகின்றார். இதில் "திருமகள் கொழுநனான எம்பெருமானை என்னுடைய நெஞ்சிலே எழுந்தருளப் பண்ணி உயர்ந்த பக்திப் பெருங்காதலைக் காட்டினேன்" என்று சொல்ல நினைத்த கருத்தை ஒரு சமத்காரமாகச் சொல்லுகின்றார். இதனை விளக்குவேன்.

---

64. இரண். திருவந். 57
65. ஷை 4.

'நகரிழைத்து' — அரசர்கள் வசிக்கும் இடம் நகரம் எனப்படும். தேவாதி தேவனான எம்பெருமான் வசிக்கும் இடம் பக்தர்களின் இருதயம். இவ்வாழ்வார் பக்தசிரோமணி. ஆதலால் இறைவன் இவர் திருவுள்ளத்தில் உவந்து வசிப்பவன் என்பது திண்ணம். ஆகவே 'நகரிழைத்து' என்றது 'என்னுடைய நெஞ்சை அவனுக்கு உறைவிடமாக்கி' என்று பொருள்படுகின்றது.

அரசர்களை மகிழ்ச்சியுறும்படி செய்ய விரும்புபவர்கள் தாமரை முதலிய நல்ல மலர்களைக் கொண்டு பணிவார்கள். அதுபோலவே தாமும் எம்பெருமானை நல்லதொரு மலரிட்டுப் பணிந்தமையைச் சொல்லுகின்றார் தொடர்ந்து — 'நிகரில்லாப் பைங்கமலம் ஏந்திப் பணிந்தேன்' என்பதாக. சாத்திரங்களில் அகிம்சை, புலனடக்கம், எல்லோரிடமும் கருணை, பொறுமை, ஞானம், தவம், தியானம், சத்தியம் என்ற எட்டும் எம்பெருமானுக்கு உகப்பான மலர்களாகச் சொல்லப் பெற்றுள்ளன. இதையொட்டி இந்த ஆழ்வார் பகவத் பக்தியை நிகரில்லா தாமரை மலராகக் கருதுகின்றார். தாமரைப் பூ என்றால் அதற்குப் புறவிதழ், அகவிதழ் முதலானவை இருக்குமல்லவா? அவற்றின் இடங்களில் சிநேகம், சங்கம், காமம் என்கின்ற பருவச் சிறப்புகளை இட்டுப் பேச நினைக்கின்றார். அவற்றையும் நேரே சொல்லாமல் முத்து, மணி, வயிரம் என்று உருவகப்படுத்திப் பேசுகின்றார். 'நிகரில்லாப் பைங்கமலம்' என்றது பொற்கமலத்தைக் குறிக்கின்றபடியால் அதற்கிணங்க முத்தையும் மணியையும் வயிரத்தையும் சொல்லும்படி நேர்கின்றது. முதல் அடியில் மலர் என்றது மலரிதழைச் சொன்னபடியாகும்; இஃது ஆகுபெயர். புறவிதழின் இடத்தில் முத்தாகச் சொல்லப் பெற்ற சிநேகமும், அகவிதழ் இடத்திலே மாணிக்கமாகச் சொல்லப் பெற்ற சங்கமும், தாதின் இடத்தில் வயிரமாகச் சொல்லப் பெற்ற காமமும் கமலம் எனப்பட்ட பக்தியின் பருவநிலை வேற்றுமைகளாகும். இந்த நுட்பங்களை அறிந்து பாசுரத்தை

அநுபவிக்கும் பக்தியின் நுட்பத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

'காப்பதற்குக் கொடி கட்டி'யிருக்கும் இந்த நாராயண மூர்த்தி எங்கும் வியாபித்திருக்கின்றான் என்றும், இவன் இல்லாத இடம் இல்லை என்றும் துணிகின்றார். பொய்கையாருக்கும் இவருக்கும் இந்த மூர்த்தியின் அவதாரங்களில் சிறந்த பக்தியும் எல்லையற்ற நம்பிக்கையும் உண்டு. இறைவனுக்கு மக்கள்மீதுள்ள அன்பையும் கருணையையும் அவதார புருஷர்களே நன்கு வெளியிடுகின்றார்கள் என்பது இந்த இரு பெரியார்களின் கருத்து. எதிரம்பு கோத்து நின்ற அசுரர்களுக்கும் விரோதியாகிய சரீரத்தைப் போக்கி முடிவில் அருள் செய்தவர்கள் அல்லவா? 'இத்தகைய இறைவனுடைய பெருமையை யாவது சிறிது அறிந்து கொள்ளலாம்; அவனுடைய எளிமையை ஒருவரும் உள்ள முடியாது!' என்ற கொள்கையைக் குறிப்பாக பொய்கையாழ்வார் வெளியிடுகின்றார். பூதத்தாழ்வாரோ,

> நீரோத மேனி நெடுமாலே! நின்னடியை
> யாரோத வல்லார் அறிந்து.[66]

என்று தெளிவாகச் சொல்லுகின்றார். இந்த எளிமையே இறைவனை விக்கிரகங்களிலும் திருக்கோவில்களிலும் அடியார்களின் திருமாளிகைகளிலும் வந்து நிற்கச் செய்கின்றது என்பது இந்த ஆழ்வார்களின் திருவுள்ளம்.

புராணக் கதைகள் புதைபொருளோடு கூடியவை. இந்தக் கதைகளை நயமாக எடுத்தாளுவதில் பூதத்தாழ்வார் பொய்கை யாழ்வாரைப் பின்பற்றுகின்றார். எடுத்துக்காட்டு ஒன்று காணவேண்டுமானால், இருவரும் பூதனை வதத்தைக் குறிப்பிடுகின்றனர். பெற்றதாய் போல் வந்து பால் கொடுப்பது போல் நஞ்சை ஊட்டிக்

66. இரண். திருவந். 5

கிருட்டிணனைக் கொல்லவந்த அந்தப் பேய் வதம் செய்யப் பட்ட கதை, 'வேடம் பலிக்காது' என்ற உண்மையை மிக நன்றாக விளக்குகின்றது! இனி, பூதனையைப் பற்றி பூதத்தார் கூறுவதை விளக்கிக் காட்டுவேன்.

உகந்துன்னை வாங்கி
ஒளிநிறங்கொள் கொங்கை
அகங்குளிர உண்என்றாள்
ஆவி உகந்து
முலையுண்பாய் போலே
முனிந்துண்டாய் நீயும்
அலைபண்பால் ஆனமையால்
அன்று [67]

[உகந்து-விரும்பி; வாங்கி-தூக்கி எடுத்து; அன்று-(முலை) தந்த அக்காலத்தில்; பண்பு-(இங்கு) எளிமை: உகந்து-மகிழ்ந்து; ஆவி-உயிர்].

என்பது ஆழ்வார் பாசுரம். பூதனை யசோதரையான பாவனையுடன் வந்தவளாகையால் அவள் பரிவை ஏறிட்டுக் கொண்டதுபற்றி 'உகந்து உன்னை வாங்கி' என்கின்றார். 'ஒரு முலையை வாய்மடுத்து ஒரு முலையை நெருடிக் கொண்டு, இருமுலையும் முறை முறையா ஏங்கி ஏங்கி இருந்துணாயே' (பெரியாழ். திரு. 2.2:8) என்னும்படியாக பால் விம்மியிருந்ததனால் 'ஒளிநிறங் கொங்கை' என் கின்றார். 'நந்தன் பெறப்பெற்ற நம்பி! நான் உகந்து உண்ணும் அமுதே! எந்தை பெருமானே! உண்ணாய் என்னம்மம் சேமமுண்ணாயே' 'உருகி என் கொங்கையின் தீம்பால் ஓட்டந்து பாய்ந்திடுகின்ற, மருவிக் குடங்கா லிருந்து வாய் முலை யுண்ண நீவாராய்' என்று யசோதை ஆவலோடு சொல்லுமாப்போலே பூதனையும் சொல்லு கின்றாள். இக்குறிப்பு தோன்ற, 'அகங்குளிர உண் என்றாள்' என்கின்றார். பூதனை தாயான பாவனையில்

---

67. இரண், திருவந். 8

எவ்வளவு அன்பு அபிநயித்துக் காட்டினாளோ, அவ்வளவு அன்பைக் கண்ணனும் மகனான பாவனையில் அபிநயித்தமை தோற்ற 'உகந்து முலையுண்பாய் போல' என்கின்றார். ஈற்றடியிலுள்ள 'ஆனமையால்' என்பதை இரண்டாம் அடியில் 'உண் என்றாள்' என்பதை அடுத்துக் கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும்.

'அலைபண்பால்' — இதன் அருமையான பொருள் சிந்தித்து மகிழத்தக்கது. பண்பாவது, குணம்; அலையெறிகின்ற குணம் என்றது, அளவு கடந்த குணம். (மெய்யான அன்போடு வராவிட்டாலும், மித்திரன் என்கின்ற பாவனை கொண்டு வந்தாலும் அன்னவனையும் நான் எவ்விதத்திலும் விடமாட்டேன்) என்று உறுதியாகச் சொல்லியுள்ள எம்பெருமான் அன்பொழுகும் பாவனையோடு வந்த பேய்ச்சியையும் கொன்றது ஏன்? என்றால்: 'அவளைக் கொன்று உலகுக்கு ஒருயிரான தன்னைக் காப்பாற்றிக் கொள்வதானது உலக முழுமைக்கும் உயிரளித்ததாக ஆகின்றபடியால், இந்தப் பெருங்குணத்தை வெளியிடவேண்டியே அவளைக் கொன்றான் என்பதை உளங் கொள்ளவேண்டும்'. இக்கருத்தையே,

> 'மகனாகக் கொண்டுஎடுத்தாள்
> மாண்புஆய கொங்கை
> அகன்ஆர உண்பன்என்று
> உண்டு'[68]

என்று பிறிதொரு பாசுரத்திலும் காட்டுவார்.

புறவேடத்தைக் காட்டிலும் ஆன்ம குணங்களே ஆண்டவனுக்கு உகப்பானவை.

> ..........................' – அறந்தாங்கும்
> மாதவனே!' என்னும் மனம்படைத்து, மற்றவன்பேர்
> ஓதுவதே நாவினால் உள்ளு.[69]

68. இரண். திருவந். 29
69. ஷை-44

[உள்ளு-நினை]

என்பது பூதத்தாழ்வாரின் திருவாக்கு. தர்ம விரோதிகள் எப்படிப்பட்ட வேடத்திற்குள் மறைந்து கொண்ட போதிலும் பூதனைபட்ட பாடு படுவர் என்பது குறிப்பு. மாதவன் பேர் ஓதுவதை,

—நமக்கென்றும்
மாதவனே என்னும் மனம் படைத்து மற்றவன் பேர்
ஓதுவதே நாவினால் ஓத்து (38)

என்றும்,

ஓத்தின் பொருள்முடிவும்
இத்தனையே உத்தமன்பேர்
ஏத்தும் திறம்அறிமின்
ஏழைகாள்!—ஓத்துஅதனை
வல்லீரேல் நன்று; அதனை
மாட்டீரேல் மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின்
சுருக்கு (39)

[ஏழைகாள்-அறிவுக் கேடர்களே; ஓத்து-வேதம்; சுருக்கு-சாரம்]

பக்தியின் கனி கைங்கரியம் என்பதைப் பொய்கை யாழ்வார் கசேந்திர மோட்சம் என்ற புராணக்கதை கொண்டும் குறிப்பிடுகின்றார்.

—பிறைமருப்பின்
பைங்கண்மால் யானை
படுதுயரம் காத்தளித்த
செங்கண்மால் கண்டாய்
தெளி.[70]

என்பது பொய்கையாழ்வாரின் வாக்கு. இதே கதையைத் தான் பூதத்தாழ்வாரும்,

---

70. முதல். திருவந். 29

அரியது எளிதாகும் ஆற்றலால் மாற்றிப்
பெருக முயல்வாரைப் பெற்றால்—கரியதோர்
வெண்கோட்டு மால்யானை வென்று முடித்தன்றே
தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து[71]

*[ஆற்றல்-தன்சக்தி; மாற்றி-விலக்கி; பெருக-மிகவும் உற்சாகமாக; கோடு-கொம்பு; கோடு-பொய்கைக் கரை; மா-சிறந்த; தாழ்ந்து-வணங்கி]*

*என்று பேசுகின்றார். பகவானை வழிபட வேண்டுமென்று கைபிடித்த பூவோடு முதலையிடம் அகப்பட்டுக் கொண்டது யானை. அதன் துயரத்தைப் போக்கவே 'அரை குலையத் தலைகுலைய' வந்து தோன்றிய எம்பெருமான், விரோதியைப் போக்கி அந்தத் தாமரையைத் தன் திருவடியில் இட்டுக் கொள்கின்றான். இந்த யானையின் நிலையிலிருப்பது சீவான்மா. இடையூறுகளைப் போக்கி நாம் செய்யத் தொடங்கும் கைங்கரியத்தை நிறைவு செய்து அதைத் தன் அடிகளில் இட்டுக்கொள்ளச் சித்தமாயிருப்பது பரமான்மா. 'நம்பக்கல் இடர் வந்ததாகில் முதலைபட்டது படும்' என்பது அடியார்களின் நம்பிக்கை. சேதநன் தன்னுடைய முயற்சியை நீக்கிக் கொண்டு எம்பெருமானுடைய சக்தியே ஓங்கும்படி நின்றால் அரிய காரியமும் எளிதாக முடியும் என்பது இக்கதையின் தேர்ந்த கருத்தாகும் என்பதை நாம் அறியவேண்டும்.*

*எம்பெருமானுடைய முழுநிறைவு கொண்ட நேர் காட்சியே பரஞானம் என்று கூறினேன். இதனை இறையருளால் இளமையிலிருந்தே பெற்றார் ஆழ்வார். பல பாடல்களில் இக்குறிப்பைக் கண்டு மகிழலாம்.*

நினைப்பன் திருமாலை நீண்டதோள் காண
நினைப்பார் பிறப்புஒன்றும் நேரார்—மனைப்பால்
பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பம் எல்லாம்
துறந்தார் தொழுதார் அத்தோள்.[72]

71. இரண். திருவந். 22
72. ஷெ 42

[நீண்டதோள்-சிறந்ததோள்; பிறப்பு-யோனிப் பிறப்பு; மனைப்பால்-சம்சாரத்தில் பிறந்தவர்கள்; துறந்தார்-வெறுப்பார்]

சம்சார போகங்களைத் துறந்து அவனை அநுசந்திக்குமவர்களே பிறவிகளை அடியறுக்கவல்லார் என்கின்றார். இப்படி வேறோர் ஆசையுமின்றி எம்பெருமானுடைய திருமேனியை — திவ்வியவயவத்தை — உண்மையான அநுபவமாக நினைப்பவர்கள் 'பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை இனியா முறாமை' (திருவிருத். 1) என்று சடகோபர் வேண்டிய பிறப்பின்மையைப் பெற்று நித்திய முத்தராய் வாழ்வர் என்பது இந்த ஆழ்வாரின் திருவுள்ளம்.

இவர் கண்ட நேர்காட்சியைப் பிறிதொரு பாசுரத்திலும் கண்டு மகிழலாம்.

**பணிந்தேன் திருமேனி; பைங்கமலம் கையால்
அணிந்தேன்உன் சேவடிமேல், அன்பாய் — துணிந்தேன்
புரிந்தேத்தி உன்னை புகலிடம் பார்த் (து) ஆங்கே
இருந்து ஏத்தி வாழும் இது.**[73]

[பணிந்தேன் - சேவித்தேன்; பைங்கமலம் - அழகிய தாமரை; சேவடி-செவ்விய அடி; அணிந்தேன்-சமர்ப்பித்தேன்; புரிந்து-விரும்பி; புகலிடம்-பரமபதம்.]

என்பது பாசுரம். "உன்னுடைய திவ்விய மங்கள விக்கிரகத்தைச் சேவித்து அதிலே ஆழங்கால்பட்டு வேரற்ற மரம் போல் விழுந்தேன்; மிக்க அன்புடன் உன் திருவடிகளின் மேல் அழகிய தாமரை முதலிய நன்மலர்களைக் கை படைத்த பயனாகச் சமர்ப்பித்தேன்" என்கின்றார். இதில் ஆழ்வார் இறைவனின் நேர்காட்சி கண்டதையும் பக்தி செலுத்தியதையும் காண முடிகின்றது.

---

73. இரண். திருவந். 65

இன்னொரு பாசுரத்தையும் காண்போம்.

**பகல்கண்டேன்; நாரணனைக்**
**கண்டேன்; கனவில்**
**மிகக்கண்டேன் மீண்டு அவனை**
**மெய்யே—மிகக்கண்டேன்;**
**ஊன்திகழும் நேமி**
**ஒளிதிகழும் சேவடியான்**
**வான்திகழும் சோதி**
**வடிவு.[74]**

*[பகல்-நல் விடிவு; மீண்டு-இன்னமும்; மிக மெய்யே-மிகவும் நேரில்; ஊன்-மாமிசம்; நேமி-சக்கரம்; வான்-பரமபதம்.]*

*என்பது பாசுரம். எம்பெருமானுடைய நேர்காட்சி தமக்கு வாய்த்தபடி இதில் வாயாரப் பேசி மகிழ்கின்றார். இந்த இருள்தருமா உலகில் முப்பது நாழிகைக்கு ஒரு முறை இரவும் பகலும் மாறி மாறி வந்தாலும் எம்பெருமானுடைய சேவை கிடைக்கப்பெறாத காலத்தைக் காளராத்திரியாகவே கருதுவர் ஞானியர்கள். பகலவன் விளங்கும் காலம் பகற்பொழுது என்றும், அவன் மறைந்திருக்கும் காலம் இராப்பொழுது என்றும் நம்போலியர் நினைத்திருந்தாலும் சிறந்த ஞானியர் அங்ஙனம் நினையார்! பகவத் சேவை வாய்க்கும் காலம் எதுவோ அதுவே அவர்கட்குப் பகல்; மற்றது இரவு; இதுவே ஞானியரின் சித்தாந்தம். இதனை அடியொற்றி ஆழ்வார் 'பகல் கண்டேன்' என்கின்றார். எம்பெருமானைச் சேவிக்கப் பெற்றேன் என்பது இதன் கருத்து. இக்கருத்தைப் பிறர் தெரிந்து கொள்ளுதல் அரிதாகையினாலே இதனை 'நாரணனைக் கண்டேன்' என்று மேலும் விவரிக்கின்றார். ''பகற்கண்டேன்: காளராத்திரியாய்ச் செல்லாதே விடியக் கண்டேன். வடுகர் வார்த்தை போலே தெரிகிறதில்லை; எங்களுக்குத் தெரியும்படி சொல்லீரென்ன: 'நாரணனைக்*

---

74. இரண். திருவந். 81

கண்டேன்'—மறையாத சூரியனைக் கண்டேன்''—என்பது பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம். மற்ற அடிகளால் தான் அழகாகக் கண்டதைக் கூறுகின்றார். 'பரமபதத்தில் நித்திய சூரிகள் கண்டு கொண்டிருக்கும் திவ்விய மங்கள விக்கிரகத்தை உண்மையாகவே காணப் பெற்றேன்' என்கின்றார்.

இப்படிப்பட்ட பத்திநெறி பரமபதத்தைப் போலே இன்பமானதென்றும், நரகத்திற்குப் போகும் வழி நரகத்தைப் போலவே துன்பமயமானதென்றும் சொல்லு கின்றனர் வைணவப் பெருமக்கள். இறைவனை 'ஞானத் தால் நன்குணர்ந்து' இதயத்தில் வைத்ததும்,

**மனத்துள்ளான் வேங்கடத்தான்**
**மாகடலான் மற்றும்**
**நினைப்பரிய நீள் அரங்கத்து**
**உள்ளான்.**[75]

என்று பூதத்தாழ்வாரால் போற்றப்பெறும் பக்தவத்சலன் 'திருப்பதிகளிலெல்லாம் மேலான திருப்பதி அடியார்களின் இதயம்தான்' என்று உகந்தருளுகின்றான். 'உள்புகுந்து நீங்கான் — அடியேனது உள்ளத்து அகம்'[76] என்று நம்மாழ்வாரும் கூறினாரன்றோ? இந்த ஆழ்வாரும்,

**—கொண்டு**
**குடமாடிக் கோவலனாய் மேவி என்நெஞ்சம்**
**இடமாகக் கொண்ட இறை.**[77]

என்று கூறுவதைக் கண்டு மகிழலாம். இந்த இதயத்திற்கு அடுத்தபடியாக அவன் உகப்பவை திருப்பதி, திருப்பாற் கடல், வைகுந்தம், திருவரங்கம் முதலிய திருப்பதிகள். இந்த உண்மையை உணர்ந்து கொண்டதும்,

---

75. இரண், திருவந். 28
76. பெரி. திருவந். 68
77. இரண். திருவந். 98

**கோல்தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே**
**மால்தேடி ஓடும் மனம்.**[78]

*[கோல்-கொழுகொம்பு; கொழுந்து- (இங்கே) கொடி]* என்று கூறுவர்.

*இத்தகைய பக்தியே நாட்டு மக்களுக்குத் தவம் என்பது பூதத்தாழ்வாரின் கொள்கை.*

**ஏத்திப் பணிந்து அவன்பேர்**
**ஈரைஞ்ஞூறு எப்பொழுதும்**
**சாற்றி யுரைத்தல்**
**தவம்.**[79]

*என்று 'எம்பெருமானை வாயாரத் துதித்துத் தலையார வணங்கிப் பேராயிரமும் ஓதுவதே நமக்குத் தவம்' என்கின்றார். உடம்பை வருத்திச் செய்யும் செயலால் அவனைக் காண முடியாது. 'உடம்பு நோவப் பண்ணின தபசால் காண அரிய சிரமகரமான வடிவையுடையவன் பகவான்' என்பது வியாக்கியானம். எம்பெருமானுடைய நிர்ஹேதுக கிருபை யினால்தான் அவனை அடைய முடியும்.*

*இத்தகைய பக்தி நெறியே அவனை அடையும் எளிதான வழியென்றும் இந்த ஆழ்வார் கூறுவார். இக்கருத்தை பல பாசுரங்களில் எடுத்துக் காட்டி வற்புறுத்துவார்.*

**தாம் உளரே; தம்உள்ளம்**
**உள்ளுளதே; தாமரையின்**
**பூவுளதே; ஏத்தும்**
**பொழுதுண்டே; — வாமன்**
**திருமருவு தாள்மருவு**
**சென்னியரே! செவ்வே**
**அருநரகம் சேர்வது**
**அரிது!**[80]

---

78. இரண். திருவந். 27
79. ஷை. 77
80. ஷை. 21

[தாம் - சேதநர்கள்; ஏத்தும் பொழுது - புகழ்வதற் கேற்ற காலம்; திருமருவு தாள் - அழகிய திருவடிகள்; செவ்வே - நேராக]

என்பது பாசுரம். "எம்பெருமானை வணங்குவதற்கு புலன்களோடு கூடிய அவயவங்கள் உள்ளன; நெஞ்சும் உள்ளேயே உள்ளது; தடாகங்கள்தோறும் தாமரை மலர்களும் உள்ளன. பொழுதும் ஏராளமாக உள்ளது; தலைபடைத்த பயன் அவனை வணங்கலாமே. இப்படி எல்லாம் குறைவின்றி இருக்கவும் மக்கள் ஏன் சம்சாரத்தில் உழல்கின்றனர்?" என்கின்றார். இந்தப் பாசுரம்,

**நாவாயில் உண்டே; நமோநாரணா என்று**
**ஓவாது உரைக்கும் உரைஉண்டே — மூவாத**
**மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே; என்ஒருவர்**
**தீக்கதிக்கண் செல்லும் திறம்.**[81]

[ஓவாது -விட்டு விட்டுச் சொல்லாமல்; நமோ நாரண - எட்டு எழுத்து மந்திரம்; மூவாத - கிழத்தன்மை யற்ற; மாகதி - மோட்சம்; தீகதி - கேடுபயக்கும் வழி]

என்ற பொய்கை யாழ்வாரின் பாசுரத்தின் கருத்தைப் பெரும்பாலும் தழுவியுள்ளதைக் கண்டு மகிழலாம். தவிரவும் இப்பாசுரம்,

**இனியார் புகுவார் எழுநரக வாசல்?**
**முனியாது மூரித்தாள் கோமின்**[82]

[முனியாது - சினவாமல்; மூரித்தாள் - உறுதியான தாழ்ப்பாள்; கோமின் - பூட்டுங்கள்]

என்று எமபடர்கட்கு ஆணை பிறப்பிக்கும் பொய்கையாரின் எக்களிப்பை நினைவூட்டுவதாகவும் அமைகின்றது. நரகத் திற்கு நேரான வழியின்றி அடைத்துவிட்டது பக்தி என்பது

81. முதல் திருவந். 95
82. ஷை - 87

குறிப்பு. ஆகையால், "முற்பட வணங்கிப் பின்னைத் தேக யாத்திரை பண்ணப் பாருங்கோள்" என்பர் பெரியவாச்சான் பிள்ளை.

இந்த ஆழ்வாருக்குப் பக்தியும் பக்தர்களும் பகவானும் தாம் பகல் நினைவும் இராக்கனவுமாக அமைந்துள்ளன. 'பகல் கண்டேன்; நாரணனைக் கண்டேன்' (81), 'கண்டேன் திருமேனி யான் கனவில்; ஆங்கு அவன் கைக், கண்டேன் கனலும் சுடர் ஆழி' (67) என்பன போன்ற பாசுரங்கள் இதனைக் காட்டுகின்றன. அழகிய மலர்களால் எம்பெருமான் திருவடிகளை அலங்கரிக்க வேண்டும் என்று உபதேசிக்கும் இந்த ஆழ்வார் தம் நெஞ்சையே கோயிலாக இழைத்துப் பக்தியையே நன்மலராகக் கொண்டு வழிபடுகின்றார். பொய்கையாரின் பக்தியநுபவத்திற்கும் பூதத்தாரின் பக்தியநுபவத்திற்கும் அடிப்படையில் அதிக மான வேற்றுமை இல்லை. பொய்கையாரின் பக்தியநுபவம் 'பரபக்தி' — அதாவது எம்பெருமானை நேரில் காண வேண்டும் என்கின்ற ஆவல். இதனை,

> **அன்புஆழி யானை**
> **அணுகுஎன்னும்; நாஅவன்தன்**
> **பண்புஆதித் தோள்பரவி**
> **ஏத்துஎன்னும் — முன்பூழி**
> **காணானைக் காண் என்னும்**
> **கண்; செவி கேள்என்னும்**
> **பூணாரம் பூண்டான்**
> **புகழ்.**[83]

[அன்பு - பக்தி; ஆழி யான் - திருமால்; அணுகு - கிட்டி அநுபவி; பரவி - பேசி; ஏத்து - துதி]

என்ற பாசுரத்தில் காணலாம். பூதத்தாழ்வாரின் பக்தி யநுபவம் 'பரஞானம்;' அஃதாவது, எம்பெருமானை நேரில் காணல். இதனை,

---

83. முதல். திருவந். 72

**அருள்புரிந்த சிந்தை அடியார்மேல் வைத்து**
**பொருள்தெரிந்து காண்குற்ற அப்போது — இருள்திரிந்து**
**நோக்கினேன்; நோக்கி நினைந்தேன் அதுஒண்கமலம்**
**ஓக்கினேன் என்னையுமங் கோர்ந்து.**[84]

*[சிந்தை-திருவுள்ளம்; பொருள் தெரிந்து-பொருளற்ற எங்களைப் பொருளாகப் பற்றி; காண்குற்ற அப்போது-கடாட்சித்த காலத்தில்; இருள்திரிந்து -அஞ்ஞானம் மாறி; ஒண்கமலம்-அழகிய திருவடிகளை; ஓர்ந்து-மெய்ப்பித்து; என்னை-ஆன்மாவை; ஓக்கினேன்-சமர்ப்பித்தேன்.]*

என்று பேசுவர் பூதத்தாழ்வார். "எம்பெருமானைக் கண்டு அவன் திருவடித் தாமரைகளை அநுசந்திக்கப் பெற்றேன்" என்கின்றார். இப்படிப்பட்ட அன்பே இவருடைய இதயமாகிய மலரின் வாசனையாகும்; இதுவே இறைவனை மானசீகமாக நேரில் காண வகை செய்தது. தம்மையும் கடந்து பொங்கிய தெய்வக அன்பே அவருக்குத் தாரகமாக அமைந்து இவ்வுலகப் பற்றில்லாமல் திரிந்து கொண்டிருக்கச் செய்தது. உலகமும் இவரை பூதத்தார் என்றும் பூதயோகி என்றும் அழைத்தது வியப்பன்று. மாமல்லபுரத்தில் தோன்றிய இந்த மகானின் இயற்பெயர்கூட நமக்குத் தெரியாது. இத்தகைய பெரியாரைத் திருவரங்கத் தமுதனார்,

**இறைவனைக் காணும் இதயத்(து)**
**இருள்கெட ஞானம்என்னும்**
**நிறைவிளக் கேற்றிய பூதத்திருவடி**[85]

*[காண-நேரில் காண; இருள்-அஞ்ஞானம்; ஞானம்-பரஞானம்; நிறை விளக்கு-பூரண தீபம்; பூதம்-பூதத்தாழ்வார்]*

---

84. இரண். திருவந். 59
85. இராமாநுச. நூற். 9

என்று போற்றுவர். இங்கு 'பூதத்திருவடி' என்பது பூதத்தாழ்வாரைக் குறிப்பது. மேலும் இந்த ஞானச் செல்வரை,

**அன்பேதகளி நூறும் அருளினான் வாழியே!**
**ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே!**
**நன்புகழ்சேர் குருக்கத்தி நாண்மலரோன் வாழியே!**
**நல்லதிருக் கடன்மல்லை நாதனார் வாழியே!**
**இன்புருகு சிந்தைதிரி இட்டபிரான் வாழியே!**
**எழில்ஞானச் சுடர்விளக்கை ஏற்றினான் வாழியே!**
**பொன்புரையும் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே!**
**பூதத்தார் தாளிணையிப் பூதலத்தில் வாழியே!**[86]

என்று வாழ்த்தி மகிழ்கின்றது வைணவ உலகம்.

**பேயாழ்வாரின் பரமபக்தி:** பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய இரண்டு ஆழ்வார்களுடன் இருந்து எம்பெருமானுடைய திருக்குணங்களை அநுபவித்ததனால் பேயாழ்வாரிடம் அவனது இன்னருளால் 'பரமபக்தி' தலையெடுத்து வளர்கின்றது. எம்பெருமானுடைய அநுபவம் பெறாவிடில் நீரை விட்டுப் பிரிந்த மீன்போல் மூச்சு அடங்கும்படி இருத்தல் 'பரமபக்தி' யாகும் என்பதை முன்னரே விளக்கினேன்; இந்த நிலைக்கு எடுத்துக்காட்டு பேயாழ்வார் என்பதையும் சுட்டினேன். இதன் காரணமாக, கடலைக் கண்டவன் அதனுள் உண்டான முத்து மணி மாணிக்கம் முதலியவற்றைத் தனித்தனி கண்டு உகக்குமாப் போலே பெரியபிராட்டியார், சங்கு, கௌத்துபம் முதலியவற்றுக்கு இருப்பிடமாய் உறுப்பழகுகள் அலையெறிகின்ற பெரும்புறக் கடலாகிய எம்பெருமானை நேரில் கண்டு 'இன்னது கண்டேன், இன்னது கண்டேன்' என்று வகுத்துரைக்கின்றார். அந்த நேர்க்காட்சியினால் தமக்குண்டான ஞானச் சிறப்பினால் சொரூபம், உபாயம், புருஷார்த்தம் இவற்றிற்குரிய பொருட் சிறப்புகளையும் பன்னியுரைக்

86. அப்புள்ளை; வாழித்திருநாமம்—2.

கின்றார்; "புருஷகார பூதையான பெரியபிராட்டியாரைக் கண்டேன்; அவளுடைய சேர்க்கையாலே நிறம் பெற்ற திருமேனியைக் கண்டேன்; பச்சைமாமலையில் தோன்றி ஒளிவிட்டுக் கிளருகின்ற 'எழுஞாயிறு' போலே விளங்கா நிற்பதாய் இருவருடைய ஒளியும் கலந்து விளங்கா நின்றுள்ளதான அழகிய நிறத்தையும் கண்டேன்; இந்த சேர்த்தியழகுக்கு என்ன தீங்கு வருகின்றதோ என்று அஞ்சிப் போர்க்கோலம் கொண்டு கண்டார்மேல் சீறி விழாநின்றவனாய், சாமளமான அவன் வடிவிற்குப் பொருத்தமாகும்படி பொற்கென்ற நிறத்தையுடையவனான திருவாழியாழ்வானையும் கண்டேன்; கைத்தலத்திலிருந்து கொண்டே பெருமுழக்கமிட்டுப் பகைவர்களை உயிர் மாளப் பண்ணும் திருச்சங்காழ்வானையும் கண்டேன்" என்கின்றார் தம் பெருமகிழ்ச்சிக்குப் போக்குவீடாக.

பேயாழ்வாரின் இந்த அநுபவப் போக்கில்தான் அவருடைய பல பாசுரங்கள் அமைகின்றன. சாத்திரத்தின் அடிப்படையில் வாதித்தோ, சாத்திரத்தைச் சிதைக்கும் போக்கிலோ இறைவன் உண்டு என்றும் இல்லையென்றும் முடிவு கட்டுவோர் இவ்வுலகில் இல்லாமல் இல்லை. ஆனால் ஆன்மிக விடயங்களைத் தர்க்க வாதங்களாலும் பெற்ற கல்வியின் திறமையாலும் நிலைநாட்ட முயல்வதும், மறுக்க முயல்வதும் வீணான செயல் என்பதை யாமுனரின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றால் தெளியலாம்.

ஒரு சமயம் வடநாட்டிலிருந்து ஒரு தர்க்க சாஸ்திரி தென்னாட்டிற்கு வந்தான். அவன் தன் வாக்குத் திறமையால் எந்தக் கொள்கையையும் அழிப்பான்; ஆதரிப்பான். இவன் ஒரு சமயம் சோழ நாட்டிற்கு வந்தான். அரசவை சாஸ்திரியை வாதுக்கு அழைத்தான். இந்த சாஸ்திரியின் சீடன் ஒருவனே சாஸ்திரியின் ஆடையை அணிந்து கொண்டு துணிவுடன் அரசவையை அடைந்து வாதுக்குத் தயாரானான். அச்சிறுவனை நோக்கி சாஸ்திரி புலமைச் செருக்குடன், "சிறுவா, நீ எதை 'ஆம்' என்றாலும், நாப்

அதை 'அல்ல' என்று மறுப்போம், விளங்குகிறதா?'' என்று சவால் எழுப்பினான். சிறுவன் விளையாட்டாகச் சிரித்துக் கொண்டு, ''சாஸ்திரியாரே, உமது தாய் புத்திரவதி'' என்றான். ''அடடா! என்னைப் பெற்றெடுத்த அன்னையை எப்படி மலடி என்று சித்தாந்தம் செய்வது?'' என்று சாஸ்திரி மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கும்போது, ''ஓ வித்துவ சிரோமணியே! இந்த அரசன் தர்மவான்'' என்றான். ''ஐயோ! இதை மறுப்பது அரச துரோக மல்லவா?'' என்று பண்டிதன் விலவிலத்துப் போனான். அப்போது இடிமேல் இடி விழுந்தது போன்று விழுந்தது மூன்றாவது சொல். ''இந்த அரசனின் மனைவி பதிவிரதை''. என்று. வாக்குவாதங்களால் படைப்பு, அளிப்பு, அழிப்பு செய்து வந்த வித்துவானை வாயடைக்கச் செய்து ''தர்க்கம் உண்மையைக் காண ஒரு கருவிதான்; உண்மையை மறைக்கும் குதர்க்கமாக்கக் கூடாது'' என பாடம் படிப்பித்த சிறுவன்தான் பின்னாளில் '**ஆளவந்தார்**' என்று பேரும் புகழும் பெற்ற சிரீவைணவ ஆசாரியர் ஆனதாக வரலாறு.

இங்குக் குறிப்பிட்ட கதையைப் போலத்தான் இறைவன் உண்மையையும் இன்மையையும் நிலை நாட்டுவதும். ஆனால் பக்தர்கள் இத்தகையது போன்ற வீணான விவகாரங்களில் தலையிடுவதில்லை. பேயாழ்வார் கூறுவார்:

**இறையாய், நிலனாகி, எண்திசையும் தானாய்,**
**மறையாய், மறைப்பொருளாய்; வானாய்—பிறைவாய்ந்த**
**வெள்ளத் தருவி விளங்கொளிநீர் வேங்கடத்தான்**
**உள்ளத்தின் உள்ளே உளன்.**[87]

[இறை-தலைவன்; மறை-வேதம்; பிறை-இளஞ் சந்திரன்.]

என்று ''இப்படி இந்தச் சகத்திலுள்ள பொருள்களெல்லாம் தானேயாயிருக்கும் எம்பெருமான் திருமலையிலே வந்து

87. மூன். திருவந். 39.

சந்நிதி கொண்டவன், அதன் பின்பு என்னுடைய இதயத்தில் நிலையாக வீற்றிருக்கின்றான்'' என்கின்றார்.

இந்தப் பொருளையே பொருளாகவும், அமுதமாகவும், அருநரகம் தீர்க்கு மருந்தாகவும் விசுவாசம் கொள்கின்றது பேயாழ்வாரின் இதயம். நம்பிக்கை அதன் பின் நிலையாகும்; விசுவாசம் பக்தியின் நிலையாகும். தெளிந்ததைக் கொண்டு தெளிதற்கு அரியதை நம்பி ஞானத்தை வளர்த்து, அநுபவ வழியாக அறியத்தக்க பொருளுக்குத் தர்க்கமாவது பகுத்தறிவாவது வழிகாட்ட முடியுமா? எனவே, இறைவனைக் காண்டற்கு இருளாத சிந்தை[88] வேண்டும் என்கின்றார். இருளாத சிந்தை என்பது என்ன? இராஜச, தாமத குணங்கள் கலசாமல் சுத்த சத்துவ குணம் மட்டும் நிறைந்திருக்கும் சிந்தையே இது:

**உய்த்துணர்வு என்னும்**
**ஒளிகொள் விளக்கேற்றி**
**வைத்(து) அவனை நாடி**
**வலைப் படுத்தேன்**[89]

என்கின்றார். ''இருளிலே கிடக்கும் பொருளை விளக்கின் ஒளியைத் துணை கொண்டு கண்டுபிடிப்பதுபோல, இந்த இருள்தருமா ஞாலத்தில் ஒருவராலும் கண்டறிய முடியாத எம்பெருமானாகின்ற பரம்பொருளை ஞானமாகின்ற சிறந்த விளக்கின் — ஒளிகொள் விளக்கு — உதவியால் தேடிக் கண்டுபிடித்து நெஞ்சாகின்ற வலைக்குள் இருத்தி விட்டேன்'' என்கின்றார். இந்தப் பாசுரத்தின் பிற்பகுதியில் 'நின்றான் இருந்தான் கிடந்தான் என் நெஞ்சத்து' என்று அவனது மூன்று நிலைகளையும் குறிப்பிடுகின்றார். 'ஊரகமும் பாடகமும் வெஃகாவும் பட்டபாடு என் நெஞ்சு படுகிறது' என்கின்றார் போலும்!

---

88. மூன். திருவந். 19
89. ஷை-94

இத்தகைய எம்பெருமானைக் காண்பதற்கு ஞானம் வேண்டும். ஞானம் பிரகாசிப்பதற்கு உள்ளம் களங்கமற்றிருத்தல் வேண்டும். இதற்கு வழி என்ன? நான்மறைகளை நன்கு ஓதி உணர்ந்து, அவற்றின் பொருள்களையும் நன்குணர்ந்து, இந்திரியங்களைப் பட்டிமேய வொட்டாதபடி தடுத்து அவனைக் காணப் புகல்வேண்டும். ஆழ்வார் கூறுவார்:

அறிவென்னும் தாள்கொளுவி
ஐம்புலனும் தம்மில்
செறிவென்னும் திண்கதவம்
செம்மி—மறையென்றும்
நன்கோதி நன்குணர்வார்
காண்பரே நாடோறும்
பைங்கோத வண்ணன்
படி[90]

[தாள்-தாழ்ப்பாள்; கொளுவி - பூட்டி; தம்மில்-தமக்குள்; செறிவு-அடக்குதல்; திண்-வலிவான; செம்மி-இறுக அடைத்து]

என்று. நல்ல ஞானம் பெற்றவர்களுடைய புலன்கள் பட்டிமேய வொட்டா வாகையால் அறிவைத் தாழ்ப்பாளாக உருவகித்தார். இக்கருத்தையே சற்று விளக்கமாக,

ஓர்த்த மனத்தராய் ஐந்தடக்கி ஆராய்ந்து
பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்கலாம்.[91]

[ஓர்த்தமனம்-அநுசந்திக்கின்ற மனம்; பேர்த்தால்-சம்சாரத்தினின்றும் நெஞ்சைத் திருப்பிக் கொண்டால்; பேர்க்கலாம்-தொலைத்து விடலாம்]

என்று உறுதியும் கூறுவார். இதற்கு வழி காட்டும் போக்கில்,

---

90. மூன். திருவந். 12

91. ஷை-79

**அரணாம் நமக்கென்றும் ஆழிவலவன்**
**முரன்நாள் வலம்சுழித்த மொய்ம்பன்—சரண் ஆமேல்**
**ஏதுகதி? ஏதுநிலை? ஏதுபிறப்(பு) என்னாதே**
**ஓதுகதி மாயவனையே ஓர்த்து**[92]

*[அரண் ஆம்-இரட்சகனாக இருப்பவன்; ஆழிவலவன்-திருவாழியை யுடையவன்; முரன்-ஓர் அசுரன்; நாள்-ஆயுள்; மொய்ம்பன்-மிடுக்கை யுடையவன்; கதி-ஞானம்; நிலை-ஆசாரம்; பிறப்பு-பிறப்பு; கதி-உபாயம்; ஓர்த்து-நன்றாக அறிந்து கொண்டு; ஓது-அநுசந்தி].*

என்றும் தெளிவுறுத்துவார். "அவன் இரட்சிக்கும்போது நம்முடைய பயனற்ற ஞானத்தையும், இகழத் தக்க ஆசாரத்தையும், தாழ்வான பிறப்பையும் பார்த்து நம்மைத் தவிர்ப்பான் என்ற ஐயம் வேண்டா; அவனை யன்றி வேறு அரண் நமக்கு இல்லையென்று அவனையே சரண் அடையவேண்டும்; சுயமுயற்சியை விட்டொழிக்க வேண்டும்" என்கின்றார். இப்படிப் புலன்களை அடக்கு வதற்கு ஒரே குறுக்கு வழி பக்திதான்; இறைவனிடத்தில் மனம் சுழித்தோடினால் ஆசைகளும் எண்ணங்களும் தாமே ஓடிப்போகும். ஆகவே,

**செம்மையால் உள்ளுருகிச்**
**செவ்வனே நெஞ்சமே!**
**மெய்ம்மையே காண**
**விரும்பு**[93]

*[செம்மையால்-முறைப்படி; உள் உருகி - உருக்கத் துடன்; மெய்ம்மையே-உள்ளபடியே; காண-சேவிக்க; விரும்பு-ஆசைப்படு]*

என்று நெஞ்சை உற்சாகப்படுத்துகின்றார். உண்மையாக உள்ளம் உருகி உவப்புடன் உலகளந்தானை வழிபடும்

---

92. மூன் திருவந். 78
93. ஷை-22.

போது உள்ளம் தூய்மையாகின்றது. களங்கம் முற்றும் அகன்றால் பரமபதநாதன் பாம்பணையைவிட்டு வந்து பக்தன் உள்ளத்தில் பள்ளி கொண்டு விடுகின்றான்.

இங்ஙனம் இறைவனிடம் அடிசேரப் பெறுபவர்கள், ஒழுக்கத்தில் நிலைத்து வாழும் வகை அறிந்தவர்கள் தவம், உடலை வருத்தும் செயல்கள் முதலானவற்றை விரும்புவார்களா? இதனால்தான் ஆழ்வாரும்,

**பொருப்பிடையே நின்றும்**
**புனல்குளித்தும் ஐந்து**
**நெருப்பிடையே நிற்கவும்**
**நீர்வேண்டா**[94]

[பொருப்பு-மலை; புனல்-நீர் நிலை; ஐந்து நெருப்பு-பஞ்சாக்கினி]

என்று அறிவுறுத்துகின்றார். இதே பாசுரத்தில்,

**வெஃகாவே சேர்ந்தானை**
**மெய்ம்மலர்த்தூய் கைதொழுதால்**
**அஃகாவே தீவினைகள்**
**ஆய்ந்து.**

[வெஃகா - சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதி; அஃகாவே-அகன்றோடிவிடும்]

என்று தீவினைகள் ஓடும் போக்கையும் காட்டுகின்றார். இன்னொரு பாசுரத்தில் "என்னுடைய கண்கள் திருவாபரணங்களாலும் திருமாலைகளாலும் அழகு பெற்றுள்ள எம்பெருமானின் பொன்மேனியைக் காண்பதற்கே பாரித்திருக்கின்றன. வாயோ அவனுடைய திவ்விய சரித்திரங்களைப் பாடுவதிலேயே ஊற்ற முற்றிருக்கின்றன; கைகளோ அவனுடைய திருவடிகளையே தொழக் காதல் கொண்டுள்ளன"[95] என்கின்றார். இந்நிலையில் தவம் முதலான கரடுமுரடான காட்டுப்பாதைகளில் போய்

94. மூன்றிருவந். 76.
95. ஷெ-35.

விழவேண்டாம் என்பது குறிப்பு. பிறிதொரு பாசுரத்தில் இக்கருத்தையே,

திருமா மணிவண்ணன்
செங்கண்மால் எங்கள்
பெருமான் அடிசேரப்
பெற்று—வாழும் வகையறிந்தேன்[96]

[மாமணி-நீலமணி; அடி-திருவடி]

என்று தெளிவுபடுத்துகின்றார்.

நாம் இவ்வுலகில் படும் துன்பங்களையும் தொல்லைகளையும் போக்கக் கூடிய இறைவனுடைய அழகும் தேசும் இயல்பாகவே ஆசைப்படும் படியாக உள்ளன. கரையற்றதாகத் தோன்றும் நீலக்கடலும், எல்லையற்ற நீலவானமும், கருமாமுகிலும், நீல இரத்தினங்களும் நீல மலர்களும் சுட்டிக் காட்டக்கூடிய அழகு முழுமையன்றோ அவனது திருமேனியின் வடிவம்? மரகத மணியைக் கண்ணுறும்போதும், அந்தி வானத்தின் வர்ண ஜாலங்களைப் பார்க்கும்போதும் இலக்குமி நாராயணமூர்த்தியின் வசீகர அழகு நினைவுக்கு வருகின்றது ஆழ்வாருக்கு.

பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவி மலர்என்றும் காண்தோறும்—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரான் உருவே என்று.[97]

என்ற நம்மாழ்வார் பாசுரத்தையும் நம்மை நினைக்கச் செய்கின்றது. இத்துடன்,

எழில்கொண்டு மின்னுக்
கொடிஎடுத்து வேகத்
தொழில்கொண்டு தான்முழங்கித்
தோன்றும்—எழில்கொண்ட

96. மூன் திருவந். 59.
97. பெரி. திருவந். 73.

நீர்மேகம் அன்ன
நெடுமால் நிறம்போலக்
கார்வானம் காட்டும்
கலந்து[98]

[எழில்-அழகு; மின்னுக் கொடி-மின்னற் கொடி; அன்ன-போன்ற].

என்று பூதத்தாழ்வார் பாடுவதையும் கேளுங்கள். இன்னும்,

கலந்து மணிஇமைக்கும்
கண்ணா! நின்மேனி
மலர்ந்து மரகதமே
காட்டும்—நலந்திகழும்
கொந்தின்வாய் வண்டறையும்
தண்துழாய்க் கோமானை
அந்திவான் காட்டும்
அது[99]

[இமைக்கும்-பிரகாசிக்கும்; நலம்-அழகு; கொந்தின் வாய்-பூங்கொத்திலிருந்து; அறையும்-ஒலிக்கும்; தண்-குளிர்ந்த]

என்ற பாசுரத்தையும் கேட்டு மகிழுங்கள்.

இயற்கை யழகுகளும் செயற்கை அழகுகளும் ஒருங்கே நினைவூட்டக் கூடிய இறைவன் அழகைப் பெரியவாச்சான் பிள்ளை 'நோக்காதே அழிக்கினும் விடவொண்ணாத வடிவு' என்பர். அருளி நோக்காமல் அழிக்க நோக்கி னாலும்கூட 'ஐயோ! இந்த அழகனை விடமுடியாது!' என்று காதல் ஒரே பிடிவாதமாயிருக்கும்படி அமைந்திருக் கின்றது வடிவு. 'செங்கண்மால்' என்பதற்கு 'வாத்சல்யா மிர்தத்தை (உருக்கமான அன்பாகிய அமிர்தத்தை) வருஷிக்கும் கண்களை' உடையவன் என்று வேறொரு

98. மூன். திருவந். 86
99. ௸-87

சந்தர்ப்பத்தில் வியாக்கியான மிடுகின்றார். இந்த வியாக்கியான சக்கரவர்த்தி. அனாதிகாலம் நம்மைப் பெறுகைக்கு அவன் படுகின்ற பாட்டையும் நினைவூட்டுகின்றன இத் திருக் கண்கள்! அழகையும் வென்றுவிடுகின்றது அருள் என்பது குறிப்பு. 'ஆச்ரிதரை (அடியரை)த் தன்னை அழிய மாறியும் நோக்கும்' என்று கூறப்பெறும் இறைவன், தன்னுடைய அழகையும் அருளையும் தானே காட்டுகின்றானாம். அவன் காட்டக் கண்டு அடியார் அடிதொழுததும், அந்த வடிவம் 'பிரஜை (குழந்தை) பால் குடித்தால் தாயுடம்பு நிறம் பெறுமாப்போலப் புதிய அழகு பெறுகின்றதாம், இத்தகைய அழகனை 'என்னுடைய மனம் ஆசைப்பட்டுக் கண்டு கொண்டது அமிர்தம் கடைந்த காலத்தில் பெரிய பிராட்டியார் அவனை நாடிக் கண்டு கொண்டது போல' என்கின்றார் ஆழ்வார்.

இந்தத் திருமேனியை மனங்குளிர தியானித்து அருளுக்கும் அழகுக்கும் வாசகமான திருநாமத்தையும் வாய்குளிரச் சொல்லிக் கொண்டிருந்தால்,

> தேசும் திறலும் திருவும் உருவமும்
> மாசில் குடிபிறப்பும் மற்றவையும்[100]

[தேசு - தேஜஸ்; திறல் - திறமை; திரு - ஐசுவரியம்]

தாமே தேடிவந்து நம்மை அடையும் என்கின்றார்.

அன்பர்களே, இங்ஙனம் ஞானபக்தி வைராக்கியங்களின் வடிவமான பேயாழ்வாரை,

> மன்னிய பேர்இருள் மாண்டபின்
> கோவலுள் மாமலராள்
> தன்னொடும் ஆயனைக் கண்டமை
> காட்டும் தமிழ்த்தலைவன்.[101]

என்று திருவரங்கத்தமுதனார் சிறப்பித்துப் போற்றுவர்.

---

100. மூன். திருவந். - 10
101. இராமாநுச - நூற். 10

திருக்கண்டேன் எனநூறும் செப்பினான் வாழியே!
சிறந்தஐப் பசியிற்சதயம் செனித்தவள்ளல் வாழியே!
மருக்கமழும் மயிலைநகர் வாழவந்தோன் வாழியே!
மயற்கரிய நெய்தல்தனில் வந்துதித்தான் வாழியே!
நெருக்கியிடவே இடைகழியில் நின்றசெல்வன் வாழியே!
நேமிசங்கன் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே!
பெருக்கமுடன் திருமழிசைப் பிரான்தொழு வோன் வாழியே!
பேயாழ்வார் தாளிணைஇப் பெருநிலத்தில் வாழியே![102]

என்று வாழ்த்தி மகிழ்கின்றது வைணவ உலகம்.

முதலாழ்வார்கள் மூவரையும் ஒரு மாபெரும் பக்தி யுகத்தைத் தோற்றுவித்த மூல புருடர்களான பாகவத மும்மணிகள் என்று கொள்வது மிகப் பொருத்தமாகும்.

---

102. அப்புள்ளை - வாழித் திருநாமம் - 3

# 4. பக்திசாரர்*

நகரியைச் சேர்ந்த பெருமக்களே, மாணாக்க மணிகளே,

கரும்புத் தின்னக் கூலி கொடுப்பதுபோல் பல்கலைக் கழக மானிய ஆணையம், விரிவுச் சொற்பொழிவுத் திட்டம் ஒன்று ஏற்படுத்திப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த மண்டலத்தில் தம் அறிவைப் பொது மக்களிடமும் பரப்பவேண்டும் என்று பல்கலைக் கழகம் பணித்துள்ளது. அந்தத் திட்டத்தின்கீழ் திருவேங் கடவன் பல்கலைக் கழகம் நகரிக்கு என்னை அனுப்பி யுள்ளது. அத்திட்டத்தின்கீழ் உங்கள்முன் பேச வந்திருக் கின்றேன். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த பள்ளித் தலைமையாசிரியர்க்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நான் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவம் என்ற பொருள் பற்றி என் பிஎச். டி. பட்டத் திற்காக ஆய்ந்து வருகின்றேன். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்பது பன்னிரண்டு ஆழ்வார்கள் அருளிச் செய்த பிரபந்தங்களின் தொகுப்பு. இந்தப் பன்னிரு

* திருவேங்கடவன் பல்கலைக்கழக விரிவுச் சொற் பொழிவுத் திட்டத்தில் 31-3-67-ல் நகரி கழக உயர்நிலைப் பள்ளியில் நிகழ்த்திய சொற்பொழிவு.

ஆழ்வார்களில் **திருமழிசையாழ்வார்** என்பவர் ஒருவர். திருமழிசை[1] என்ற ஊரில் பிறந்து இளமைப் பிராயத்தைக் கழித்தவர். இவருக்குப் **பக்திசாரர்** என்ற ஒரு காரணப் பெயரும் உண்டு காரணத்தைப் பின்னர் விளக்குவேன். திருமழிசையின் பெருமையைப் பற்றித் **திருக்கச்சி நம்பிகள்**[2] என்ற ஆசாரியப் பெருமகன் ஒரு தனியனில் குறிப்பிட்டுள்ளதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

**வரலாற்றுப் பின்னணி:** ஒரு சமயம் அத்திரி, வசிட்டர், பிருகு, பார்க்கவர், புலத்தியர், அங்கிரசு முதலான பிரம இருடிகள் பலரும் சத்தியலோகம் சென்று நான்முகனைத் திருவடி தொழுது கூப்பிய கையராய் "நாங்கள் பூலோகத்தில் தவம் இயற்றக் கருதுகின்றோம். சிறந்த இடத்தை உறுதி செய்து சொல்ல வேண்டும்" என்று வேண்டினர். நான்முகனும் தேவசிற்பியான விசுவகர்மாவை வரவழைத்து "இம்முனிவர்கள் காணுமாறு துலாக்கோல் நாட்டி ஒரு தட்டில் பூமியையும் மற்றொரு தட்டில் திருமழிசை என்னும் ஊரையும் வைத்து நிறுக்கச் செய்தார். தேவதச்சன் அங்ஙனம் செய்த அளவில் பூமிவைக்கப்பட்ட தட்டு இலேசுபட்டு மேலோங்கி நின்றது; திருமழிசை வைக்கப்பட்ட தட்டு கனம் பெற்றுத் தாழ்ந்து நின்றது. இவ்வேறுபாட்டை நான்முகன் அவர்கட்குக் காட்டி திருமழிசைக்கு **'மஹீஸார க்ஷேத்திரம்'** என்ற காரணப் பெயரிட்டு அவண் சென்று தவம் இயற்ற அநுமதி

---

1. **திருமழிசை:** இந்த ஊர் சென்னை — திருவள்ளூர் (திருஎவ்வுளூர்) என்ற பேருந்து வழியில் பூவிருந்தவல்லியைத் தாண்டி இருக்கும் ஊர்.

2. **திருக்கச்சி நம்பிகள்:** உடையவர் ஆசிரியர்களில் ஒருவர். பிறந்த ஊர் பூவிருந்தவல்லி. பிறப்பால் பொன் வாணிகர். கச்சிநகர் பேரருளாளனுக்கு ஆலவட்ட கைங்கரியம் புரிந்து வந்தவர். ஆளவந்தாரின் திருவடி சம்பந்தி.

தந்து அவர்களை அனுப்பினான். இந்த வரலாற்றை நினைவு கூர்ந்த வண்ணம் திருக்கச்சி நம்பிகள்,

உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து, தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க-உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும், மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.[3]

[புகழ்க்கோல் - துலாக் கோல்].

என்று தனியன் அமைத்துக் காட்டினார்.

மாமுனிவர்களும் திருமழிசையை அடைந்து ஐம்பொறிகளை அடக்கி அருந்தவம் புரிகின்றனர். இவர்களுள் பார்க்கவர் என்பார் தீர்க்கஸத்ரம் என்ற பெருவேள்வி இயற்றி

3. திருச்சந்த விருத்தத் தனியன். காஞ்சி புராண ஆசிரியர் கச்சிநகரின் அழகை அறுதியிட நான்முகன் இத்தகைய யுக்தியைக் கையாண்டான் என்பர். நான்முகனே படைத்த உம்பர் உலக நகராகிய அமராவதியும் காஞ்சியும் அழகுமிக்க நகரங்கள். எதன் அழகு மிக்கது என்பதை அறிய இரண்டையும் தராசுத் தட்டில் வைத்துத் தூக்க, காஞ்சி நகரையுடைய தட்டு கீழே வந்தது; அமராவதி தட்டு மேலே போயிற்று. இதனைச் சிவஞான முனிவர்,

கச்சிமா நகர்ஓர் தட்டும்
 கடவுளர் உலகோர் தட்டும்
வைச்சுமுன் அயனார் தூக்க
 மற்றது மீது செல்ல
நிச்சயம் முறுகித் தாழ்ந்து
 நிலமிசை விழும்இவ் வூரை
இச்சகத் தூர்க ளோடு
 எண்ணுதல் மடமைப் பாற்றே

(காஞ்சி புராணம் — திருநகரப்படலம் - செய். 1) காஞ்சியம் பதியும் அமராவதியும் இயல்பாகக் கீழும் மேலும் இருப்பதற்கு கவிஞர் சமத்காரமாகக் கூறும் கற்பனை அநுபவித்து மகிழத்தக்கது.

அதனால் வாசுதேவனை ஆராதிக்கின்றார். இதனைக் கண்டு பொறாமை மிக்க தேவர்கள் அத் தவ ஒழுக்கத்தை அழிக்குமாறு அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய அப்சர மாதர்களை ஏவுகின்றனர். அவர்களும் அங்ஙனமே திருமழிசைக்குப் போந்து பார்க்கவரின் தவத்தைக் குலைக்க முயலுகின்றனர். இவர்களால் எம்பெருமானது திருவடித் தாமரைகளில் அழுந்தி நின்ற முனிவரின் இதயத்தை மீட்க முடியாமல் அச்சமும் நாணமும் கொண்டு மீண்டு செல்கின்றனர். ஆயினும், அவர்களுடன் வந்த அதிநிபுணையான கனகாங்கி என்னும் கட்டழகி விஷ்ணுவைப்போல் வேண்டிய உயிர்களை மோகிப்பிக்க வல்லமையுடையவள். இவள் மன்மதன், வசந்தகாலம், தென்றல், திங்கள் இவற்றின் துணை கொண்டு அம் முனிவர் முன்னிலையில் ஆடல் பாடல் முதலிய விநோதங்களைச் செய்கின்றாள். அப்பொழுது விதிவசத்தால் முனிவரின் தியானம் கலைகின்றது. மங்கையின் இசை விருந்தினை அநுபவித்து அவளது அழகினைக் கண்டு காமுறுகின்றார். யோகம் காற்றில் பறக்கின்றது. போகம் அவரை ஆட்கொள்ளுகின்றது. முனிவர் அம் மங்கையின் மோக வலையில் சிக்கிச் சில காலம் தம்மை மறந்த நிலையில் மன்மத பரவசராய்க் கிடக்கின்றார்.

**திருமழிசை பிரான் பிறப்பு:** அக்காலத்தில் சூல் கொண்ட அம்மங்கையின் திருவயிற்றினின்றும் தைத்திங்கள் மக நட்சத்திரத்தில் சுதர்சனம் என்னும் திருவாழியின் அம்சமாகக் கருப்பம் வெளியாகின்றது. அஃது உறுப்புகளொன்றுமின்றிப் பிண்டமாக இருந்ததனால் அத்தேவ மங்கை அதனை வெறுத்து அருகிலுள்ள பிரப்பம் புதரில் எறிந்து விட்டுத் தன்னுலகம் சென்று விடுகின்றாள். பின்னர் தம் வசமிழந்த பார்க்கவர் தவம் இழந்ததற்கு வருந்தி வேறோரிடம் சென்று மீண்டும் தவம் இயற்றுகின்றார். புதரில் வீசி யெறியப்பெற்ற தசைப் பிண்டம் சிறந்ததோர் ஆண் குழந்தை வடிவமாகப் பரிணமித்து உயிர் பெறு

கின்றது. பசி, நீர் விடாய்களால் பரிதவித்துத் தனியே அழுது கொண்டிருப்பதை அவ்விடத்துக்கருகே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சகந்நாதப் பெருமாள் பிராட்டியுடனே எழுந்தருளி அக்குழந்தையைக் குளிரக் கடாட்சித்து அதன் பசிதாகங்களைத் தவிர்த்துத் தமது திருமேனியைக் காட்டித் தேற்றி மறைந்தருள்கின்றார். பின்னர் அத்தெய்விகக்குழந்தை அப் பெருமானது பிரிவை ஆற்றாமல் மீளவும், தேம்பித் தேம்பி அழுது கொண்டு இருந்தது.

**வளர்ப்பு:** அப்போது பிரம்பறுக்க வந்த திருவாளன் என்னும் குறவன் தான் மேற்கொண்டிருக்கும் தொழிலுக்காகப் பிரம்பறுக்க வருகின்றான். குழந்தை அழுகுரலைக் கேட்டு அருகில் வந்து குழந்தையை வாரி எடுக்கின்றான். அவனோ மக்கட் பேறு வாய்க்கப் பெறாதவன். குழந்தையைத் தன் இல்லத்திற்கு எடுத்து வந்து தன் மனைவியான பங்கயச் செல்வியிடம் தருகின்றான். அவளும் 'பிள்ளையில்லாத நமக்கு இது தெய்வத்தின் அருளால் கிடைத்தது' என்று சொல்லிய வண்ணம் அதை வாங்கி அதனை அன்புடனும், ஆதரத்துடனும் வளர்த்து வருகின்றாள். இக்குழந்தையின் பால் உண்டான பேரன்பி னால் அப் பெண்மணிக்குப் பால் சுரக்கின்றது. அவளும் தன் முலைப்பாலைக் குழந்தைக்குக் கொடுக்க முயலும் போது அத் தெய்வக் குழவி அதை அங்கீகரிக்க மறுக்கின்றது. பின்னர் பகவத் குணாநுபவத்தையே தாரகமாகக் கொண்டு பசி தாகமின்றி அழுதல், அரற்றுதல், கூவுதல், பேசுதல் முதலியவை இன்றி இளஞாயிறு போல் திருமேனி ஒளி விளங்க வளர்ந்து வருகின்றது. ஆனால் இக்குழந்தை ஆழ்வாரான பிறகு பாடிய பாசுரத்தில்,

> **குலங்க ளாய ஈரி ரண்டில்**
> **ஒன் றி லும்பி றந்திலேன்[4]**

[ஈரிரண்டு - நான்கு]

4. திருசந். விருத். - 90.

என்ற இவர் தம் வாக்கினாலேயே இவர் நான்கு வருணங்களுக்கு உட்படாத ஒரு வகுப்பில் பிறந்ததாக ஒப்புக் கொள்ளுகின்றார். 'பிறந்திலேன்' என்பதற்கு 'வளர்ந்தேனில்லை' என்று பொருள் கொள்கின்றனர் உரையாசிரியர்கள்; குருபரம்பரை ஆசிரியர்களும் இப்படியே கூறுகின்றனர். வளர்ந்த குலத்தைக் கருதியே அக்காலத்தில் இவரைத் 'தாழ்ந்த குலத்தினராக' சிலர் மதித்தனர் என்பது வைணவ ஆசிரியர்களின் கருத்து.

**கணிகண்ணனின் தோற்றம்:** பெரியோர்களே, பிற்காலத்தில் இவருக்குச் சீடரான **கணிகண்ணன்** என்பானது பிறப்பைப் பற்றியும் இப்போது குறிப்பிட விரும்புகின்றேன். 'உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்'[5] என்கின்றபடி இக் குழந்தை எம்பெருமானை அநுபவித்தலாகிய அமுத பானத்திலாலேயே உள்ளமும் உடலும் நிறைந்து உணவு நீர் வேட்கை இவை யொழிந்து காண்பவர் கேட்பவர் யாவரும் வியக்குமாறு வளர்ந்து வரும் செய்தியை அவ்வூரில் வாழ்ந்து வரும் வேளாளக் கிழவன் ஒருவன் கேள்வியுறுகின்றான். இவ்வரிய குழந்தையைச் சேவிக்க விரும்பி ஆவின் பாலைக் காய்ச்சி எடுத்துக்கொண்டு தன் மனைவியுடன் ஒருநாள் காலையில் வருகின்றான். இவரது கிளரொளி இளமையைக் கண்டு மிக்க வியப்புற்றுத் தான் கொணர்ந்த பாலை இவர் முன்பு சமர்ப்பித்து உட்கொள்ளுமாறு வேண்டுகின்றான். அவனுடைய பக்தி மிகுதிக்குத் திருவுள்ளம் உகந்து பாலை அமுது செய்தார் திருமழிசையார். பிள்ளையில்லாக் குறையினால் அவர்கள் இவரையே தமக்கு எல்லாப் பேறுமாகப் பாவித்து நாடோறும் வழக்கமாகப் பால் கொடுத்து வருகின்றனர். இங்ஙனம் அவர்கள் பக்தியமுதத்திற்கு உவந்து பானம் செய்து வந்தவர், ஒரு நாள் அவர்களது குறையைத் தீர்க்கக்

5. திருவாய். 6.7:1

கருதி தாம் பருகி மிச்சமான பாலை 'நீங்கள் பருகுங்கள்' என்று அவர்களிடம் திருப்பிக் கொடுக்கின்றார். தம்பதிகள் அதனைப் பருகிய அளவில் தம் கிழத்தனம் நீங்கி இளமைப் பருவமடைகின்றனர். பின்பு அவ்வேளாண் மகள் கருப்ப முற்று ஓர் ஆண் குழந்தையைப் பெறுகின்றாள். பெற்றோர்கள் அக்குழந்தைக்குக் '**கணிகண்ணன்**' என்று திருநாமமிட்டு வளர்த்து வருகின்றனர். ஒரு நாள் அக்குழந்தையை மழிசையாரின் திருமுன் கொண்டு வந்து விட, குழந்தையும் இவரது கடைக்கண் நோக்கினால் நன்கு வளர்ந்து நல்லறிவு பெற்று நூல்களைக் கற்று உணர்ந்து பகவத் பக்தியும் பாகவத பிரபத்தியும் உடையவனாக வளர்ந்து வரலானான்.

**மழிசையார் பல சமயங்களில் புகுதல் :** இளமையில் பார்க்கவ குமாரர் பிரம்பறுப்பானிடத்திலே இருந்து கொண்டு கூடை முடைதல் முதலான குலத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார். தக்க வயது வந்ததும் திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார். எத்தனையோ நாடுகளிலும் காடுகளிலும் சஞ்சாரம் செய்து ஒரு சித்தராகத் திரும்புகின்றார். 'எல்லாப் பொருளுக்கும் தலைமையான பரத்துவம் எது' என்பது பற்றி ஆராயத் தொடங்குகின்றார். உலகாயதம், பௌத்தம், சமணம் முதலிய அவைதிக சமயங்களுள்ளும் மாயாவாதம், சைவம் முதலான சமயங்களுள்ளும் ஒவ்வொன்றிலும் தனித் தனியே புகுந்து ஆராய்கின்றார். ஒவ்வொரு சமயத்திற்குரிய சாத்திர நூல்களைக் கற்றுத் தெளிகின்றார்; பிறகு அவற்றிலுள்ள குறைபாடுகளைக் கண்டு புதிய சமயத்திற்கு மாறிக் கொண்டே வருகின்றார்.

**பேயாழ்வாரின் தொடர்பு :** இவ்வாறு பல காலம் பல சமயங்களையும் ஆய்ந்தவர் சைவ சமயத்தில் இறங்குகின்றார். அதுவே சரியான சமயம் என்று துணிந்து **சிவவாக்கியர்** என்னும் பெயர் பூண்டு சிவபரமாகச் சில நூல்களைச் செய்து கொண்டு பிற சமயத்தினருடன் கலந்து

பழகுவதற்கும் விருப்பமற்று தனிமையில் ஓரிடத்தில் அமர்ந்து பரமசிவனைத் தியானித்து வருகின்றார். இந் நிலையில்தான் பேயாழ்வாரோடு தொடர்பு ஏற்படுகின் றது. திருமழிசையார் பற்றிய செய்தியறிந்த பேயாழ்வார் அவரிருக்கும் இடத்திற்கு எழுந்தருளுகின்றார். இவரை வைணவ சம்பிரதாயத்தின் முக்கியமானவராக்க வேண்டு மென்று திருவுள்ளம் பற்றுகின்றார். இவரது ஆசிரமத்துக் கருகில் தானும் ஓர் ஆசிரமத்தை அமைத்துக் கொள்ளு கின்றார்; நந்தவனத்தையும் ஏற்படுத்திக் கொள்ளு கின்றார். ஒரு நாள் பூஞ்செடிகளையும் திருத்துழாய்ச் செடிகளையும் பிடுங்கித் தலைகீழாக நட்டுப் பல பொத்தல் களையுடைய ஓட்டைக் குடத்தையும் அறுந்த தாம்பையும் கொண்டு செடிகட்கு நீர் வார்க்கத் தொடங்குகின்றார். கண்டவர் நகையாடுவதற்குரிய இச்செயலைப் பார்த்துச் சிவவாக்கியர் கை கொட்டிச் சிரித்து, பேயாழ்வார் இருக்கும் இடம் சென்று, ''செடிகளைத் தலைகீழாக நடுகின்றீர்; இல்லிக் குடத்தைக் கொண்டும் செடிகட்கு நீர் வார்க்கின்றீர்; நீர் பித்தரோ? பேயரோ?'' என்று கேட்கின்றார். தம்முடன் வந்தவர்கட்கும் இச்செயலைச் சுட்டிக் காட்டுகின்றார். பேயாழ்வரோ புன்முறுவல் பூத்த முகத்துடன் அமைதியாகத் திரும்பிப் பார்த்து, ''சமயங்கள் தோறும் நுழைந்து நுழைந்து ஒன்றிலும் நிலை கொள்ளாத நெஞ்சினராய், உள்ளுக்குள்ளே நம்பிக்கையின்றி, சேர்ந் தவர்கட்கெல்லாம் இரட்சகர் என்று விருதுகட்டிக் குதர்க்கம் செய்வதே பொழுதுபோக்காகக் கொண்டு அருமையான தமிழ்ச் சொற்களை வாரி வீசி எத்தனையோ நெஞ்சங்களைப் புண்படுத்தி உலகத்தைச் சுற்றி வருகின்றீரே! இங்ஙனம் வாணாளை வீணாளாகக் கழித் துழன்று அட்டகாசம் செய்து வருகின்றீரே! நீரே உன்மத்தர்! உம்முடைய உன்மத்தத்தைச் சுட்டிக் காட்டவே இப்படிச் செய்கின்றேன்!'' என்று மறுமொழி பகர்கின்றார்.

வைராக்கியச் சுடராகத் திகழ்ந்த பேயாழ்வாரின் முக விலாசமும் கண்களும் சித்தரை ஈர்த்து விடுகின்றன. தாம்

தமது வாழ்க்கையில் அதுகாறும் செய்து வந்த கண்டனங்களும் சண்டப் பிரசண்ட வாதங்களும் நாச வேலைகளும் அவர் செய்து காட்டிய அந்த விபரீதமான நந்தவன கைங்கரியம் போன்றவைதானா? — என்ற ஐயம் பளிச்சென்று தோன்றுகின்றது. பேயாழ்வாருடன் மனம் விட்டுப் பேசப் பேச மனக்குழப்பமும் ஒருவாறு தெளிகின்றது. 'உண்டு' என்பதை 'இல்லை' என்றும், 'இல்லை' என்பதை 'உண்டு' என்றும் சித்தாந்தம் செய்வதற்குத் தாய் மொழியைப் பயன்படுத்துவதைக் காட்டிலும், மனங்கசிந்து இறைவனைத் தோத்திரம் செய்யப் பயன்படுத்துவது நல்லதென்று உணர்கின்றார். சித்திகளில் புத்தியைச் செலுத்திப் பிறரையும் மயக்கித் தம்மையும் மயக்கிக் கொள்வதைவிட மேலான இலட்சியம் உண்டென்பது அவருக்குப் புலனாகின்றது. பட்டமரம் தழைப்பது போலத் தழைக்கத் தொடங்குகின்றது அவர்தம் நம்பிக்கை. பேயாழ்வாரைச் சித்தர் வணங்குகின்றார். அவரும் இவரைச் சீடராக ஏற்றுக் கொள்ளுகின்றார்; **பக்திசாரர்** என்ற புதிய திருநாமமும் சூட்டுகின்றார். பஞ்ச சம்ஸ்காரம் தொடங்கித் தத்துவோபதேசமும் செய்தருளுகின்றார்.

> **சாக்கியம் கற்றோம் சமண்கற்றோம்; சங்கரனார்**
> **ஆக்கிய ஆகமநூல் ஆய்ந்தோம்—பாக்கியத்தால்**
> **செங்கட் கரியானைச் சேர்ந்தோம் தீதிலமே**
> **எங்கட் கரியதொன் றில்.[6]**

என்று எண்ணித் திருமழிசைக்கு வந்து யோக நிலையில் நின்று திருமகள் கேள்வனைத் தியானித்துக் கொண்டிருந்ததாக ஒரு வரலாறு உண்டு.

இன்னொரு வரலாற்றுப்படி பேயாழ்வாரின் உபதேசம் பெற்ற நிலையில், அவர் அவதரித்த மயிலாப்பூருக்கு வருகின்றார் பக்திசாரர். வசதியான ஓரிடத்தில் அமர்ந்து

---

6. தனிப்பாடல்

இறைவனை மனங்குளிர வாய்குளிரப் பாடிப் புகழ்ந்து பக்தி யோகத்தில் ஈடுபட்டிருக்கின்றார். அந்தக் காலத்தில் திருவல்லிக்கேணி,

குரவமே கமழும் குளிர்பொழி லூடு
குயிலொடு மயில்கள்நின் றால
இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியா[7]

[குரவம்-ஒருவகைப்பூ; பொழில்-சோலை; ஆல-ஆட; இரவி-சூர்யன்.]

ஊராகத் திகழ்ந்தது. அந்தக் குளிர்ந்த சோலைகளும் பூக்களும் குயில்களும் மயில்களும் கடலும் மற்ற இயற்கை அழகுகளும் இறைவனுடைய அருளையும் அழகையும் நினைவூட்டி, சித்தி மார்க்கத்திலும் குயுக்தி மார்க்கத்திலும் ஓடிக் கொண்டிருக்கும் மனத்தைப் பகவானுடைய திருவடி களோடு பக்திக் கயிற்றால் கட்டி வைப்பதற்கு உதவியாக இருந்தன என்று கருதலாம். நாளடைவில் பாகவத நெறியில் இவருக்கு இதயப் பசியும் ஆன்மதாபமும் தீர்ந்து விசுவாசமும் சாந்தியும் கை கூடுகின்றன.

பக்தர்களின் பெருமையை அதிகப்படுத்துவதாக எண்ணி பல நிகழ்ச்சிகளைப் புனைந்துரைப்பதும் உண்டு. ஒரே நிகழ்ச்சி வெவ்வேறு விதமாகத் திரித்துக் கூறப்பெற்றிருப் பதினின்றும் இதனை அறிய முடிகின்றது. சில சமயம் ஒரு சமயத்தினர் பிறமதக் கடவுளை மதிப்புக் குறைத்தும் இழித்துக் கூறியும் உள்ளதைச் சில வரலாற்று நிகழ்ச்சி களால் அறிய முடிகின்றது. சமயக்காழ்ப்பின்றி திரிகரண சுத்தியாய் இவற்றைச் சிந்தித்தால் உண்மை தெளிவாகப் புலனாகும். ஆத்திகர்களே இத்தகைய கதைகளைக் கட்டி விட்டிருப்பதை நாம் காணும் போது வருந்தாமல் இருக்க முடியவில்லை. 'பக்திசாரர்' என்ற திருநாமம் திருமழிசை பிரானுக்கு பூதத்தாழ்வார் வழங்கியதாக முன்னர்க்

7. பெரி. திரு. 2. 3: 7.

கூறினோமல்லவா? இதைச் சிவபெருமானே வழங்கியதாகவும் ஒரு கதை நிலவுகின்றது.

ஒரு சமயம் சிவபெருமான் தம் துணைவியாகிய பார்வதி தேவியாருடன் விடையின்மீது அமர்ந்து கொண்டு விண் வழியே செல்லுகின்றார். பார்வதி தேவியார் இவரது தவ ஒழுக்கத்தைக் கண்டு அதிசயிக்கின்றாள். தன் கணவனை நோக்கி 'இவர் யாரோ?' என்று வினவ, சிவபெருமானும் 'இப்பெரியார் நாராயணனுக்கு அடிமைப் பட்டவர்' என்று சொல்லுகின்றார். உடனே அம்பிகை, 'இவருக்கு நாமும் காட்சி நல்கி ஏதேனும் வரமளித்துப் போவோம்' என்று கூறுகின்றாள். சிவபெருமானும் அவளது விருப்பப்படிச் செய்ய உடன்படுகின்றார்; அவர் எதிரில் தோன்றவும் செய்கின்றார். இவர் சிவபெருமானைப் பார்த்தும் பாராதவருமாக இருக்கின்றார். ஒரு கந்தைத் துணியைத் தைப்பதில் செயற்பட்டுக் கொண்டு பாராமுகமாக இருக்கின்றார். 'உனக்கு அருள் செய்ய வந்த எம்மை நீ உதாசீனம் செய்வது தகுதியோ?' என்று சிவபெருமான் கூற, மழிசையாரும் 'உம்மாலாக வேண்டியது ஒன்றுமில்லையாதலால் அசட்டையாக இருந்தேன்' என்று மறுமொழி தருகின்றார். பின்னர் 'கங்காதரர்' 'நம் வரவு வீண் போவதன்று; உனக்கு விருப்பமான வரம் பெற்று வாழ்வாய்' என்று மேலும் கூறுகின்றார். அடுத்து, ஆழ்வார், 'பரமபதம் அருளவல்லீராயின், அருள்வீர்' என வேண்டுகின்றார். அதற்குக் கயிலைநாதர் 'அது நம்மால் தரத்தக்கதன்று; அது தருவதற்கு உரியவர் சீமந் நாராயணன் ஒருவனே; ஆதலின் வேறு வரம் வேண்டுதி' என்று கூறுகின்றார். ஆழ்வார் புன்முறுவல் செய்து, 'அம் முக்தியைப் பெறுவதற்கு நீண்ட காலம் இவ்வுலகில் உயிர் வாழ்ந்து பெருந்தவம் புரிவதற்கு நீண்ட ஆயுளையாவது அளித்தருளும்' என்று வேண்டுகின்றார்'. அதுகேட்டு கண்ணுதலப்பன் 'அது கருமத்தின் அடியாக நடப்பதேயன்றி வளர்த்தத் தக்கதன்று; வேறு வேண்டுவதை விளம்புவாய்'

என்று சொல்லுகின்றார். மழிசையாரும் குறுமுறுவலோடு இகழ்ச்சி தோன்ற, 'இவ்வூசியின் பின்னே நூல் வரும்படி வரம் தந்தருள்வீர்' என்று விநோதமாகக் கூறுகின்றார்.

கண்ணுதலப்பனுக்கு இந்த ஏளனச் சொற்கள் செவிப் பட்டதும் கடுஞ்சினம் கொள்ளுகின்றார். 'இவ்வளவு செருக்குடைய நின்னை இப்பொழுதே மன்மதனைச் செய்தது போல் அழித்து விடுகின்றேன் பார்' என்று தமது நெற்றிக் கண்ணைத் திறக்கின்றார். அதினின்றும் புகையும் பொறியுமாகக் கிளர்ந்தெழுந்த தீப்பிழம்பைக் கண்டு ஆழ்வார் சிறிதும் கலங்கவில்லை. 'இந்திரன் போல் உடல் முழுவதும் கண்ணாயிரம் கொண்டாலும் அஞ்சேன்' என்று சொல்லிய வண்ணம் தமது வலத் திருவடியிலுள்ள ஒரு கண்ணைத் திறந்து விடுகின்றார். அதினின்றும் ஒரு பெருந்தீ கிளர்ந்தெழுந்து ஊழித்தீயினும் பன்மடங்கு அதிகரித்து அவ்வனலை அடர்க்கத் தொடங்குகின்றது. இந்நிலையில் அரன் அக்கடு நெருப்பை அணைக்கும்படி தமது சடையிலுள்ள பல மேகங்களை ஏவுகின்றார். அவை யுக முடிவில் தோன்றும் சோனை மழை பொழிந்து பெருவெள்ளம் கோக்கின்றது. மழிசைபிரான் சிறிதும் சலியாமல் பகவத் பக்தியிலே ஊன்றி இருக்கின்றார். இது கண்டு முக்கண் மூர்த்தி மிக வியந்து இவருக்குப் **பக்திசாரர்** என்று திருநாமம் சாத்தி இவரது பெருமையைக் கொண்டாடித் தம் இருப்பிடம் சென்று சேர்கின்றார். இக்கதை ஆழ்வாருக்குப் பெருமை சேர்க்கும் பொருட்டுக் கட்டிவிட்ட கதையென்றே தோன்றுகின்றது. இப்படிக் கட்டியவர் சைவர்களின் உணர்வுக்குப் பங்கம் விளைகின்றதென்று சிறிதும் கருதினாரிலர். சைவப் பெருமக்களும் திருமாலின் பெருமையைக் குறைத்தற் பொருட்டு பல கதைகளைக் கட்டி விட்டுள்ளனர் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**சுக்கிரஹார சித்தன் வணங்குதல்:** ஒரு சமயம் ஆழ்வார் யோகத்தில் எழுந்தருளியிருக்கின்றார். சுக்கிரஹார சித்தன்

என்பான் ஒருவன் தன் சித்தினால் புலியொன்றினை அடக்கி அதையே தன் ஊர்தியாகக் கொண்டு அதன் மீதேறி ஆகாய வழியில் சென்று கொண்டிருக்கின்றான். இவரது யோக மகிமையினால் அவ்வூர்தி தடைப்பட்டு இவருக்கு நேரில் மேலே செல்ல மாட்டாது நின்று விடுகின்றது. இதற்குரிய காரணத்தை ஆராயும் போக்கில் எல்லாப் புறத்தும் நோக்குகையில் பூமியில் இருக்கும் யோகி இவன் கண்ணில் படுகின்றார். வியப்புற்று விண்ணினின்றும் இறங்கி இவர் சந்நிதானத்திற்கு வருகின்றான். இவரது ஆற்றலைச் சோதிக்கக் கருதி 'முனிபுங்கவரே, நீவீர் உடுத்தியிருக்கும் கந்தையைக் கழற்றி எறிந்து, பீதாம்பரத்தாலாகிய இந்த உடையைப் பயன்படுத்திக் கொள்ளுவீர்' என்று சிறந்ததோர் ஆடையை உண்டாக்கிக் கொடுக்கின்றான். ஆழ்வார் அதனைப் புறக்கணித்து தமது ஆற்றலால் மாணிக்க மயமான ஆடையொன்றைப் படைத்துக் காட்டு கின்றார். பகலவன் போல் ஒளிவிடுகின்ற அதனைக் கண்டு சித்தன் நாணுகின்றான். உடனே தன் கழுத்திலணிந்து கொண்டுள்ள மணிமாலையொன்றினை வாங்கி 'இதனைச் செபமாலையாகத் தரித்துக் கொள்ளும்' என்று கொடுக்க வருகின்றான். ஆழ்வார் தமது கழுத்திலுள்ள துளசிமணி மாலையையும் தாமரை மணிமாலையையும் எடுத்துக் காட்டுகின்றார். அவையிரண்டும் சிறந்த நவரத்தின மாலைகளாய் விளங்கக் கண்டு மிகவும் நாணமுறுகின்றான். 'பெரியீர், சித்தர்கள் யாவரையும் வென்று வந்த அடியேனைத் தேவரீர் வென்றதனால் உம்மினும் சிறப்புடையதொரு சித்தர் உலகில் எங்கும் இலர்' என்று சொல்லித் துதித்து அவரை வலம் வந்து வணங்கித் தன் வழியே சென்று விடுகின்றான்.

**கொங்கணசித்தன் வணங்குதல்:** யோக நிட்டையில் இருந்து கொண்டிருக்கையில் கொங்கணசித்தன் என்பான் ஒருவன் இவரிடம் வருகின்றான். இவன் ஓர் இரசவாதி. இவன் பரபரப்போடு இவரிடம் வந்து இரும்பைப்

பொன்னாக்க வல்லதோர் இரசகுளிகையைக் காட்டி 'இதனைப் பெற்று மகிழ்வீராக' என்று கூறுகின்றான். ஆழ்வார் அதனை வேண்டாவென்று விலக்கி பொன் னொத்த தமது திருமேனியின் புழுதியை எடுத்துத் திரட்டி உருண்டையாக்கி அவன் கையில் தந்து 'அன்பனே, இக் குளிகை பலகோடி கூழாங்கற்களைப் பொன்னாக்க வல்லது; இதனைக் கொண்டு நீ பிழைப்பை நடத்துவாயாக' என்று மறுமொழி கூறியருளுகின்றார். சித்தன் உடனே அதனைச் சோதித்துப் பார்க்கின்றான்; அதன் ஆற்றல் அவ்வாறே இருக்கக் கண்டு மிக்க பக்தியுடன் ஆழ்வாரைத் தெண்டனிட்டு வணங்கி தன் வழியே போகின்றான்.

**முதலாழ்வார்கள் சந்திப்பு:** ஆண்டுகள் பல உருண் டோடுகின்றன. பக்திசாரர் மலைக் குகையொன்றில் தங்கி யோகு செய்து வருகின்றார். வயது முதிர்ந்த நிலையில், பாகவத தருமத்திற்குப் புத்துயிர் அளித்த முதலாழ்வார்கள் திருத்தலப் பயணம் செய்துகொண்டு இவர் இருக்கு மிடத்திற்கு எழுந்தருளுகின்றனர். அவர்கள் இவரது அடக்கத்தையும் அந்தரான்மாவிடமிருந்து பொங்கும் ஆனந்தப் பெருக்கையும் இவர் முகத்தில் வழிவதைக் காண் கின்றனர். 'இந்த மகாநுபாவர் யாரோ?' என்று ஐயுறு கின்றனர். ஆனால் சீடர் குருவை விரைவில் தெரிந்து கொள்ளுகின்றார். தமது உபதேசம் எவ்வளவு சிறந்த பலனை அளித்து விட்டதென்பதைத் தெரிந்து கொண்ட பேயாழ்வாரும் ஆனந்தக் கண்ணீர் சொட்ட, 'என் அருமை பக்தி சாரரே!' என்று ஓடிப்போய்த் தழுவிக் கொள்ளு கின்றார். பின்னர் நால்வரும் பாலுடன் பாலும், தேனுடன் தேனும் கலந்தாற் போலக் கூடியிருந்து திருவல்லிக் கேணியிலும் மயிலாப்பூரிலும் இறைவனை வழிபட்டுக் கொண்டும் பாகவத தருமத்தை அனுட்டானத்தாலும் உபதேசத்தாலும் பரப்பிக் கொண்டிருக்கின்றனர். சிறிது காலம் சென்றதும் ஓடித் திரியும் யோகிகளான முதலாழ்

வார்கள் மழிசை பிரானிடம் விடைபெற்றுக் கொண்டு மீண்டும் திருத்தலப் பயணத்தைத் தொடர்கின்றனர்.

**காஞ்சி நிகழ்ச்சிகள்:** திருமழிசை யாழ்வாரும் பூதத்தாழ்வார் அவதரித்த மாமல்லபுரம் சென்று அங்குள்ள எம்பெருமானை வழிபடுகின்றார். பின்னர் தாம் பிறந்த ஊராகிய திருமழிசைக்கு வருகின்றார். தாம் வழக்கம் போலச் சாத்திக் கொள்வதற்குத் திருமண்வேண்டிச் சில இடங்களில் சோதிக்கும்போது கிடைக்கவில்லை. இதனால் மனம் கலங்கின ஆழ்வார் கனவில் திருவேங்கட முடையான் சேவை சாதித்து, 'ஆழ்வீர், 'கச்சி வெஃகாவை அடுத்த பொற்றாமரைப் பொய்கையில் உள்ளது' என்று அருளிச் செய்கின்றார். பொய்கையாழ்வார் பிறந்த இடத்தை இவர் சேவிக்கவேண்டும் என்று 'வேங்கடம் மேவிய விளக்கு' வழிகாட்டியது போலும்! ஆழ்வாரும் காஞ்சி சென்று எம்பெருமான் குறிப்பிட்ட இடத்தில் திருமண் கண்டு களித்து எடுத்து வந்து தரித்துக் கொண்டு சில காலம் திருமழிசையில் பகவதநுபவத்துடன் தங்கிவிடுகின்றனர். பின்னர் திருமழிசையை விட்டுக் காஞ்சி சென்று திருவெஃகாவில் திருவணைப் பள்ளியில் கண்வளரா நின்ற பெருமாளைச் சேவித்துக் கொண்டும் அப்பிரானையே தியானித்துக் கொண்டும் பல ஆண்டுக் காலம் அங்கேயே தங்கியிருக்கின்றார்.

இக்காலத்தில் திருமழிசையில் தமக்கு நண்பனும் சீடனுமாக இருந்த கணிகண்ணனும் காஞ்சிக்கு வந்து இவருக்குப் பணிவிடைகள் செய்து வருகின்றான். அக்காலத்தில் தலை நரைத்து உடல் திரைத்துப் பருவம் முதிர்ந்த கிழவியொருத்தி ஆழ்வாருடைய திருவடிகளில் பரமபக்தி கொள்கின்றாள். ஆழ்வார் தங்கியிருந்த இடத்தைத் திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் போன்ற கைங்கரியங்களை நாள்தோறும் செய்து கொண்டு வருகின்றாள். ஒரு நாள் ஆழ்வார் திருக்கண் விழித்த

சமயத்தில் அவரைச் சரணமடைந்து வரங்கேட்டுப் பெற்று மாறாத இளம்பருவம் அடைந்து அழகிய மங்கையாகி விடுகின்றாள். அக்காலத்தில் காஞ்சியை ஆண்டு வந்த பல்லவமன்னன் இவளது வடிவழகைக் கண்டு அவள்மீது காதலுறுகின்றான்; விலையுயர்ந்த அணிகலன்களையும் அழகிய பட்டாடைகளையும் அவளுக்கீந்து அவளையும் மணந்து கொள்ளுகின்றான்; பட்டத்தரசியாகவும் ஆக்கிக் கொள்ளுகின்றான் அரசன்.

இங்ஙனம் இருக்கையில் அரசன் தன் இளமை நாளுக்கு நாள் குறைவதையும் தன் மனைவியின் பருவம் மாறுபடா திருப்பதையும் கண்டு வியந்து போகின்றான். தனது மனைவியை நோக்கி, 'நின்னுடைய மங்கைப் பருவம் எஞ்ஞான்றும் ஒருபடித்தாக இருப்பதற்குக் காரணம் என்ன?' என்று விசாரிக்கின்றான். அவள் அது 'ஆழ்வாரின் வரப்பிரசாதம்' எனத் தெரிவிக்கின்றாள். உடனே அரசன் 'அவ்வருளை நானும் பெற்று இளமை மாறா திருந்தால் நினக்கு இன்பம் தந்து நானும் நின்பால் இன்பம் பெறலா மன்றோ? அதற்குரிய வழியைத் தெரிவிப்பாய்' என்று அவளைக் கேட்கின்றான். அவளும், 'நாதா, நம் அரண்மனைக்கு நாடோறும் பிட்சுவாக வருகின்ற கணி கண்ணன் என்பவர் ஆழ்வாருக்கு மிகவும் வேண்டியவர்; அவரைத் துணை கொண்டு ஆழ்வாரை அணுகினால் நும் விருப்பம் நிறைவேறும்' என்கின்றாள். அங்ஙனமே மறுநாள் கணிகண்ணன் அரண்மனைக்குப் போந்தபோது அவனைத் தனியே அழைத்துச் சென்று உபசரித்து, "உம் ஆசிரியரை நான் சேவிப்பதற்கு இங்கு அழைத்து வருதல் வேண்டும்" என வேண்டுகின்றான். கணிகண்ணன் "நம் ஆசிரியர் ஓரிடத்திற்கும் எழுந்தருளமாட்டார்" என்று கூறிவிடுகின்றான். அரசன் விடவில்லை. 'என்னை அவரிடம் அழைத்துச் சென்றாவது அவரது திருவருட்கு இலக்காக்கவேண்டும்; அவரது திருவருளால் என்னை மாறாத இளைஞனாக்கவேண்டும்' என்று வற்புறுத்து

கின்றான். கணிகண்ணன் அதற்கு உடன்படாமல் "என் ஆசிரியர் இகவுலக இன்பங்களையே விரும்பி நிற்பவரைக் கண்ணெடுத்துப் பார்த்தலும் அரிது" என்று மறுத்து விடுகின்றான்.

அரசன் ஒன்றும் தோன்றாமல் வருந்திய நிலையிலிருக் கின்றான். இந்நிலையில் அமைச்சர்கள் வந்து அரசனைத் தேற்றுகின்றனர். "இக் கணிகண்ணனே தெய்வப் புலமை யுடையவன்; இவன் வாயினால் பாடிய படியெல்லாம் பல அற்புதங்கள் நிகழ்ந்து வருகின்றன; ஆதலின் இவனால் பாடப் பெற்றாலும் தங்கள் விருப்பம் நிறைவேறுதல் கூடும்" என்று உறுதி கூறுகின்றனர். அங்ஙனமே அரசன் அடுத்த நாள் அக் கணிகண்ணன் அரண்மனைக்குப் போந்தபோது, 'எனக்கு அழியாத இளமை வந்தெய்துமாறு கவிபாட வேண்டும்' என்று வேண்டுகின்றான். அவன், "அரசர் பெருமானே, நான் எப்போதும் நாராயணனைத் தோத்திரம் செய்வேனேயன்றி, நரனைத் துதியேன்" என்று மறுமொழி தருகின்றான். பின்னும் மன்னவன், தன்னைப் பாடுமாறு கணிகண்ணனைப் பலகால் நிர்பந்திக் கின்றான். என்ன செய்வான் கணிகண்ணன்? அவனும்,

**ஆடவர்கள் எங்ஙன் அகன்றுஒழிவார் வெஃகாவும்**
**பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்**
**நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ**
**மன்றார் பொழில்கச்சி மாண்பு**

என்று ஒரு வெண்பா பாடுகின்றான். கொற்றவன் சினங் கொண்டு 'நம்மைப் பாடு என்றால் நகரத்தைப் பாடு கின்றாய். இனி நீ இவ்வூரில் இருக்கலாகாது. நகரத்தை விட்டு அகன்று போ' என்று ஆணையிடுகின்றான். கணி கண்ணன் ஆழ்வாரிடம் சென்று நடந்தவற்றை நவின்று, 'அடியேனுக்கு விடை தந்தருள வேண்டும்' என்று விண்ணப்பம் செய்கின்றான்.

ஆழ்வார், 'நானும் வெஃகணைக் கிடக்கும் பெருமாளை எழுந்தருள்வித்துக் கொண்டு நின்னுடன் வருவேன்' என்று உரைத்துத் திருக்கோவிலினுட் சென்று அடியவர்க் கெளியனான எம்பெருமானைத் திருவடி தொழுகின்றார்.

**கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்**

என்று வேண்டுகின்றார். எம்பெருமானும் ஆழ்வாரின் வேண்டுகோட்படி தம் அறிதுயில் கலைந்து எழுந்துவர மூவரும் நகரை விட்டு அகன்று அருகிலுள்ள ஓரிடத்தில் வாழ்ந்து வருகின்றனர். இங்ஙனம் பெருமாளும் ஆழ்வாரும் அவரடியானும் அப்பதியை விட்டு அகன்று போகவே, கச்சியம்பதியிலுள்ள மற்றை எம்பெருமான்களும் அவ்வூரை விட்டு வெளியேறுகின்றனர். இதனால் அந்நகரம் ஒளி யிழந்து போகின்றது. அங்கு மற்றும் பல திருக்கோயிலில் இருக்கின்ற தேவதைகளின் சாந்நித்யமும் இல்லையாய் விடுகின்றது. கதிரவனும் அவ்வூரைக் கண்ணெடுத்துப் பாராதவனாகவே, ஊர் நீளிரவாய் விடுகின்றது. இதைக் கண்டு மன்னன் மிகவும் மனங்கவன்று அமைச்சர்களுடன் அவர்கள் இருக்கும் இடத்தைத் தேடி அடைந்து கணி கண்ணன் காலில் விழுந்து தனது அபசாரத்தைப் பொறுத் தருளுமாறு பலவாறு வேண்டிக் கொள்ளுகின்றான். கணிகண்ணனும், மீண்டெழுந்தருளும்படி ஆழ்வார் பக்கல் விண்ணப்பம் செய்கின்றான். அவரும் அவ்வேண்டுகோளை ஏற்றுப் பாம்பணைப்பள்ளியானை (சேஷசாயியை) நோக்கி,

**கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டும்—துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்விரித்துக் கொள்**

என்று முன் பாடிய பாட்டையே சற்று மாற்றிப் பாடி விண்ணப்பிக்கின்றார். எம்பெருமானும் அதற்கு உடன்

படுகின்றார். ஆழ்வாரும் கணிகண்ணனும் உடன்வர மீண்டும் திருவெஃகாவை அடைந்து அங்கு எழுந்தருள் கின்றார். தான் இங்ஙனம் செய்தது பின்புள்ளாருக்கும் தெரிய வேண்டும் என்று முன்போல வலத் திருக்கை கீழாக வன்றி இப்பொழுது இடத் திருக்கைக் கீழ்ப்படக் கண் வளர்ந் தருளுகின்றான். அரசனும் அன்றுமுதல் ஆழ்வாருக்குத் தொண்டு பூண்டு தன் பிறவிப் பயனைப் பெறுகின்றான்.

இங்ஙனம் பக்தர் சொன்னபடி பரமன் செய்ததினால் அப்பெருமானுக்கு 'யதோக்தகாரி' என்று வடமொழியிலும், 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்று அருந்தமிழிலும் திருநாமங்கள் வழங்கலாயின. திருமழிசையாரும் **திருமழிசையாழ்வார்** என்று புகழ் பெறுகின்றார். இவர்கள் சென்று ஓர் இரவு தங்கியிருந்த ஊர் **ஓரிரவிருக்கை** எனப் பெயர் பெற்று வழங்கலாயிற்று. அப்பெயர் **ஓரிக்கை** என்று இன்று மருவி வழங்குகின்றது. பெருமாள் அன்பர் களின் தமிழுக்கு வசமாகிப் பின் சென்ற கதை தமிழகத்தின் இதயத்தையே கொள்ளை கொண்டு விடுகின்றது. தமிழ், வடமொழிகளோடு இந்துஸ்தான மொழியையும் கற்று வடஇந்தியாவிலுள்ள முகம்மதிய அரசரையும் வசமாக்கிக் கொண்டவரென்றும் முருகக் கடவுளின் சிறப்பான அருள் பெற்றவரென்றும் மதிக்கப்பெறும் குமரகுருபர அடிகளும்,

**பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற**
**பச்சைப் பசுங்கொண்டலே.**[8]

[கொண்டல்-மேகம்.]

என்று பாடுகின்றார். இதனால் இந்தப் பெருமானின் உள்ளத்திலும் இந்தக் கதை ஊறிக் கிடந்திருக்க வேண்டும் என்பதை அறிகின்றோம்.

**பெரும்புலியூர் நிகழ்ச்சி :** தமது குருவாகிய பேயாழ் வாரும்,[9] பூதத்தாழ்வாரும்[10] பலபடப் புகழ்ந்திருக்கும்

---

8. மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்—காப்பு—1
9. மூன். திருவந். 30, 62
10. இரண். திருவந். 70, 97

திருக்குடந்தையில் தம் இறுதி நாட்களைக் கழிக்கத் தீர்மானித்துக் காஞ்சியை விட்டுப் புறப்பட்டுத் திருக்குடந்தையை நோக்கிச் செல்லும்போது பெரும்புலியூர் என்ற ஊரில் இளைப்பாறுகின்றார் ஒரு தெருத்திண்ணையில். அங்கேயிருந்து வேதம் ஓதிக் கொண்டிருந்த சில பார்ப்பனர்கள் இழிகுலத்தாராகிய இவர் காதில் வேத வாக்கியம் விழலாகாது (வேதம் ஓதுவதை நிறுத்தி விடுகின்றனர். இக்குறிப்பையறிந்த ஆழ்வார் அவ்விடத்தை விட்டுத் தொலைவிலிருந்த வேறோர் வீட்டுத் திண்ணையில் வீற்றிருக்கின்றார். ஆனால் வேதம் ஓதுபவர்கட்கு பாகவத அபசாரத்தினால் மறதி ஏற்படுகின்றது. உடனே ஆழ்வார் அவர்கள் விட்ட இடத்தைத் தொட்டுக் காட்டுகின்றார். அவர்கள் சாதி கருதி இந்தப் பெரியாரை அவமதித்தமைக்குப் பின்னர் வருந்தினார்களாம்.

இன்னோர் அதிசயமான குறிப்பு இவர் வாழ்க்கையில் காணப் பெறுகின்றது. ஆழ்வார் அந்த ஊரில் எங்கெங்கே போயினும், அந்த ஊர்ப் பெருமாளும் சந்நிதிக்குள் இருந்தபடியே அந்தந்த திசைகளை நோக்கித் திரும்பிய வண்ணமாயிருந்தாராம். இந்த ஆச்சரியமான செய்தியை அர்ச்சகர் மூலமாக அறிந்த ஊர்ப் பெருமக்கள் அவ்வூரில் வேள்வி செய்து கொண்டிருந்த பார்ப்பன சமூகத்தினரிடம் ஓடித் திருமழிசையாருடைய சிறப்பை வெளியிடுகின்றனர். 'அப்படி ஒரு மெய்யடியாரைக் காணக் கூடுமாயின் அதுவே கண் படைத்த பயன்; இந்த வேள்வியின் பயனும் அது தான்!' என்று கருதிய வேள்வி தீட்சிதர் வெளியே போய் தேடிப் பார்த்து ஒரு தெருவில் நின்று கொண்டிருந்த ஆழ்வாரை வேள்விச் சாலைக்குள் இட்டுக் கொண்டு வந்து தலைமைப் பீடத்தில் வைத்துப் பூசிக்கின்றார். இதைக் கண்ட வைதிகர்கள் வேள்வி கெட்டதென்று சினந்து, கேட்பார் செவி சுடும் சொற்களைச் சொல்லிப் பழிக்கின்றனர். ஆழ்வாரோ நீறுபூத்த நெருப்புப் போல இருக்கின்றார். தீட்சிதரோ பொறுக்க முடியாத கவலை

யுடன் 'சுவாமி, உண்மையை வெளியிட்டருள வேண்டும்' என்று ஆழ்வார் திருவடிகளில் விண்ணப்பம் செய்கின்றார்.

ஆழ்வாரும் தீட்சிதரின் வேண்டுகோளின்படி தமக்குள் அந்தர்யாமியாக விருக்கும் எம்பெருமானை நோக்கி,

அக்கரங்கள் அக்கரங்கள்
என்றுமாவ தென்கொலோ
இக்குறும்பை நீக்கிஎன்னை
ஈசனாக்க வல்லையேல்
சக்கரங்கொள் கையனே!
சடங்கர்வாய் அடங்கிட
உட்கிடந்த வண்ணமே
புறம்பொசிந்து காட்டிடே! [11]

[சடங்கர் - வேதத்திற்குரிய ஆறு அங்கங்களையும் அறிந்தவர்; புறம் பொசிந்து - வெளிப்பட்டு]

என்று விண்ணப்பிக்கின்றார். 'தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே யொக்க அருள் செய்வ ரா' தலால், எம்பெருமான் பாற்கடலோடும் அனந்த சயனத்தோடும் திருவாழி திருச்சங்குகளோடும் திருமகளும் நிலமகளும் திருவடி வருட தன் திருவுருவத்தை இவர்தம் திருமேனியில் தோற்றுவித்தானாம். அனைவரும் அந்தத் திவ்விய மங்கள விக்கிரகத்தைச் சேவித்து ஆழ்வார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தம் பிழை பொறுக்கும்படி வேண்டிக் கொண்டார்களாம். ஆழ்வாரும் அவர்கட்கு ஞானோபதேசம் செய்து அவர்களை வாழ்வித்தருள் கின்றார்.

**திருக்குடந்தை வாசம்:** பெரும்புலியூரைவிட்டு ஆழ்வார் திருக்குடந்தைக்கு எழுந்தருளுகின்றார். அங்கேயே நித்திய வாசம் செய்து ஸ்ரீவைணவப் பிரசாரம் செய்து வருகின்றார். திருமழிசையார் ஆழ்வார் நிலைக்கு உயர்ந்த

11. தனிப்பாடல்

பின்னர் இவர் வாசம் செய்த தலங்கள் மூன்று என்று குறிப்பிடலாம். இவற்றுள் ஒன்று தம் குருவான பூதத்தாழ்வாரின் ஊரைச் சார்ந்த திருவல்லிக்கேணி. இவர் வாழ்ந்த இரண்டாவது தலம் பொய்கையாழ்வார் அவதரித்த திருக்கச்சி. தமது குருவும் பூதத்தாழ்வாரும் பாடிப் போற்றியுள்ள திருக்குடந்தையையே தமது நிலையான இருப்பாகக் கொண்டு இங்கேயே (1) திருச்சந்த விருத்தம் (2) நான்முகன் திருவந்தாதி என்ற இரு பிரபந்தங்களையும் இயற்றுகின்றார். இதனால் கும்பகோணத்தைத் 'திருமழிசைப்பிரான் உகந்த இடம்' என்று பேசுகின்றார் வியாக்கியானச் சக்கரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளை. கும்பகோணத்திற்குக் 'குடமூக்கு' என்றும் 'குடமூக்கில்' என்றும் திருநாமங்கள் உண்டு. எனவே திருமழிசையாழ்வார் 'குடமூக்கிற் பகவர்' (கும்பகோணத்து பாகவதர்) என்று ஒரு சமண ஆசிரியர் குறிப்பிடுகின்றார். 'முக்காலமும் உணர்ந்த முனிவர்களில் ஒருவர்' என்றும் பாராட்டுகின்றார் அந்த ஆசிரியர். இதனால் 'குருபரம்பரைக் கதைகள்' தோன்றுவதற்கு முன்னரே பொய்கையார், பூதத்தாரைப்போல் திருமழிசையாரும் தமிழர்களால் பெரிதும் போற்றப் பெற்றனர் என்பதை அறிய முடிகின்றது.

**அருளிச் செயல்கள் :** பெரியோர்களே, இனி, இவர் தம் அருளிச் செயல்களைப் பற்றிச் சிறிது கூற எண்ணுகின்றேன். திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி என்பவை இவர்தம் அருளிச் செயல்கள் என்பதை முன்னர்க் குறிப்பிட்டேன். இவற்றுள் முன்னது சந்த விருத்தத்தாலான 120 பாசுரங்களைக் கொண்டது. ஓதுவார் உள்ளத்தில் உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்யும் பான்மையது. இது முதலாயிரத்தில் 'பெருமாள் திருமொழியை' அடுத்து இடம் பெற்றுள்ளது. பின்னது 96 வெண்பாக்களைக் கொண்டது. இஃது 'இயற்பா'த் தொகுதியில் முதலாழ்வார் பிரபந்தங்களையடுத்து இடம்

பெற்றுள்ளது. இவ்வாறு செய்தவர் நாலாயிரத்தைத் தொகுத்த நாதமுனிகள்.

**சிறப்பியல்புகள் :** இனி, இப்பிரபந்தங்களின் சிறப்பியல்புகளாகச் சிலவற்றைக் கூறுவேன்.

(1) பொதுவாக இந்த ஆழ்வார் மங்களா சாசனம் செய்த திவ்விய தேசங்களில் முக்கியமானவை திருவல்லிக்கேணி[12], திருக்குடந்தை[13], திருவெஃகா[14], திருவெவ்வுள்[15], திருவரங்கம்[16], ஊரகம்[17], பாடகம்[18] அன்பில்,[19] திருவேங்கடம்,[20] குறுங்குடி,[21] திருக்கோட்டியூர்,[22] திருப்பேர் நகர்[23] என்பவையாகும். திருவேங்கடம், திருவரங்கம் பற்றியே அதிகமான பாசுரங்கள் உள்ளன. நாம் உள்ள பகுதி திருவேங்கடத்தை ஒட்டியிருப்பதால் அதுபற்றிய பாசுரங்களில் ஆழங்கால் படுவோம்.

---

12. நான். திருவந். 35.
13. திருச். விரு. 56, 57, 58, 59, 60, 61: நான். திருவந். 36.
14. திருச். விரு. 63, 64; நான். திருவந். 36.
15. நான். திருவந். 36,
16. திருச். சந். 49, 53, 54, 55, 93, 119; நான். திருவந். 3, 30, 36.
17. திருச். சந். 63, 64,
18. திருச். 63, 64.
19. நான். திருவந். 36
20. திருச். விரு. 65; நான். திருவந். 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 90
21. திருச். விரு. 62
22. நான். திருவந். 34
23. நான். திருவந். 63.

**திருவேங்கடம்:** திருவேங்கடம் பற்றிய பக்திசாரரின் அநுசந்தானம் மிகவும் அற்புதமானது.

> **வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி**
> **நிற்கின்றேன்**[24]

[வெற்பு - மலை; வீடு - மோட்சம்]

என்கின்றார். ''பசு மலை, குருவி மலை என்று பல மலைகளின் பெயர்களைச் சொல்லும் அடைவிலே 'திருவேங்கடமாமலை' என்று என் வாயில் வந்து விட்டது. இதனால் பரமபதமும் எனக்குச் சித்தித்து விட்டது'' என்று கூறி இனியராகின்றார். இந்த அநுபவத்தைக் கைமேல் கண்டவர் நம்மையும் அம் மலைக்குச் சென்று வணங்குமாறு ஆற்றுப்படுத்துகின்றார்.

> **சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை**
> **நின்று வினைகெடுக்கும் நீர்மையால்** [25]

[வினை - பாவம்]

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. 'வேங்கடம்' என்ற சொல்லின் பிற்காலப் பொருளை விளக்குவதுபோல் உள்ளது இப் பாசுரப் பகுதி. இதனை மேலும் அரண் செய்வதுபோல் ''வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதும்''[26] என்று இன்னொரு பாசுரத்தின் அடி அமைந்திருப்பதையும் காண்கின்றோம். திருச்சந்த விருத்தத்திலும் இவர் ''வேங்கடம் அடைந்த மால்பாதமே அடைந்து நாளும் உய்மினோ''[27] என்று ஆற்றுப்படுத்துவதையும் நாம் காணாமல் இல்லை. இம்மலை வானோர்க்கும் வைத்த மாநிதியாயிருப்பதாக இன்னொரு பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.

---

24. நான் திருவந். 40
25. நான். திருவந். 42
26. ஷை. 81
27. திருச். விருத். 81

தண்ணருவி வேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு[28]

என்று பேசுவதையும் காண்கின்றோம்.

வேங்கடமலையின் எழிலும் கருப் பொருள் வளமும் இந்த ஆழ்வாரின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. 'ஊர்' அல்லது 'பதி' என்ற கலம்பகத் துறைச் செய்யுள் போல் அமைந்துள்ளது ஒரு பாசுரம்.

நன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும்
பொன்மணியும் முத்தமும் பூமரமும் — பன்மணிநீ
ரோடுபொரு துருளும் கானமும் வானரமும்
வேடு முடைவேங் கடம்.[29]

திருமலை மணிவண்ணனுடைய திருப்பதியில் யாளிகள், சிங்கங்கள், நவரத்தினங்கள், மலர் மரங்கள், நவமணிகளைக் கொழித்துக் கொண்டு வீழும் அருவிகள் பாயப் பெற்ற காடுகள், குரங்குகள், வேடர்கள் ஆகிய இவற்றிற்குக் குறை இல்லை என்று இதில் கூறுவதைக் காண்கின்றோம்.

திருமலையின் இயற்கைக் காட்சி இந்த ஆழ்வார் திருவுள்ளத்தையும் கவர்கின்றது. அங்ஙனம் பெற்ற களிப்பினால், எக்களிப்பினால், கற்பனை நயம் தோய்ந்த காட்சியை அவர் நமக்குப் புலப்படுத்துகின்றார். மாமதியை மாலவனுக்கு மணி விளக்காக வைக்கும் நோக்கத்துடன் அந்த மதியை எட்டிப் பிடிப்பதாகத் தும்பிக்கையைத் தூக்கிய வண்ணம் நிற்கின்றது ஒரு யானை. அந்த யானையைப் பிடிப்பதற்காக நாற்புறமும் வேடர்கள் சூழ்ந்து கொள்கின்றனர். அந்த யானையின் மீது அம்பு தொடுக்கும் நோக்கத்துடன் குறவர்கள் விற்களை எடுத்துக் கொண்டு செல்லுகின்றனர்.[30] இந்த நிகழ்ச்சியைக் காட்டும் முகத்தான் திருமலை மதி மண்டலத்தை எட்டியிருக்கின்ற

28. நான். திருவந். 45
29. ஷை 47
30. ஷை 46

தென்று அதன் உயர்ச்சியையும் புலப்படுத்துகின்றார் ஆழ்வார். மதி மிக அண்மையிலிருப்பதாகக் காணும் மலை வாழ் பிராணிகள் அதனைக் கைகொள்ள விரும்புவது இயற்கை.

நஞ்சுமிழ் நாகம் எழுந்தணவி
நளிர்மா மதியை
செஞ்சுடர் நாவளைக் கும்திரு
மாலிருஞ் சோலை யதே![31]

என்ற பெரியாழ்வார் பாசுரத்தாலும் இவ்விருப்பத்தை அறியலாம்.

(2) இந்த ஆழ்வார் பொதுவாக திரிவிக்கிரமாவதாரம்[32] இராமாவதாரம்,[33] கிருஷ்ணாவதாரம்,[34] நரசிம்மாவதாரம்,[35] வராகாவதாரம்,[36] கூர்மாவதாரம்,[37] மச்சாவதாரம்[38] போன்ற அவதாரங்களில் ஈடுபட்டிருந்தாலும் இராமகிருஷ்ண அவதாரங்களில் தான் அதிகமாக ஈடுபட்டிருந்ததை அறிய முடிகின்றது. எல்லா ஆழ்வார்களும் இத்தகையவரே. ஆயினும், கிருஷ்ணாவதாரத்தில்தான் தன் உள்ளத்தைப் பறி கொடுக்கின்றார்.

வான்மீகி கூறாத கூனியின் முதுகில் உண்டை கொண்டடித்த நிகழ்ச்சி இவர் பாசுரங்களில் காணப் பெறுகின்றது

---

31. பெரியாழ். திரு. 4.3:2
32. திருச். விருத். 27, 28, 74; நான். திருவந். 35, 58,
33. திருச். விருத். 28, 31, 32, 33, 39, 49, 51, 54, 56, 73; நான். திருவந். 8, 28, 53,
34. திருச். விருத். 26, 34, 36, 37, 38, 40, 41, 43,55, 86, 89; நான். திருவந். 16, 33, 57, 71.
35. ஷை - 24, 25, 62,
36. ஷை-28; நான். திருவந். 70
37. திருச். விருத். 20, 21, 35, 88; நான்.திருவந். 22
38. ஷை - 35

கூன் அகம் புகத்தெறித்த
    கொற்றவில்லி அல்லையே [39]

கொண்டைகொண்ட கோதைமீது
    தேனுலாவு கூனிகூன்
உண்டைகொண்டு அரங்கஓட்டி
    உள்மகிழ்ந்த நாதன் [40]

என்ற பாசுரங்களில் இதனைக் காணலாம். இதையே கம்ப நாடன் தனது காவியத்தில் இடம் தருகின்றான். இராம னுக்கு தசரதன் முடிசூட்ட நினைக்கின்றான். அதைத் தடுக்க நினைத்துச் சூழ்ச்சியில் இறங்குகின்றாள் மந்தரை. பழைய நிகழ்ச்சியை நினைத்து கடுஞ்சினம் கொள்ளுகின்றாள். இதனை,

தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயின்மேல்
மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் உள்ளத்து உள்ளுவாள் [41]

[வெகுளி-சினம்; பாணி-கை; உண்டை-திரளை;
    உள்ளுவாள்-நினைக்கின்றாள்]

என்று காட்டுவான். சுக்கிரீவனுக்கு அரசியல் நீதிகளை எடுத்துரைக்கின்றான் இராமன். அரசியலில் சிறியர் என்று ஒருவரை இகழ்ந்து தீயனசெய்தலால் தீமை விளையும் என்ற உண்மையை தன் ஒழுக்கத்தையே எடுத்துக்காட்டாகத் தருகின்றான்.

சிறியரென் றிகழ்ந்து நோவு
    செய்வன செய்யன் மற்றிந்
நெறியிகந் தியானோர் தீமை
    யிழைத்தலால் உணர்ச்சி நீண்டு

---

39. திருசந். விருத். 30
40. ஷை. 49
41. அயோத். மந்தரை. 41

குறியதா மேனி யாய
கூனியாற் குவவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின்
வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன் [42]

என்ற பாடலில் இந்நிகழ்ச்சி சுட்டப் பெறுவதைக் காணலாம்.

(3) ஒரு பாசுரத்தில் [43] தன் பிறப்பைப்பற்றிக் கூறுகின்றார். குலங்களாய ஈரிரண்டில் பிறக்கவில்லை என்றும் புலன்களை வெல்லவில்லை என்றும் தம்மைப்பற்றிய குறிப்புகளைத் தருகின்றார். இதனை முன்னரும் குறிப்பிட்டேன்.

(4) ஒரு பாசுரத்தில் ஆழ்வாரின் தமிழ்ப்பற்று வெளிப்படுகின்றது.

—விதையாக
நற்றமிழை வித்தியென்
உள்ளத்தை நீவிளைத்தாய்
கற்றமொழி யாகிக் கலந்து. [44]

என்ற பாசுரப்பகுதியில் இதைக் காணலாம். "நெஞ்சில் நினைக்கவும் முடியாத ஞானசக்திகளையுடையவனான நீ என்னுடைய வாக்கில் வரும் சொற்களுக்குப் பொருளாய் இருந்துகொண்டு என்னுடைய நெஞ்சமாகின்ற நிலத்திலே தமிழாகின்ற விதையை விதைத்துப் பக்தியாகின்ற பயிர் செழித்து விளையும்படி செய்தனையாதலால், நான் நிலமுடையேனாயினேன்" என்கின்றார். இதை நினைந்து எம்பெருமானைப் 'பக்தியுழவன்' என்றே திருநாமம் இட்டு மகிழ்கின்றார்.

---

42. கிட்கிந். அரசியல் 11
43. திருச். விருத். 90
44. நான். திருவந். 81

வித்தும் இடல் வேண்டுங்
கொல்லோ விடையர்த்த
பக்தி யுழவன் பழம்புனத்து [45]

என்ற பாசுரத்தில் இதனைக் காணலாம். இப்பாசுரம்,

வித்தும் இடல்வேண்டும்
கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் [46]

என்ற குறளை நினைக்கச் செய்கின்றது.

(5) திருமாலின் பெருமையும் வைணவ தத்துவமும் இவர்தம் பிரபந்தங்களில் பரக்கப் பேசப் பெறுகின்றன. இவற்றைக் காட்டுவேன். ஒரு மாபெருங்கடல். அதில் தோன்றிய அலைகள் உலகங்களாம். புற உலகத்தைப் போல் உள்ளுலகமாகிய மனத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளும் அந்த மாக்கடலில்தான் தோன்றுகின்றன; அடங்குகின்றன. எல்லையில்லாத சோதி வெள்ளம்; நினைக்கவும் முடியாத சக்தி வெள்ளம்; உயிர்க்கெல்லாம் தாயாகிய கருணை வெள்ளம்; அழகு வெள்ளமும் அதுதான். ஆறித் தோன்றும் அழகும் சீறித் தோன்றும் அழகும் அதில் அடங்கியுள்ளது.

தன்னுளே திரைத்தெழும்
தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்து
அடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து
நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற
நீர்மைநின்கண் நின்றதே [47]

45. ஷெ - 23
46. குறள் - 85
47. திருச். விருத். 10

என்பது பாசுரம். இந்த அழகு வெள்ளம்தான் மாக்கடலாகிய இறைவன். கருணை வெள்ளத்தில்தான் நிலைத்திணையும் இயங்குதிணையும் தோன்றுதலும் பின்பு அழிதலாகிய நிலைகளை அடைந்து இறுதியில் அதே வெள்ளத்தில் அடங்கிவிடுகின்றன என்கின்றார் ஆழ்வார்.

இந்தக் கருணை வெள்ளத்தைத்தான் திருமழிசையாழ்வார் 'ஆதிதேவன்'[48] என்றும் 'தேவன்'[49] என்றும் 'தேவதேவன்'[50] என்றும் குறிப்பிடுகின்றார் தம் திருச்சந்த விருத்தத்தில்! இவ்வாறு பொதுவாகக் கூறுகின்றவர் அந்த 'ஆதிதேவன்', பூமிநாதன் (22) 'ஆழிமேனிமாயன்' (24), 'புண்டரீகன்' (33, 55, 57), 'பற்பநாபன்' (32), 'மேகவண்ணன்' (39) என்று குறிப்பிட்டு திருமாலே முழுமுதற் கடவுள் என்று நிலை நாட்டுகின்றார்.

இதே கருத்தைத் தான் நான்முகன் திருவந்தாதியிலும் காணமுடிகின்றது.

> தேருங்கால் தேவன்
> ஒருவனே என்றுரைப்பர்
> ஆரும் அறியார் அவன்பெருமை[51]

என்ற பாடலில் இதனைக் காணலாம். இக்கொள்கையின் அடிப்படையை,

> 'நிற்கின்ற தெல்லாம்
> நெடுமால்' என்று ஓராதார்
> கற்கின்ற தெல்லாம் கடை.[52]

[ஓராதார் - அறியாதவர்கள்; கடை - கீழானது]

---

48. திரு. விருத். 17, 22. 43, 48
49. ஷை.
50. ஷை. 24, 75
51. நான். திருவந். 2
52. ஷை. 54

என்ற பாசுரத்தால் புலப்படுத்துகின்றார். 'எல்லாம் கடவுள் மயம்' என்கின்ற அறிவு கல்வியறிவின் முக்கியமான கூறாகக் கொள்ள வேண்டும்.

நீயே உலகு எல்லாம்;
நின் அருளே நிற்பனவும்;
நீயே தவத்தேவ
தேவனும்[53]

என்றதால் இக்கருத்து மேலும் உறுதிப்படும்.

கல்லா தவர்இலங்கை
கட்டழித்த காகுத்தன்
அல்லால் ஒருதெய்வம்
யான் இலேன்[54]

என்பதால் இது பின்னும் வலிவு அடையும். இராவணன் முதலானவர்க்கு கல்வி அறிவு இல்லையா? அறிவுத் திறமையில்தான் குறைவு உண்டா? எனினும் 'கல்லாதவர் இலங்கை' என்கின்றாரே. அது ஏன்? இலங்கையிலிருந்த அரக்கர்கள் அனைவரும் தங்களுடைய தீய நடத்தைகளில் தம் அறிவின்மையை வெளிப்படுத்திக் கொண்டார்களாதலால் இவ்வாறு கூறினார். 'அங்கே கற்றவன் ஒருவன் தான் இருந்தான். அவன் வீடணன்; அவனையும் துரத்தியடித்து விட்டார்கள்' என்பது குறிப்பு. கல்வி சரியான கல்வியாக இருந்தால், சர்வேசுவரன் 'நூல் வலையில்' அகப்படுவானாம்.

— கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த
நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன்
காண்.[55]

53. நான். திருவந். 20.
54. ஷை. 53.
55. ஷை 40.

என்பதால் இது பெறப்படுகின்றது. சாத்திரங்களாகிய வலையில் சிக்கிக் கொண்டிருப்பவன் எம்பெருமான். தான் எம்பெருமானுடைய கால் வலையில் அகப்பட்டவன். "எம்பெருமான் ஒரு வலையில் அகப்பட்டான்; நான் ஒரு வலையில் அகப்பட்டேன்"— என்பது சமத்காரமான பேச்சு.

பேயாழ்வாரைச் சந்தித்த பிறகு பக்திசாரர் திருவல்லிக்கேணியில் வாழ்ந்த வாழ்க்கை எப்படிப்பட்ட தென்பதை,

> **வாசித்தும் கேட்டும்,**
> **வணங்கி வழிபட்டும்**
> **பூசித்தும் போக்கினேன்**
> **போது.**[56]

என்பது போன்ற குறிப்புகளால் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். இப்படிப் பேசாத நாட்களையெல்லாம் நாட்களாகக் கருதவில்லை; அவற்றை 'உயிரீறும் வாள் களாகவே' கருதினார். இந்த நிலையில் இருந்தவர், தமது பக்திக் கல்வியின் பயனாகவே,

> **மறந்து றந்து வஞ்சம் மாற்றி**
> **ஐம்பு லன்கள் ஆசையும்**
> **துறந்து நின்கண் ஆசை யேதொ**
> **டர்ந்து நின்ற நாயினேன்.**[57]

[மறம்-கோபம்; துறந்து - ஒழித்து; நாயினேன்-அடியேன்]

என்று கூறும் மேலான நிலையை அடைந்திருக்க வேண்டும். சண்டு மறம் என்பது, பிறருக்கு ஓர் ஏற்றம் இருந்தால் அதனைப் பொறுக்கமாட்டாமையும் பிறருக்கு தீங்கு விளைப்பதையே சிந்திக்கையும் ஆகும். இந்த எண்ணத்தை ஒழிக்க வேண்டும் என்கின்றார். வஞ்சமாவது, அநுகூலன்

---

56. நான். திருவந். 63.
57. திருச். விருத். 98.

போலத் தோன்றி முடிவில் பிரதிகூலனாய் நிற்றல்; இதனையும் தொலைக்க வேண்டும் என்பது ஆழ்வாரின் வேண்டுகோள். "ஐம்புல இன்பங்களில் உண்டாகும் ஆசையை அகற்றி உன்பக்கல் ஆசையே மேன் மேலும் தொடர்ந்து பெருகும்படியான நிலைமையிலேயே நிற்கின்றேன்" என்று தம் நிலைமையையும் தெரிவிக்கின்றார்.

'நான் பிறப்பதற்கு முன் எம்பெருமான் ஊரகம்[58] என்ற திருப்பதியில் நின்றான்; பாடகம்[59] என்ற தலத்தில் உட்கார்ந்திருந்தான்; வெஃகா[60] என்ற இடத்தில் சயனத் திருக்கோலத்தில் இருந்தான். இப்போது,

நின்றதும் இருந்ததும்
கிடந்ததும் என்னெஞ்சுளே[61]

என்கின்றார். "இப்போது என் நெஞ்சைத் திருமலையாகவும், பரமபதமாகவும் பாற்கடலாகவும் கொண்டு நிற்பதும் இருப்பதும் கிடப்பதுமாகக் காட்சி தருகின்றான்"[62] என்று பிறிதொரு பாசுரத்தில் தெரிவிக்கின்றார்.

இதை மேலும் விளக்குவேன். உலகத்தில் ஒருவன் மற்றொருவனுக்குக் கடன் கொடுத்திருந்தால், அக்கடனைத் திருப்பி வாங்கிக் கொள்வதற்காகக் கடனாளி வீட்டிலே வந்து கேட்கும்போது முதலில் சிலநாள் நின்று கொண்டே கேட்டு விட்டுப் போய் விடுவான். இதனால் கடன் தீராவிடில் மறுபடியும் வந்து சில நாள் வரையில் திண்ணைமீது உட்கார்ந்து கொண்டு

58. ஊரகம்—காஞ்சி உலகளந்த பெருமாள் சந்நிதி.
59. பாடகம்—காஞ்சியில் பாண்டவ தூதன் சந்நிதி.
60. வெஃகா—காஞ்சியில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் சந்நிதி.
61. திருச். விருத். 64.
62. ஷெ. 65.

கடனை வற்புறுத்தித் திருப்பித் தருமாறு சொல்லிவிட்டுப் போவான். இதனாலும் பலன் இல்லை என்று தெரிந்தால் 'கடனைத் தீர்த்தாலொழியப் போவதில்லை' என்று படுக்கையாகப் படுத்து வற்புறுத்துவான். இப்படியாகவே எம்பெருமானும் நம்போலியர் செலுத்த வேண்டிய கைங்கரியக் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக ஓரிடத்தில் நின்று பார்க்கின்றான். மற்றோரிடத்தில் வீற்றிருந்து பார்க்கின்றான். இன்னுமோர் இடத்தில் சாய்ந்து பார்க்கின்றான். "திருவூரகத்தில் நிற்கின்றான்; திருப்பாடகத்தில் வீற்றிருக்கின்றான்; திருவெஃகாவில் கிடக்கின்றான். இப்படி நிற்பது இருப்பது கிடப்பதெல்லாம் எம்பெருமான் சம்சாரியான எனக்கு ருசி பிறவாத காலமெல்லாம் என்னிடம் ருசி பிறப்பதற்காக நின்றான், இருந்தான், கிடந்தான். எனக்கு ருசி பிறப்பித்தல் அவனுக்குச் சாத்தியம் (பலன்); அதற்குச் சாதனம் (வழி) நிற்றல் இருத்தல் கிடத்தல்கள். எம்பெருமானுக்கு அப்பலன் கிட்டிவிட்ட பிறகு திவ்விய தேசங்களில் நிற்றல் இருத்தல் கிடத்தல்களைத் தவிர்த்து,

> அரவத்து அமளியி னோடும்
> அழகிய பாற்கட லோடும்
> அரவிந்தப் பாவையும் தானும்
> அகம்படி வந்து புகுந்து.[63]

என்று பெரியாழ்வார் கூறுவது போல் அவ்விருப்புகளையெல்லாம் எனது நெஞ்சிலே செய்தருளினான்" என்கின்றார் ஆழ்வார்.

'ஐம்புலங்களை வெற்றி கொண்டேன்; உடம்பை அடக்கி ஆண்டேன்' என்று சொல்லுகின்றவர்கள் உடம்பைக் கொடிய தவங்களாலும் விரதங்களாலும் வாட்டி வதைத்து உடம்பை எலும்புக் கூடாக்குவது அறியாமை என்கின்றார். முதலாழ்வார்களைப் போலவே, அன்பு நெறியைப் — பக்தி

63. பெரியாழ். திரு. 5.2 : 10.

நெறியைப் — பின்பற்றுவதே சிறந்த வழி என்பது இவர்தம் கொள்கையாகும்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புஉருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன்.[64]

என்றார் பூதத்தாழ்வார். பக்திசாரர்,

அன்புஆவாய்; ஆரமுதம்
ஆவாய்; அடியேனுக்கு
இன்புஆவாய்; எல்லாமும்
நீ ஆவாய்[65]

என்கின்றார். இவரே திருச்சந்த விருத்தப் பாசுரம் ஒன்றில் இதே கருத்தை,

புன்புல வழிஅடைத்து
அரக்கு இலச்சினை செய்து
நன்புல வழிதிறந்து
ஞானநற் சுடர்கொளீஇ
என்புஇல்எள்கி நெஞ்சுருகி
உள்கனிந்து எழுந்ததுஓர்
அன்பில்அன்றி ஆழியானை
யாவர்காண வல்லரே.[66]

என்று தெளிவுறுத்துகின்றார். இங்குப் 'புன்புலவழி அடைத்து அரக்கு இலச்சினை செய்து' — என்பது, கீழான விஷயங்களைப் பற்றியோடுகின்ற இந்திரியங்களின் ஓட்டத்தைத் தடுத்து அவ் விஷய வழியே புல் மூடிப்போம்படி அடைத்து அரக்கு முத்திரை இட்டு வாசனையும் கிளம்பாதபடி பண்ணி என்று பொருள்படும். என்பு இல் வெள்கி: என்பு — எலும்பு; எலும்புகட்கு, இல் — இருப்பிடம், சரீரம்; அது எள்குமோ (சிதிலமிகுமோ) எனில்,

64. முதல். திருவந். 1
65. நான். திருவந். 59.
66. திருசந். விருத். 76

கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகு மாலோ[67]

என்றாரே தொண்டர் அடிப்பொடி யாழ்வார்; அது போலே கொள்ள வேண்டும்.

திருமாலே ஐம்பூதங்கட்கு உபாதான காரணம் என்றும், சீவான்மாக்கள் இறைவன் காட்டக் காண்பன என்றும், அவன் கருணையே வடிவானவன் என்றும், உயிர்களனைத்தும் அவனிடமே தோன்றி அவனிடமே ஒடுங்கும் என்றும், மறைகளாலும் அறியப் பெறாத மாயன் அவன் என்றும், மக்களிடையே அவன் பலகால் பிறந்தமை அவன் 'பத்துடையவர்க்கு எளியன்' என்பதை விளக்கு மென்றும், அவனே மூவகைக் காரணமும் ஆவான் என்றும் பலபட இறைவனது பெருமை பலபாடல்களில் பகரப் பெறுகின்றது. காலம் இல்லாமை கருதி அப்பாடல்களை எடுத்துக் காட்டி விளக்கவில்லை.

எம்பெருமானின் திருமேனி பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்று ஐந்து வகையாகப் பேசப் பெறும். வைகுந்தத்தில் எழுந்தருளி யிருக்கும் இருப்பே பரத்துவம் என்பது. வியூகம் என்பது, வாசுதேவன், சங்கர்ஷணன் பிரத்தியும்நன், அநிருத்தன் என்ற நான்கு நிலைகள். இவை திருப்பாற் கடலில் இருக்கும் இருப்புகள். அவதாரங்கள் விபவம் என்று வழங்கப்பெறும். எல்லோருடைய இதயகமலத்தில் எழுந் தருளியிருக்கும் இருப்பே அந்தர்யாமித்துவம் ஆகும். திவ்விய தேசங்களில் திருமேனி கொண்டு எழுந்தருளி யிருக்கும் நிலையும், அடியார்களின் வேண்டுகோளின்படி அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு திருமேனி கொண்டு நிற்கும் நிலையும் அர்ச்சாவதாரம் என்று வழங்கப்பெறும்.

67. திருமாலை - 19

எல்லா நிலைகளிலும் பெரிய பிராட்டியாராகிய இலக்குமி இறைவனை விட்டு ஒருக்கணமும் பிரிவதில்லை.

திருமழிசையாழ்வார் இந்த இறைவனையே வழி படுவார். இந்த வழிபாடு — 'அன்புக் கல்வி' — நாளடை வில் முதிர்ந்து முதிர்ந்து வாய் என்ன சொல்லிக் கொண் டிருந்த போதிலும், கை எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், உள்ளத்தை அன்பனாகிய ஆழியானோடு ஒன்றி நிற்கச் செய்தது. இதனை,

> **சொல்லினும் தொழிற்கணும்**
> **தொடக்குஅறாத அன்பினும்**
> **அல்லுநன் பகலினொடும்**
> **ஆனமாலை காலையும்**
> **அல்லிநாண் மலர்க்கிழத்தி**
> **நாத!பாத போதினைப்**
> **புல்லிஉள்ளம் விளைவுஇலாது**
> **பூண்டுமீண்டது இல்லையே.**[68]

என்ற பாசுரத்தில் கண்டு மகிழலாம். வாழ்க்கையின் பிற்பகுதியில் இந்த உள்ளம் காலையிலும் மாலையிலும் இரவிலும் பகலிலும் அவனுடைய திருவடிகளிலேயே ஒன்றி நின்றது என்றும் அதிலேயிருந்து மீண்டதில்லை என்றும் பேசுகின்றார்.

> **உன்னபாதம் என்னநின்ற**
> **ஒண்சுடர்க் கொழுமலர்**
> **மன்னவந்து பூண்டுவாட்ட**
> **மின்றி எங்கும் நின்றவே?**[69]

[மன்ன - நிலையாக]

என்ற பாசுரத்தால் இது தெளியப்படும். ஒருநாள் இத்தகைய பக்தியநுபவம் உச்சநிலை அடைந்து

---

68. திருச். விருத். 118
69. ஷை - 119

விடுகின்றது. தம்மை ஈடேறச் செய்வதற்காக இறைவன் அன்று இவர் இருந்த இடத்திற்கே வந்துவிட்டதுபோல் தோன்றுகின்றது. 'இவருக்குள்ளேதான் அவன் இருக்கின்றானா? அவனுக்குள்ளேதான் இவர் இருக்கின்றாரா?' என்று தெரியாதபடி தன்னுடைய மங்கள சோதியை இவருடைய ஆன்மாவோடு கலந்து விடுகின்றான். 'ஆதலால் நான் என்றும் மாறாத இன்பமாகிய விடுதலை பெற்றுவிட்டேன்!' என்கின்றார்.

இதனை,

**இயக்கறாத பல்பிறப்பில்**
**என்னைமாற்றி இன்றுவந்து**
**உயக்கொள்மேக விண்ணன்நண்ணி**
**என்னிலாய தன்னுளே**
**மயக்கினான்தன் மன்னுசோதி;**
**ஆதலால், என் ஆவிதான்**
**இயக்கெலாம் மறுத்தறாத**
**இன்பவீடு பெற்றதே.**[70]

[இயக்கு - தொடர்ச்சி; மற்றி - மாற்றுகைக்குத் திருவுள்ளம் பற்றி; உயக்கொள் - உய்விக்கும்; நண்ணி - நெருங்கி; தன்னிலாய என்னுள் - தன்னுடன் ஒன்றி நிற்கும் என்னுள்; மயக்கினான் - கலந்தான்; இயக்கு - பிணைப்பு]

என்ற பாசுரத்தில் கண்டு மகிழலாம்.

திருமழிசையாழ்வார் திருமாலையே முழு முதற் கடவுளாக வழிபடுவர்; மறந்தும் புறந்தொழாது வாழ்ந்தவர்.

**என்றும் மறந்தறியேன்**
**என்நெஞ்சத் தேவைத்து**
**நின்றும் இருந்தும்**
**நெடுமாலை — என்றும்**

---

70. திருச். விருத். 120

திருஇருந்த மார்பன்
சிரீதரனுக்கு ஆளாய்
கருஇருந்த நாள் முதலாக்
காப்பு.[71]

[நெடுமால் - நாராயணன்; திரு - இலக்குமி; சிரீதரன் - இலக்குமியை மார்பில் தரித்தவன்; ஆளாய் - அடிமையாய்]

என்ற பாசுரம் இதனைத் தெரிவிக்கின்றது. இன்னொரு பாசுரத்திலும்,

நான்உன்னை அன்றிஇலேன்,
கண்டாய் நாரணனே
நீஎனை அன்றி இலை.[72]

என்று மீண்டும் இக்கருத்தையே வற்புறுத்துவதைக் காண லாம். இதனை ஒரு காவாக்கியம் என்றே சொல்லலாம். 'நம்மை விட்டு அவனால் பரிபூரணனாயிருக்க முடியாது!' என்ற இந்தக் கொள்கையைப் பக்த கோடிகளின் ஒரு மகா சாசனம் என்றும் சொல்லி வைக்கலாம். இதை ஒரு நூற் பாவாகக் கொண்டு எவ்வளவு பெரிய உண்மையை எவ்வளவு எளிதாக நினைவுபடுத்திக் கொள்ளமுடிகின்றது!

இந்த இறைவனை அடைதலையே வீடுபேறு — மோட்சம் — என்று கருதுவர் வைணவப் பெருமக்கள். வைணவ தத்துவப்படி இறைவனே தன்னை அடைவதற்கு வழியாகவும் அமைவான்; பலனாகவும் இருக்கின்றான். இதனை,

— வீடு ஆக்கும்
மெய்ப்பொருள்தான் வேத
முதற்பொருள்தான் விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாராயணன்.[73]

[மெய்ப்பொருள் - உண்மையான வழி]

---

71. நான். திருவந். 92
72. ஷை. 7
73. ஷை. 13

என்ற பாசுரப் பகுதியால் தெளியலாம். பலன் 'புருஷார்த்தம்' என்று வழங்கப் பெறும்.

இறைவனை அடையும் வழி 'இதம்' (ஹிதம்) என்று வழங்கப் பெறும். வீடு பேற்றிற்குச் சாதனமாக அனுட்டிக்கப் பெறும் வழி என்பது இதன் பொருள். இந்த வழி இரு வகையாக அநுட்டிக்கப்பெறும். ஒன்று, பக்தி யோகம்; மற்றொன்று, பிரபத்தியோகம். இவற்றை விரித்துக் கூற நேரம் இல்லை.

பக்தியோகம் : இது பல நிலைகளில் அநுட்டிக்கப் பெறுதல் வேண்டும். பலம் பெற நெடுங்காலம் ஆகும். திருமழிசையாழ்வார் 'பக்திசாரர்' என்ற தம் பெயருக் கேற்ப, பக்தியே வடிவெடுத்த பரமயோகியாகக் காணப் படுகின்றார்.

**செவிக்குஇன்பம் ஆவதுவும்**
**செங்கண்மால் நாமம்;**
**புவிக்கும் புவியதுவே**
**கண்டீர்.**[74]

[புவி - பூமியிலுள்ளார்; புவியும் அதுவே - (நிழல் பெற ஒதுங்குவதற்கு) இடமாவதும் அத்திருநாமமே.]

என்றும்,

**தொழில்எனக்குத் தொல்லைமால்**
**தன்நாமம் ஏத்த;**
**பொழுது, எனக்கு மற்றதுவே**
**போதும்**[75]

[தொல்லைமால் - புராணனான எம்பெருமான்]

என்றும்,

---

74. நான். திருவந். 69
75. ஷை.85

வாசித்தும் கேட்டும்
வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன்
போது[76]

என்றும் கூறியிருத்தலால் இதனை நன்கு அறியலாம். என்றும் பக்தியையே நாடி நின்றவர் இந்த ஆழ்வார் என்பதை,

பெறற்கரிய நின்னபாத
பத்தியான பாசனம்
பெறற்கரிய மாயனே
எனக்கு நல்க வேண்டுமே.[77]

[நின்ன - உன்னுடைய; பாதம் - திருவடி; பாசனம் - மரக்கலம்]

என்ற பாசுரப் பகுதியால் தெளியலாம்.

திருவடியை நாடி நிற்கும் பக்தியாகிய மரக்கலத்தைத் தந்தருள வேண்டும் என்று வேண்டுகின்றார் ஆழ்வார். அதுவே பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கு ஏற்ற புணையாகும் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. அவன் தாளை வணங்குவதற்கு அவன் அருள் வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர் ஆழ்வார். எனவே,

பரந்தசிந்தை ஒன்றிநின்று
நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக
நீநினைக்க வேண்டுமே.[78]

[பாதபங்கயம்-திருவடித் தாமரை; நிரந்தரம்-இடைவிடாமல்.]

என்று வேண்டுவர். இக்கருத்தினையே,

76. நான். திருவந். 63
77. திருச். விருத். 100
78. ஷை. 101

கிடந்துஇருந்து நின்றியங்கு
　　போதும்நின்ன பொற்கழல்
தொடர்ந்துவீள் விலாததோர்
　　தொடர்ச்சிநல்க வேண்டுமே.[79]

[பொற்கழல்-அழகிய திருவடி; வீள்வு-நீக்கம்.]

என்பதால் பின்னும் வற்புறுத்தப் பெறுகின்றது.

பிரபத்தி யோகம் : இந்த ஆழ்வாரும் பிரபத்தியை அநுட்டித்தவர். இதுவே ஆழ்வார்கள் அனைவரும் மேற்கொண்ட பொதுவழி; பெருவழி. நம்மாழ்வார் திருவேங்கடமுடையானைச் சரண் புகுந்ததாக அமைந்த திருவாய்மொழியை (6.10:10) நாம் அறிவோம். இதையொட்டியே, இவரும்,

அடைக்கலம் புகுந்தஎன்னை
　　'அஞ்சல்' என்ன வேண்டுமே.[80]

[அடைக்கலம்-சரணாகதி; அஞ்சல்-பயப்படாதே.]

என்ற பாசுரப் பகுதியாலும் அறியலாம். மேலும் இதனை,

புனித! நின்
இலங்குபாதம் அன்றிமற்றோர்
　　பற்றிலேன் எம்ஈசனே[81]

[புனித-பரிசுத்தனே; இலங்குபாதம்-ஒளிமிக்க திருவடிகள்; பற்று-பிடி.]

என்ற பாசுரப் பகுதியிலும் வற்புறுத்துவர்.

சரணாகதி தத்துவத்தை நான்முகன் திருவந்தாதியிலும் காணலாம்.

ஏன்றேன் அடிமை;
　　இழிந்தேன் பிறப்புஇடும்பை[82]

79. திருச். விருத். 104
80. ஷை. 92
81. ஷை. 90
82. நான். திருவந். 95

என்றும் 'கிளர்ஒளிஎன் கேசவனே! கேடுஇன்றி ஆள்வாய்க்கு அடியேன் நான் ஆள்'[83] என்றும் கூறுவதைக் கண்டு மகிழலாம்.

பேயாழ்வார் சீடராயிருந்தும், இந்த ஆழ்வாரிடம் முதலாழ்வார்களின் சமரச உணர்ச்சி காணப் பெறவில்லை. குருவின் வைராக்கியம் சீடர் உள்ளத்தில் வீர வைணவமாகப் பரிணமித்தது. இவர் காலத்தில் சமய வாதங்கள் பெருகத் தொடங்கின என்றும், சைவ-வைணவ வேறுபாடு அதிகப் பட்டதென்றும் ஊகிக்க முடிகின்றது. எனினும் இவருடைய வாழ்க்கையாலும் உபதேச மொழிகளாலும் வைணவத்திற்கு ஆழமும் வேகமும் அதிகரித்தன என்பதையும் காண முடிகின்றது. தமிழ்ப் பொதுமக்கள் இவரையும் முதலாழ்வார்களோடும் காரைக்கால் அம்மையார், திருமூலர் முதலான சிவனடியார்களோடும் சேர்த்துத் தமிழ்ப் பெருமுனிவர்களாகவே போற்றிப் பெருமைப் படுத்தினார்கள் என்ற வரலாற்று உண்மையையும் இப்போது நாம் சிந்திக்கின்றோம்.

முதலாழ்வார்களும் திருமழிசையாழ்வாரும் தோன்றிய பகுதி தொண்டை நாடு என்று அக்காலத்தில் வழங்கியது. காளத்தியும் இதில் அடங்குவதால், இப்போது நாம் இருக்கும் நகிரி என்ற ஊரும் தொண்டை நாட்டைச் சேர்ந்ததே. தொண்டை நாடு சான்றோர்கள் உடைய நாடு. இங்கிருந்துதான் வைணவ இயக்கம் தெற்கிலுள்ள சோழ நாட்டிலும் மலைநாடாகிய சேர நாட்டிலும் கடைக்கோடியிலுள்ள பாண்டி நாட்டிலும் பரவியது. இதுகாறும் கரை கட்டிய காவிரிபோல், உள்ளடங்கிப் பக்திப் பெருவெள்ளம், சேர, சோழ, பாண்டிய நாடுகளில் கரை புரண்டோடும் மிகப் பெரிய வெள்ளமாகிறது என்ற உண்மையும் நமது வரலாற்றுக்கண் பின் நோக்கிப் பார்த்து நமது வரலாற்று உணர்வை மகிழ வைக்கின்றது.

83. ஷெ. 59

இத்தகைய பக்திப் பெருக்கிற்குக் காரணமாக இருந்த பக்தி சாரரை—திருமழிசையாழ்வாரை—வைணவ உலகம்,

அன்புடன் அந்தாதி
தொண்ணூற்றாறு உரைத்தான்வாழியே!
அழகாரும் திருமழிசை
அமர்ந்தசெல்வன் வாழியே!

இன்பமிகு தையில்மகத்
திங்குதித்தான் வாழியே!
எழிற்சந்த விருத்தம்நூற்
றிருப தீந்தான் வாழியே.

முன்புகத்தில் வந்துதித்த
முனிவனார் வாழியே!
முழுப்பெருக்கில் பொன்னிஎதிர்
மிதந்தசொல்லோன் வாழியே!

நன்புவியில் நாலாயிரத்
தெழுநூற்றான் வாழியே!
நங்கள்பத்தி சாரனிரு
நற்பதங்கள் வாழியே![84]

என்று வாழ்த்தி மகிழ்கின்றது. நாமும் அந்தப் பெரு உலகில் ஒன்றாகக் கலந்து ஆழ்வாரை வாழ்த்தி மகிழ்வோம்.

---

84. அப்புள்ளை: ஆழ்வார்கள் வாழித் திருநாமம்—4

# 5. தொண்டரடிப் பொடிகள்*

அன்புமிக்க சங்கச் சான்றோர்களே, தமிழார்வம் கொண்டு வந்திருக்கும் ஊர்ப் பெருமக்களே,

வணக்கம். கரும்பு தின்னக் கூலி கொடுப்பது போல் பல்கலைக்கழக மானியக்குழு ஏற்படுத்தியுள்ள திட்டத்தின் கீழ் இச்சொற்பொழிவு நடைபெறுகின்றது. இத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிழைப்பின் நிமித்தம் நம் சொந்தவூரையும் தமிழகத்தையும் துறந்து பல்வேறு தொழில்களை மேற்கொண்டு சிதறிக்கிடக்கும் நாம் ஒன்று கூடுகின்றோம். கூடும்போது காலத்தைப் பயனுள்ள முறையில் செலவழிக்கின்றோம். கலந்து பழகும் வாய்ப் பினைத் தவிர நம் அனைவருக்கும் பரம்பரைச் சொத் தாகிய தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் பற்றிச் சிந்திக்கும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொள்ளு கின்றோம்.

தமிழ் இலக்கியக் கருவூலத்தில் பக்தி இலக்கியப் பகுதி மிகப் பேரளவில் விரிந்து கிடக்கின்றது. சைவ இலக்கியப் பகுதியில் திருமுறை இலக்கியம் செல்வாக்கு மிக்கது; படிக்கப் படிக்க இலக்கியச் சுவையை வளர்ப்பதுடன்

---

* திருவேங்கடவன் பல்கலைக்கழக விரிவுச் சொற் பொழிவுத் திட்டத்தில் 31-1-68 அன்று குண்டக்கல் தமிழிசைச் சங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு.

பேரின்பம் பெறும் மறுமையுலகத்திற்கும் வழிகாட்டுவது. இங்ஙனமே வைணவ சமய இலக்கியப் பகுதியில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தமிழகத்தில் வைணவப் பெரு மக்களால் பெரிதும் போற்றப்பெறும் சிறந்த பக்தி நூலாகத் திகழ்கின்றது. ஆனால் சைவ இலக்கியம் மக்க ளிடையே பரவியிருப்பது போல் வைணவ இலக்கியம் அதிக மாகப் பரவவில்லை என்பதைக் காணும்போது மிகுந்த வருத்தத்தைத் தருகின்றது. நானும் வித்துவான், எம். ஏ., பட்டங்கள் பெற்றபின் என் இலக்கிய அறிவை நினைவு கூரும்போது வைணவ இலக்கியம் பற்றிய அறிவு மிகச் சிறிய அளவில்தான் இருந்ததைக் கண்டேன். ஆழ்வார்கள் பன்னிருவர் என்பதைத் தெரிந்து கொண்டிருந்தேனே அன்றி அவர்கள் நமக்கு நல்கியுள்ள அருளிச் செயல்களைப் பற்றிச் சிறிதும் அறிந்து கொள்ளாத நிலையில் இருந்தேன். இந்தக் குறையைப் போக்குவதற்காக எம்பெருமான் ஏழுமலையான் ஒரு யுக்தியைக் கையாண்டு என்னை இந்த இலக்கியத்தில் ஈடுபடச் செய்தான்.

அவன் கையாண்ட உக்திதான் என்ன? பல்கலைக் கழகத்தில் எப்படியாவது புகுந்து கொண்டு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற விருப்பத்தைத் தந்தானே யன்றி, அங்குப் பணிகிடைக்காத நிலையையும் உண்டாக்கினான். துறையூரில் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியனாகப் பணியாற்றியபொழுது தமிழை ஆழ்ந்து கற்க வாய்ப்பு களை நல்கினான். இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு வித்துவான், எம். ஏ. பட்டங்களைப் பெற்றேன். பெற்ற பிறகு வாழ்க்கையில் பல சிக்கல்களைத் தோற்று வித்தான்; சிந்தனையையும் மயங்க வைத்தான். இஃது ஒரு பெரியகதை. இதைப் பன்னியுரைக்கில் பாரதமாக விரியும். என் வாழ்க்கையில் நேரிட்ட பல நிகழ்ச்சிகளையும் தொகுத்து நினைவுக் குமிழிகள் என்ற தலைப்பில் ஐந்து பகுதிகளாக வெளியிடுகிறேன்; அவற்றில் தெரிந்து கொள்ள லாம்.

முதலில் கல்லூரியில் நுழையும் விருப்பத்தை வளர்த்தான். ஈராண்டுகள் (1948-50) என் வாழ்க்கையில் ஒரு குழப்பத்தை விளைவித்து விளம்பரங்களைப் பார்த்து விண்ணப்பங்கள் அனுப்பும் வாய்ப்புகளையும் தவிர்த்தான்; மயக்க உணர்வை ஏற்படுத்திச் சிந்தனையின்றிச் செய்து விட்டான். இந்நிலையில் ஒருநாள் காரைக்குடி 'கம்பன் அடிப்பொடி'[1] யிடமிருந்து தந்தி ஒன்று வந்தது. "புதிதாகத் திறக்கப் பெற விருக்கும் அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சேரவேண்டியது" என்று. பருத்தி புடவையாய்க் காய்த்தது போலாயிற்று. எம்பெருமான் திருவுள்ளத்தை யாரால் அறியமுடியும்? அவன் திருவுள்ளக் குறிப்பு 'கம்பன் அடிப்பொடி' மூலம் செயற்பட்டதை உள்ளுந்தோறும் உடல் சிலிர்க்கின்றது. அன்றிருந்து எம்பெருமான் என்னை உயர்நிலைக் கல்விக்கு ஆளாக்கிவிட்டான். காரைக்குடியில் பத்து ஆண்டுகள் சீரும் சிறப்புமாகப் பணியாற்றித் திருப்பதி வந்து சேர்ந்தேன். இது ஏழுமலையானின் திட்டம்.

திருப்பதி வந்த பிறகுதான் டாக்டர் பட்ட ஆய்விற்கும் வழி அமைந்தது. சேர்ந்த இடம் ஒரு வைணவத் தலம்; உலகப் புகழ் பெற்ற தலம். எனக்கு வழிகாட்டியாக அமைந்தவர் டாக்டர். வே. வரதாச்சாரி என்ற உண்மை யான வைணவப் பெருமகன்; வடமொழித் துறையில் பணியாற்றுபவர். சைவ சித்தாந்தத்தில் 'சார்ந்ததன்

---

1. இவர் சா. கணேசன். உண்மையான காந்தியவாதி. தம் வாழ்நாட்களையெல்லாம் நாட்டுக் குழைத்தவர். கம்பனை பொதுமக்கட்குக் காட்டியவர். சுமார் அரை நூற்றாண்டு காலம்—தாம் திருநாடு அலங்கரிக்கும் வரை ஆண்டுதோறும் 4 நாட்கள் கம்பனுக்குத் திருநாள் எடுத்தவர். 'கம்பன் அடிப் பொடி' என்ற பெயரால் புகழ் பெற்று விளங்கியவர். காரைக்குடி அழகப்பா அறநிலை யத்தில் செல்வாக்கு மிக்க அறங்காவலராகத் திகழ்ந்தவர்.

வண்ணமாதல்' என்ற தத்துவம் உண்டு. அதன்படி சைவனாகப் பிறந்தவன் வைணவனானேன்; ஏழுமலையான் என்னை உள்ளத்தால் வைணவனாக்கி விட்டான். ஆகவே 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்-நம்மாழ்வார் தத்துவம்' என்ற தலைப்பை என் ஆய்வுப் பொருளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளாக ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டு வருகின்றேன். இந்த நிலையில்தான் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய 'தொண்டரடிப் பொடிகள்' பற்றி உங்கள் முன் பேச நிற்கின்றேன்.

**தொண்டரடிப் பொடிகள் :** இவர் திருமாலை (45 பாசுரங்கள்), திருப்பள்ளி எழுச்சி (10 பாசுரங்கள்) என்ற இரண்டு பிரபந்தங்களை அருளியவர். இவை நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் — முதலாயிரத்தில் திருமழிசைபிரானின் திருச்சந்த விருத்தத்தை அடுத்து வைக்கப் பெற்றுள்ளன. நாலாயிரத்தைத் தொகுத்து அடைவு படுத்திய நாதமுனிகளின் ஏற்பாடு இது. நாலாயிரத்தில் 24 பிரபந்தங்கள் உள்ளன. இதில் 23 பிரபந்தங்கள் 12 ஆழ்வார்கள் அருளிச் செய்தவை. இராமாநுசர் காலத்தில் திருவரங்கத்தமுதனார் அருளிய 'இராமாநுச நூற்றந்தாதி' என்ற பிரபந்தம், மதுர கவிகளால் நம்மாழ்வார் பற்றிப் பாடம் பெற்ற 'கண்ணிநுண் சிறுத் தாம்பு' இடம் பெற்றது போல், இஃது நாலாயிரத் தொகுப்பில் இடம் பெற்றது. மதுர கவிகளின் பிரபந்தம் முதலாயிரத்தில் திருப்பாணாழ்வாரின் 'அமலனாதிபிரான்' என்ற பிரபந்தத்தை அடுத்து இறுதிப் பிரபந்தமாக இடம் பெற்றுள்ளது. 'இராமாநுச நூற்றந்தாதி' இயற்பாத் தொகுதியில் திருமங்கையாழ்வாரின் மூன்று பிரபந்தங்களை அடுத்து இறுதிப் பிரபந்தமாக இடம் பெற்றுள்ளது. இத்துடன் இதை விட்டு தொண்டரடிப்பொடிகள் பற்றிச் சிந்திப்போம்.

**பிறப்பும் வளர்ப்பும் :** இந்த ஆழ்வார் சோழ நாட்டில் திருமங்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப் பெற்ற **திருப்புள்ளம் பூதங்குடி**[2] என்னும் திவ்விய தேசத்தின் அருகில், சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தொலைவில், **திருமண்டங்குடியில்** அவதரித்தவர். பிறந்தநாள் மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரம். இவரைத் திருமாலின் **வைஜயந்தீ** என்னும் வனமாலையின் அம்சமாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். தந்தையார் வேத விசாரதர் என்ற முன் குடுமிப் பிராமணர்; தாயார் பெயர் அறியக் கூடவில்லை. தந்தையார் இவருக்கு இட்ட பெயர் **விப்ரநாராயணர்.** உரிய காலங்களில் உபநயநம் முதலிய வைதிக சம்ஸ்காரங்களைச் செய்வித்துத் தாமே வேத சாத்திரங்களைப் பயிற்றுவிக்கின்றார். விப்ர நாராயணரும் நான்கு வேதம் ஆறு சாத்திரங்கள் இவற்றை முறையாகக் கசடறக் கற்று வல்லவராகின்றார். பெற்ற கல்விக் கேற்பவும் வளரும் சூழ்நிலைக் கேற்பவும் சத்துவ குணமே தலையெடுத்து ஞான பக்தி வைராக்கியங்களுடன் தந்தையார் தாயார்க்கு மகிழ்வடைய வாழ்ந்து வருகின்றார். இங்ஙனம் இருக்கையில் சேனை முதலியார் வைகுந்தத்தினின்றும் எழுந்தருளி இவருக்கு உரிய சமாச்ரயணம் முதலிய சடங்குகளை நிறைவேற்றி வைக்கின்றார்.

**கோயில் வாசம் :** திருமந்திரப் பொருளை நன்கு அறிந்த விப்ர நாராயணர் கருணைக் கடலான கமலைக்

---

2. மயிலாடுதுறை — திருச்சி இருப்பூர்தி வழியிலுள்ள சுவாமிமலை என்ற நிலையத்திலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. நிலையத்திலிருந்து மாட்டுவண்டி, குதிரைவண்டி இவற்றைக் கொண்டுதான் செல்ல வேண்டும். என் துணைவியுடனும் செல்வர்கள் இருவருடனும் 1968 ஜூன் திங்களில் கும்பகோணத்தில் தங்கி ஒன்பது தலங்களைச் சேவித்தபோது இந்தத் திவ்வியத் தேசமும் ஒன்றாக அமைந்தது. திருமண்டங்குடி சேவிக்க இறையருள் இல்லை.

கேள்வனது அநந்த கல்யாண குணங்களில் ஆழ்ந்த சிந்தையுடையவராகின்றார். இதனால் இம்மையின்பத்தை இகழ்ந்து திருமணத்தில் விருப்பமற்று மாணி வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றார். திவ்விய தேசங்களில் சென்று எம்பெருமானை மங்களா சாசனம் செய்யக் கருதுகின்றார். முதன் முதலாகத் திருவரங்கம் பெரிய கோயிலை வந்தடைகின்றார். அங்கு இரு காவிரிகளுக்கும் நடுவே அரவணைப் பள்ளியில் அறிதுயில் புரியும் அரங்க நகர் அப்பனைச் சேவிக்கின்றார். இத்திருக்காட்சி அவர் தம் உள்ளத்தில் ஆழப் பதிந்து விடுகின்றது. இது,

**குடதிசை முடியை வைத்துக்**
**குணதிசை பாதம் நீட்டி**
**வடதிசை பின்பு காட்டித்**
**தென்திசை இலங்கை நோக்கி**
**கடல்நிறக் கடவுள் எந்தை**
**அரவணைத் துயிலு மாகண்டு**
**உடலெனக்(கு) உருகு மாலோ!**
**என்செய்வீர் உலகத் தீரே!**[3]

என்று பின்னர் தாம் அருளிச் செய்த திருமாலையில் ஒரு பாசுரமாக அமைந்து விடுகின்றது.

இப்பாசுரத்தில் பெரியபெருமாள் நான்கு திக்குகளுக்கும் தம் சம்பந்தம் உண்டாகும்படி அரவணைப் பள்ளியனாய் அறிதுயில் செய்தருள்வதைச் சேவித்துத் தமது உடல் நீர்ப் பண்டமாய்க் கரைந்து உருகிச் செயலற்றிருத்தலை உலகத்தார்க்கு வியப்போடு அறிவிக்கின்றதைக் கண்டு மகிழ்கின்றோம். பூமியின் படைப்பு மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் வாழ்வதற்காக என்றும் ஆகாயத்தின் படைப்பு தேவர்கள் வாழ்வதற்காக என்றும் ஏற்பட்டிருக்கின்றது. திக்குகளின் படைப்பு வீண் என்று

3. திருமாலை. 19

நினைக்க வேண்டா. சேதநர்க்குத் தம்மீது அன்பை உண்டாக்குமாறு எம்பெருமான் தான் பள்ளி கொள்ளுவதற்காகவே திக்குகளைப் படைத்துள்ளான் என்று இப் பாசுரத்திற்குச் சிறப்புப் பொருளும் உரைப்பர் வைணவப் பெருமக்கள்.

நான்கு திக்குகளும் பெரியபெருமாளின் படுக்கையால் பயன் பெறுகின்றனவாம். மேற்குத்திக்கு — தாம் விண்ணுலகத்திற்கும் மண்ணுலகத்திற்கும் தலைமை வகித்தலைத் தெரிவிக்குமாறு தான் சூடிய கிரீடத்தை (திருவபிஷேகத்தை)யுடைய திருமுடியை வைப்பதனால் சிறப்படைகின்றது. கீழைத்திக்கு—எல்லா உலகங்களும் உய்யும்படி சரணமடைவதற்குரிய தனது திருவடிகளை நீட்டுவதனால் பெருமை அடைகின்றது. வடக்குத்திக்கு— முரட்டு சமஸ்கிருதம் நடையாடுவதாகி ஆழ்வார்களின் செவிக்கினிய ஈரச்சொல் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கிலுள்ளாரும் ஈடேறுவதற்கு ஏற்பட வேண்டிய பின்னழகையெல்லாம் காட்டுவதனால் மேன்மை பெறுகின்றது. தெற்குத்திக்கு –தனது அந்தரங்க பக்தனான விபீடணாழ்வானுக்காகத் தனது திருக்கண்களை வைத்து அன்போடு நோக்குவதனால் சிறப்படைகின்றது. இங்ஙனம் நான்கு திக்குகளிலுள்ளாரும் பயன் பெற வேண்டும் என்று ஒரு காரணம் காட்டி எம்பெருமான் பள்ளிகொண்டதும் ஆழ்வார் பொருட்டாயிற்று என்ற கருத்து 'கடல் நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமாகண்டு' என்ற மூன்றாம் அடியில் தோன்றுவதைக் கண்டு மகிழலாம். 'எந்தை' என்ற சொல்லில் அழுத்தம் தந்து படித்து இப் பொருள் வருவதைக் கண்டு மகிழ வேண்டுகிறேன். நான்காம் அடியில், ''ஆற்றுப் பெருக்கிலே அருகிலுள்ள கரைகள் உடைந்தால் கரையைப் பாதுகாப்பவர்கள் கைவிட்டுக் கிடக்க நின்று கூப்பிடுமாப் போலே கூப்பிடுகின்றார். பெரிய பெருமாள் அழகைக் கண்டு குறியழியாது புறப்படுகின்ற சம்சாரிகளைப் பார்த்து 'உங்களைப் போலே உடல்

உருகாதே கல்லாயிருப்பதற்கு ஒரு வழி சொல்லமாட்டீர் களோ?" என்கின்றார்.'' இப்படியெல்லாம் சிந்தித்து இப் பாசுரத்தை அநுபவித்து மகிழவேண்டும்.

இங்ஙனம் தம்மைச் சேவித்த ஆழ்வாரை, நம் பெருமாள் தம் வடிவழகினால் தம் பக்கல் மிக்க பக்தியுடைய வராகும்படிச் செய்தருளுகின்றார். ஆழ்வாரும் வேறு திவ்விய தேசப் பயணத்தை மேற்கொள்ளாமல் திருவரங்கத் திலேயே தங்கி விடுகின்றார். பெரியபெருமாளுக்கு ஏதாவது ஒரு கைங்கரியம் செய்து தம் வாணாளைப் பயனுள்ளதாகக் கழிக்க விரும்புகின்றார். பெரியாழ்வார் சிரீவில்லிபுத்தூர் ஆலிலைப் பள்ளியானுக்கு மலர்த் தொண்டு செய்து வந்ததைப் போலவே தாமும் அரங்கநகர் அப்பனுக்கு பல்வகை மலர்கள், திருத்துழாய் சமர்ப்பிப் பதையே ஏற்ற கைங்கரியமாகக் கடைப்பிடிக்கின்றார். சிறந்ததொரு நந்தவனத்தை அமைத்து, காலந்தோறும் பலவகைப் பூமாலைகளையும் திருத்துழாய் நன்மாலை களையும் கட்டிப் பெருமாளுக்குச் சாத்தியும் தமது மாணி நிலைக்கேற்ப அந்தணர் திருமாளிகையில் அன்னபிட்சை வாங்கி அமுது செய்தும் காலம் கழித்து வருகின்றார்.

**தேவதேவியின் வருகை:** இங்ஙனம் இவர் திருவரங்க நாதனுக்குத் திருத்தொண்டு புரிந்து வருகையில் திருவரங் கத்திற்குச் சற்று வடக்கில் இருப்பூர்தி வழியையொட்டி இருக்கும் **உத்தமர் கோயில்** [4] என்ற திருத்தலத்தில் **தேவதேவி** என்ற விலைமாது பிறந்து வளர்ந்து வருகின்றாள். இவள் தேவ மாதர் அம்சமாய்ப் பிறந்தவளாதலால் பேரழகுடன் திகழ்கின்றாள். ஒருநாள் இவள் தன் தோழிமாரோடும் தமக்கையோடும் உறையூருக்குப் போந்து சோழ அரசனது

---

4. இது இப்பொழுது இருப்பூர்தி நிலையம். இருப் பூர்தி வழியை திருச்சி-சேலம் பேருந்து வழி வெட்டிச் செல்லுகின்றது. உத்தமர் கோயில் (கரம்பனூர்) 108 **திவ்விய தேசங்களில் ஒன்று.**

முன்னிலையில் ஆடல் பாடல்களை நிகரின்றி நிகழ்த்தி அரசனை மயக்கி அளவிறந்த செல்வத்தை அவனிடம் பெற்று மிக்க கர்வத்துடன் திரும்புகின்றாள். இங்ஙனம் மீண்டு வருகையில் திருவரங்கத்தை அடைகின்றாள். இளைப்பாறுதற் பொருட்டு ஆழ்வாரின் நந்தவனத்தில் ஒரு புறத்தில் ஒரு மரத்தினடியில் தங்குகின்றாள். இந்த அழகிய நந்தவனத்தின் நாற்புறங்களையும் உற்றுநோக்கி அம்மலர்ச்சோலையை தன்னுடையதுபோல் பாவித்துக் கொண்டு அதில் பூக்கொய்தும் புனல் விளையாடியும் பொழுது போக்க விரும்புகின்றாள். இந்தப் பூம்பொழிலுக்கு உரியவரைக் கண்டு தன் வசப்படுத்திக்கொள்ள நினைக்கின்றாள். இந்த எண்ணத்துடன் அந்த நந்தவனத்தைச் சுற்றித் தம் தோழிமாருடன் உலா வருகின்றாள்.

இந்நிலையில் இந்த நந்தவனத்திற்குரிய விப்ர நாராயணர் பளபளவென்று ஒளிரும் திருப்பரிவட்டத்தைச் சாத்திய நிலையிலும் பன்னிரண்டு திருமண் காப்புகள் தம் திருமேனியில் திகழும் பொலிவுடனும் தாமரை மணிமாலை துளசிமணி மாலைகள் தம் திருக்கழுத்தை அலங்கரிக்கவும் பூஞ்செடிகளுக்குப் பாத்தி கட்டியும் தண்ணீர் பாய்ச்சியும் நந்தவனத் திருப்பணியில் ஈடுபட்டிருப்பதைக் கண்ணுறுகின்றாள். உடனே அவள், அவர் அருகில் வந்து முன்னின்று அவரைத் தொழுது வணங்குகின்றாள். தனது உடலழகையும் உறுப்பு நலன்களையும் காட்டிச் சில காமத்தை எழுப்பும் சேட்டைகளைச் செய்கின்றாள். விஷயாந்தரங்களில் குருடராகிய அவளை கண்ணெடுத்தும் பாராது அவளைத் தவிர்த்துத் தம் கைங்கரியத்தில் கருத்தூன்றி இருக்கின்றார். இதைக் கண்ட தேவதேவி வியப்பெய்துகின்றாள். தன் தமக்கையிடம், "அரசர் முதலிய பலரையும் எளிதில் வசப்படுத்துகின்ற அழகிற் சிறந்த யான், யான் சென்று எதிர்நிற்கவும் பாராமுகமாக இருக்கின்ற இவன் பித்தனோ? பேடனோ?" என்று கூறுகின்றாள். இதனைக் கேட்ட அவள் தமக்கை "பித்தனுமல்லன்; பேடனும்

அல்லன்; அரங்கன் கைங்கரியத்தில் ஊற்றம் மிக்க மகாவிரத் தன்; இவனை வசப்படுத்த நின்னாலாகாது'' என்று மறுமொழி தருகின்றாள். வடிவழகில் இறுமாப்புடைய தேவதேவி ''இவனை என் வலைக்குள் சிக்கவைக்காமல் விடப்போவதில்லை'' என்று உறுதி கூறுகின்றாள். தமக் கையோ ''நீ அவனை அங்ஙனம் செய்தால் நான் உனக்கு ஆறு திங்கள் அடியவளாவேன்'' என்று சூளுரைக்க, தங்கையும், ''நான் அவனை அங்ஙனம் செய்யேனாயின், ஆறுமாத காலம் உனக்குத் தொழுத்தையாவேன்'' என்று எதிர் சூளுரைக்கின்றாள்.

**சமயம் நோக்கும் தேவதேவி:** தேவதேவி அவரை தன் வசப்படுத்துவதற்குரிய தக்க சமயத்தை எதிர் நோக்கியிருக் கின்றாள்.

> **ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
> **கருதி இடத்தாற் செயின்** [5]

என்ற வாய்மொழியை நன்கு அறிந்தவள் தேவதேவி. ஒரு நாள் அவள் தன் அணிகலன்கள் யாவற்றையும் கழற்றிக் கொடுக்கின்றாள்; அவளையும் தோழியரோடு இல்லத்திற்கு அனுப்பி விடுகின்றாள். தான் மெல்லியதொரு செங்காவிச் சேலையை உடுத்திக்கொண்டு விப்ரநாராயணரிடம் வரு கின்றாள்; அவர் திருவடிகளில் விழுந்து வணங்குகின்றாள். நாராயணர், ''பெண்ணே நீ யார்? இங்கு வந்த காரணம் யாது?'' என்று கேட்கின்றார். அதற்கு அவள், ''அடியேன் முற்பிறப்பில் செய்த தீவினையால் விலை மாதாகப் பிறந்தேன். அடியேனை என் தாய் குலத்தொழிலை மேற் கொள்ளுமாறு வற்புறுத்துகின்றாள். நான் அதற்கு இசையாமல் அவளைத் துறந்து திருமாலடியாரான தேவரீரது திருவடியைச் சரணமடைந்து உய்வுபெற நாடி வந்துள்ளேன். கருணைக் கடலான தேவரீர் அநாதையான அடியேனைக் காத்தருள வேண்டும். செடிகட்கு நீர்

5. குறள்-484 (காலமறிதல்)

வார்த்தல், மலர்கொய்தல், மாலை கட்டுதல், தேவரீர் இல்லாதபோது சோலையைப் பாதுகாத்தல் முதலிய பணிகளில் எதை நியமித்தாலும் செய்துவரக் காத்து இருக்கின்றேன்'' என மிகப் பணிவோடும் வணக்கத் தோடும் விண்ணப்பம் செய்கின்றாள். விப்ரநாராயணரும் அவளுடைய கபட எண்ணத்தை உணராமல் அவளுடைய விருப்பத்திற்கு உடன்படுகின்றார். அவளும் தாம் இட்ட பணியைச் செய்து வருகின்றாள்; தாம் உண்டது போக மிகுந்த உணவை அவளுக்குக் கொடுத்து வருகின்றார். தேவதேவியும் அதனை உட்கொண்டு நந்தவனத்தில் பாத்தியமைத்தல், நீர்வார்த்தல் முதலிய குற்றேவல்களை மிகவும் ஊக்கத்துடன் செய்து கொண்டு தோட்டத்தைச் செழிப்புடன் வளர்த்து வருகின்றாள். தன்னிடத்தில் விப்ரநாராயணருக்கு மிகவும் நம்பிக்கையுண்டாகும்படி பணி செய்து வருகின்றாள்.

**தேவதேவியின் வலையில் சிக்குதல்:** இங்ஙனம் பல மாதங்கள் கழிகின்றன. ஒருநாள் பெருமழை பெய்கின்றது. அப்போது விப்ரநாராயணர் பர்ணசாலையுள் இருக்கின்றார். தேவதேவி வெளியில் மழையில் நனைந்து வருந்துதலைக் காண்கின்றார். அவள்பால் இரக்கங் கொண்டு உள்ளே வந்து நிற்குமாறு பணிக்கின்றார். அதுவே காரணமாகக் கொண்டு அவளும் அருகில் வந்து தனது தேன்மொழிகளாலும், மேனி மினுக்கினாலும் அந்தணரின் மனத்தைக் கவர்கின்றாள். அவரும் அவள் வலையில் சிக்கிக் கொள்ளுகின்றார். சில காலம் இவர்கள் இன்பமுடன் வாழ்கின்றனர். அந்தணரிடம் இருந்த செல்வம் யாவும் செலவழிந்து விடுகின்றது. தேவதேவியும் பொருளில்லாத அந்தணரைப் பொருள் செய்யாது கை விட்டுத் தன் இல்லத்திற்குப் போய் விடுகின்றாள்.

> அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
> இன்சொல் இழுக்குத் தரும்.[6]

---

6. குறள் - 911 (வரைவின் மகளிர்)

என்பதை அந்தணர் உணராதது விசனிக்கத் தக்கது. இறைவன் திருவருள்தான் இங்ஙனம் நடைபெறச் செய்தது போலும்! அந்தணரால் இவள் பிரிவை ஆற்றியிருக்க முடியவில்லை. அவள் வீட்டைச் சுற்றி வட்டமிடுகின்றார்; திண்ணையில் தயங்கித் தயங்கி நிற்கின்றார். பேரின்பத்தை நாடி நின்ற பெருமகனாரின் மனம் சிற்றின்பத்தை நாடி நிற்கும் — ஓங்கி நிற்கும் — நிலையைக் கண்டு யார்தான் நகைக்காமல் இருக்க முடியும்? பொது மக்கள் ஏளனத்திற் குரியவராகின்றார்.

> **தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
> **நிலையின் இழிந்தக் கடை[7]**

என்ற வள்ளுவர் வாய்மொழியும் நம் நினைவிற்கு வருகின்றது. அந்தக் காலத்தில் விப்ரநாராயணரின் நிலை பொது மக்கள் மதிப்பீட்டில் இப்படித்தான் ஆயிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

**நம்பெருமாளின் கருணை:** விப்ரநாராயணரின் செயல்களை அறிதுயில் கொண்டிருக்கும் அரங்கநாதன் கவனித்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். இந்நிலையில் யாவர்க்கும் தாயாகிய பெரியபிராட்டியார் பெருமாளை நோக்கி "நாதா, நமக்குப் பலகாலமாகப் பணிசெய்து வந்த விப்ரநாராயணன் அதனை முழுதும் ஒழித்து விட்டு ஒரு விலைமாதிற்குத் தொண்டு பூண்டான். இப்போது அவள் புறக்கணிக்கவும் மனம் திரும்பாது அவள் புறக்கடை பற்றி ஏங்கி நிற்கின்றானே. இப்படி அவனைத் தேவரீரின் மாயைக்கு இலக்காக்கலாமோ? இதுவும் உங்கட்கு ஒரு திருவிளையாட்டுப் போலும்! இனி அவனை விரைவில் மீட்டு முன்போல் ஆட்கொண்டு தங்களது அந்தரங்க பக்தனாக்கியருள வேண்டும்" என்று வேண்டுகின்றாள். சேதநனை அருளாலும் ஈசுவரனை அழகாலும் திருத்துபவள்[8] அல்லவா பெரிய பிராட்டியார்?

---

7. குறள் - 964 (மானம்)
8. ஸ்ரீவசன பூஷணம் - 14.

அரங்கநாதனும் அரங்கநாச்சியாரின் வேண்டு கோட்குச் செவிசாய்க்கின்றான். தமது திருக்கோயில் பாத்திரங்களுள் பொன்வட்டில் ஒன்றை எடுத்துக் கொண்டு ஒரு பணியாளன் வடிவத்தை மேற்கொண்டு விலைமாதின் வீட்டில் படியாய்க் கிடக்கும் விப்ரநாராயணருக்குத் தெரியாமல் தேவதேவியின் இல்லத்திற்கு எழுந்தருள் கின்றார்; வாயிற் கதவைத் தட்டுகின்றார். தேவதேவி உள்ளிருந்தபடியே "நீ யார்? எங்கு வந்தாய்?" என்று கேட்கின்றாள், நம் பெருமாள், 'அடியேன் அழகிய மணவாள தாசன் விப்ரநாராயணர் அனுப்பவந்தேன்" எனகின்றார். இந்த விடை கேட்டு தேவதேவி உடனே திருக் காப்பு நீக்குகின்றாள். "வந்த வேலை என்ன?" என்று வினவுகின்றாள். அரங்கநாதன் தான் கொணர்ந்து வந்த பொன்வட்டிலை அவள் கையில் கொடுத்து, "அம்மையே, இந்தப் பொற்கலத்தை விப்ரநாராயணர் உன்னிடம், தருமாறு சொல்லி அனுப்பினார்" என்று சொல்லுகின்றார். அவளும் மிக்க அன்புடன் "அவரை உள்ளே வரச்சொல் லும்" என்று இசைவு தருகின்றாள். பத்துடை அடியவர்க்கு எளியனான எம்பெருமான் விப்ரநாராயணரிடம் வந்து, "தேவதேவி உம்மை உள்ளே வரச் சொன்னாள்" என்று சொல்லிவிட்டுத் தம் போக்கில் சென்று விடுகின்றான். செவிக்கினிய அச் செஞ்சொல் விப்ரநாராயணருக்கு தேனாய் — தேவாமிர்தமாய் — இனிக்கின்றது; உள்ளங் குளிர்கின்றது; உடலும் பூரிக்கின்றது. தேவதேவியின் இல்லத்தினுள் சென்று விடுகின்றார்.

**விப்ரநாராயணனுக்குத் தண்டனை:** அன்று இரவு ஒருவாறு கழிந்து பொழுதும் புலர்கின்றது. அரங்கநாதன் சந்நிதியின் திருக்காப்பு நீக்கியவுடன் பாத்திரங்களுள் சிறந்ததொரு பொன்வட்டில் காணப்பெறாமை தெரி கின்றது. கோயில் அதிகாரிகள் செய்தியை அரசுக்கு அறிவிக்கின்றனர். அரசும் உடனே நடவடிக்கை எடுக் கின்றது. களவு கண்டு பிடித்தற் பொருட்டு அர்ச்சகர்,

பரிசாரகர் முதலிய கோயிலில் அந்தரங்கமாகப் பணியாற்று வோர்களைப் பிடித்துப் பலவாறு தண்டித்து வருத்து கின்றனர். ஆனால் ஒருவர் மீதும் குற்றம் காணப் பெற வில்லை. மேலும் புலன் விசாரித்து வருகையில் தேவ தேவியின் திருமாளிகையில் அந்த வட்டில் இருப்பதாக அவ் வீட்டுப் பணிப்பெண் ஒருத்திமூலம் செய்தி கிடைக்கின்றது. அரசு ஆட்கள் தேவதேவியின் வீட்டிலுள்ள அனைவரையும் குற்றவாளிகளாக்கி அரசரின் முன்னர்க் கொண்டு போய் நிறுத்துகின்றனர். அப்போது அரசன் தேவதேவியை நோக்கிப் ''பெருமாளின் பொன்வட்டிலை நீதானோ களவாடினாய்?'' என்று கேட்கின்றான். அவள், ''யான் இந்த வட்டில் இன்னாருடையது என்பதை அறியேன்; அழகிய மணவாள தாசன் என்பானொரு தூதன் மூலமாக விப்ர நாராயணர் எனக்கு இதனை அனுப்பினார். இது தான் யான் அறிந்தது'' என்று மறுமொழி தருகின்றாள். இதற்குமேல் அரசன் விப்ர நாராயணரை விசாரிக் கின்றான். அதற்கு அவர், ''யான் ஒன்றும் அறியேன்; ஏழையான எனக்கு ஓர் ஏவலாளனும் இல்லை'' என்று பதிலிறுக்கின்றார். இங்ஙனம் இரு தரப்பினர் வாய்மொழி யையும் கேட்டபின் அரசன் நன்கு ஆலோசித்துக் 'களவாடிய பொருளை வாங்கியவர் செலுத்த வேண்டிய அபராதப் பொருளைக்' கட்டும்படி தேவதேவிக்கு விதிக் கின்றான். அக்காணிக்கையையும் பொன்வட்டிலையும் பெருமாள் சந்நிதிக்குச் சமர்ப்பிக்கின்றான். பொற்கள்வ னுக்கு உரியதண்டனையை ஆராய்ந்து விதிப்பதற்காக விப்ரநாராயணரைச் சிறையிலிடுகின்றான்.

**நாராயணரின் விடுதலை :** மீண்டும் ஒருநாள் சீரங்க நாயகி 'விப்ர நாராயணரைத் தேவரீர் தங்கள் திருவிளை யாட்டுக்குப் பொருளாக்காமல் கருணைக்கு இலக்காக்க வேண்டும்'' என்று முறையிடுகின்றாள். பெரியபெருமாள் அதனை அங்கீகரிக்கின்றார். அன்றிரவே எம்பெருமான் அரசனின் கனவில் தோன்றி ''விலைமாதினிடம் காதல்

கொண்ட இவ்வந்தணனுடைய வினையைக் கழித்தற் பொருட்டே, நாமே பொன்வட்டிலைக் கொண்டு போய்த் தந்து இவனைத் தண்டனைக் குள்ளாக்கினோம். உண்மையில் இவன் கள்வனல்லன். தூய்மையானவனே" என்று தெரிவிக்கின்றான். அரசன் துயிலுணர்ந்தெழுந் தவுடன் கனவின் விவரத்தை அமைச்சர் முதலியோருக்கு வியப்புடன் வெளியிடுகின்றான்; விப்ரநாராயணரையும் விடுதலை செய்து உபசரித்து அனுப்பி விடுகின்றான்.

**நாராயணர் தூய்மை பெறுதல் :** பிறவியாகிய பெருஞ் சிறையினின்றும் விடுபடுவதற்கு ஒரு முற்குறியாகக் காவல் வீடு பெற்றார் விப்ரநாராயணர் என்றே நமக்குத் தோன்றுகின்றது. தண்டனையும் ஒரு முறையில் இறைவனின் திருவருளேயாகும் என்ற உண்மைக்கு இந்த அந்தணரின் சிறைத் தண்டனை ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. விப்ரநாராயணரும் தாம் துளவத் தொண்டு துறந்து வைதிக ஒழுக்கத்தை மறந்து பொருட் பெண்டிர் பொய்மை முயக்கத்தில் ஆழ்ந்து கடை கெட்டவனாய் அலைந்து திரிந்ததை நினைந்து நினைந்து வேதனைப் படுகின்றார்.

**மெய்எல்லாம் போக விட்டு**
**விரிகுழ லாரில் பட்டுப்**
**பொய்எல்லாம் பொதிந்து கொண்ட**
**போழ்க்கனேன் வந்து நின்றேன்;**
**ஐயனே! அரங்கனே! உன்**
**அருள்என்னும் ஆசை தன்னால்**
**பொய்யனேன் வந்து நின்றேன்;**
**பொய்ய னேன் பொய்ய னேனே[9]**

[பொதிந்து - நிறைத்து; போழ்க்கன் - குறும்பன்]

---

9. திருமாலை - 33

என்று உள்ளம் உருகித் தாம் செய்த குற்றங்களை மறந்து மன்னித்தருளுமாறு வேண்டுகின்றார். பிறகு தன்னை மன்னித்து ஆட்கொண்ட அருட்செயலை நினைந்து,

சூதனாய்க் கள்வ னாகித்
தூர்த்தரோடு இசைந்த காலம்
மாதரார் கயற்கண் என்னும்
வலையுள்பட்டு அழுந்து வேனைப்
போதரே என்று சொல்லிப்
புந்தியுள் புகுந்து, தன்பால்
ஆதரம் பெருக வைத்த
அழகன்ஊர் அரங்கம் அன்றே[10]

[கள்வன் - திருடன்; தூர்த்தன் - காமலோலன்; போதர் - 'அடா! இங்கே வா.' புந்தி - மனம்; ஆதரம் - அன்பு]

என்று பாடி உள்ளம் உருகுகின்றார்.

தாம் மேற்கொண்ட தீய வழிகட்குக் கழுவாய் செய்து கொள்ள முயன்று பெரியோர்களைச் சார்ந்து தாம் செய்த குற்றங்களையெலாம் ஒன்று விடாமல் எடுத்துச் சொல்லி இவற்றிற்குக் கழுவாய் இன்னதென்று துணிந்து கூறியருளுமாறு வேண்டுகின்றார். அவர்களும் பல நீதி நூல்கள், அற நூல்கள் இவற்றையெல்லாம் ஆராய்ந்து, "பாகவதர்களின் ஸ்ரீபாத தீர்த்தத்தை உட்கொள்வதே எல்லாப் பாவங்களும் பரிகாரம் ஆவதற்கு ஏற்ற கழுவாயாகும்" என்று உய்வதற்கு வழிகாட்டுகின்றனர். அங்ஙனமே விப்ரநாராயணரும் அதனைப் பெற்றுப் பருகித் தூய்மையானவராகின்றார்.

**தொண்டரடிப் பொடிகள் :** பின்னர் விப்ரநாராயணர் தம் எஞ்சிய வாழ்க்கையைப் பகவான் பெருமையைப் பாடுவதிலும் மலர்த் தொண்டிலும் தம்மை உட்படுத்திக்

10. திருமாலை - 16

கொள்ளுகின்றார்; பாகவர்கட்குப் பணி செய்வதையும் கடமையாகக் கொள்ளுகின்றார். குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த,

ஆடிப்பாடி அரங்க! ஓ என்று
அழைக்கும் தொண்ட ரடிப்பொடி
ஆடநாம் பெறில் கங்கைநீர் குடைந்து
ஆடும் வேட்கைஎன் னாவதே[11]

என்று பாசுரத்தை நினைத்து பார்க்கின்றார். பாகவதர் தொண்டே பகவான் தொண்டைவிட மேலானது என்ற உண்மையை அறிகின்றார். "ஓ! அரங்கனே! என்று கூப்பிடுகின்ற கைங்கரியத்தையே வழிபாடாகக் கொண்ட பாகவதர்களின் திருவடித் தூள்களில் நாம் குடைந்தாடப் பெற்றால், கங்கைநீரில் குடைந்தாட வேண்டும் வேட்கை ஏதுக்கு?" — என்ற சேரவேந்தனின் பொன்மொழிகளை மறை வாக்கியமாகக் கொண்டு ஒழுகுகின்றார். இங்ஙனம் வைணவர்களின் பாத தூளியாய், அவர்கட்குக் கீழ்படிந்து ஒழுகி வந்ததால் 'தொண்டரடிப் பொடிகள்' என்று சிறப்புத் திருநாமம் பெறுகின்றார். வைணவ உலகம் பெற்றோர் இட்ட பெயரை மறந்து விடுகின்றது; இந்தச் சிறப்புத் திருநாமமே அவர்கள் மனத்தில் நிலைத்து விடுகின்றது.

**பிரபந்தங்கள் அருளல்:** தொண்டரடிப் பொடியாழ் வாருக்கு அரங்கநாதன் தத்துவ ஞானம் அளித்தார் என்பது வைணவர்களின் நம்பிக்கை. அவர் தனது பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐவகை நிலையையும் தெளிவாக விளக்கியருள்கின்றார். இவற்றுள் ஆழ்வார் அர்ச்சாவதாரத்தில்தான் மிகவும் ஈடுபாடு காட்டுகின்றார். எம்பெருமான் உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றினுள்ளும் திருவரங்கத்து நம்பெரு மாளை யல்லது பிறிதொரு பொருளை யறியாராய்

11. பெரு. திரு. 2: 2

அப்பெருமானுக்கே துளவத் தொண்டு பூண்டு வாழ்கின்றார். தமது அநுபவத்தைப் பிரபந்தங்கள் மூலமாக பிறருக்குத் தெரிவிக்கக் கருதி திருமாலை, திருப்பள்ளி எழுச்சி என்ற திவ்வியப் பிரபந்தங்களை அருளிச் செய்து உலகப் பெருமக்களை வாழ்விக்கின்றார். இப்பிரபந்தங்களில் அரங்கனைத் தவிர, வேறு எம்பெருமான்களைப் பாடாத தால் இவரைப் பத்தினியாழ்வார் என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். இவர் 105 ஆண்டுகள் வாழ்ந்து திருவரங்கத்தி லேயே பரமபதித்தார் என்று பெரியோர்கள் பணிப்பர்.

தன்பால் நிறைந்த அன்பு காட்டிய விப்ரநாராயணர் அரச தண்டனையினின்றும் மீண்டு தொண்டரடிப் பொடிகளான செய்தியை தேவதேவி அறிகின்றாள். தானும் உய்வு பெற உன்னித் தனது பொருள்களனைத்தையும் அரங்கநகர் அப்பனுக்கே உரிமையாக்குகின்றாள். பின்னர் தான் சத்துவ குணம் நிறைந்த பெண்ணாகக் கோயிலில் திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் முதலிய அடிமைத் தொழில்களைச் சில காலஞ் செய்து வாழ்ந்து, ஊழ்வினையை ஒழித்துத் தனது பிறப்பைப் புனிதமாக்கி நற்கதியை அடைகின்றாள்.

இவர்தம் அருளிச் செயல்கள் : இவர் அருளிய பிரபந்தங்கள் (1) திருமாலை (2) திருப்பள்ளி எழுச்சி என்ற இரண்டு என்பதை மேலே சுட்டிக் காட்டினேன். அவற்றில் இப்போது ஆழங்கால் படுவோம்.

வாழ்க்கை வரலாற்றுச் செய்திகள்: இந்த ஆழ்வாரின் பாசுரங்கள் இவர்வாழ்க்கையில் சில செய்திகளை அறிய வல்ல அகச்சான்றுகளாக அமைகின்றன. எ-டு:

(1) காவலில் புலனை வைத்துக்
கலிதனைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட்டு உழிதரு கின்றோம்
நமன்தமர் தலைகள் மீதே[12]

12. திருமாலை-1.

என்ற பாசுரத்தில், இவ்வாழ்வார் முதலில் தாம் இந்திரியங்களால் ஆட்கொள்ளப் பெற்றுப் பொன் வட்டில் நிமித்தமாகச் சிறைப்பட்டிருந்த சினத்தை நெஞ்சில் வைத்துக் கொண்டிருந்து சமயம் பார்த்து அவற்றைச் சிறைப் படுத்தினர் என்ற சிறப்புப் பொருள் உய்த்துணரத்தக்கது.

(2) 'சூதனாய்க் கள்வனாகி' (16), 'மெய்யெல்லாம் போகவிட்டு விரிகுழலாரில் பட்டு' (33) என்ற பாசுரங்களை முன்னர் எடுத்துக் காட்டினேன். தேவதேவியின் வலையில் மாட்டின செய்தியும் பொன்வட்டில் நிமித்தமாகக் கள்வன் என்ற பட்டம் சூட்டப் பெற்ற செய்தியும் விளக்கப் பெற்றன. மெய்ப்பொருள் நூலார் இவற்றை ஒரு சீவான்மா பரமான்மாவிடம் முறையிடுவதாகக் கொள்வர்.

(3) இவர் எம்பெருமானுக்குத் துளவத் தொண்டு புரிந்து வந்த செய்தியை,

துளவத்தொண் டாய தொல்சீர்த்
தொண்ட ரடிப்பொடி சொல்[13]

என்ற பாசுரப் பகுதியால் அறிய முடிகின்றது. "திருத்துழாய்த் தொண்டு புரிபவரும் இயற்கையான சேஷத்துவத்திலே நிலை நின்றவருமான தொண்டரடிப் பொடியடிகள் அருளிச் செய்த திருமாலை என்னும் திருமொழி" என்று பொருள் படுவதைக் கண்டு மகிழலாம். மேலும் தாம் செய்த பாவங்கட்கெல்லாம் கழுவாயாக பாகவதர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை உட்கொள்ளுவதே என்று பெரியோர்கள் அறவுரை கூறியதை இவர் வாழ்க்கை வரலாறு கூறும்போது சுட்டிக்காட்டினேன். இந்தச் செய்தி,

தொடையொத்தம் துளவமு கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி என்னும்
அடியேனை[14]

---

13. திருமாலை-45.
14. திருப்பள்ளி எழுச்சி-10

என்ற திருப்பள்ளி எழுச்சிப் பாசுரத்தால் அறியப்படு கின்றது.

(4) இந்த ஆழ்வார் மறந்தும் புறந்தொழா மாந்தர்; பிற சமயங்களைக் கண்டித்துப் பேசுபவர். இதனைச் சில பாசுரங்களால் அறிந்து கொள்ள முடிகின்றது.

புலையற மாகி நின்ற
புத்தொடு சமண மெல்லாம்
கலையறக் கற்ற மாந்தர்
காண்பரோ கேட்ப ரோதாம்,
தலையறுப் புண்டும் சாவேன்
சத்தியம் காண்பின், ஐயா!
சிலையினால் இலங்கை செற்ற
தேவனே தேவ னாவான்[15]

[புலை அறம்-நீச தர்மம்; அறக்கற்ற-நன்றாக ஓதின; செற்ற-நாசம் செய்த]

இப்பாசுரத்தில் கலையறக்கற்ற மாந்தர்-என்பதற்கு கூரத் தாழ்வான் போன்றாரை எடுத்துக்காட்டாகக் கொள்ள லாம். "சுருதி சுமிருதி இதிகாசங்களில் நிலை நின்றவர் களாய் வேதாந்தபர்யம் கைப்பட்டவர்கள்; அவர்களா கிறார் — கூரத்தாழ்வான் போல்வாரிறே!" என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான சூக்தி.

'காண்பரோ கேட்பரோதான்' என்ற இடத்தில் ஓர் ஐதிகம். "கூரத்தாழ்வான் 'இஷ்டசித்தி' என்ற ஒரு புறமதச் சுவடி வாசித்துக் கொண்டிருந்த சிலருடன் கூடிச் சிறிது போது போக்கி எம்பெருமானார் சந்நிதிக்குச் சிறிது தாமதித்து வர, 'ஏன் இவ்வளவு கால தாமதம்?' என்று உடையவர் கேட்டருள, ஆழ்வானும் காரணத்தை உள்ள படியே உரைக்க, 'ஹா! ஹா! கலையறக்கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதான்' என்ற அருளிச் செயல்

15. திருமாலை-7.

என்னாயிற்று?'' என்று மறுமுறைத் தீர்த்தமாடச் செய்து ஸ்ரீபாததூளியும் இடுவித்தருளினாராம்.

இதில் 'சிலையினால், இலங்கை செற்றதேவனே தேவனாவான்' என்று இராமனையே (விபவம்) தெய்வமாகக் கொண்ட ஆழ்வாரின் உறுதிப்பாடு தெளிவு.

அடுத்து, திருமாலை வெறுப்பவர்களைப் பற்றிப் பேசுகின்றார்.

வெறுப்பொடு சமணர் முண்டர்
விதியில்சாக் கியர்கள், நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில்
போவதே நோய தாகி,
குறிப்பெனக் கடையு மாகில்
கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமங் கண்டாய்
அரங்கமா நகரு ளானே[16]

[முண்டர்-சைவர்; சாக்கியர்-பௌத்தர்.]

திருமால் பற்றிய வசவுகளைக் கேட்டால், அதுவே நோயாகி முடிந்து போவது உத்தமம். அப்படி இல்லாவிடில், சந்தர்ப்பம் வாய்த்தால், தனக்கு ஆற்றலும் இருந்தால், நிந்தித்தவன் தலையை அறுத்துத் தள்ளுவதே என் இலட்சியம் என்கின்றார்.

திருமாலைத் தவிர வேறு தெய்வமில்லை என்ற தன் ஊற்றத்தை ஒரு பாசுரத்தால் தெரிவிக்கின்றார்.

மற்றுமோர் தெய்வம் உண்டோ
மதியிலா மானி டங்காள்!
உற்றபோ தன்றி நீங்கள்
ஒருவனென் றுணர மாட்டீர்

16. திருமாலை-8.

அற்றமே லொன் றறியீர்
அவனல்லால் தெய்வ மில்லை
கற்றினம் மேய்த்த எந்தை
கழலிணை பணமி னீரே[17]

[மதி-தத்துவ ஞானம்; உண்டோ-இல்லை; அவன்-எம்பெருமான்; கழல் இணை-இரண்டு திருவடிகள்]

பெறுதற்கரிய மானிடப்பிறப்பைப் பெற்றிருந்தும் ஈடேறுதற்குரியதான பரமான்மாவைப் பற்றிய தத்துவஞானம் இல்லாமையால் 'மதி இலா மானிடங்காள்!' என்கின்றார். 'ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு'[18] என்ற பொய்கையாழ்வார் கூற்றுப்படி பரமான்மாவைப் பற்றிய அறிவே அறிவெனப் படுமாதலால், மற்றை உலக அறிவு இருந்தும் பரமான்மாவைப் பற்றிய அறிவைப் பெறாத இவர்கள் மதியிலா மானிடங்களாயினர்; இதுபற்றியே 'மானிடர்காள்' என உயர்திணை வாய்பாட்டால் கூறாது 'மானிடங்காள்!' என அஃறிணை வாய்பாட்டால் கூறியதையும் காணலாம்.

**அற்றமே லொன்றறியீர்:** 'வேதத்தில் பலவிடங்களிலும் சிறு தெய்வங்களைப் பற்றி (எம்பெருமானைப் போலவே) சிறப்பித்துக் கூறியிருப்பது கண்டு அவற்றிற்கு மேலெழுந்த வாரியாகத் தோன்றுகின்ற பொருளையே கருத்தாக எண்ணி வேதங்கள் முழுவதும் சீமந்நாராயணனையே பரம்பொருளாகக் கருத்துப் பொருளால் கூறுவன என்பதை உய்த்துணராமலிருக்கின்றீர்' என்கின்றார். அற்றம்-மறை பொருள்; உட்கருத்து. **'அவன் அல்லால் தெய்வம் இல்லை'** என்பதால் தேவதாந்தரங்கள் இல்லை என்று மறுக்கின்றாரல்லர் ஆழ்வார்; எம்பெருமானுக்குச் சரீரமாகப்

17. ஷெ - 9.
18. முதல். திருவந்.67

பலதேவதைகள் உள என்பதற்கு மறுப்பு இல்லை. சரணமாகப் பற்றத்தக்க தெய்வம் வேறில்லை என்பதையே ஆழ்வார் உணர்த்துவது. 'கன்றினம் மேய்த்த எந்தை' என்பதால் எம்பெருமானது சௌலப்பியத்தை வெளியிடுகின்றார் என்பது அறியத்தக்கது.

(5) பத்தித்திறமும் ஞானமுமே சாதியைக் காட்டிலும் சிறந்ததென்பது இந்த ஆழ்வாரின் கொள்கையாக இருந்தது என்பதை இரண்டு பாசுரங்களால் அறிய முடிகின்றது.

> **பழுதிலா ஒழுக லாற்றுப்**
> **பலசதுப் பேதி மார்கள்**
> **இழிகுலத் தவர்க ளேனும்**
> **எம்மடி யார்க ளாகில்**
> **தொழுமினீர் கொடுமின் கொண்மின்**
> **என்றுநின் னோடு மொக்க**
> **வழிபட அருளி னாய்போல்**
> **மதிள்திரு வரங்கத் தானே.**[19]

[பழுது - குற்றம்; ஒழுகல் ஆறு - பரம்பரையில்; சதுப் பேதிமார்கள் - சதுர் வேதிகள்; இழிகுலம் - தாழ்ந்த குலம்; ஒக்க - சமமாக; வழிபட - ஆராதிக்கும்படி]

இப்பாசுரம் பிறப்பாலும், அநுட்டானத்தாலும் குறைவில்லாத சதுர்வேதிகளை நோக்கி எம்பெருமான் கூறியது: "நான்முகன் முதல் உங்கள் அளவும் நீண்டு வருகின்ற பரம்பரையில் ஒரு குற்றமும் அற்றவர்களாய் நான்கு வேதங்களையும் ஓதினவர்களே! 'நமக்கு அடிமைப் பட்டவர்களாக இருந்தால், அவர்கள் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களேயாகினும் நீங்கள் அவர்களைத் தொழுங்கள்; உங்களிடத்துள்ள சிறப்பான பொருள்களை அவர்கட்கு உபதேசியுங்கள்; அப்படிப்பட்ட சிறப்புப் பொருள்கள்

19. திருமாலை - 42

அவர்களிடத்தில் இருந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று உபதேசித்தருளி உனக்குச் சமமாக அவர்களை ஆராதிக்கும்படி உரைத்தருளினாய்'' — இதனை ஆழ்வார் எம்பெருமானிடம் தெரிவிக்கின்றார். அடியார்களிடம் சாதி வேறுபாடுகள் இல்லை; அப்படிப் பாவிக்கவும் கூடாது என்று தெரிவித்தபடி.

அன்பர்களே, இதையொட்டி ஆசாரிய ஹிருதயத்தில் வருகின்ற சூத்திரம் ஒன்றையும் விளக்குவேன்.

**மிலேச்சனும் பக்தன் ஆனால் சதுர்**
**வேதிகள் அநுவர்த்திக்க அறிவு**
**கொடுத்துக் குலதைவத்தோடுஒக்கப் பூஜை**
**கொண்டு பாவந தீர்த்தப் பிரசாதனாம்**
**என்கிற திருமுகப் படியும்...**[20]

[பாவநம் - தூய்மை]

என்பது சூத்திரப்பகுதி. இதன் பொருளை விளக்குவேன்.

**மிலேச்சனும் பக்தன் ஆனால்:** என்னுடைய அடியார்கள் பக்கல் அன்பும், என்னை ஆராதிப்பதில் உகப்பும், தானே ஆராதிக்கையும், என்னிடத்தில் ஆடம்பரமின்றி இருத்தலும், என் கதையைக் கேட்குமிடத்தில் பக்தியும், பக்தியின் காரியமான குரல் தழுதழுத்தலும், கண்ணீர் சொரிதலும், மயிர்க்கூச்செரிதலும், எப்பொழுதும் என்னை நினைப்பதும், என்னிடமிருந்து வேறு பயன்களைக் கொள்ளாதிருத்தலும் — ஆகிய எட்டுவித பக்தியானது எந்தக் கீழ்க் குலத்தானிடம் இருக்கின்றதோ'' என்று பகவச் சாஸ்திரம் சொல்லுகிறபடி கீழ்குலத்தவனாய் உள்ளவனும் இந்த எட்டுவிதமான பக்தியையுடையவன் ஆனால்,

---

20. ஆசா. ஹிரு. 85. இவ்விடத்தில் ஸ்ரீவசன பூஷணத்தின் 226 — 239 சூத்திரங்களையும் அவற்றின் வியாக்கியானத்தையும் படித்தறிதல் தகும்.

**சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவு கொடுந்து:** "எட்டு விதமான பக்தியையுடைய அவன் கீழ்க்குலத்தானாயினும் அவனே பிராமணோத்தமன், அவனே முனிவன், அவனே செல்வத்தையுடையவன், அவனே துறவி, அவனே பண்டிதன், அவனுக்கு ஞானத்தைக் கொடுக்கக் கடவன், அவனிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொள்ளக் கடவன்" என்றும் (பகவச் சாஸ்திரம்), "பழுதிலா ஒழுகலாற்றுப் பல சதுப்பேதிமார்கள் இழிகுலத்தவர்களேனும் எம் அடியார்களாகில், தொழுமினீர் கொடுமின் கொள்மின்" (திருமாலை - 42) என்று ஆழ்வார் சொல்லுகிறபடியே எல்லாரிலும் மேம்பட்டவர்களாகிய உயர்சாதியினர்களான பிராமணர்கள் உயர்குலத்தில் பிறத்தல் முதலியவற்றால் உளவாய செருக்கினால் கெடுக்கப்பட்ட தங்களுடைய ஆன்மசொரூபம் தூய்மை பெறும் பொருட்டுச் சார்ந்து பழகுவதற்கு உரியவர்களாய், அவர்கள் ஞானத்தைப் பெறவிரும்பினால் அவர்கட்கு ஞானத்தைக் கொடுத்து,

**குலதைவத்தோடு ஒக்க பூஜை கொண்டு:** "நான் பூசிக்கப் படுவதுபோன்று அவனும் பூசிக்கத் தக்கவன்" என்றும், "நின்னொடும் ஒக்க வழிபட அருளினாய் போல் மதிள் திருவரங்கத்தானே" (திருமாலை - 42) என்று ஆழ்வார் சொல்லுகிறபடியே, "என்னுடைய நாதனும் என்னுடைய குல தெய்வமுமான அரங்கநாதன்" என்று குலதெய்வமாகச் சொல்லப்படுகின்ற சர்வேசுவரனோடு ஒக்க "கடல் மல்லைத் தலசயனம் ஆர் எண்ணும் நெஞ்சுடையார் அவர் எங்கள் குலதெய்வமே" (பெரி. திரு. 2.6:4) என்று திருமங்கையாழ்வார் சொல்லுகிற படியே குலதெய்வமாக அவர்களைப் பூசை கொண்டு,

**பாவந் தீர்த்தப் பிரசாதன் ஆம் என்ற திருமுருகப் படியும்:** "அவன் திருவடி விளக்கின தண்ணீர் ஒப்பு இல்லாத தீர்த்தம், அவன் உண்டு கழித்த சேடம் மிக்க தூய்மை யுடையது" (பகவச்சாஸ்திரம்) என்கின்றபடியே, அவன்

திருவடி விளக்கின தண்ணீர் ஒப்பற்ற தீர்த்தம், அவன் அமுது செய்த சேடம் மிக்க தூய்மையுடையது என்று சொல்லுகையாலே, அலங்காரமான மதுவையுண்டு அதனாலே உன்மத்தரான தூய்மை இல்லாதவரும், இந்தத் தீர்த்தம் உண்ட உணவின் சேடம் இவற்றின் சம்பந்தத்தாலே தூய தன்மையராம்படி பாவந் தீர்த்தப் பிரசாதனாம் என்று அருளிச் செய்த பகவானுடைய வார்த்தையான திருமுருகப் பாசுரத்தையும், அதன் எடுப்பான,

வானுளார் அறிய லாகா
வானவா! என்ப ராகில்
தேனுலாம் துளப மாலைச்
சென்னியாய் என்ப ராகில்
ஊனமா யினகள் செய்யும்
ஊனகா ரகர்க னேலும்
போனகம் செய்த சேடம்
தருவரேல் புனித மன்றே[21]

[வான் - மேலுலகம்; வானவா - தேவனே; தேன் உலாம் - தேன் பெருகா நின்ற; ஊனம் ஆயினகள் - இழிந்த செயல்கள்; போனகம் - அமுது; சேடம் - மிகுந்தது]

என்ற ஆழ்வார் திருப்பாசுரத்தையும் அறிவார்க்கிறே 'ஜன்ம உத்கர்ஷ அநுகர்ஷங்கள் தெரிவது'[22]

மேலும், இந்த ஆழ்வார் கூறுவதையும் நெஞ்சில் நிறுத்தவேண்டும்.

அமரவோ ரங்க மாறும்
வேதமோர் நான்கும் ஓதித்

---

21. திருமாலை - 41
22. சாதியும் ஆசிரமமும் ஞானமும் ஒழுக்கமும் தள்ளத்தக்கவை என்கை.

தமரர்களில் தலைவ ராய
சாதியந் தணர்க ளேனும்
நுமர்களைப் பழிப்ப ராகில்
நொடிப்பதோ ரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமா நகரு ளானே[23]

[அமர - நெஞ்சில் பதியும்படி; ஓதி - படிந்து; தமர் - பாகவதர்; நுமர் - அடியார்கள்; பழித்தல் - கீழாகப் பேசுதல்; புலையர் - சண்டாளர்]

என்பது பாசுரம். இதன் கருத்து: "நான்கு வேதங்கள், ஆறு வேதாங்கங்கள் இவற்றையெல்லாம் மனப்பாடம் பண்ணி, அவற்றின் பொருள்களையும் அறிந்து, அவ் வறிவுக்குப் பலனாக பகவத் கைங்கரியத்தில் முதன்மையாக ஊன்றியிருக்கும் சிறந்த அந்தணர்களாயிருந்த போதிலும் அவர்கள் இந்த யோக்கியதைகள் எல்லாம் இல்லாமல் கேவலம் பகவத் கைங்கரியம் ஒன்று மாத்திரமுடைய ஒரு ஸ்ரீவைணவரை (—அதாவது சண்டாள சாதியில் பிறந்த வரை) அந்தப் பிறவியைப் பற்றி இகழ்வாக நினைத்து நிந்தனை செய்வார்களானால் அங்ஙனம் நிந்திப்பவர்கள் தாங்கள் பிராமணீயம் கெட்டுக் கர்ம சண்டாளர்களாய்ப் போவார்கள். இப்படிப் போவது பிறப்பின் முடிவிலோ என்னில் அன்று; நிந்தித்த அந்தக் கணத்திலே சண்டாளரா யொழிவர்."

(6) பல பாசுரங்களில்[24] அரங்கனையே விளித்துப் பாடுவதனால் அரங்கனையே குலதெய்வம்—தாம் தொழும் தெய்வம் — என்று கொண்டமை தெளிவாகின்றது.

---

23. திருமாலை - 43

24. பாசுரம் — 1, 2, 3, 6, 8, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 23, 24, 26, 30, 31, 32, 33, 36, 37, 38, 39, 40, 42, 43 — என்பவை காண்க.

இவற்றையெல்லாம் விளக்கிக் கொண்டு போவதற்குக் காலம் இடந்தராததாகையால், இந்தப் பாசுரங்களை நீங்களே படித்து அறிய வேண்டுகின்றேன். எனினும், ஒன்றிரண்டு காட்ட முற்படுகின்றேன். முதலில் திருவரங்கத்தின் சூழ்நிலையை அற்புதமாகக் காட்டுவார்.

வண்டினம் முரலும் சோலை
　　மயிலினம் ஆலும் சோலை
கொண்டல்மீது அணவும் சோலை
　　குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோன் அமரும் சோலை
　　அணிதிரு அரங்கம்[25]

[முரலும்-ரீங்காரம் செய்யும்; ஆலும்-கூத்தாடும்; அணவும்-படியும்]

இந்தச் சோலையின் நடுவே அமைந்த திருக்கோயிலின் அரங்கமண்டபத்தில் 'பச்சை மாமலை போல் மேனியையும் பவள வாயையும் செங்கண்ணையும் உடைய அச்சுதன்' அறிதுயில் கொண்டிருக்கின்றான். எப்படித் துயில் கின்றான்? ஆழ்வார் கூறுவார்:

குடதிசை முடியை வைத்துக்
　　குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
　　தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை
　　அரவணைத் துயிலுமா கண்டு
உடல்எனக்கு உருகு மாலோ![26]

என்று உள்ளம் உருகிப் பாடுகின்றார். நாமும் அக் காட்சியை மானசீகமாகக் கண்டு அநுபவிக்கின்றோம். இது சற்று எட்ட நின்று காணும் காட்சி. கிட்டச் சென்று காணும் காட்சியை,

---

25. திருமாலை-14
26. ஷை. 19

பாயுநீர் அரங்கம் தன்னுள்
பாம்பணைப் பள்ளி கொண்ட
மாயனார் திருநன் மார்பும்
மரகத வுருவும் தோளும்
தூய தாமரைக் கண்களும்
துவர்இதழ்ப் பவள வாயும்
ஆயசீர் முடியும் தேசும்
அடியரோர்க் (கு) அகலல் ஆமே[27]

[*மாயனார்-ஆச்சரிய சக்தியையுடைய எம்பெருமான்; திருநன் மார்பு-பிராட்டி வாழ்கின்ற அழகிய மார்பு; மரகதம் உருவு-பச்சை நிறமேனி; துவர்-சிவந்த; முடி-திருமுடி; தேசு-தேஜஸ்; அடியரோர் ஸ்வரூப ஞானமுடைய தாசர்கள்; அகலில்-இழத்தல்.*]

*என்று காட்டுவார். இங்ஙனம் 'தனிக்கிடந்து அரசு செய்கின்றான் தாமரைக்கண்ணன் எம்மான்' (18) என்கின்றார். 'இங்ஙனம் கண்வளருகின்றபடியை நெஞ்சினால் அளவிட்டுக் கூறமுடியாது' என்கின்றார்.*

(7) **ஆழ்வாரின் இறையநுபவம் :** *'அரங்கமா கோயில் கொண்ட கரும்பினைக் கண்டு கொண்டு எனது இரண்டு கண்களும் பார்த்தவண்ணமாய் மகிழ்ச்சி அடையும் பாங்கைச் சொல்ல முடியாது' என்கின்றார். 'நின்நாமம் கற்ற, ஆவலிப்புடைமை கண்டாய்! அரங்கமாநகருளானே' (1) என்கின்றார். 'இதுகாறும் யமபடர்கட்கு அஞ்சிக் கிடந்த ஆழ்வார், திருநாமத்தைக் கொண்ட பலத்தாலே அவர்கள் தலைமீது அடியிட்டுத் திரிகின்றோம்' என்று பெருமிதத்துடன் கூறுகின்றார். 'அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே!' என்று நாவினால் நவிற்றும்போது நான் பெறும் சுவையே எனக்கு போதும்; இந்திரலோகம்*

---

27. ஷை. 20

ஆளும் பேறுபெறினும், அஃது எனக்கு வேண்டா (2) என்கின்றார். 'உன்னைத் தவிர, என்னைக் காப்பார் யாருமே இல்லை' (2) என்கின்றார். எல்லாப் பாசுரங்களும் பகவதநுபவத்தைத் தருவதே என்பது பாசுரங்களை ஓதி உளங்கரையும்போது தட்டுப்படும்.

(8) வடநூல்கள் ஒன்றிலும் காணப் பெறாத ஒரு கதை —அணில்கள் சேதுகட்டலில் பங்கு பெற்ற கதை—இவர் அருளிச் செயல்களில் காணப்படுகின்றது.

**குரங்குகள் மலையை நூக்கக்**
**குளித்துத்தாம் புரண்டிட் டோடி**
**தரங்கநீர் அடைக்க லுற்ற**
**சலமிலா அணிலும் போலேன்** (27)

என்ற பாசுரத்தில் இக்கதை பற்றிய குறிப்பு காணலாம். இராமாவதாரத்தில் பெருமாள் இலங்கை நகர் எழுந்தருள் வதற்காகக் கடலில் அணை கட்ட நேர்ந்தபோது வானர முதலிகள் மலைகளைக் கொணர்ந்து எறிந்து கடலைத் தூர்ப்பதைச் சில அணிற்பிள்ளைகள் காண்கின்றன. "இவ் வானர வீரர்கள் பெருமாள் விஷயத்தில் தம் ஆற்றலுக் கேற்ற செயலைப் புரிந்தால், நாமும் நமது ஆற்றலுக் கேற்றவாறு இப்பெரிய செயலில் ஈடுபட வேண்டும்" என்று எண்ணுகின்றன. இவை கடலில் முழுகுவது, கரை மேல் மணலில் புரள்வது, உடலில் ஒட்டிக் கொண்ட மணலைக் கடலில் கொண்டு போய் உதறுவது—இப்படிப்பட்ட ஒரு செயலில் சேதுபந்தன கைங்கரியத்திற்கு உதவி புரிந்ததாக ஓர் இதிகாசம் ஆழ்வார் திருவுள்ளத்தில் எழுகின்றது.

(9) இவர் காலத்தில் அணியரங்கன் திருமுற்றத்தை பரமை காந்திகளாய் எப்போதும் பற்றிக் கிடந்து வாழும் சோம்பராகிய பரம பாகதவதர்கள் விஷயத்தில் அரங்கன் திருவுள்ளம் உகந்திருப்பதை அவர்தம் முக விலாசத்தில் காண்கின்றார். இதனை,

மேம்பொருள் போக விட்டு
மெய்ம்மையை மிகவு ணர்ந்து
ஆம்பரி சறிந்து கொண்டு
ஐம்புலன் அகத்த டக்கி,
காம்புறத் தலைசி ரைத்துன்
கடைத்தலை யிருந்து, வாழும்
சோம்பரை உகத்தி போலும்
சூழ்புனல் அரங்கத் தானே.[28]

[மேம்பொருள் - மக்கள் விரும்பும் பொருள்கள்; மெய்ம்மை-ஆன்ம சொரூபம்; காம்புஅற-அடியோடு; தலைசிரைத்து-தலையிலுள்ள சுமையைத் தொலைத்து; தலைக்கடை-வாசல்.]

என்பது பாசுரம். இதில் மேம்பொருள் என்பதற்கு (1) மேலெழுந்த பொருள் என்றும், (2) மேவின பொருள் என்றும், (3) மேம்பாட்டை விளக்கும் பொருள் என்றும் மூன்று விதமாகப் பொருள் கூறலாம். (1) கருமங்கள் காரணமாக வந்தேறியாய்ப் பகவத் உணர்ச்சி வந்தவாறே விட்டகலும்படியாக இருக்கும் பொருள்—மேலெழுந்த பொருள் எனப்படும். அதாவது, சம்சார சம்பந்தம். (2) மேவின பொருளாவது, சிக்கென ஒட்டிக் கொண்டிருக்கும் பொருள்; சேதநனால் பிரிக்கவொண்ணாதபடி இருக்கை; அதாவது, தேக சம்பந்தம், அவித்யை சம்பந்தம். (3) மேம்பாட்டை விளைக்கையாவது, தன்னால் பற்றினாரை எல்லாம் அறிந்தவராக அபிமானித்திருக்கும் படி பண்ண முடிதல். அப்படிப்பட்ட பொருளாவது, பிரகிருதி, பிராக்கிருத பதார்த்த சம்பந்தம். இவற்றை வாசனையுடன் ஒழித்து உடலை ஆன்மாவென நினைத்தல், உடலைப் பற்றின பிராக்கிருதபதார்த்தங்களில் 'இவை என்னுடையவை' என்கின்ற மமதா புத்தி, உடலினின்றும்

28. திருமாலை-38

வேறுபட்ட ஆன்மாவின் சுவாதந்திரிய புத்தி முதலிய வற்றை அடியோடு ஒழித்து என்றவாறு.

இதற்குமேல் ஆன்ம சொரூபத்தை உள்ளபடி உணர வேண்டும். அதாவது ஆன்மா சுயப் பிரகாசன், நித்தியன், உணர்வைக் குணமாகவுடையவன், அணு அளவினன், அநந்யார்ஹ சேஷபூதன்[29], அந்த சேஷத்துவத்தைப் பாகவதரளவும் உடையவன் என்று இங்ஙனம் விரிவாக உணர்தல். பிரகிருதி பிராக்கிருதங்கள் தாழ்வானவை, கீழானவை என்றறிந்து ஆன்மாவையும் உள்ளபடி அறிந்த பிறகு பின்னையும் ஆம்பரிசு அறிந்து கொள்ளுகையாவது கைங்கரியமே புருஷார்த்தம்—அடிமைத்தொழிலே ஆன்மா அடையவேண்டிய பொருள்—என்று அறிதலாகும்.

ஐம்புலனகத் தடக்குகையாவது, எம்பெருமானுக்குப் புரியும் கைங்கரியத்தில் சொந்தப் பயன் பிறவாதபடி நோக்குதல். ''தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே' (திருவாய்: 2.9:4) என்று நம்மாழ்வார் கூறியபடி எம்பெருமானுக்கே இனிதாகப் பண்ணும் கைங்கரியமே புருஷார்த்தம் என்ற நுண்பொருள் ஈண்டு உணரத் தக்கது.

காம்பு அறத் தலைசிரைத்து என்பது, இறைவனை அடையும் வழிகளில் தனக்குள்ள பற்று அறும்படி தன் தலையிலுண்டான துரிதங்களைப் போக்கி. அதாவது பேற்றுக்கு எம்பெருமான் சாதனமேயொழிய நாம் செய்யும் கிரியையால் லாபங்களொன்றும் சாதனமல்ல என்ற உறுதியான நம்பிக்கை கொண்டு என்றபடி. தான் என்னும் மூலமான வழிகளை விடுதலைச் சொன்னவாறு.

வாழும் சோம்பர் என்றது-கெடுஞ்சோம்பரை விலக்கு கின்றதைக் குறிப்பிடுகின்றது. கெடுஞ் சோம்பராவார்

---

29. அநந்யார்ஹ சேஷபூதன் - பிறர்க்கு அடிமை யாகாது எம்பெருமான் ஒருவனுக்கே அடிமையாக இருப்பவன்.

ஈசுவரன் இல்லை, சாத்திரம் இல்லை, பரலோகம் இல்லை என்றாற்போலே எல்லாவற்றையும் இல்லாது செய்து சாத்திரங்களில் விதிக்கப் பெற்ற கர்மங்களை அநுட்டியாமல் தமக்குத் தோன்றியவற்றைச் செய்பவர்கள். வாழுஞ் சோம்பராவார் — சாத்திரத்தில் நாத்திகராய் செய்யப்படவேண்டியவற்றை விடாமல் ஆத்திக சிகாமணிகளாய் சித்தோபாயமான எம்பெருமானை மனத்தில் கொண்டு அவ்வெம் பெருமானுடைய அநுபவமே காலட்சேபமாய் தமது இதத்தைத் தாமே தேடிக் கொள்ளுவதில் சோம்பியிருப்பவர்கள்.

(9) இவருடைய பாசுரங்களில் வைணவ சித்தாந்தக் குறிப்புகள் வந்திருப்பதை எடுத்துக்காட்டி விளக்கலாம். காலச் சுருக்கம் கருதி அவற்றை விட்டு வைக்கின்றேன்.

(10) இந்த ஆழ்வார் வடநூல் பயிற்சி மிக்கவர் என்பதைக் கத்திரபந்துவின் கதையினாலும் நமன்-முட்கலன் உரையாடல்களாலும் பிறவற்றாலும் நன்கு அறியலாம். இந்த இரண்டும் பற்றி ஈண்டு விளக்குவேன். இவை இரண்டும் எம்பெருமானின் திருநாமத்தின் பெருமையை விளக்க எழுந்தவை.

**கத்திரபந்து**[30] இவன் கொடிய நடத்தையுடையவன்; பல்வகைப் பாவங்களே உருவெடுத்தாற் போன்றவன். இவன் தாய் தந்தையர், மக்கள், உறவினர், நண்பர்கள் ஆகிய அனைவராலும் கைவிடப்பெற்றுக் காட்டில் திரிந்து உயிர்க் கொலை புரிந்து வயிறு வளர்த்துக் காலம் கழித்து வந்தான். இங்ஙனம் நெடுங்காலம் சென்றது. ஒருநாள் மாமுனிவர் ஒருவர் கொடிய நண்பகலில் வெப்பம் தாங்காமல் வழி தப்பிப் போகா நின்றவர் இப்பாவி திரியும் கானகத்தில் புகுந்து இவன் கண்ணுக்கு இலக்காயினர். அவருடைய பரிதாப நிலையைக் கண்ட இவனுக்குத்

---

30 விஷ்ணு தர்மத்தில் - 97-வது அத்தியாயத்தில் இவனைப் பற்றிய வரலாறு விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

தன்னையும் அறியாமல் அவர்பால் இரக்கம் உண்டாயிற்று. அவரிடம் அவர் வழி தப்பிப் போவதைச் சுட்டிக் காட்டினான். அவரும் அதனை உணர்வாராயினர். பொறுக்க முடியாத தாக விடாயுடன் அவர் ஒரு தடாகத்தை நாடிச் செல்லுகையில் அருகே ஓர் அழகிய பொய்கையைக் கண்ணுற்றார்; தாபமிகுதியால் தவறி அக்குளத்தில் விழுந்திட்டார். அப்போது அருகிலிருந்த கத்திரபந்து தன் கையிலிருந்த வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டு, அம் மாமுனிவரை நீரினின்றும் அகற்றித் தாமரைக் கிழங்கு களை உணவாக நல்கி அவரது விடாயைப் போக்கி அவரை மகிழ்வித்தான்.

முனிவர் அக்குளக் கரையின் மீதிருந்த ஒருமரத்து நிழலில் அமர்ந்து இளைப்பாறினார். கத்திரபந்தும் அவரது கால்களைப் பிடித்து அமுக்கி நோவு தீர உபசாரங்களைப் புரிந்தான். முனிவர் அவருடைய வரலாற்றைக் கேட்க, அவனும் தான் சூரியன் மரபில் விச்வதரன் என்பவருக்கு மகனாய் பிறந்தவன் என்று தொடங்கித் தன்னுடைய பாவச் செயல்களை ஒன்றுவிடாமல் அவரிடம் உரைப் பானாயினன். இவற்றைச் செவியுற்ற முனிவரும் அவனை நல்வழிப்படுத்த எண்ணி அவனுடைய தீச் செயல்களை விட்டொழித்து அருயிர்களிடம் அன்பு காட்டுமாறு பணித்தார். இவனும் தான் தீய குணங்கட்குப் பிறப்பிட மானவன் என்றும், தன் மனம் தன் வசப்பட்டதல்ல என்றும், இது தவிர வேறு நியமனம் பணிக்கப் பெற்றால் அதனைச் சிரமேற் கொள்ளக் காத்திருப்பதாகவும் கூறினான். எப்படியாவது இவனை உய்விக்கப் பேரவாக் கொண்ட முனிவரும் எப்போதும் 'கோவிந்த, கோவிந்த' என்று சொல்லிக் கொண்டிருந்தால் அஃது அவனுக்கு நன்மையைப் பயக்கும் என்று உரைத்துப் போயினர். அது முதலாகக் கத்திரபந்துவும் அத்திருநாமத்தை இடைவிடாது சொல்லிக் கொண்டு தன் காலத்தைப் போக்கினன். சில ஆண்டுகள் கழித்து அவன் காலகதி

அடைந்தான். பின் அந்தணர் குலத்தில் முற்பிறப்பு உணர்வுடன் பிறந்தான். அவனுக்குக் கொடிய சம்சாரத்தில் வெறுப்பு உண்டாயிற்று. தனக்கு இவ்வுயர் குலத்தில் பிறவி நேர்ந்ததும், முற்பிறப்பின் நினைவு ஏற்பட்டதும் முன்பு பண்ணின கோவிந்தநாம சங்கீர்த்தனத்தின் பயன் என்பதை உணர்வானாயினன். தனக்கு மேலான நன்மையை விளைத்த அந்தக் கோவிந்தனையே ஆராதனம் செய்து 'தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும் வேண்டா நாற்றம் மிகும் உடலை' விட்டு (திருவரங்கக்கலம்பகம்-17) 'மாயவன் சேற்றள்ளல் பொய் நிலத்தைக் கடந்து' 'நலமந்தமில்லதோர் நாடுபுகும்' (திருவாய் 2,8,4) எண்ணத்துடன் துணிந்து அங்ஙனமே செய்து பரமபாகவதனாகி வீடுபேறும் எய்தினன் என்பது வரலாறு.

மொய்த்தவல் வினையுள் நின்று
   மூன்றெழுத் துடைய பேரால்
கத்திர பந்தும் அன்றே
   பராங்கதி கண்டு கொண்டான்;
இத்தனை அடியார் ஆனார்க்கு
   இரங்கும்நம் அரங்கன் ஆய
பித்தனைப் பெற்றும் அந்தோ!
   பிறவியுள் பிணங்கு மாறே[31]

[மொய்த்த-அடர்ந்து கிடக்கிற; வல்வினை-கொடிய பாவம்; மூன்றெழுத்து உடையபேர்-கோவிந்த; கத்திர பந்து-க்ஷத்திர பந்து; பராங்கதி-சிறந்த பதவி; இரங்கும்-அருள் புரியும்; பித்தன்-அண்டினவரிடத்தில் மயங்கியவன்; பிறவி - சம்சாரம்; பிணங்கும்-வருந்தும்]

என்ற பாசுரத்தில் இவனைப்பற்றிய குறிப்பு வருகின்றது.

---

31. திருமாலை 4.

**முத்கலன்** [32] : முத்கலன் என்பான் பெரும்பாவிகளின் தலைவன். அவன் ஒருநாள் கோதானம் செய்யும்போது 'கிருஷ்ணாய' என்று சொல்லித் தானம் செய்தான். பின்னர் அவன் காலகதி அடைந்தபோது யமதூதர்கள் வந்து நெருங்கி அவனை யமனிடம் கொண்டு சென்றனர். யமன் இவனை எதிர்கொண்டு மரியாதை செய்வானாயினன். முத்கலன் யமனிடம் தன்னைப் பாராட்டுவதன் காரணத்தை வினவ, யமனும் கிருஷ்ணன் நாமத்தை ஒரு தடவை சொன்னதை நினைவூட்டினான். யமனுக்கும் முத்கலனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் நரகவாசிகளின் காதில் விழுந்தது. உடனே நரகமும் துக்கானுபவமாயிருந்த நிலைமாறி ஆனந்தானுபவ நிலமாகி விட்டது. யமன் 'கிருஷ்ணன்' என்ற திருநாமத்தைத் தனக்கு நன்மை செய்யும் என்று கருதி உச்சரிக்கவில்லை; முத்கலன் வேண்டுகோட்கிணங்கி உபதேசிக்கவும் இல்லை; நரகவாசிகளின் காதில் இது விழுந்து அவர்கள் உய்வு பெற வேண்டும் என்று நினைத்தும் சொல்லவில்லை. இதனைக் கேட்டவர்களும் பாவம் செய்வதற்குக் கவன்று அதற்குக் கழுவாயாகச் செய்து கொள்ளக்கூடிய காலத்திலும் கேட்கவில்லை. பாவத்தின் பலன்களை அநுபவிக்கும்போது கேட்டனர். அப்போதும் விருப்பத்துடன் கேட்டார்கள் அல்லர்; எதிர்பாராதவிதமாகவே அத்திரு நாமம் அவர்கள் செவியில் பட்டது. இப்படிப்பட்ட திருநாமம் இவ்வளவு பெருமையுடையது என்பது இவன் வரலாற்றால் தெளிவுறுத்தப் பெற்றது. இந்த இதிகாசம்,

நமனும்முற் கலனும் பேச
நரகில்நின் றார்கள் கேட்க
நரகமே சுவர்க்க மாகும்
நாமங்கள் உடையன் நம்பி;

---

32. இவன் வரலாறு விஷ்ணுதர்மத்தில் 96 ஆவது அத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ளது.

அவனதுஊர் அரங்கம் என்னாது,
அயர்ந்து வீழ்ந்தளிய மாந்தர்
கவலையுள் படுகின்றார்; என்று
அதனுக்கே கவல்கின் றேனே. [33]

[நம்பி-பரிபூரணன்; அளிய-அருமந்த; அயர்த்து-மறந்து; வீழ்ந்து-விஷயாந்தரப் படுகுழியிலே வீழ்ந்து; கவலை-துக்கம்; கவல்தல்-கவலைப் படுதல்]

என்ற பாசுரத்தால் அறியக்கிடக்கின்றது.

(11) இவரது பாசுரங்களில் 'பச்சைமா மலைபோல் மேனி' (2), 'வேதநூற் பிராயம் நூறு' (3), 'வண்டினம் முரலும் சோலை' (14), 'குட திசை முடியை வைத்து' (19), 'ஊரிலே காணி இல்லை' (29) போன்றவற்றை அன்பர்கள் அநுபவித்துப் பாடுவதுண்டு. வானொலியிலும் அடிக்கடி இவற்றைப் பாடக் கேட்கலாம்.

(12) இயற்கை எழில் எங்கு கொழிக்கின்றதோ அங்கு இறைவன் எழுந்தருளியிருப்பான் என்பது தத்துவம். சில பாசுரங்களில் ஆழ்வார் இந்த எழிலைப் போற்றியிருப் பதைக் காணலாம். 'வண்டினம் முரலும் சோலை' (14) என்ற பாசுரத்தை மேலே காட்டினேன். இந்த எழில் திருப்பள்ளி எழுச்சிப் பாசுரங்களில் நன்கு அமைந்துள்ளன. அதிகாலையில் நிகழும் சூழ்நிலை இது: 'கிழக்குத் திக்கில் உதயகிரியின் கொடு முடியில் சூரியன் காணப்படுகின்றான். இரவு முழுவதும் பிரபஞ்சத்தைக் கவிழ்ந்திருந்த இருள் விலகுகின்றது; காலை நேரம் வருகின்றது. சிறந்த மலர்கள் மலர்ந்து தேன் வெள்ளமிருகின்றது' (1). 'முல்லைச் செடி யில் உண்டான அழகிய மலர்களை அணைந்து கொண்டு கீழ்க்காற்று வீசுகின்றது. தாமரைமலரில் உறங்கும் அன்னப் பறவைகள் மழைபோல் சொரியும் பனியால் நனைந்த

33. திருமாலை - 12

தங்கள் அழகிய சிறகுகளை உதறிக்கொண்டு துயிலை நீக்கு கின்றன' (2). 'எங்கும் கதிரவன் ஒளி பரவுகின்றது. நட்சத் திரங்களும் குளிர்ந்த சந்திரனும் ஒளிமழுங்குகின்றன. இருட்படலம் அறவே நீங்குகின்றது. அதிகாலையில் எழும் இளங்காற்று சோலையிலுள்ள பாக்கு மரங்களின் மடலைக் கீற, அதனால் பாளைகள் மணம் வீசா நிற்கின்றன (3). மேய்வதற்குக் கட்டவிழ்த்து விடும்போதும் எருதுகளின் கழுத்தில் கட்டிய மணி ஒலியும் ஆயர்களின் புல்லாங்குழல் ஓசையும் எங்கும் பரவுகின்றன. கழனிகளிலுள்ள வண்டு களின் திரள் ஆரவாரித்துக் கொண்டு கிளம்புகின்றன' (4). சோலைகளிலுள்ள பறவைகளும் ஆரவாரஞ் செய்கின்றன (5). இப்படியெல்லாம் அதிகாலையின் சூழ்நிலை அமைந் திருப்பதை எடுத்துக் காட்டுகின்றார் ஆழ்வார்.

'திருப்பள்ளி எழுச்சி' என்ற பிரபந்தம் அதிகாலையில் திருமால் ஆலயங்களில் ஓதப்பெறுகின்றது இன்று திருமலையில் திருவேங்கடவாணனின் திருமுன் சுப்ரபாதம் ஓதப் பெறுவதுபோல். இஃது இறைவனை எழுப்புவதற் காக ஓதப்பெறுவதாக ஐதிகம். தொண்டரடிப் பொடி யாழ்வார்,

**அரங்கத் தம்மா! பள்ளி எழுந்தரு ளாயே!**
**எம்பெரு மான்! பள்ளி எழுந்தரு ளாயே!**

என்று எம்பெருமானைத் துயில் எழுப்புகின்றார். இவ் விடத்தில் மணிவாசகப் பெருமானின் 'திருப்பள்ளி எழுச்சி யும்'[34] பாரதியாரின் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி யும்'[35] நினைவுகூரத்தக்கவை. அடியார்கள் இருவரும் இறைவனை எழுப்பிய செயலைப் பாரதமாதாவினை எழுப் பியதாகப் பாடி முன்னோர் மொழியையும் பொருளையும் பொன்னேபோல் போற்றிப் புதுத்துறையில் புகுத்திய

34. திருவாசகத்திலுள்ளது. இது திருப்பெருந்துறை யில் பெருமானால் அருளப் பெற்றது.

35. பாரதியார் கவிதைகள் - காண்க.

பாரதியாரின் கற்பனை நம் உள்ளத்தைக் கவர்வதாக உள்ளது.

ஆழ்வார் காலம்: திருமங்கை மன்னனும் இந்த ஆழ்வாரும் ஒரே காலத்தவர்கள் (ஏழாம் நூற்றாண்டு) எனக் கருதுவர் பேராசிரியர் மு. இராகவய்யங்கார் அவர்கள்.[36] திருமங்கையாழ்வார் திருவரங்கம் திருமதிலையும் சிகரங்களையும் பெருஞ்செலவிட்டுக் கட்டுவித்தபொழுது தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்து மலர்த்தொண்டு செய்துவந்தார் என்று 'குரு பரம்பரைக் கதைகள்' கூறுவதாலும், திருமங்கையாழ்வார் காலத்தே சமணம் முதலிய புறச்சமயங்கள் வைதிகச் சமயக் கடவுளரை இகழ்ந்து வந்த செய்தியை இந்த ஆழ்வார் குறிப்பிடுவதாலும் இங்ஙனம் பேராசிரியர் கருத நேர்ந்தது. ஆயினும் இந்த ஆழ்வார் திருமங்கை மன்னன் காலத்திற்கு முற்பட்டவர் என்றே எனக்குத் தோன்றுகின்றது.[37]

இந்த ஆழ்வாரை இன்று,

**மண்டங் குடியதனை வாழ்வித்தான் வாழியே!**
**மார்கழியிற் கேட்டைதனில் வந்துதித்தான் வாழியே!**
**தெண்டிரைசூழ் அரங்கரையே தெய்வ**
**மென்றான் வாழியே!**
**திருமாலை ஒன்பத்தஞ்சும் செப்பினான் வாழியே!**
**பண்டுதிருப் பள்ளிஎழுச்சிப் பத்துரைத்தான் வாழியே!**
**பாவையர்கள் கலவிதனைப் பழித்தசெல்வன் வாழியே!**
**தொண்டுசெய்து துளபத்தால் துலங்கினான் வாழியே!**
**தொண்டரடிப் பொடியாழ்வார் துணைப்**
**பதங்கள் வாழியே!** [38]

என்று வைணவ உலகம் வாழ்த்திப் போற்றுகின்றது.

---

36. ஆழ்வார்கள் காலநிலை - பக். 159.

37. Religion and Philosophy of Nalayira Divya Prabandham with Special Reference to Nammalvar (Ph. D. Thesis) - p. 223.

38. அப்புள்ளை: ஆழ்வார்கள் வாழித் திருநாமம் - 88.

# 6. குலசேகரப் பெருமாள்*

கல்கத்தாவில் வாழும் தமிழ்ப் பெருமக்களே, பாரதி தமிழ்ச் சங்கச் சான்றோர்களே,

வணக்கம். கீழ்த்திசை மாநாட்டுக்கு (வெள்ளி விழா மாநாடு) வந்த அடியேனைச் சங்கத்துச் சான்றோர்கள் பேசுமாறு அழைத்தமைக்கு மிக்க நன்றி. என் பிஎச். டி. பட்டத்திற்கெனக் கடந்த ஆறாண்டுகளாக நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் ஆழங்கால் பட்டு வரும் அடியேன் உங்கள் முன் 'குலசேகரப் பெருமாள்' என்ற தலைப்பில் பேச முன் வந்துள்ளேன். 'பெருமாள்' என்ற பெயர் முருகனுக்கும் நாராயணனுக்கும் வழங்கும் பெயராகும். இராமபிரானையும் 'பெருமாள்' என வழங்கும் வைணவ மரபு உண்டு. இராமபக்தியில் தலைசிறந்து விளங்கும் குலசேகராழ்வார் குலசேகரப் பெருமாள் என்று வழங்கப் பெறுகின்றார்.

---

* கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தில் 30-10-1969 இல் ஆற்றிய சொற்பொழிவு: அழைப்பு அச்சிட நேரம் இன்றி திடீரென்று அமைக்கப் பெறும் கூட்டத்தைப் பற்றிய செய்தியை ஆங்கில நாளிதழில் தெரிவித்து விட்டால் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் கூடி விடுவதை இங்கு நான் நேரில் கண்டு வியந்தேன். இந்த அவசரக் கூட்டத்தில் டாக்டர் மு. வ. 'தாயுமானவர்' பற்றியும், அடியேன் குலசேகரப் பெருமாள் பற்றியும், டாக்டர் S. சங்கரராஜு நாயுடு திருவள்ளுவர் பற்றியும் பேசினோம்.

**திருமகளோடு இனிதுஅமர்ந்த செல்வன் தன்னை**
**தில்லைநகர் திருச்சித்ர கூடம் தன்னுள்**
**அரசுஅமர்ந்தான் அடிசூடும் அரசை அல்லால்**
**அரசுஆக எண்ணேன்மற்று அரசு தானே** (10:7)

என்பதால், 'இராமபிரானின் திருவடிகளைத் தலைமேல் கொள்ளுதலாகின்ற அரசாட்சியைப் பெற விரும்புகின்றாரேயன்றி, அதற்கு மாறாக ஸ்வாதந்திரியம் பாராட்டுகின்ற அரசாட்சியை ஒரு பொருளாக மதிக்கவில்லை" என்பது தெளிவாகின்றது. இங்ஙனம் இவர் பெருமாளுடைய (இராமபிரானுடைய) இன்ப துன்பங்களைத் தமது சுக துக்கங்களாகக் கருதியதனால் இவருக்குப் **பெருமாள்** என்றும் ஒரு பெயர் வழங்குவது பொருத்தந்தானே. இராமபிரான் நிறுவிய அரங்க நகர் அப்பன் "பெரிய பெருமாள்' என வழங்கப் பெறுகின்றான். இவரை 'நம் பெருமாள்' என்று சிறப்பிப்பதும் உண்டு.[2] இராமன் தம்பி இலக்குவன் 'இளைய பெருமாள்' என வழங்கப் பெறும் வைணவ மரபு உண்டு.

**பிறப்பும் வளர்ப்பும் :** கேரள மாநிலத்தில் **கோழிக்**

---

2. 'நம் பெருமாள்' என்ற சொல்லை திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ள 'நம் பெருமாளைக் காட்டும்' என்று பொருள் படுத்தாமல் 'நம்முடைய பெருமாள்' எனக் காரணக் குறியாகப் பொருள் செய்வர் மணவாள மாமுனிகள். இவர் இங்ஙனம் பொருள் படுத்தியதற்குக் காரணம், வெவ்வேறு தேயங்களிலும் இல்லங்களிலும் எழுந்தருளியிருக்கும் அர்ச்சையில் ஈடுபட்டிருப்பவரும், எல்லாக் கல்யாண குணங்களையும் அவரவர் விரும்பிய அந்தந்த அர்ச்சையில் காணலாம் என்பதைத் தெரிவிப்பதற்காகவே ஆகும். (முமுட்சு. 141 இன் உரை காண்க).

கோடு[3] என்னும் இராஜதானியில் ஆண்டு வந்தவன் 'திடவிருதன்' என்னும் அரசன். இவனுடைய அரச மாதேவி நாத நாயகி. பல்லாண்டுகள் இவர்கட்கு மக்கட் பேறு இல்லை. பின்னர் திருமாலுக்குச் சிறப்பான ஆராதனங்கள் செய்து வழிபட்டதன் காரணமாக மாசித் திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் இளவரசராகத் தோன்றி னார். இவரைத் திருமாலின் மார்பிலுள்ள கௌத்துவ மணியின் அவதாரமாகக் கொள்வர் வைணவப் பெரு மக்கள். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் குலசேகரன் என்பது. இளமையிலிருந்தே திருமால் பக்தியில் தலை சிறந்து விளங்கினார் இவ்வரச குமாரர்.

பெற்றோர்கள் தம் அருமருந்தன்ன செல்வனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். தக்க பருவத்தில் நல்லாசிரியரைக் கொண்டு கல்வி கற்பித்தனர். குலசேகரன் சிறிது காலத்தி லேயே நான்கு வேதம், ஆறு சாத்திரம் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தான். அரசருக்கு வேண்டிய வில் வித்தை, நீதி நூல்கள், யானை ஏற்றம், குதிரையேற்றம், படைக் கலப்பயிற்சி முதலியவற்றையும் ஐயந்திரிபறக் கற்று வல்ல வனாயினான். விரைவில் இளவரசுப் பட்டமும் சூட்டப் பெற்றது.

குலசேகரன் தனது புயவலியால் நால்வகைச் சேனையின் துணை கொண்டு சோழ பாண்டிய அரசர் களையும் வென்று அவர்களைத் தன்வசப்படுத்தினான்.

3. கருட வாகன பண்டிதரின் திவ்விய சூரி சரிதம் இவ்வாறு செப்பும். பின்பழகிய பெருமாள் சீயரின் குரு பரம்பரை இவர் அவதரித்த ஊர் கொல்லி மாநகர் என்று கூறும். வேதாந்த தேசிகரும் (தே. பி. 374) மணவாள மாமுனிகளும் (உ. ர. மா - 31) இவர் பிறந்த ஊரை வஞ்சிக்களம் என உரைப்பர்.

இதனால் சேர, சோழ, பாண்டி என்னும் தமிழ்நாட்டுப் பகுதிகள் மூன்றுக்கும் தலைமை பூண்டான். இதனால்

> கொல்லி காவலன் கூடல் நாயகன்
> கோழிக் கோன்குல சேகரன்[4]

என்னும்படி பல விருதுகளையும் பெற்றுத் திகழ்ந்தான். நாளடைவில் இவனது தந்தையார் திடவிரதன் இவனுக்குத் திருமுடி சூட்டித் தான் தவம் செய்து உயர் கதி பெறும் பொருட்டுத் தவவனம் சென்றதாக வரலாறு.

**பரத்துவ விசாரம்:** தந்தைக்குப் பிறகு நாட்டை நடு நிலை தவறாது ஆண்டு நற்பெயர் பெற்றான். நல்லதோர் பெண்மணியை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டு அவள்மூலம் நீளாதேவியின் அம்சமான இளை என்ற ஒரு மகளையும் திடவிரதன் என்று தன் தந்தையார் பெயரையே பெறும் ஒரு மகனையும் பெற்று,

> மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு[5]

என்ற வள்ளுவர் வாக்கிற்கு எடுத்துக்காட்டாயினான். கவலையற்ற வாழ்க்கையையும் நடத்தினான்.

இந்நிலையில் இம்மை மறுமை வீடுபேறு என்னும் மும்மை இன்பங்களையும் தரவல்ல முதலும் முடிவும் அற்ற முழுமுதற்கடவுள் யாரோ என்ற பரத்துவ விசாரத்தில் ஈடுபட்டான். கற்றுத்துறை போய வித்தர் பலருடன் வேதம், புராணம், இதிகாசம் முதலிய நூல்களைப் பரிசோதித்துப் பார்த்தான். இந்நிலையில் கருணாமூர்த்தி யாகிய கமலக் கண்ணனின் திருவருள் நோக்கு அவன் மேல் படவே, ஸ்ரீமன் நாராயணனே முழுமுதற்கடவுள் என்ற உண்மை அவனது ஞானக்கண்ணுக்குப் புலனாயிற்று;

---

4. பெரு. திரு. 2:10
5. குறள்-60 (வாழ்க்கைத் துணை நலம்)

தெளிவாகவும் விளக்கம் அடைந்தது. எம்பெருமானது அனந்த கல்யாண குணங்களாகிய பெருங்கடலில் ஆழ்ந்து நெஞ்சுருகி நின்று குலசேகராழ்வார் என்ற நிலைக்கு உயர்ந்து பாசுரங்கள் பாடும் பெருமையையும் பெற்றார். இவர் பாடிய பாசுரங்கள் பெருமாள் திருமொழி என்ற அருளிச் செயலாக வடிவங்கொண்டு திகழ்கின்றன. இதில் 105 பாசுரங்கள் பத்துத் திருமொழிகளில் அடங்கியுள்ளன. இவற்றின் மூலம் திருமாலின் விபவாவதாரங்களில்[6] இராமகிருஷ்ணாவதாரங்களிடத்திலும், அர்ச்சாவதாரத்தில் திருவரங்கம், திருவேங்கடம், திருவித்துவக்கோடு ஆகிய திவ்வியதேசத்து எம்பெருமான்களிடத்திலும் மிக்க பக்திப் பெருங்காதல் கொண்டிருந்த நிலையைத் தெளிவாக அறிய முடிகின்றது.

**அருளிச்செயல் மூலம் அறிவது:** இவருடைய அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டு அநுபவிக்கும்போது இவருடைய வாழ்க்கை பற்றிய குறிப்புகள் அகச்சான்று களாகக் கிடைக்கின்றன. இவர்தம் அருளிச்செயல் கொண்டு இவற்றைக் காட்ட முயல்வேன்.

**இராமாயண ஈடுபாடு:** 'கற்பார் இராமபிரானை யல்லால், மற்றும் கற்பரோ?'[7] என்றார் நம்மாழ்வார்

---

6. **எம்பெருமானின் திருமேனி:** இது பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்று ஐந்து வகைப்படும். பரம் என்பது, வைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் பரவாசு தேவனின் உருவம். வியூகம் என்பது, திருப்பாற்கடலில் வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்னன், அநிருத்தன் என்ற உருவங்கள். விபவம் என்பது, எண்ணற்ற அவதார மூர்த்திகள். அந்தர்யாமி என்பது எல்லோருடைய இதய கமலத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. அர்ச்சை என்பது, திவ்வியதேசங்களில் எழுந்தருளியுள்ள நிலையும், மற்றும் பக்தர்களின் வேண்டுகோளின்படி அவரவர் விருப்பத்திற் கேற்றவாறு திருமேனி கொண்டு நிற்கும் நிலையும்.

7. திருவாய். 7.5:1.

இதனால் இராமாயணக் காலட்சேபத்தையே எப்போதும் தமது போதுபோக்காக மேற்கொண்டு வந்தார் சேர வேந்தர். தமது திருமாளிகைத் திருவாராதனத்தில் எழுந்தருளியுள்ள இராமனுக்கும் இராசகோபாலனுக்கும் நித்திய நைமித்திக உற்சவங்களைக் குறைவறச் செய்துகொண்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் இராமாயணக் காலட்சேபங்களைக் கேட்டு அநுபவித்துக் கொண்டு இருக்கையில் எதிர்பாராமல் இரண்டு திடீர் நிகழ்ச்சிகளை உண்டாக்கி விட்டார்.

முதல் நிகழ்ச்சி: இராமாயணக் காலட்சேபம் நடைபெறுகின்றது. கரன்வதைப் படல நிகழ்ச்சி அன்றைய காலட்சேபத் தலைப்பு. குலசேகராழ்வார் மிக உன்னிப்பாக கதையைக் கேட்டுக் கொண்டு தன்னை மறந்தநிலை. இலக்குவனால் 'ஏற்ற நெடுங்கொடி மூக்கும் இருகாதும் முலை இரண்டும்' இழந்த சூர்ப்பணகை,

> **காற்றினிலும் கனலினினும் கடியானைக்**
> **கொடியானைக் கரனை உங்கள்**
> **கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்**
> **என்று சலம் கொண்டு போனாள்.**[8]

[சலம் கொண்டு-தணியாத முற்றின வைரங்கொண்டு.]

இவளுக்குக் காவலாக இருந்த கரன், தூடணன் பெருஞ் சேனையுடன் இராம லக்குமணர்களை நோக்கிப் புறப்படுகின்றனர். இராமன் தம்பியைப் பிராட்டிக்குக் காவலாக இருக்கும்படி நியமித்துத் தன்னந்தனியனாகப் போருக்குச் செல்லுகின்றான். அரக்கர்கள் வீராவாதத்துடன் இராமனைச் சூழ்கின்றனர் என்பதைக் கம்ப நாடன்,

> **எற்று வரம்பிடித் தேந்துதும் என்குநர்**
> **பற்று வாநெடும் பாசத்தில் என்குநர்**

8. கம்ப. ஆரணிய. கரன்வதை. 143.

முற்று வாமிறை சொன்முறை யால்எனாச்
சுற்றி னார்வரை சூழ்ந்தன்ன தோற்றத்தார்[9]

[எற்றுவாம்-பிடித்து மேலே எறிவோம்; ஏந்துதும் - ஏந்திக் கொள்வோம்; இறை-கரன்: முற்றுவாம் - செய்து முடிப்போம்; வரை - மலை]

என்று காட்டுவான். இதனைப் பௌராணிகர் சொல்லக் கேட்டவுடன் இராமகாதையில் தனக்குள்ள அன்பினால் இச்செய்தியை ஆழ்வாரால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. அந்த நிகழ்ச்சி அன்றுதான் நடைபெறுவதாக நினைக்கின்றார். இப்படிப்பட்ட சங்கடமான நிலையில் தம்மால் இயலும் உதவியைச் செய்யாது விடுவது சிறிதும் தக்கதன்று எனக் கருதுகின்றார். தமது சேனைகளை எல்லாம் போருக்குச் சித்தமாய் முன் செல்லும்படி பணித்துத் தாமும் போர்க்களத்தை நோக்கிப் புறப்படத் தொடங்குகின்றார்.

கதையில் நடைபெறுவதை கேட்டுக் கொண்டிருக்கும் அன்றுதான் தம்மை மறந்து நிகழ்ச்சி நடைபெறுவதாகக் கருதுவதை ஒட்ட உணர்தல் (Empathy) என்று கூறுவர் திறனாய்வாளர்கள். இஃது உளவியல் அடிப்படையில் அமைந்த ஒன்று. இது தன்னைப் பிறராகவே கருதி உணர்வது. ஒரு சிறு குழந்தை நடுத் தெருவில் உட்கார்ந்து கொண்டு விளையாடுகின்றது. மகிழுந்து (car) ஒன்று அக் குழந்தையை நோக்கி வந்து கொண்டுள்ளது. வண்டி தன்மீது ஏறி விடும் என்ற அச்ச உணர்ச்சியே குழந்தைக்கு இல்லை. ஆனால், அதைக் கண்ணுறும் நாம் அக்குழந்தை நிலையில் இருந்து கொண்டு அச்சவுணர்ச்சியைப் பெறுகின்றோம். நாம் குழந்தையாகவே ஆய்விடுகின்றோம்; ஓடிக் குழந்தை யைத் தூக்கி விபத்தினின்றும் காக்கவும் முற்படுகின்றோம்; இந்த உணர்ச்சியே 'ஒட்ட உணர்தல்' என்பது. இதில் நாம் அடைந்த நிலையைத்தான் ஆழ்வார் அடைகின்றார். இராமனைக் காப்பாற்றவும் துணிந்து செயற்படுகின்றார்.

9. கரன் வதை-15.

கதையைக் கேட்டுக் கொண்டிருக்கும் யாவரும் இன்ன தென்று அறியாது திடுக்கிட்டு நிற்கின்றனர். கதை கூறும் புராண ஆசிரியர் நிலைமையை நன்கு உணர்கின்றார். "மெய்யறிஞர்களே, இராமன் ஒருவனே தனிமையில் நின்று போர் செய்து சேனைகளையெல்லாம் அழித்துக் கர தூடணர்களையும் கொன்று தன் ஆசிரமத்திற்கு வந்து விடுகின்றான். சீதாப்பிராட்டி அவனைக் களிப்புடன் வர வேற்று ஆர்வத்துடன் தழுவி அவனது களைப்பைத் தணிவிக்கின்றாள்" என்று கூறி கதையை முடித்து விடுகின் றார். இதனைக் கேட்ட ஆழ்வார் பெருமகிழ்ச்சி அடை கின்றார். சேனையைத் திருப்பிக் கொண்டு தாமும் பயணத்தை நிறுத்திவிடுகின்றார். இதுமுதல் இராமனது வெற்றிச் சிறப்பு வரும் இடங்களில் அவற்றை விரிவாக வளர்த்தும், அரக்கர்களால் இராமனுக்குத் துன்பம் நேரும் இடங்களைச் சுருக்கி யுரைத்தும் கதையை நடத்தி வந்தனர். இப்படியிருக்க ஒரு நாள் அந்தப் புராணிகர் ஒரு முக்கிய செயலின் நிமித்தம் வேறிடம் செல்ல வேண்டி நேரிட்டது. அதனால் அவர் தாம் வராமல் தன்மகனை அனுப்பி வைத்தார்.

**ஆழ்வாருக்கு இராமன் காட்சி தருதல்:** குலசேகரப் பெருமானின் இயல்பை நன்கு உணராதவர் புராணிகரின் மைந்தர். இராவணன் சீதையை எடுத்துச் சென்ற செய்தி வரும் கட்டத்தைக் கேட்பவர்கள் நெஞ்சுருகும் வண்ணம் விரிவாக எடுத்துரைக்கலானார். இந்த நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்த சேரவேந்தர் மனம் கொதித்து எழுகின்றார். "இப்பொழுதே அடியேன் வெகு விரைவாகச் சென்று கடல் கடந்து இலங்கையைச் சாம்பலாக்கி அரக்கர் கோனை உற்றார் உறவினருடன் தொலைத்துப் பிராட்டி யாகிய அன்னையை மீட்டு வருவேன்" என்று சொல்லி ஆயுதங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டும், சேனைகளை அணிவகுத்துக் கொண்டும் இலங்கையை நோக்கிப் பயண மானார். அப்போது விண்ணவரும் மண்ணவரும் இதைக்

கண்டு வியப்புற்று 'இதன் முடிவு யாதாகுமோ?' என்று பெருங்கவலை கொண்டு நின்றனர். ஆழ்வார் கடலை நீந்தியே கடக்க உறுதி கொண்டு கழுத்தளவினதான நீரில் நின்ற சமயத்தில், இவர்தம் அன்புக்கு இடமான இராமபிரான் இவரைத் தடுத்து நிறுத்துவதற்கு வகை யொன்றும் இல்லாமையைக் கருதி தாமே சீதாப்பிராட்டி யாருடனும் இலக்குமனனோடும் காட்சி தருகின்றான். தமது போர் வெற்றியையும் விரோதி நாசத்தையும் தேவியை மீட்டதையும் தெளிவாகக் கூறுகின்றான். பிறவிப் பெருங்கடலைக் கடந்து கரையேற்றுதற்கு ஓர் அறிகுறியாக இருக்குமாறு இவரைக் கரையேற்றி நகருக்கு அனுப்பிப் பின்னர் மறைந்தருளுகின்றான்.

**இராமாவதார ஈடுபாடு:** ஆழ்வார் இராமன் சரிதத்தில் தமக்குரிய ஈடுபாட்டை தசரதன் புலம்பல் (பதிகம்-9), தில்லைச்சித்திரகூடம் — இராமசரிதம் (திருமொழி-10), தாலாட்டு (9) என்ற மூன்று திருமொழிகளை அருளியதால் புலப்படுத்துகின்றார். அன்பர்களே, இவற்றில் ஆழங்கால் படுவோம்.

(1) தசரதச் சக்கரவர்த்தி இராமனைப் பிரிந்த அளவில் மனம் உருகி இரங்கிப் பேச்சுகளின் வடிவமாக அருளிச் செய்யப் பெற்றிருப்பது ஒன்பதாந்திருமொழி. ஆழ்வார் தம்மை தசரதனாகவே ஆக்கிக் கொண்டு புலம்புகின்றார். "இராமா, அயோத்தி மக்கள் அனைவரும் நின் திருவடி இணைகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து கை கூப்பி நின்று துதிக்க, நீ அரியணையில் அமர்ந்து முடி சூடுவதற்குச் சித்தமாக இருந்தாய். இந்நிலையில் 'நீ கானாளப் போ' என்று கூறினாள் கைகேயி. அவளுடைய சொற்கேட்டு நான் மிக நன்றாக உன்னை நானிலத்தை ஆளும்படி செய்த அழகே அழகு!" என்று இரங்கிப் பேசுகின்றார் (1) "நீயும் என்னுடைய கடுஞ்சொற்களைக் கேட்டுப் பரிவாரங் களையும் பரிசனங்களையும் துறந்து 'நெய்வாய வேல்

நெடுங்கண் நேரிழையும் இளங்கோவும்' நின்னைத் தொடர, எங்ஙனம் நடந்து சென்றாயோ? நான் என்ன செய்வேன்!'' என்கின்றார் (2). 'என் செய்கேனே!' என்பதனால் 'இனி, எனக்கு மரணமே கதி!' என்று தொனிக்கின்றதை உணர முடிகின்றது.

இப்பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாசுரமும் நெஞ்சை உருக்கும் தன்மையது. ஈண்டு ஒரு பாசுரத்தைக் காட்டு வேன்.

கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
 குலமதலாய்! குனிவில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
 மனம் உருக்கும் வகையே கற்றாய்;
மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றுஇனிப்போய்
 வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ?
 காகுத்தா! கரிய கோவே! (3)

இந்தப் பாசுரத்தை உள்ளம் கனிந்து பாடுங்கால் நாமும் ஆழ்வாரைப்போல் தசரதனாகி விடுகின்றோம்; ஆழ்வார் உணர்ச்சியை நாமும் பெறுகின்றோம்.

குடையும் செருப்பும்
 கொடாதே தாமோதரனை நான்
உடையும் கடியன
 ஊன்றுவெம் பரற்கள்உடைக்
கடியவெங் கானிடைக்
 காலடிநோவக் கன்றின்பின்
கொடியேன்என் பிள்ளையைப்
 போக்கினேன்; எல்லே பாவமே![10]

என்று பெரியாழ்வார் யசோதை நிலையில் நின்று பேசுவது போல, ஆழ்வாரும் தன்னைத் தசரதன் நிலையில் வைத்துக்

---

10. பெரியாழ். திரு. 3.2:9

கொண்டு பெருமானுடைய திருமேனியின் மென்மையை நோக்காமல் வெவ்விய காட்டில் அவனைப் போக விட்ட கொடுமையுடைய தன்னைத்தானே வெறுத்துக் கூறு கின்றார்.

இன்று
நீ போக என்நெஞ்சம்
இருபிளவாய்ப் போகாதே
நிற்குமாறே (4)

என்றும்,

எம்மானை என்மகனை இழந்திட்ட
இழிதகையேன் இருக்கின் றேனே (6)

என்றும் புலம்புகின்ற பேச்சு நம் உள்ளம் வெடிப்பது போன்ற உணர்வை உண்டாக்குகின்றது.

மேலும்,

பொன்பெற்றார் எழில்வேதப் புதல்வனையும்
தம்பியையும் பூவை போலும்
மின்பற்றா நுண்மருங்குல் மெல்லியல்என்
மருகியையும் வனத்தில் போக்கி
நின்பற்றா நின்மகன்மேல் பழிவிளைத்திட்டு
என்னையும்நீள் வானில் போக்க
என்பெற்றாய்? கைகேசீ! இருநிலத்தில்
இனிதாக இருக்கின் றாயே! (8)

முன்னொருநாள் மழுவாளி சிலைவாங்கி
அவன்தவத்தை முற்றும் செற்றாய்;
உன்னையும்உன் அருமையையும் உன்மோயின்
வருத்தமும் ஒன்றாகக் கொள்ளாது
என்னையும்என் மெய்யுரையும் மெய்யாகக்
கொண்டுவனம் புக்க எந்தாய்!
நின்னையே மகனாகப் பெறப்பெறுவேன்
ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே! (9)

தேன்நகுமா மலர்க்கூந்தல் கௌசலையும்
சுமத்திரையும் சிந்தை நோவ
கூனுருவில் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட
கொடியவள்தன் சொற்கொண்டு, இன்று
கானகமே மிகவிரும்பி நீதுறந்த
வளநகரைத் துறந்து நானும்
வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்;
மனுகுலத்தார் தங்கள் கோவே! (10)

என்ற இந்த மூன்று பாடல்களையும் இசையூட்டிப் படிக்கும் போது இராமகாதையில் தோய்ந்த ஆழ்வாரின் உள்ளத்தைக் காண முடிகின்றது.

(2) இதனை அடுத்த பத்தாம் திருமொழி இராம காதையின் சுருக்கமாகும். இராமசரிதத்தை வால்மீகி பகவான் பேசி அநுபவித்தாற்போல் ஆழ்வாரும் இதைப் பேசி அநுபவிக்கின்றார். கதை வெகுவேகமாக நடைபெறுகின்றது. தில்லைச் சித்திரகூடத்து எம்பெருமான் ஆழ்வாருக்கு இராமனாகவே காட்சி தருகின்றார். இப்பதிகத்திலுள்ள சொற்றொடர்கள் ஒவ்வொன்றும் ஒருபடித்தேனாக இனிக்கின்றதை உணரமுடிகின்றது. இராமனை,

> உலகனைத்தும் விளக்கும் சோதி, வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்கு, விண்முழுதும் உயக்கொண்ட வீரன் (1) செங்கண் நெடுங்கருமுகில் என்ற தொடர்களாலும், வல்லரக்கர் உயிருண்ட வீரன் (2), வேல்வேந்தர் பகை தடிந்த வீரன் (3), திருமகளோடு இனிதமர்ந்த செல்வன் (6) என்ற தொடர்களாலும் அநுபவித்து மகிழ்கின்றார்.

இந்தப் பதிகத்தில் இரண்டு பாடல்களில் ஆழங்கால் படுவோம்.

தொத்தலர்பூஞ் சுரிகுழல்கை கேசி சொல்லால்
தொன்னகரம் துறந்துதுறைக் கங்கை தன்னை
பத்தியுடைக் குகன்கடத்த வனம்போய்ப் புக்குப்
பரதனுக்குப் பாதுகமும் அரசும் ஈந்து

சித்திரகூ டத்திருந்தான் தன்னை யின்று
 தில்லைநகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற
 இருநிலத்தார்க் கிமையவர்நேர் ஒவ்வார் தாமே. (4)

வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக் கொன்று
 வண்தமிழ்மா முனிகொடுத்த வரிவில் வாங்கி
கலைவணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக்
 கரனோடு தூடணன்தன் உயிரை வாங்கி
சிலைவணக்கி மான்மறிய எய்தான் தன்னைத்
 தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
தலைவணக்கிக் கைகூப்பி ஏத்த வல்லார்
 திரிதலால் தவமுடைத்துத் தரணி தானே (5)

இந்த இரண்டு பாசுரங்களில் கதையின் ஓட்டத்தைக் காண முடிகின்றது.

(3) இராமகாதையில் கோசலை பெற்ற பேற்றை எண்ணுகின்றார் ஆழ்வார். அவள் இராமனைக் குழந்தைப் பருவத்தில் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுக் கூறின அநுபவத்தைக் கற்பனையில் காண்கின்றார். தானே தாயாகிவிடுகின்றார்; தாலாட்டுகின்றார். இந்த அநுபவம் இவருக்குத் திருக்கண்ணபுரத்து சௌரிராசன் விஷயமாகச் செல்லுகின்றது. மூன்று பாசுரங்களில் ஆழங்கால் படுவோம்.

மன்னுபுகழ்க் கௌசலைதன்
 மணிவயிறு வாய்த்தவனே!
தென்இலங்கைக் கோன்முடிகள்
 சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மா மதில்புடைசூழ்
 கணபுரத்துஎன் கருமணியே!
என்னுடைய இன்னமுதே!
 இராகவனே! தாலேலோ! (1)

கொங்குமலி கருங்குழலாள்
கௌசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச்சனகன்
திருமருகா! தாசரதீ!
கங்கையிலும் தீர்த்தமலி
கணபுரத்துஎன் கருமணியே!
எங்கள்குலத்து இன்னமுதே!
இராகவனே! தாலேலோ! (3)

[எங்கள்குலம் - அரசகுலம்]

சுற்றம்எல்லாம் பின்தொடரத்
தொல்கானம் அடைந்தவனே!
அற்றவர்க்கு அருமருந்தே!
அயோத்திநகர்க்கு அதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும்
கணபுரத்துஎன் கருமணியே!
சிற்றவைதன் சொற்கொண்ட
சீராமா! தாலேலோ! (6)

ஆழ்வார் பெற்ற இராமாநுபவத்தை நாம் பெறும்போது ஒவ்வொரு பாசுரமும் ஒருபடி அமுதமாக இனிப்பதை உணரமுடிகின்றது.

**கிருஷ்ணாவதார அநுபவம்:** அன்பர்களே, ஆழ்வாரின் கிருஷ்ணாவதார அநுபவத்திலும் ஆழங்கால் படுவோம். இரண்டு திருமொழிகளில் (திருமொழி - 6, திருமொழி - 7) இந்த அநுபவத்தைக் காணமுடிகின்றது. ஒன்று கண்ணனைப் பெற்றெடுத்த தேவகி அநுபவமாகவும், மற்றொன்று கண்ணனைக் காதலித்த கன்னியர் ஊடி அவனை எள்குதலாகவும் நடைபெறுகின்றது.

(1) **தேவகியின் அநுபவம்:** அன்பர்களே, கண்ணனை ஈன்றவள் தேவகி; வசுதேவனின் தேவிகள். இவனைக் கடுஞ் சிறைவாசத்தில் பெற்றவள். மக்கட்பேற்றை

அடைந்தாலும், அவனை வளர்க்கும்போது பெறும் 'பேரின்பத்தை' அடையப் பெறாதவள். ஆனால் கண்ணனைக் குழந்தை நிலையிலிருந்து வளர்க்கும் பேறு பெற்றவள் யசோதை. இவள் ஈன்ற தாயாகவே ஆகிவிடுகின்றாள். இவள் பேசுகின்றாள்: ''பன்னிரண்டு மாதம் உன்னை என் வயிற்றிற் சுமந்து பெற்ற நான் உடனே உன்னைத் திருவாய்ப்பாடிக்குப் போக்கிவிட்டேனாதலால் உன்னைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல் முதலிய ஆனந்தாநுபவங்களை யசோதை பெற்றாளன்றி பாவியேனாகிய நான் பெற்றேன் இல்லை'' என்று புலம்புகின்றாள். இதையே தாய் நிலையிலுள்ள ஆழ்வார் வாக்கில் காண்போம். '''ஆலையிலிட்டு ஆடத்தகுந்த நீண்ட கரும்பு போன்ற கண்ணனே, உனக்குத் தாலாட்டு. தாமரை போன்று அகன்ற திருக்கண்களையுடையவனே! உனக்குத் தாலாட்டு. யானைக்குட்டி போன்றவனே! உனக்குத் தாலாட்டு. மணம்மிக்க நீண்ட திருக்குழலையுடைய என் மகனே! உனக்குத் தாலாட்டு' என்று இப்படிப் பலகாலும் சொல்லி என் வாய் நிறைவு கொள்ளும்படி உன்னைத் தாலாட்டும் பேறு இல்லாத அன்னைமார்களில் கடைகெட்ட தாயாய் இரா நின்றேன் நான்'' (1) என்கின்றாள்.

''தாலாட்டுப் பேறு மாத்திரமேயா நான் இழந்தது? மை இடப்பெற்ற செந்தாமரை மலரையொத்த கண்களாலே தொட்டிலின் மேற்கட்டியில் தொங்கும் ஒரு பொருளைப் பொருந்தப் பார்த்துக் கொண்டும் கறுத்த புறந்தாளையுடையனவும், செந்தாமரை மலரையொத்த சிறுத்த சிவந்த அகவாயையுடையனவுமான நினது திருவடிகளை முடக்கிக் கொண்டும் கழுத்தளவும் பருகின நீர் விளங்கப்பெற்ற மேகக் குட்டி போல அழகிய சிறுத்த திருவிரல்கள் யாவற்றையும் உள்ளங்கையிலே அடங்கும்படி முடக்கிப் பிடித்துக் கொண்டும் ஆனைக்கன்று கிடக்குமாப் போலே பள்ளிகொண்டருளும் அழகை அநுபவிக்கப்

பெறாத பாவியானேனே! ஐயோ! கெடுவேன், கெடுவேன்"
(2) என்று புலம்புகின்றாள்.

ஓர் இல்லத்தில் மக்கட்பேறு ஏற்பட்டதென்றால் உறவினரெல்லாரும் வரிசையாக வந்து குழந்தையை எடுத்துத் தம் துடைமீது வைத்துக் கொண்டு 'எந்தையே என் குலவிளக்கே! முகிற்கூட்ட அழகைக் கவர்ந்து கொண்ட காளையே!' என்று இப்படிப் பலவாறாகப் புகழ்ந்து கூறுவர். பின்னர் 'என் செல்வமே! நுந்தை யார்? காட்டு பார்ப்போம்' என்று கேட்கும்போது குழந்தை தன் விரலாலும் கடைக்கண்ணாலும் தன் தந்தையைக் காட்டுவது வழக்கம். இவ்வாறு கண்ணனாகிய குழந்தையைக் கேட்கும்போது, பெற்றெடுத்த வசுதேவனைக் காட்டவேண்டியது பிராப்தமாக இருக்கவும் பிறந்தது முதலாக நந்தகோபர் மாளிகையிலே வளர்ந்தது பற்றி அந்த நந்தகோபரை யன்றி வேறொருவரைத் தந்தை என்று அறியாமையால் அவரையே தனக்குத் தந்தையாகக் காட்டியது அடுக்கும். இவ்வாறு எண்ணிய தேவகி,

நந்தன் பெற்றனன் நல்வினையில்லா
நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே (3)

என்கின்றாள். "அந்தோ! பரம பாக்கியசாலியான யசோதையைக் கைபிடித்த காரணத்தாலே 'இவன் என் தமப்பன்' என்று விரலாலும் கண்ணாலும் காட்டும் படியான அதிருஷ்டத்தை நந்தகோபன் பெற்றான்; பெரும் பாவியான என்னைக் கைபிடித்த கொடுமையாலே வசுதேவன் இழந்தான்" என்று சொல்லி வயிறு எரிகின்றதைக் காண்கின்றோம்.

குழந்தை நிலையில் மழலை இன்பத்தை இழந்த தந்தையைப் பற்றி மேலே பேசினாள். இப்போது சற்று வளர்ந்த நிலையில் பெறும் இன்பத்தைத் தான் இழந்தது பற்றிப் பேசி கழிவிரக்கம் கொள்ளுகின்றாள். கண்ணா!

ஆனந்தத்தை விளைவிக்கும் முழுமதியத்தை யொத்த திருமுகமும், திண்ணிதான திருக்கையும், திருமார்பும், திருத்தோளும், திருக்குழலும், திருநெற்றியும், திருக் கண்களுமாகிய இவ்வுறுப்புகளின் சோபையால் விளங்கா நின்றுள்ள உன் வளர்ந்த பருவத்தின் அழகை இப்போது நான் கண்ணாரக் கண்டு அநுபவியா நின்றாலும், 'தாய் ஒருத்தியையே யன்றி வேறு ஒருவரையும் அறியாத இளம் பருவத்தை அநுபவிக்கப் பெறாமல் போனேனே!' என்கின்ற அநுதாபமே என நெஞ்சைக் கொள்ளை கொண்டிருப்பதனால் இப்போது அநுபவிக்கப் பெற்றது ஒரு பொருளாகத் தோன்றாமல் கழிவிரக்கமே என்னைப் புண்படுத்தா நின்றது'' (4) என்கின்றாள்.

இத்துடன் நின்றாளா? மேலும் பேசுகின்றாள். ''என் அருமை மகனே, உன் திருநெற்றியில் பொருந்தியிருக்கும் 'சுட்டி' என்ற ஆபரணம் அசையும்படி நீ முத்தம் தருவதையும் இழந்தேன்; 'நம் குழந்தையின் முகம் திருத் தந்தையின் முகம் போலவே உள்ளது' என்று சொல்லிக் கொண்டு நின்திருமுக எழிலை மகிழ்ச்சி பொங்கப் பார்த்து நிற்கும் போது, நீ நின் சிவந்த சிறிய திருவாயில் விரல்களை வைத்துக் கொண்டு சீறுபாறென்று பேசும் நிலை தோற்றச் சொல்லும் மழலைச் சொற்களையும்,

திருவி லேன்ஒன் றும் பெற்றிலேன்; எல்லாம்
தெய்வ நங்கை யசோதைபெற் றாளே (5)

என்று வயிறு பிடிக்கின்றாள். ''இவற்றை இழப்பதற்குப் பாவியாகிய நான் ஒருத்தி ஏற்பட்டாற் போல், அநுபவிப்பதற்குத் 'தெய்வமாது' என்று சொல்வதற்குத் தகுதியான யசோதைப் பிராட்டி ஏற்பட்டாள்; உன் லீலா ரஸங்கள் எல்லாவற்றையும் அவளே பெற்றனள்'' என்கின்றாள். யசோதை ஒருவித நோன்பும் நோற்காமல் எதிர்பாராமல் (யாத்ருச்சிகமாகவே) கண்ணபிரானுடைய அதிமானுஷ சீல விருத்த வேஷங்களத்தனையும் காணப் பெற்றமை

பற்றி 'தெய்வ நங்கை" எனச் சிறப்பிக்கப் பெற்றாள் என்பதை நினைந்து நினைந்து அநுபவிக்கவேண்டும். இந் நிலையில்,

> குழல் இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்[11]

என்ற வள்ளுவர் பெருமானின் வாய் மொழியையும் நினைந்து பார்க்கத் தோன்றுகின்றது. 'வெகுளியாய் நின்று உரைக்கும் அவ்வுரையும்' என்ற தொடரே இவ்வாறு நினைக்க ஆற்றுப் படுத்துகின்றது.

இன்னும் பேச்சு தொடர்கின்றது. "குளிர்ந்த அழகிய தாமரை மலரையொத்த அழகிய திருக்கண்களையுடைய கண்ணபிரானே, நீ செம்மண்ணிலே புழுதியளைந்து விளையாடும்போது தவழ்ந்து செல்வதனாலும், தட்டுத் தடுமாறித் தரையில் காலூன்றியும் ஊன்றாதும் நடப்பதனாலும், புழுதி மண்ணை அளைந்த அக்கோலத் தோடே வந்து என் மார்பில் கட்டிக் கொண்டு கிடக்கப் பெற்றிலேனே! வண்ணச் செஞ்சிறு விரல்களனைத்தாலும் அடிசிலை வாரி அமுது செய்யும்போது வாயது கையதாக மிகுந்த 'மிச்சலை' (சேஷத்தை)யும் உண்ணப் பெற்றிலேனே! ஆட்டின் தாலடையில் தொங்கும் முலை (அதர்) போலே என்னையும் என் தாய் வீணாக அன்றோ பெற்றாள்?" (6) என்று இரங்கி வாய்வெருவுகின்றாள். இதனைக் கூறும்போது,

> மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்[12]

என்ற குறட்பா பகுதியையும்,

> அமிழ்தினும் ஆற்றல் இனிதே தம்மக்கள்
> சிறுகை அளாவிய கூழ்[13]

---

11. குறள்-66 (புதல்வரைப் பெறுதல்).
12. குறள்-65
13. ஷை-64

என்ற வள்ளுவர் பெருமானின் வாக்கையும் சிந்தித்து மகிழ்கின்றோம்.

பின்னும் பேசுகின்றார் தேவகி நிலையில் ஆழ்வார்:

ஒருமுலையை வாய்மடுத்து
ஒரு முலையை நெருடிக்கொண்டு
இருமுலையும் முறைமுறையாய்
ஏங்கி ஏங்கி இருந்து உணாயே[14]

என்று பெரியாழ்வார் யசோதை நிலையில் கண்ணனை வேண்டிக் கொண்டு அதனைப் பெற்றனள் என்பதை அறிந்த தேவகி அப்பேறு தனக்கு நேராது போனதுபற்றி வருந்து கின்றாள். "என்னுடைய குடங்கையில்[15] பொருந்தி இருந்து தளிர்போன்ற அழகிய நின் ஒரு திருக்கையால் என்னுடைய ஒரு முலைக்காம்பை நெருடிக் கொண்டும் மற்றொரு முலைக்காம்பை நின் திருப் பவளத்தில் வைத்துக் கொண்டும் நடுவே என் முகத்தை நோக்கிப் புன்முறுவல் செய்து கொண்டும் அழகிய நின் இரண்டு திருக்கண் களாலும் பார்க்கின்ற பார்வையையும் அநியாயமாய் இழந்தேனே!" (7) என்கின்றாள்.

தமிழ்ச் சான்றோர்களே, ஆழ்வார் பேசியவற்றை என் புன் சொல்லைக் கொண்டு கேட்டீர்கள். இனி, அவருடைய பேச்சை அவர்தம் சொற்களாலேயே மூன்று பாசுரங்களில் காட்டுவேன்.

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்
முகிழ் இளஞ்சிறுத் தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற் கெள்கும்
நிலையும், வெண்தயிர் தோய்ந்தசெவ் வாயும்

---

14. பெரியாழ், திரு. 2.2:8 (அம்மம் உண்ண அழைத்தல்)

15. குடங்கை-முழங்கை; குடங்கால்-முழங்கால் என்று பொருள் கொள்வது போல.

அழுகை யும்; அஞ்சி நோக்குமந் நோக்கும்
அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப் பதுவும்
தொழுகை யும்;இவை கண்ட அசோதை
தொல்லை யின்பத் திறுதிகண் டாளே. (8)

என்ற பாசுரத்தில் காட்டப் பெறும் காட்சியை அநுபவித்து மகிழ வேண்டும்.

குன்றி னால்குடை கவித்ததும், கோலக்
குரவை கோத்த துவும்,குட மாட்டும்
கன்றி னால்விள வெறிந்ததும், காலால்
காளி யன்தலை மிதித்ததும் முதலா
வென்றி சேர்பிள்ளை நல்விளை யாட்டம்
அனைத்தி லும்அங்கென் உள்ளமுள் குளிர
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன்; அடியேன்
காணு மாறினி யுண்டெனில், அருளே. (9)

என்ற பாசுரத்தில் கண்ணன் தன் சேஷ்டிதங்களை யசோதைக்குக் காட்டியதை நினைந்து மகிழ வேண்டும். "அவற்றை மீண்டும் எனக்காகச் செய்து காட்டக் கூடுமோ? அப்பனே!" என்பதில் உள்ள ஏக்கம் கண்டு மகிழத்தக்கது. இப்பாசுரத்தை உள்குழைந்து நாம் அநுபவிக்கும்போது தேவகியின் நிலைக்குத் தள்ளப் பெறுவதை உணர்ந்து மகிழ்கின்றோம்.

வஞ்ச மேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி
வரண்டு நார்நரம் பெழக்கரிந் துக்க
நஞ்ச மார்தரு சுழிமுலை, அந்தோ!
சுவைத்து நீயருள் செய்து வளர்ந்தாய்
கஞ்சன் நாள்கவர் கருமுகி லெந்தாய்!
கடைப்பட் டேன்வறி தேமுலை சுமந்து
தஞ்ச மேலொன்றி லேன்;உய்ந் திருந்தேன்
தக்க தேநல்ல தாயைப்பெற் றாயே. (10)

இதில், "வஞ்சனை பொருந்திய பூதனையின் உடம்பு வரண்டு போகவும், நார் போன்ற நரம்புகள் கருகி உதிரும் படியாகவும், நஞ்சு தீற்றிய கள்ள முலையைச் சுவைத்துப் பார்த்தும் என் மீதுள்ள கிருபையினால் உயிருடன் வளரப் பெற்றாய்; கம்சனுடைய ஆயுளை அபகரித்த கருமுகிலே! நான் முலையை வீணாகச் சுமந்து கெட்டவரிலும் கடை கெட்டவளானேன்; உன்னையொழிய வேறொரு புகலற்று இராநின்றேன். என்றைக்காகிலும் உன்னைக் கண்ணால் காண்போம் என்று உயிரைப் பிடித்துக் கொண்டு வாழ் கின்றேன்; முலைப்பால் வேண்டும்போது என்னையும் விட்டு யசோதையையும் விட்டுப் பூதனையைப் பற்றினாயே! இதுவோ தகுதி?" என்கின்றாள்.

(2) ஊடற் கோபங்கொண்ட கோபியர் கண்ண பிரானை வெறுத்துரைத்த அநுபவத்தை ஏறிட்டுக் கொண்டு ஆழ்வார் பேசுவதாக அமைந்தது ஆறாம் திரு மொழி. இதில் ஆழங்கால் படுவோம்.

ஓர் ஆய்ச்சியின் பேச்சு இது: "'நீ யமுனையாற்றின் மணற் குன்றிலே நில்லு' என்று சொன்ன சொல்லை நம்பி நான் விடியுமளவும் அங்கே காத்திருந்து, நீ வரக் காணாமையால் வருத்தத்துடன் வீடு திரும்பினேன். அநியாயமாய் உன் பொய்யைக் கேட்டு மோசம் போனேன்" என்கின்றாள். 'கனவிலும் பொய் சொல்லியறியாத வசுதேவர்க்கு மகனாய்ப் பிறந்த நீயும் தந்தையை ஒத்திருப்பாய் என்று நம்பிக் கெட்டேன் காண்!' என்பது குறிப்பு. ஊடல் நிலையில் பேசும் பேச்சு இது (1).

வேறோர் ஆய்ச்சியின் வார்த்தை இது: "என் இல்லத்திற்குக் கீழ்பால் உள்ள இல்லத்தில் இருக்கும் பெண் பிள்ளையானவள் தனியே இருந்து தயிர் கடையும்போது அதனைக் கண்ட நீ 'கிடைத்தற்கரிய பொருளைப் பெற்றோம்' என்று கருதி உடனே அவளருகில் ஓடிச் சென்று 'அம்மா! நீ தனியாகத் தயிர் கடைந்தால் ஒருகாலும்

வெண்ணெய் வெளிப்படாது; நானும் ஒருதலை பற்றிக் கடைந்தால்தான் விரைவில் வெண்ணெயைக் காணலாம்' என்று வாயாற் சொல்லி, உள்ளே வேற்று நினைவு இருக்கும்படி தோன்றத் திருட்டு விழி விழித்து, மயிர் முடி அவிழ்ந்து அலையும்படியாகவும், தாமரையில் முத்துப் படிந் தாற்போலே ஒளி பொருந்திய நின் முகம் வேர்க்கும்படி யாகவும் செவ்வாய் துடிக்கும்படியாகவும் அவளோடு கூடி நீ தயிர் கடைந்த கதை எனக்குத் தெரியும், அப்பா!'' என்கின்றாள். ''இன்னமும் அங்கேயே சென்று தயிர் கடைவாய். இங்கே உனக்கென்ன வேலை?'' என்பது ஊடல் உள்ளுறை (2).

மற்றொருத்தியின் மாற்றம் இது:

**கருமலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக்**
**கடைக்கணித்து ஆங்கே ஒருத்தி தன்பால்**
**மருவி மனம்வைத்து மற்றொ ருத்திக்கு**
**உரைத்தொரு பேதைக் குப்பொய் குறித்துப்**
**புரி குழல் மங்கை ஒருத்தி தன்னைப்**
**புணர்தி; அவளுக்கும் மெய்ய னல்லை**
**மருதிறுத் தாய்! உன் வளர்த்தி யூடே**
**வளர்கின்ற தாலுன்தன் மாயை தானே** (3)

கண்ணபிரானின் காதல் நாடகம் இதில் குறிக்கப் பெறு கின்றது. 'உன் வண்டவாளம் தெரிகின்றது. என்னை விட்டு அப்பாற் செல்க!' என்பது குறிப்பு (3).

ஒரு பெண்மணியின் பேச்சு இது: ''நின் தாய் யசோதை முலையில் பாலமுது இருக்க அதனை விரும்பாமல் தவழ்ந்து கொண்டும், தட்டுத் தடுமாறி நடந்து கொண்டும் சென்று பூதனையின் முலையில் வாயை வைத்து அதன்மீது தடவியிருந்த நஞ்சை அமுது செய்து, 'பைத்தியக்காரன்' என்று பிறரெல்லாம் பரிகசிக்கும்படி நின்றாய். நான் அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவும், நீ நான் அனுப்பிய தூதியுடன் மிகுபோகத்தை நன்கு

அநுபவித்தாய். இச்செயலும் நின் தீம்புக்குத் தகுதி வாய்ந்தது போலும்!'' என்கின்றாள் (4).

வேறொருத்தியின் பேச்சு இது : ''மின்னொத்த நுண்ணிடையுடைய நங்கை யொருத்தியை அணைத்துக் கொண்டு கும்மிருட்டிலே பீதாம்பரத்தாலே முட்டாக்கு இட்டுக் கொண்டு நீயும் அவளுமாகப் போனதை என் கண்ணாலே கண்டேன். இவ்வாறு போக விரும்பிய நீ இருளன்ன மேனியைத் திறந்து கொண்டு போகலாம்; அல்லது கறுத்ததோர் ஆடையைப் போர்த்திக் கொண்டு போகலாம். அங்ஙனம் செய்தாய் அல்லை. போவதற்கு வேறு வழி இல்லையா? நான் கண்டு வயிறெரிய வேண்டும் என்றே என் தெருவழியே சென்றாய். அன்றியும் கண்ணில் தென்பட்ட வேறொருத்தியை உனக்கே அற்றுத் திரும்பிக் கடைக்கணித்து 'இன்ன இடத்துக்கு வா' என்று குறியிடம் சுட்டியதையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அந்தப் பெண்மணியை விட்டு இங்கு எதற்காக வந்தாய்? சுவாமி! இனிமேல் அவர்களிடத்தே கடைகட்டு'' என்கின்றாள் (5).

வேறொரு பெண்மணி இவ்வாறு பேசுகின்றாள்:

மற்பொரு தோள்உடை வாசு தேவா!
வல்வினை யேன்துயில் கொண்ட வாறே
இற்றை இரவிடை யேமத் தென்னை
இன்னணை மேலிட்டு அகன்று நீபோய்
அற்றை யிரவுமோர் பிற்றை நாளும்
அரிவைய ரோடும் அணைந்து வந்தாய்
எற்றுக்கு நீஎன் மருங்கில் வந்தாய்?
எம்பெரு மான்நீ எழுந்த ருளே. (6)

'மல்லர்களோடு போர் செய்யக் கற்றாயேயன்றி என்னோடு சிருங்கார ரசாநுபவம் பண்ணக் கற்றிலை காண்!' என்ற வசை தோன்ற 'மற்பொரு தோளுடை வாசுதேவா' என்று

விளிக்கின்றாள். வல்வினையேன்: 'நீ என்னை ஒருத்தியையே விரும்பி மற்றையோரைக் கண்ணெடுத்துப் பாராமலிருப்பதற்கு உறுப்பான பாக்கியமற்ற நான்' என்பது கருத்து. பாசுரத்தின் பொருள் வெளிப்படை.

இன்னொரு ஆய்ச்சி பேசுவது: "பையரவுப் பள்ளியானே! நின் மாய வலையில் மாட்டுவதற்கு முன்மாதிரி ஏமாந்தவர்கள் அல்லேம். நீ விரும்பத்தக்கவர்களாக மையணிந்து மான்போல் அழகிய கண் படைத்த பெண்டிர்களும் அல்லேம். காலதாமதம் செய்து எமது இல்லத்துக்குப் போதருவதை இனி விட்டிடு. நின் அழகிய பீதக ஆடையையும் திருமுக மண்டலத்தையும் செங்கனி வாயையும் திருக்குழலையும் கண்டு அவற்றில் ஈடுபட்டு உன் பொய் மொழிகளில் ஒருநாள் பட்டபாடு எங்கட்குப் போதும்; வஞ்சக மொழிகளை மீண்டும் கூறாமல் உன் காதலிமார்களிடம் சென்று சேர்க" (7) என்கின்றாள்.

பின்னும் ஓர் ஆய்ச்சி பேசும் பாசுரம் இது:

என்னை வருக எனக்கு றித்திட்டு
　　இனமலர் முல்லையின் பந்தர் நீழல்
மன்னி அவளைப் புணரப் புக்கு,
　　மற்றுஎன்னைக் கண்டுழ றாநெ கிழ்ந்தாய்
பொன்னிற ஆடையைக் கையில் தாங்கிப்
　　பொய்யச்சம் காட்டுநீ போதி யேலும்
இன்னமென் கையகத்து ஈங்கு ஒருநாள்
　　வருதியேல், என்சினம் தீர்வன் நானே. (8)

[உழறா - கலங்கி]

பாசுரத்தின் பொருள் வெளிப்படை. 'என் சினம் தீர்வன் நானே' என்கின்ற இடத்தைத் திருஅரங்க திருஅத்யயனோத்ஸவத்தில் 'உய்ந்த பிள்ளை' என்பாரொடு அபிநயம் பிடிக்கும்போது கையாலே அடிப்பதும் காலாலே துவைப்பதுமாய் அபிநயித்தார் அரையர். அதாவது — 'மறுபடியும் நீ என் கையில் அகப்படும்போது உன்னை நான் கையா

லடித்தும் காலால் துகைத்தும் என் சினத்தைத் தணித்துக் கொள்வேன்' என்ற கருத்தைத் தெரிவித்தார். அப்போது கோஷ்டியில் எழுந்தருளியிருந்த எம்பார் இங்ஙனம் அரையர் காட்டிய அபிநயத்தைக் கடைக்கணித்து அரையர்க்கு சுவை அநுபவம் போதாது என்று திருவுள்ளம்பற்றி 'கெடுவாய்! அப்படி அவள் செய்தாளாகில் கோபியரே கதி என்றிருக்கின்ற கண்ணனுக்கு அது வருத்தமோ? வேப்பிலையுருண்டையோ? இஃது அவனுக்கு கிடைத்தற்கரிய செயலாகுமன்றோ? ஆகையால் அதுவன்று கருத்து; முகங்கொடுக்காமல் முகத்தை மாறவைத்து என் சினத்தைத் தணித்துக் கொள்வேன் என்னும் கருத்துத் தோன்ற, கையிட்டு முகத்தை மறைத்துத் திரிய வைத்தருளிக் காட்டவேண்டும்' என்று தாம் அவ்வாறாக அபிநயித்துக் காட்டினார் என்பது எல்லோரும் அறிந்த தொன்று.

இறுதியாக ஒருத்தியின் பாசுரம்:

மங்கல நல்வன மாலை மார்வில்
இலங்க, மயில்-தழைப் பீலி சூடி
பொங்குஇள ஆடை அரையிற் சாத்தி,
பூங்கொத்துக் காதிற் புணரப் பெய்து
கொங்கு நறுங்குழ லார்க ளோடு
குழைந்து குழல்இனிது ஊதி வந்தாய்;
எங்களுக் கேஒரு நாள்வந்து ஊத
உன் குழ லின்னிசை போத ராதே. (9)

இங்ஙனம் வரும் பாசுரங்களை அநுபவித்துப் படிக்கும் போது முதலில் ஆழ்வார் காலத்துக்கும், அடுத்துக் கண்ணன் வாழ்ந்த காலத்திற்கும் தள்ளப்படுகின்றோம்.

**சிறப்பான நிகழ்ச்சி:** இவர் வாழ்வில் நடைபெற்ற ஒரு சிறப்பான நிகழ்ச்சியைக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். எம்பெருமானுடைய திவ்விய சரிதங்களைக் கேட்பதில் மிக்க அன்புடையவரான குலசேகரப் பெருமாள் திருவரங்கம் பெரிய கோயிலின் மேன்மையைப் புராணங்கள்

வாயிலாக அறிகின்றார். அத் திருக்கோயிலை நோக்கிப் புறப்பட்டுச் செல்ல முயலுகின்றார். அரசர் பெரிய பெருமாளைச் சேவிப்பாராயின் பின்பு திரும்புதல் அரிது என்று கருதுகின்றனர் அமைச்சர்கள். ஓர் உபாயத்தையும் சிந்திக்கின்றனர்.

பாகவதர்களை உபசரிப்பதில் மிக்க விருப்பமுள்ளவராதலால் அதற்கு ஏற்பாடு செய்கின்றார். அறுபதினாயிரம் ஆண்டுக் காலம் திருமாலை ஆராதனம் செய்த பயன் ஒருகால் ஸ்ரீவைணவர்களை பூசித்த பேற்றுக்கு ஈடாகாது என்ற உண்மையை அறிந்தவராதலால் அரங்க நகர்ப் பயணத்தை நிறுத்துகின்றார். திருமால் அடியார்களை உபசரிப்பதில் காலங்கழிக்கின்றார். இங்ஙனம் திருத்தலப் பயணம் தொடங்கும் போதெல்லாம் இந்த உக்தியைக் கையாள்வதால், நாடெங்கும் அடியார்களின் கூட்டம் பெருகிவரலாயிற்று. அரண்மனையின் உள்ளும், ஆலோசனை மண்டபத்திலும் இன்னும் அந்தரங்கமான இடங்களிலும் அடியார்களின் திருக்கூட்டம் எக்காலத்திலும் சிறிதும் தடையின்றி உலாவத் தொடங்குதலையும் அரசனிடம் வரம்பு கடந்து சுதந்திரம் பாராட்டுதலையும் கண்ட அமைச்சர்கள் பொறாமை கொண்டு இவர்களிடம் அரசருக்கு வெறுப்பை உண்டாக்கக் கருதுகின்றனர். அதற்கேற்ற சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி இருக்கின்றனர்.

**ஸ்ரீராம நவமி:** இந்த மகோத்சவம் வருகின்றது. நகர் முழுவதும் தோரணங்கள், கொடிகள், வாழை மரங்கள் முதலியவற்றால் அணிசெய்யப் பெறுகின்றது. திருக்கோயிலின் அர்ச்சகர் இராமமூர்த்திக்கும் ஏனைய எம்பெருமான்களின் திருமேனிகட்கும் திருமஞ்சனம் செய்தற் பொருட்டு அவர்களுடைய திவ்வியாபரணங்களைக் களைந்து வைக்கின்றனர். வேத ஒலியோடும் வாத்திய ஒலியோடும் திருமஞ்சனம் கோலாகலமாக நடைபெறுகின்றது. அனைவரும் சுவாமி சேவையில் கருத்தூன்றித்

தம்மை மறந்த நிலையில் இருக்கையில் அமைச்சர்கள் திருவாபரண 'திரள்களினின்றும் ஒரு வைரமாலையை ஒளித்து வைக்கின்றனர். திருமேனிகட்கு அலங்காரம் செய்யும்போது அவ்வணிகலத்தைக் காணாது கவலைப் பட்ட அருச்சகர்கள் இச்செய்தியை அரசர்க்கு அறிவிக் கின்றனர்.

அரசர் மிகவும் மனம் கலங்கி அமைச்சர்களை அழைத்து கள்வனைக் கண்டுபிடிக்குமாறு ஆணையிடுகின் றார். இதனையே காரணமாகக் கொண்டு அவர்கள், "இதனைக் களவாடியவர் வைணவரேயன்றி வேறு எவரும் அல்லர். இவர்களே எப்போதும் இங்குமங்கும் தட்டின்றித் திரிகின்றனர். அன்னியன் அஞ்சாது இத்தொழில் செய் யான்" என்று அடியார்கள்மீது அடாப்பழி சுமத்துகின் றனர். இக்கடுஞ்சொல் தம் செவியில் புகப்பெற்ற ஆழ்வார் "அரியடியார் நல்லவர்கள். அவர்களை ஐயுறுதல் அடாது. இதனை உங்கட்கு உறுதி செய்ய யானே மெய்ப்பிப்பேன்" என்று கூறி கொடிய நாகம் உள்ளிட்ட ஒரு குடத்தை அவையின் முன் தருவிக்கின்றார். "திருமாலடியார் மனம் மொழி மெய்களால் தூய்மையானவராயின் இப்பாம்பு என்னை ஒன்றும் செய்யாது. இல்லையாயின் இஃது இப் பொழுதே என்னைத் தீண்டிக் கொல்லும்" என்று சூளு ரைத்து அக்குடத்தினுள் கைவிடுகின்றார். சத்தியத்துக்குக் கட்டுப் பட்டு அரவம் அவரைத் தீண்டாது தணிந்திருந்தது.

ஆரங் கெடப்பரன் அன்பர்
  கொள்ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பின்
  கையிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்த செங்கோல்
  கொல்லிகாவலன் வில்லவர்கோன்
சேரன் குலசேக ரன்முடி
  வேந்தர் சிகாமணியே. [16]

என்ற தனியனால் இந்நிகழ்ச்சி உறுதிப்படுகின்றது.

16. தனியன் (மணக்கால்நம்பி அருளியது).

இதனைக் கண்ட அமைச்சர்கள் தமது சூழ்ச்சி சிறிதும் பலியாதொழிந்தமைக்கு வருந்துகின்றனர்; ஆராய்ச்சியின்றி இத்தவறு செய்தமைக்கு அநுதாபப்படுகின்றனர். தமது கதி யாதாகுமோ என்று பேரச்சம் கொள்ளுகின்றனர். தமது பிழையைப் பொறுத்தருளுமாறு அரசரின் காலடியில் வீழ்கின்றனர். பொறுமை மிக்க ஆழ்வார் அவர்களின் பிழையைப் பொறுத்தருளி அதற்குக் கழுவாயாக அவருக்குப் பணிவிடை செய்து வாழுமாறு கட்டளையிடுகின்றார். அவர்களும் அடியவர்க்கு அடியராய் குறிப்பறிந்து குற்றேவல் புரிந்து பேறுபெற்று வாழ்கின்றனர்.

**திருவரங்கவாசம் :** 'மெய்யில் வாழ்க்கையை மெய் எனக்கொள்ளும் இவ்வையம் தன்னொடும் கூடுவதில்லையான்' (3 : 1) என்று கருதிய ஆழ்வார் பொய்ம்மைக்கு இடமான ஆட்சியிலிருப்பதற்கு விருப்பப்படாமல் ஆட்சிப் பொறுப்பை தமது திருக்குமாரன் திடவிரதனுக்கு முடிசூட்டி வைக்கின்றார். அரங்க நகர் சென்று நம்பெருமாளைச் சேவித்து அவ்வழகிய மணவாளனையே தனக்கு உரிய மணவாளனாகக் கருதிய தம் திருமகளை அவருக்கு உரிய பொருளாக மணம் செய்வித்து பகவத் பாகவத கைங்கரியங்களை விதிமுறை வழுவாது நாடோறும் செய்துகொண்டு அத்திருத்தலத்தில் சிலகாலம் இருந்து வருகின்றார்.

**திருத்தலப் பயணம் :** திருவரங்கத்திலிருந்துகொண்டு திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார். திருவேங்கடம், திருவயோத்தி, தில்லைத் திருச்சித்திரகூடம், திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலைமலை, திருவித்துவக்கோடு முதலான திருத்தலங்கட்குச் சென்று ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதார எம்பெருமான்களைக் கண்ணாரக் கண்டு சேவிக்கின்றார். நம்மாழ்வார் திருவவதரித்த திருக்குருகூர் அருகிலுள்ள பிரமதேசம் என்னும் ஊரை அடைந்து அங்குள்ள இராஜகோபால் சுவாமி சந்நிதியில் சிலகாலம் திருத்தொண்டு செய்கின்றார். பின்னர் திருவரங்கம் திரும்பி அங்கு

நிரந்தரமாக வாழ்ந்து தமது அறுபத்தேழாவது வயதில் பரமபதிக்கின்றார்!

அர்ச்சாவதார ஈடுபாடு: இவர் எம்பெருமான்களை அநுபவிக்கும்போது அவ்வநுபவத்தாலாகிய ஆனந்தம் உள்ளடங்காமல் அதனைப் பாசுரங்களாக வெளியே வழிய விடுவார். இவ்வாறு வெளிப்பட்ட பாசுரங்கள் 105. இவை பத்துப் பதிகங்களாகத் தொகுக்கப்பெற்று அவை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலாயிரத்தில் ஆண்டாள் பிரபந்தங்களை அடுத்து 'பெருமாள் திருமொழி' என்ற திருநாமம் பெற்று இடம்பெற்றுள்ளது. இவர் ஈடுபட்ட திருத்தலங்கள்: திருவரங்கம், திருவேங்கடம், திருவித்துவக் கோடு என்பவை. இவைபற்றிய திருமொழிகளில் ஆழங்கால் படுவோம்.

திருவரங்கம் : பெருமாள் திருமொழியில் மூன்று திருமொழிகள் (1, 2, 3) திருவரங்கம் பற்றியவை. திரு அரங்கம் என்கின்ற பெரிய நகரில் இருகாவிரிகளின் நடுவில் இருள் சிதறி யொழியும்படி ஒளிவிடும் மணிகள் திகழும் நெற்றியையும் சிறந்த புள்ளியையும் அழகாக உடைய ஆயிரம் படங்களையும் கொண்ட அரவரசப் பெருஞ்சோதி திருவனந்தாழ்வான் வெண்ணிறமான திருப்படுக்கையாக உள்ளான் (1). இந்த அனந்தாழ்வான் தன்னுடைய ஆயிரம் வாய்களாலும் ஆயிரநாமங்களைச் சொல்லி எம்பெருமானைத் துதித்தவண்ணம் உள்ளான். இவன் ஆயிரம் வாய்களும் அழலை கக்கிக் கொண்டிருப்பதனால் அதன் தீக்கொழுந்து தலைகளின் மேல் கிளம்பி சண்பகம் முதலிய செம்மலர்களால் அமைந்த ஒரு மேற்கட்டிபோல் விளங்குகின்றது. இந்த எம்பெருமான் வெற்றிச்செயல்கள் சொல்லி முடியா. குதிரை வடிவாய் வந்த கேசி என்னும் வாயைக் கீண்டு மகிழ்ந்தவன்; கண்ணனாய் அவதரித்த காலத்தில் இந்திரன் பொழிந்த கல்மாரியை கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆநிரைகளைக் காப்பாற்றியவன்.

இத்தகைய எம்பெருமான் பாம்புப் படுக்கையில் காயாம் பூவண்ணன் நீலமணி போன்ற திருமேனியுடன் அறிதுயில் கொள்ளுகின்றான். காவிரியின் அலைகள் அவன் திருவடிகளை வருடுகின்றன வீணை என்னும் இசைக் கருவியால் இன்பந்தரவல்ல தும்புரு, நாரதர் ஆகிய மாமுனிவர்கள் அவனை ஏத்துகின்றனர் நான்முகன் வணங்கி ஒப்பு இல்லாததும் அநாதியுமான வேத சாத்திர தோத்திரங்களால் இடைவிடாமல் துதிக்கின்றான். நான்முகன், சிவன், இந்திரன், இவர்களுடன் தேவர்களும் அரம்பை முதலிய தேவமாதரும், சனகாதி மாமுனிவர் குழாமும் ஒருவருக்கொருவர் நெருக்கித் தள்ளிக்கொண்டும் திசைகளெங்கும் மலர்களை இறைத்துக்கொண்டும் வந்து திரளுகின்றனர். அம்புகளுடன் கூடிய சார்ங்கம் என்னும் வில்லும், அழகாக வளைந்துள்ள பாஞ்சசந்யம் என்னும் திருச்சங்கும், கொலை செய்யவல்ல சுதர்சனம் என்னும் திருவாழியும், கொடுந்தொழில் புரியும் கௌமோதகி என்னும் திருநாமமுடைய கதையும் வெற்றியால் ஒளி மிகுந்த நந்தகம் என்னும் வாளும், மிக்கு விரைந்த கதியையுடைய பெரிய திருவடி என்னும் கருடனும் — இவை யாவும் அரங்கனை நாற்புறமும் சூழ்ந்துகொண்டு காவல் புரிகின்றன. கொடுமையால் விளங்காநின்றுள்ள மனத்தை ஒழித்து, வஞ்சனைகளைப் போக்கிக் கொடிய இந்திரியங்களைப் பட்டிமேயாதபடி தடுத்து, மேன்மேலும் துக்கத்தை விளைவிக்கும் பெருஞ்சுமையாயுள்ள பழவினைகளை (சஞ்சித கர்மங்களை) வேரறுத்து, 'இருமுப்போதும்' (பஞ்ச காலங்களிலும்) துதித்து, எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலை நின்ற அறந்திகழும் மனத்தவர்கட்கு அடையத்தக்க பொருளாய் இருப்பவன் அரங்கன்.

இத்தகைய பெருமானை 'என் கண்ணிணைகள் கழிக்கும் நாள் என்று கொலோ?' (1) 'வாயார வாழ்த்துவது என்று கொலோ?' (2).

அம்மான்தன் அடியிணைக்கீழ் அலர்க ளிட்டு அங்கு
அடியவரோ டென்றுகொலோ அணுகு நாளே? (3)

கோவின் நாவுறவழுத்தி என்றன் கைகள்
கொய்ம் மலர்தூய் என்றுகொலோ கூப்பும்நாளே (4)

'அரங்கத்து உரகம் ஏறிக் கண்வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும், ஒருமதி சேர் திருமுகமும் கண்டு கொண்டு என் உள்ளம் மிக என்று கொலோ உருகும் நாளே?' (6)

'என் மலர்ச் சென்னி என்று கொலோ வணங்குநாளே? (5),

நிறந்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே? (7)

மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி
வல்வினையேன் என்று கொலோ வாழும் நாளே? (8)

போராழி யம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே? (9)

அடியார்தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே? (10)

என்று பத்துப் பாசுரங்களிலும் அரங்கனைச் சேவிக்கத் துடிக்கின்றார்; பாரிக்கின்றார்.

எப்படிச் சேவிக்க வேண்டும் என்று கருதுகின்றார்? பெரிய பெருமாளைச் சேவித்த மாத்திரத்தில் 'காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்' (பெரி. திருவந். 34) என்றவாறு சைதில்யம் பிறந்து தரித்து நிற்க முடியாத நிலை ஏற்படும். இதற்கு என் செய்வது? அழகியமணவாள னுடைய கண் நோக்கில் நிலவுகின்ற இரண்டு திருமணத் தூண்களை[17] ஆதாரமாகப் பற்றிக் கொண்டு தரித்து

---

17. திருமணத்தூண் என்பது சம்பிரதாயத் திருநாமம் இவை அழகிய மணவாளனின் கருவறையருகில் இருக்கும் இரண்டு தூண்கள். அழகிய மணவாளனது திருமேனியின் பரிமளம் இரண்டு தூண்களாகப் பரிணமித்து நிற்பதால் இப்பெயர் பெற்றது.

நிற்க வேண்டும். 'இத்தகைய பேறு என்றைக்கு வாய்க்குமோ?' என்று அங்கலாய்க்கின்றார். (1-வது திருமொழி).

பகவத் விஷயத்தோடு நின்று தரிக்கமாட்டாத ஆழ்வார் பாகவத விஷயத்திலும் தாம் பித்தேறிக் கிடக்கின்றமையை வெளியிடுகின்றார் இரண்டாம் திருமொழியில். பகவத் விஷயத்தில் மெய்யன்பு பூண்டவர்கள் பாகவத விஷயத்தில் ஈடுபாடு இல்லாமல் இருக்க முடியாது. பாகவத ஈடுபாடு இல்லையாயின் பகவத் விஷய ஈடுபாடு பலனைத் தாராது. குலசேகரப் பெருமாளுக்கு பகவத் விஷய ஈடுபாட்டைக் காட்டிலும் பாகவத விஷய ஈடுபாடு பள்ளமடையாக இருக்கும். "ஆரம் கெடப் பரன் அன்பர் கொள்ளார் என்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பிற் கையிட்ட வரிறே."

பாகவதர்களுடைய பெருமையை ஸ்ரீவசன பூஷணம்,

> **வேதகப் பொன் போலே இவர்க**
> **ளோட்டை சம்பந்தம்**[18]

என்று கூறும். ஈண்டு 'வேதகப் பொன்' என்பது பலவித மான சித்த மருந்துகளை இட்டுப் பலகால் உருக்கிக் குளிகையாகப் பண்ணி, இரசவாதிகள் தங்கள் கைகளில் வைத்திருக்கும் பரிசவேதியான[19] பொன். அதுபோலவே 'இவர்களோட்டை சம்பந்தம்' என்றது, அந்தப் பொன் தீண்டின அளவிலே இரும்பைப் பொன்னாக்குவது போலே, பிறவியிலே உண்டான நைச்யம் முதலானவற்றையுடைய விலட்சணரான இந்த பாகவதர்களுடைய சம்பந்தம், தாழ்ந்த பிறவியால் வந்த குற்றத்தைப் போக்கி

---

18. ஸ்ரீவசன பூஷ்ணம்-224.

19. பரிசவேதி—தன்னுடைய சம்பந்தத்தால் பேதிப்பது வேறுபடுத்துவது. பரிசம்—சம்பந்தம்; வேதி—பேதிப்பது. இரும்பின் கரிய நிறத்தைப் பொன்னிறமாக்குவது.

இவனையும் விலட்சணன்[20] ஆக்கி விடும்படி ஆயிற்று. இவற்றையெல்லம் நன்கு உணர்ந்தவர் குலசேகராழ்வார். எம்பெருமானைக் காண்பதே கண் படைத்ததற்குப் பயன் என்ற சித்தாந்தம் சாமான்யமானதென்றும் 'பாகவதர் களுடைய குழுவைச் சேவித்தாலன்றிக் கண்களுக்கு விமோசனம் இல்லை' என்பதே சிறப்பான சித்தாந்தம் என்றும் கண்டறிந்தவர்களுள் இந்த ஆழ்வார் தலைவர் என்னும் இடம் முதல் பாசுரத்தில் தெளிவாகின்றது. அடியவர்கட்குப் பரமபோக்கியனான பரமபத நாதனை வாயாரத் துதித்து அவனிடத்தில் மிக்க மோகங்கொண்டு அதனால் உடம்பு நின்றவிடத்தில் நில்லாது கூத்தாடி 'இலக்குமி நாயகனே! சீமந்நாராயணனே!' என்று இப்படிப் பல திருநாமங்களைக் கூறியழைத்து, அவ்வளவில் எம் பெருமான் கண்ணெதிரே வந்து சேவை தந்தருளக் காணா மையாலே வருந்தி ஏங்குகின்ற பாகவதர்களின் குழுவைச் சேவிக்கப் பெறுவதே கண்களுக்குப் பயன் என்கின்றார் (1).

"'பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோர் இடும்பைபூண்டு, உண்டிராக் கிடக்கும்போதும் உடலுக்கே கரைந்து நைந்து'[21] என்றவாறு அல்லும் பகலும் அன்றாட வாழ்வுபற்றிய உலகோர் சிந்தனைகளே இன்றி எம் பெருமானுடைய திவ்விய சரிதங்களையே மாறி மாறி அநுசந்தித்து, அந்த அநுசந்தானத்தாற் பிறந்த உகப்பு உள்ளடங்காமல் பகவானுடைய நாமங்களையே வாய் விட்டுக் கதறுகின்ற ஸ்ரீவைணவர்களின் திருவடித் தூள் களிலே நாம் ஆடப் பெற்றால் கங்கை நீரில் குடைந்தாடும் ஆசை எதற்கு?" என்று பேசுகின்றார் (2).

"ஏறு அடர்த்ததும் ஏனம் ஆய்நிலம் கீண்டதும், சக்கரவர்த்தித் திருமகனாகப் பிறந்து அரக்கப் பூண்டுகளின் கிழங்கெடுத்ததும், மண் அளந்ததுமான வரலாறுகளை

20. இவனையும்—இந்தப் பிராமணனையும்; விலட் சணன—பாகவதன்.

21. திருமாலை.5.

வாயால் சொல்லி வாய்விட்டுப் பாடிக் கொண்டு அன்பு மிகுதியால் கண்களினின்று காவிரி நதி போல் பரவசமாகப் பெருகுகின்ற அரங்கநகர் அப்பன் சந்நிதித் திருமுற்றத்தைச் சேறாக்குகின்ற பாகவதர்களின் திருவடிகளால் துகையுண்ட சேற்றை எனது தலைக்கு அலங்காரமாகக் கொள்வேன்" என்கின்றார் (3).

அடுத்துப் பேசுவது: " 'எத்திறம்! உடலினோடு இணைந்திருந்தேங்கிய எளிவே!'[22] என்று நம்மாழ்வார் ஆறுமாதம் மோகித்துக் கிடக்கும்படி மயக்கவல்ல 'கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயனை'[23] அநுசந்தித்து, 'கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்டவாயன்......அண்டர் கோன் அணிஅரங்கன்'[24] என்றவாறு அரங்கநகர் அப்பனைக் கண்ணனாகப் பாவித்து அவனுக்கு ஆட்பட்டுப் பணி செய்து நாக்குத் தடிக்கும்படி 'நாராயணா!' என்று கூவி உடல் காய்ப்பேறும்படி சேவித்துத் தோத்திரம் பண்ணி ஆனந்தம் அடைகின்ற அடியார்களின் திருவடிகளை என் மனம் துதித்து அவர்கட்கே பல்லாண்டு பாடும்" (4)—என்று கூறுவது நம் உள்ளத்தை நெகிழ்விக்கின்றது.

"அடியார்களை ஆட்கொள்வதற்காகவே கோபத்தை வெளியிடும் பாங்கில் குரலை எழுப்பும் ஏழு காளைகளின் எருத்தங்களை முறித்தவனும், போர்செய்ய வந்த காளியனை அடக்கியவனும், கல்மதில்களால் சூழப்பட்ட தென்னரங்கத்தில் வில்லோடு எழுந்தருளியிருக்கும் காளமேகம் தம் போன்றவன் மனத்தில் நிலைத்து விளங்கப் பெற்ற பக்தியினால் மயிர்க்கூச்செறியும் வைணவர்களையே என் நெஞ்சம் அநுசந்தித்து மயிர்க்கூச்செறியும்" (5) என்று பேசி மகிழ்கின்றார்.

---

22. திருவாய்-1. 3 : 1.
23. கண்ணிநுண்-1.
24. அமலனாதி.10.

அடுத்துப் பேசுவது: ‘‘இவ்வுலகைப் படைப்பதற்குக் காரணமாக இருப்பவனும், பிரளயகாலத்திலும் வாழ்ப வனும், சர்வவியாபியாயும் ஆச்சரியபூதனுமாயும் இருப்ப வனுமாகிய விண்ணோர் பெருமான் அரங்கநாதன். இவனுக்கே பக்தி செய்து கொண்டிருக்கும் பாகவதர்களுக்கே நான் பிறவிதோறும் அன்பு பூண்டிருப்பேன்’’ (6) — என்கின்றார்.

அடுத்து அரங்கநாதனது திருமேனியழகில் ஈடுபட்ட வைணவர்களை நினைக்கின்றார். ‘‘காளமேகங்கள் பல திரண்டாற்போன்று விளங்குகின்றது அரங்கன் திருமேனி. அதில் விலட்சண்யமான லாவண்யம் திகழ்கின்றது. அவனுடைய சிவந்த திருப்பவளத்தில் முத்தன்ன வெண்ணகை பளிச்சிடுகின்றது. முத்துமாலை அவனுடைய திருமார்பில் திகழ்கின்றது. —இத்தகைய தேசுடையவனைக் கிட்டி அநுபவிக்க வேண்டும் என்று சிந்தையுடையவர்கள் ஸ்ரீவைணவர்கள். இவர்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வெள்ளமிட்டோட அரங்கனை அநுபவிக்கின்றனர். இவர்கள் இரண்டு திருவடிகட்கே என் மனம் கசிந்து அன்புடையதாகின்றது’’ (7) — என்று பேரானந்தப் படு கின்றார்.

அடுத்துப் பேசும் பாசுரம் அற்புதமான அழகுடையது:

மாலையுற்ற கடல் கிடந்தவன்
வண்டுகிண்டு நறுந்துழாய்
மாலையுற்ற வரைப்பெருந்திரு
மார்வனைமலர்க் கண்ணனை
மாலையுற்றெழுந் தாடிப்பாடித்
திரிந்தரங்கனெம் மானுக்கே
மாலையுற்றிடும் தொண்டவாழ்வுக்கு
மாலையுற்றதென் நெஞ்சமே. (8)

என்பது பாசுரம். இதில் ‘மாலை’ என்ற சொல் திரும்பத் திரும்ப வந்து படிப்பவரின் உணர்ச்சி கிளர்ந்தெழச் செய்கின்றது. ‘மாலை உற்ற கடல்’ என்பதில் ‘மாலை’

என்பது தொட்டுணர்தல் என்று பொருள்படும். 'நறுந் துழாய் மாலை உற்ற' என்பதில் 'மாலை' என்பது 'பூமாலை' என்று பொருள்படுகின்றது. 'மாலை உற்று எழுந்து' என்பதில் 'மாலை' என்பது மயக்கம் (வியாமோகம்) என்று பொருள்படுகின்றது. திருப்பாற் கடலில் பள்ளி கொள்பவனும், நறுந்தேன் மிக்க செவ்வித்திருத் துழாய் மாலை அணிந்தவனைப் போன்ற பெரிய மார்பையுடையவனும், தாமரைக் கண்ணனுமாக இருப்பவன் அரங்கநாதன். அவன்மீது மண்டியெழும் வியாமோகத்தையுடையவர்கள் அடியார்கள்; இந்தக் காதலால் எழுகின்றார்கள்; கூத்தாடுகின்றார்கள். வாயார அவன் புகழ் பாடுகின்றார்கள். திருத்தலங்கள் தோறும் பித்தேறித் திரிகின்றார்கள். இத் தொண்டர்களின் வாழ்வுக்கு என்மனம் மயங்கிக் கிடக்கின்றது'' (8) என்று கூறுகின்றார் ஆழ்வார்.

அடியார்கள் திறத்தில் பித்தேறிய ஆழ்வார் அவர்களை மேலும் உயர்த்திப் பேசுகின்றார். ''அடியார்களின் திருக் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகப் பொழிகின்றது. உடலில் மயிர் சிலிர்க்கின்றது; நெஞ்சு தளர்ந்து களைத்துப் போய் நிலைதளர்கின்றது. இந்நிலையில் எம்பெருமானுக்கு அடியவர்களாய் அவன் திறத்தைப் பாடி நின்றவிடத்து நில்லாமல் பலவித ஆட்டங்களாடிப் பாட்டுகள் பாடி வணங்குகின்றனர். இங்ஙனம் பித்தேறித் திரிகின்றவர்கள் பைத்தியக்காரர்கள் அல்லர்; இங்ஙனம் பக்தி இல்லாத மற்றவர்கள் யாவரும் பைத்தியக்காரர்கள்'' (9) என்கின்றார்.

மூன்றாவது திருமொழியில்: சம்சாரிகள் பக்கல் வெறுப்புண்டாகி அவர்களைக் காண்பதும் அவர்களுடன் நட்புக் கொள்வதுமான சகிக்க முடியாத நிலைமை தமக்குண்டானதைத் தெரிவிக்கின்றார்.

''நிலையற்ற இவ்வாழ்க்கையை உண்மையானது எனக் கொள்ளும் இவ்வுலகத்தவரோடு இனி நான்

சேர்வதில்லை. 'அரங்கநகர் அப்பா!' என்று எம்பெருமான் திருநாமங்களைச் சொல்லி அழையா நிற்கின்றேன். என்னிடத்தில் வாத்சல்யமுடைய எம்பெருமான் பக்கலியே மையல் கொண்டு நிற்கின்றேன்'' (1) என்கின்றார்.

''பெண்டிர்கள் பக்கல் பித்தேறி நிற்கும் மனிதர்களுடன் நான் உறவு கொள்வதில்லை. எம்பெருமானிடம் யான் கொண்டுள்ள காதலுக்குப் போக்கு வீடாகப் 'பெரிய பெருமாளே!' என்று கூப்பிட்டு என்மீது வியாமோகமுள்ள எம்பெருமான் திறத்திலேயே மால்கொண்டு நிற்கின்றேன்'' (2) என்று பேசுகின்றார்.

''மாரன் கணைக்கு இலக்கு ஆகித் திரிகின்ற இப்புவியிலுள்ள மாந்தருடன் யான் உறவு கொள்வதில்லை. முத்துமாலையைத் திருமார்பில் தரித்தவனும், அடியார்கள் நரகத்தில் புகாமல் காத்தருள்பவனுமான அரங்கனுக்கு யான் பித்தன்'' (3) என்று கூறுகின்றார்.

உண்டியே உடையே உகந்து ஓடும்இம்
மண்டலத் தோடும் கூடுவது இல்லையான்;
அண்ட வாணன் அரங்கன் வன்பேய்முலை
உண்ட வாயன்தன் உன்மத்தன் காண்மினே (4)

என்பது அடுத்த பாசுரம். அடுத்துப் பேசும் பாசுரங்களில்,

எத்தி றத்திலும் யாரொடும் கூடும்அச்
சித்தந் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்;
அத்தனே! அரங்கா! என்றழைக் கின்றேன்;
பித்த னாய்ஒழிந் தேன்எம்பி ரானுக்கே (7)

பேயரே எனக்கு யாவரும்; யானும்ஓர்
பேயனே எவர்க்கும்; இதுபேசி என்
'ஆயனே! அரங்கா!' என்று அழைக் கின்றேன்;
பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே (8)

என்பவை உள்ளத்தைத் தொடுபவை

திருவேங்கடம்: இன்று இரவும் பகலும் ஓயாது பக்தர்கட்குப் பேட்டி தந்து கொண்டிருக்கும் ஏழுமலை அப்பன்

நித்தியவாசம் செய்யும் 'திருவேங்கடம்' என்னும் திவ்விய தேசத்தின்மீது தனக்குள்ள ஆதராதிசயத்தை வெளியிடும் பாங்கில் தனக்குத் திருமலை சம்பந்தமுடைய பிறப்பே வேண்டும் என்கின்றார்.

"ஏழுகாளைகளை வென்ற எம்பெருமானுக்கு ஒழிவில் காலமெல்லாம் கைங்கரியம் செய்வதையே நான் விரும்புவேனேயன்றி நாளுக்கு நாள் மோடுபருக்கும் மனித உடம்பெடுத்துப் பிறத்தலை நான் விரும்பவில்லை. திருமலையின் திருக்கோயிலுக்கு அருகிலுள்ள 'கோனேறு' என்ற திருத்தலத்தில் வாழும் கொக்காகப் பிறத்தலே எனக்குப் போதும்" என்கின்றார். திருவேங்கடத்திலுள்ள சுவாமி புஷ்கரிணியில் குருகாய்ப் பிறப்பது விரஜா நதியைச் சேர்ந்து வைகுந்தத்தில் பிறப்பதொக்கும் என்று கருதின தாகத் தெரிகின்றது (1).

"அரம்பையர்கள் தன்னைச் சூழ்ந்து நிற்கும் வானாளும் செல்வமும் எனக்கு வேண்டா; பிறவிக்கு வித்திடும் மண்ணரசும் எனக்கு வேண்டா. சோலைகள் சூழ்ந்துள்ள திருவேங்கட மாமலையின் சுனைகளில் ஒரு மீனாகப் பிறக்கும்பேறு எனக்குப் போதுமானது" என் கின்றார். முன் பாசுரத்தில் 'குருகாய்ப் பிறப்பேனே' என்றவர் அதற்கு இறகுகள் இருப்பதால் அது அத்திருமலை யைத் துறந்து வேற்றிடத்திற்குச் செல்லக்கூடும் என்று கருதி, அங்ஙனமன்றி அத்திருமலையிலேயே பிறப்பு, வாழ்க்கை, இறப்புகளையுடைய மீனாய்ப் பிறப்பதை வேண்டுகின்றார் (2).

"சடாமகுடத்தைத் தாங்கிய சிவபெருமானும் நான் முகனும், தேவேந்திரனும் அடியார்கள் கூட்டத்தில் நெருக்கிக் கொண்டு உள்ளே புகுவதற்கு சாத்தியமில்லாமல் இருக்கும் பூலோக வைகுந்தமாகிய திருமலையில் 'மின் வட்டச் சுடராழி'யையுடைய திருவேங்கடமுடையான் வாய் நீர் உமிழ்கின்ற தங்கவட்டிலைக் கையிலேந்திக் கொண்டு

அப்பெருமானுக்கு அந்தரங்க கிங்கரனாய் எளிதாய் உள்ளே புகும்பேற்றைப் பெறக்கடவேன்'' என்று தன் விருப்பத்தை வெளியிடுகின்றார். மீன் நீர் நிலையைப் பற்றியே உயிர்தரிக்க வேண்டிவருமே என்று ஒரு கைங்கரிய பரனாகப் பிறக்கவேண்டும் என்பது இவருடைய விருப்பம் என்பது தெரிகின்றது (3).

'இயங்கு திணையைச் சேர்ந்த ஒரு பிறப்பு வேண்டுவ தில்லை; திருவேங்கடமலையில் நிலைத் திணையை சேர்ந்த ஒரு மரமாகவேனும் ஆனால் போதும்' என்று விரும்பு கின்றார். 'வானவர் கோனொடும் சிந்து பூ மகிழும் திருவேங்கடம்' என்றபடி பரமபதத்திலுள்ள மலர் மாரி பொழியும் இடமாதல் பற்றித் திருமலை 'புஷ்ப மண்டபம்' எனப்படுகின்றது. திருமலையில் மலர்ப்பணி செய்வது சிறப்பாதலால் அப்பணிக்குப் பயன்படும் மரமாதலை வேண்டுகின்றார். பலவகை மலர்களுள் எம்பெருமான் திருவுள்ளத்திற்கு மிகவும் உகப்பானது சண்பகமலர். 'தேனில் இனியபிரானே! செண்பகப் பூச்சூட்டவாராய்!'[25] என்று பெரியாழ்வார் கூறுவதனால் இதனை அறியலாம். வட்டில் கைங்கரியம் கிடைத்தால் வட்டிலைக் களவு செய்யும் ஆசை தோன்றிச் சிறையில் தள்ளப்பட நேரிடும்[26] எனக் கருதி சண்பகமாகப் பிறக்கவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தாராம் (4).

இதனை அடுத்து ஆழ்வார் விரும்புவது புதராய்ப் பிறத்தல். 'தம்பகமாய் பிறக்கும் தவமுடையனாவேனே' என்பது காண்க. செண்பகமாய்ப் பிறந்தால் திருமலைக்கு

---

25. பெரியாழ், திரு. 2. 7:1

26. இன்று திருமலையில் உண்டியில் விழும் தொகை களைக் கணக்கிடுபவர்களும் நகைகளை மதிப்பிடுவோரும் இத்தகைய ஆசைக்குட்பட்டு அந்த ஆசையை நிறை வேற்றும்பொழுது பிடிபடும் செய்திகள் வருவதை நினைக் கின்றோம்.

வருகின்ற செல்வர் யாராவது இதனை விரும்பிப் பெயர்த்துக் கொண்டு போகக் கூடும்; அப்படி ஏதாவது உண்டெனில்,

கற்பகக் காவு கருதிய காதலிக்கு
இப்பொழுது ஈவன்என்று இந்திரன் காவினில்
நிற்பன செய்து நிலாத்திகழ் முற்றத்துள்
உய்த்தவன் [27]

என்பதனால் சத்தியபாமைப் பிராட்டியின் விருப்பத்திற்கிணங்கிய கண்ணபிரான் இந்திரனது நந்தவனத்திலிருந்த கற்பகத் தருவை சத்தியபாமையின் மாளிகைத் திருமுற்றத்தில் கொணர்ந்து நட்டான் அன்றோ? அவ்வாறு யாரேனும் ஒருவர் சண்பகமரத்தையும் பெயர்த்துக் கொண்டு போனால் திருமலையின் வாழ்க்கைக்குக் குந்தகம் விளையக் கூடுமே என்று கருதி, தம்பகமாய் நிற்க விரும்புகின்றார். தம்பகம்—புதர். (5)

'தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே' (5) என்று விரும்பிய ஆழ்வார் சிறிதளவு சிந்தித்த அளவில் வேறோர் உண்மை அவரது மனத்திற்குத் தட்டுப்படுகின்றது. "அரசு வனத்துறை அலுவலர் மலையிலுள்ள செடி செட்டுகளை அடிக்கடி சோதிப்பவராதலால், அவர்கள் தம்பகத்தைக் களைந்தெறிந்திடக் கூடுமெனவும், அது தானே விரைவில் தீர்ந்தொழியக் கூடும் எனவும் நினைத்த ஆழ்வார், அவ்வாறு ஆகாமல் என்றும் ஒரு படியாயிருக்கும் படி அத்திருமலையில் ஒரு பாகமாகக் கடவேன்" என்று விரும்புகின்றார்.

'அன்னனைய பொற்குவடாம்
அருந்தவத்தன் ஆவேனே' (6)

என்பது அவர்தம் திருவாக்கு.

பொற்குவடாம்படிப் பாரித்த ஆழ்வார் சிறிது யோசித்தார். இதில் ஓர் இடையூறு இருக்கும் என்று அவர் மனத்

27. பெரியாழ். திரு.1.9:9

திற்குப் படுகின்றது. புதிதாகத் திருக்கோயிலை எழுப்பு பவர்கள் சிலைவடிவமான மூலத்திருமேனி எழுந்தருளப் பண்ணுவதற்காக மலை முகடுகளினின்று பெரும் பெரும் பாறைகளை உடைத்துக் கொண்டு போகின்ற வழக்கம் உள்ள தாதலால் அதுவும் ஏற்றதல்லவென்று தோன்று இன்றது. தோன்றவே, அங்ஙனம் பெயர்த்துக் கொண்டு போகக் கூடாததான கானாறாகப் பிறக்கவேண்டும் என்று கருதுகின்றார்.

> **தேனார் பூஞ்சோலைத்**
> **திருவேங் கடமலைமேல்**
> **கானாறாய்ப் பாயும்**
> **கருத்துடையேன் ஆவேனே (7)**

என்பது பெருமாளின் திருவாக்கு.

'கானாறாய் பாயும் கருத்துடையேன் ஆவேனே' (7) என்று பாரித்தலைச் சற்று ஆராயவே அதிலும் ஒரு குறையை உணர்கின்றார். ஆறு எப்போதும் வெள்ள மிட்டோடுவதல்ல; சில காலங்களில் வற்றியும் போகும்; அப்போது திருமலை வாழ்க்கை இறந்ததாய்விடும். அங்ஙன மன்றி எப்போதும் ஒருதன்மையாகத் திருவேங்கட முடையானை சேவிக்கவருகின்ற பாகவதர்களின் சீபாத தூளி படும்படி வழியாகக் கிடக்கும் நிலைமை தனக்கு வாய்க்கவேண்டும் என்று வேண்டுகின்றார். 'நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே' (8) என்று கூறுவதைக் காண்கின்றோம்.

நெறியாகக் கிடப்பதிலும் ஒரு குறையை உணர் கின்றார் ஆழ்வார். "வழியென்பது அவரவர்களின் சௌகர்யத்திற்குத் தக்கபடி மாறுபடும்; திருப்பதியிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் வழி மிகச் சிரமமாயிருக்கிறதென்று சந்திரகிரி வழியாகப் போகக்கூடும்; ஓரிடத்தில் ஒன்றுதான் வழியென்று சொல்ல முடியாத தாகையாலும், வழியானது விலகி நிற்பதாகையாலும், வழியாக வேண்டும் என்று

விரும்புவதைவிட எம்பெருமானின் திருவருள் நோக்கம் பதியுமாறு அவன் திருக்கண் முகப்பிலே மெய்யடியாரோடு பிறரோடு வாசியற எல்லோரும் இடைவிடாது நடமாடும்படியான ஓர் அசேதநப் பொருளாகி, அதிலே உன் பவளவாய் காணும்படியான ஓர் அறிவையும் பெறக் கடவேன்'' என்று தமது சிறப்பான விருப்பத்தைத் தெரிவிக்கின்றார்.

அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன்
பவளவாய் காண்பேனே (9).

என்பது ஆழ்வாரின் விண்ணப்பம். இப்பாசுரத்தை அடியொற்றியே திருமால் ஆலயங்களில் கோயிலின் உள் வாசற்படி 'குலசேகரன் படி' என்று இவர் பெயரையிட்டு வழங்கப்படுவது சம்பிரதாயமாக இருந்து வருகின்றது.

''படியாய்க் கிடக்கவேண்டும் என்று வேண்டிய புருஷார்த்தம் கிடையாதொழியினும் ஒழியும்; ஏனெனில் திருமலை சந்நிதிக்குள் கருங்கல் படியிருப்பது செல்வச் சீமானாகிய திருவேங்கடமுடையானுடைய செல்வத்திற்குத் தகாது என்று சில பணக்கார பக்தர்களுள் ஒருவர் அப் படியை பொற் கவசத்தால் மூடுதல் கூடும். அப்போது நாம் அப்பனின் திருமுக மண்டல சேவையை இழந்தோமாவோம். ஆகையால் கிடப்பதும் பாங்கல்ல'' என்று அறுதியிட்டார். பின்னர் எந்தப் பிறவியை வேண்டலாம் என்று யோசிக்கும்போது ஒவ்வொரு பிறப்பிலும் ஒவ்வொரு இடையூறு இருப்பதாகவே புலப்பட்டது. இறுதியில் ஒரு பிறவியையும் தாமாக வேண்டிக் கொள்ள விரும்பவில்லை. ஆகவே,

செம்பவள வாயான்
திருவேங் கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல்
ஏதேனும் ஆவேனே (10).

என்று தலைக் கட்டுகின்றார். இந்தத் திருவேங்கடமாமலை பற்றிய திருமொழியை அடியொற்றி முத்தகக் கவி வீர ராகவ முதலியார் என்பார்,

மாடாக நிழற்றுசெழு
மரனாகத் தவச்சிறிய
பூடாகக் குழைத்தநறும்
புதலாக வழிபடுமோர்
ஓடாகப் பெறுவமெனில்
உயிர்காள் நற்கதிபெறலாம்
வீடாகத் திருநெடுமால்
வீற்றிருக்கும் வேங்கடத்தே[28]

என்று தம் திருவேங்கடக் கலம்பகத்தில் போற்றி மகிழ்வர்

திருவித்துவக்கோடு[29] : கேரள மாநிலத்திலுள்ள இத் திருப்பதியை 1969 மே மாதம் குடும்பத்துடன் சேவித்தது நினைவில் எழுகின்றது. சீமன் நாராயணனையன்றி தமக்கு வேறு சரணமில்லாமையை இத்திருமொழியில் பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலமாகத் திருவித்துவக் கோட்டம்மான் சந்நிதியில் விண்ணப்பம் செய்கின்றார். ஒரு முறைக்கு ஒன்பது முறையாக வற்புறுத்துகின்றார்.

தருதுயரம் தடாயேல்உன்
சரண்அல்லால் சரண்இல்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ்
வித்துவக்கோட் டம்மானே (1)

[தடாயேல் - களையாவிடில்; விரை - மணம்]

என்று திருவித்துவக்கோட்டுப் பெருமானை விளிக்கின்றார். எம்பெருமானைத் தாயாகப் பாவித்து தாம் குழந்தை நிலைக்கு வந்து விடுகின்றார்.

---

28. திருவேங். கலம். 72

29. மலை நாட்டில் இது திருமிற்றக்கோடு என வழங்கி வருகின்றது. ஷோரனூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 10 கல் தொலைவு. பேருந்து வழி.

அரிசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி;
அதுவேபோன்று இருந்தேனே (1)

[அரிசினம் - மிக்க சினம்]

என்று முறையிடுகின்றார். சினத்தினால் ஒரு தாய் தான் பெற்ற குழவியை ஒரு சமயம் வெறுத்துத் தள்ளினாலும், தாயின் கருணையையே கருதி குழந்தை அழுது அழுது அவள் கருணைக்குப் பாத்திரமாகின்றது. "அழுதால் உன்னைப் பெறலாமே"[30] என்றபடி அழுது அடியடைந்த மணிவாசகப் பெருமானைப் போலவே, கண்களில் நீர் மல்க அழவேண்டும். இந்நிலையில் பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள உறவு முறை தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவு முறை போன்றது என்பதை அறிகின்றோம்.

இந்நிலையில் குறுந்தொகைப் பாடல் ஒன்று நினைவிற்கு வருகின்றது. இதனையும் உங்கள் முன் வைக்கின்றேன்.

.........................................
ஊதை துற்றும் உறவுநீர்ச் சேர்ப்ப
தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்(டு)
'அன்னாய்!' என்னும் குழவிபோல
இன்னா செயினும் இனிதுதலை அளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்னுறு விழுமம் களைஞரோ இலளே.[31]

[ஊதை - குளிர்காற்று; உறவுநீர்-வன்மையையுடைய; உடன்று - மாறுபட்டு; அலைக்கும் - வருந்திய பொழுது; தலை அளித்தல் - அன்பு செய்தல்; வரைப்பினள் - புரக்கப்படும் எல்லைக்கு உட்

30. திருவா. திருச்சதகம்-90
31. குறுந். 397

பட்டவள்; விழுமம் - துன்பம்; களைஞர் - நீக்கு வார்; இலள் - பெற்றிலள்]

'அன்னை அலைப்பினும், அணைப்பார் பிறரின்றி அவள்மாட்டே செல்லும் குழவி போல, நீ அருளின்றிப் பிரியினும் நின்மாட்டே நின்று நின்தண்ணளியால் வாழும் நிலையினள்' என்று தோழி கூறும் கருத்தினையே ஆழ்வாரும் தன்னைக் குழந்தை நிலையிலும் இறைவனைத் தாய் நிலையிலும் வைத்துப் பேசுகின்றார். குழந்தையைக் காட்டிய குறுந்தொகைப் பாடலைப் படித்துவிட்டு ஆழ்வார் பாசுரத்தை நோக்கினால் பொருள் மேலும் தெளிவுறு கின்றது. "தாய்உடன்று அலைக்குங் காலையும் வாய் விட்டு 'அன்னாய்' என்று அலைக்கும் குழவிபோல" என்ற சங்கப் பாடலின் உவமை ஆழ்வாரின் இறைமைப்பாடலில் புதுமுறையில் அமைந்து புத்தொளி வீசி நின்று நயமுறு கின்றது. பாட்டின்பம் பக்தி உணர்வாக மாறி நம்மை மேலும் நெகிழ்விக்கின்றது.

கணவன் ஒருவன் தான் தீ முன் வலம்வந்து கைபிடித்துத் துணைவியாகக் கொண்ட குலமகளைக் கண்டவர்கள் இகழும் வண்ணம் மிகக் கேவலமாக நடத்துகின்றான். எனினும், அக் குலமகள் கணவனையன்றி வேறு ஒருவரையும் புகலிடமாக நினைப்பதில்லை. இந்த உணர்ச்சியுடன்,

கண்டார் இகழ்வனவே
　　காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால்
　　அறியாக் குலமகள்போல
விண்தோய் மதில்புடைசூழ்
　　வித்துவக்கோட் டம்மா! நீ
கொண்டாளே யாகிலும்
　　உன்குரைகழலே கூறுவனே (2).

[காதலன் - கணவன்; குரைகழல் - ஒலிக்கின்ற வீரக் கழலையுடைய திருவடிகள்]

என்று பாடுகின்றார். 'உலகில் எத்தனையோ அல்லல்கள் பட்டாலும் அவற்றைத் தீர்ப்பதற்கு உன்னையன்றி வேறு யாருளர்?' என்று அவன் திருவடிகளையே சரணமாகக் கொள்ளுகின்றார் ஆழ்வார். கணவன் நிலையில் எம் பெருமானையும் மனைவி நிலையில் தம்மையும் வைத்துப் பேசுகின்றார். இங்குப் பரமான்மாவின் தலைமை, சீவான் மாவின் அடிமை, சீவான்மா பரமான்மாவின் கூட்டுறவால் இன்பத்தை அடைதல், பிரிவினால் துன்புறல், சீவான்மா பரமான்மைவக் கரணங்கள் எல்லாவற்றாலும் அநுபவித்துக் களிப்புறுதல் — போன்ற எண்ண அலைகள் விரைவாக ஆழ்வாருள்ளத்தில் குமிழியிட்டிருக்கவேண்டும்.

ஆழ்வாரின் உணர்ச்சி அடுத்த பாசுரத்தில் தலை காட்டுகின்றது; குடிகளைக் காப்பதற்கென்று மாலை யணிந்துள்ள மன்னன் ஒருவன் குடிமக்களிடம் அருள் நோக்கம் செய்யாது, அவர்கட்கு எப்படிப்பட்ட துன்பங் களை விளைவித்தாலும் குடிமக்கள் அவனுடைய செங்கோலையே எதிர்பார்த்து நிற்கின்றனர். இந்தக் குடி களின் நிலையில் ஆழ்வார் தம்மை வைத்துப் பேசுகின்றார்.

**தான்நோக்காது எத்துயரம்**
**செய்திடினும் தார்வேந்தன்**
**கோல்நோக்கி வாழும்**
**குடிபோன்று இருந்தேனே (3)**

*[தார்-மாலை; கோல்-செங்கோல்]*

என்ற பாசுரத்தின்மூலம் 'நீ அருள் நோக்கம் செய்யா விடினும் உன்னையன்றி வேறொருவரைச் சரண் அடை யேன்' என்று மனம் கரைகின்றோம். எம்பெருமானை அரசன் நிலையிலும் தம்மைக் குடிகள் நிலையிலும் வைத்து எண்ணி 'இரட்சய — இரட்சக பாவனையில்' திளைக்கின் றார் ஆழ்வார். இதில்,

**வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி** [32]

32. குறள் - 542

என்ற குறள்மணியின் ஒளி இப்பாசுரத்தில் வீசுவதைக் கண்டு மகிழ்கின்றோம்.

ஆழ்வார் கூறும் அடுத்த எடுத்துக்காட்டு அற்புத மானது. நோயாளி ஒருவன் மருத்துவனிடம் வருகின்றான். வாளால் அறுத்தும் சூடுபோட்டும் அவனது நோயைப் போக்குகின்றான் மருத்துவன். நோய் நீங்கும் பொருட்டு நோயாளி அச்சிகிச்சைத் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுகின்றான். இத்துன்பங்களை விளைவித்த மருத்து வனிடமும் நீங்காத அன்புடையவனாகவே இருக்கின்றான். இங்ஙனமே, துன்பங்களைக் கொடுத்தும் இறைவன் ஆன்மாக்களை உய்விப்பான் என்பது வைணவ சமயக் கொள்கை. இறைவனது கருணை வெள்ளம் துன்ப வடிவிலும் நம்மை வந்தடையும் என்பது ஆழ்வாரின் குறிப்பு. இறைவனே அனைத்தையும் அருளிக்காப்பவன் என்ற துணிவு ஏற்பட்ட பின்னர் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொள்வதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை என்பது ஆழ்வார் திருவுள்ளம்.

வாளால் அறுத்துச்
சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ
யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும்
வித்துவக்கோட் டம்மா! நீ
ஆள்ஆ! உனது அருளே
பார்ப்பன் அடியேனே (4).

[மாளா-நீங்காத; காதல்-அன்பு; ஆள் ஆ(க)-அடிமை உண்டாக; பார்ப்பன்-நோக்கியிரா நின்றேன்]

என்ற ஆழ்வார் பாசுரத்தை மனம்விட்டுப் பாடவேண்டும். ஆழ்வார் அப்படித்தானே பாடியிருக்க வேண்டும்? இதனால் பரமான்மா சீவான்மாவுக்கு நன்மை செய்வதிலே ஊன்றியிருப்பதும், சீவான்மா பரமான்மாவிடம் நம்பிக்கை கொள்ள வேண்டியிருப்பதும் தெளிவாகின்றன.

ஆழ்வார் காட்டும் அடுத்த எடுத்துக்காட்டு கடலருகில் உள்ள கேரள நாட்டிற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. மாக்கடலில் ஒரு கப்பல் புறப்படுகின்றது. அக்கப்பலின் பாய்மரத்தின்மீது ஒரு பறவை உள்ளது. கப்பல் நடுக்கடலுக்குச் சென்றவுடன் பறவை பறக்கத் தொடங்குகின்றது. நிலத்திினின்றும் கப்பல் மிகச் சேய்மையில் வந்துவிட்டதால் பறவையால் மீண்டும் நிலத்திற்குச் செல்ல முடியவில்லை. கடலிலோ பறவை சென்று தங்குவதற்கு ஏற்ற இடமும் இல்லை. ஆகவே, பறவை மீண்டும் கப்பலின் பாய்மரத்திற்கே வந்து சேர்கின்றது. வாழ்க்கைக்கடலில் உள்ள நாமும் இறைவனாகிய கப்பலின் பாய்மரத்திலுள்ள பறவையின் நிலையில்தானே உள்ளோம்? எப்படி எப்படிப் பறந்தாலும் இறுதியில் இறைவனைத் தானே வந்தடைதல் வேண்டும்?

..........................................

**எங்குப்போய் உய்கேன்உன்**
**இணையடியே அடையல்அல்லால்**
**எங்கும்போய் கரைகாணாது**
**எறிகடல்வாய் மீண்டேயும்**
**வங்கத்தின் கூம்பேறும்**
**மாப்பறவை போன்றேனே. (5)**

[எறி-(அலை) எறியும்; வங்கம்-மரக்கலம்; கூம்பு-பாய் மரம்]

என்ற பாசுரத்தைப் பக்தியுடன் பாடி அநுபவிக்கவேண்டும். மரக்கலத்தின் நிலையில் எம்பெருமானும் பறவையின் நிலையில் தாமும் இருப்பதை ஆழ்வார் குறிப்பிடுகின்றார். சீவான்மா பரமான்மாவைவிட்டு விலகிப் போக முடியாத நிலையையும் பின்னது முன்னதற்கு ஆதாரமாயிருக்கும் நிலையையும் உணர்கின்றோம்.

இன்னோர் எடுத்துக்காட்டு நாம் அறிந்ததேயானாலும், ஆழ்வார் அதைச் சற்று விநோதமாகக் கையாளு

கின்றார். கதிரவனைக் கண்டு தாமரை மொட்டுகள் மலர்கின்றன என்பதை நாம் அறிவோம். செந்நிறமுடைய நெருப்பு தாமரை மொட்டுகளின் அருகில் வந்து வெப்பத்தைத் தந்தாலும் அந்த வெப்பத்தினால் தாமரை மலர்வதில்லை. நெருப்பின் வெப்பம் தாமரைக்கு ஒத்துவருவதில்லை. கதிரவனின் வெப்பமின்றிப் பிறிதொன்று அது மலர்வதற்குக் காரணமாகாது. அங்ஙனமே, தாம் அநுபவித்தே தீரவேண்டிய கொடிய பாவங்களை இறைவன் தீர்த்தருளாதொழியினும் அவனுடைய எல்லையில்லாத உத்தம குணங்களுக்கேயன்றி வேறொன்றுக்கும் நாம் நெஞ்சுருக முடியாத நிலையைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இந்த உணர்வுடன் நாம்,

**செந்தழலே வந்து அழலைச்**
**செய்திடினும் செங்கமலம்**
**அந்தரம்சேர் வெங்கதிரோற்(கு)**
**அல்லால் அலராவால்**
**வெந்துயர்வீட் டாவிடினும்**
**வித்துவக்கோட் டம்மா! உன்**
**அந்தமில்சீர்க்கு அல்லால்**
**அகங்குழைய மாட்டேனே. (6)**

[அழல்-நெருப்பு; கமலம்-தாமரை; அந்தரம்-வானம்; துயர்-பாவம்; வீட்டாவிடினும் — தீர்த்தருளாதொழியினும்; அந்தம் இல்சேர்—எல்லையில்லாத உத்தம குணங்கள்; அகம்—நெஞ்சம்; குழைதல்—உருகுதல்.]

என்ற பாசுரம் நெஞ்சு நெக்குருகப் பாடிப் பரவசப்பட வேண்டிய பாசுரம். கதிரவன் நிலையில் எம்பெருமானையும் தாமரையின் நிலையில் தம்மையும் வைத்துக் கூறியதன் கருத்தினைச் சிந்திக்க வேண்டும். பரமான்மா இன்பந்தருபவன் என்பதையும், சீவான்மா இன்பம் துய்ப்பவன் என்பதையும் அறிகின்றோம். இதில் **நாயக—நாயகி பாவனை** தொனிப்பதைக் கண்டு மகிழ்கின்றோம்.

இப்போது கூறப்போகும் எடுத்துக்காட்டு நாம் நன்கு அறிந்த ஒன்றே. எவ்வளவோ காலம் முகிற்கூட்டங்கள் மழைபொழியத் தவறினாலும் நிலத்திலுள்ள பைங்கூழ்கள் கருநிறங்கொண்ட அம்மேகங்களையே எதிர்நோக்கி இருக்கும். அப்பயிர்களைப் போலவே நாம் அநுபவிக்கும் துன்பங்களை இறைவன் போக்காவிடினும் அவனது அடிமைகளாகிய நாம் அந்த இறைவனிடத்திலேயே நம் மனத்தைச் செலுத்துகின்றோம். இதோ ஆழ்வார் பாசுரம்:

எத்தனையும் வான்வறந்த
    காலத்தும் பைங்கூழ்கள்
மைத்து எழுந்த மாமுகிலே
    பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும்
    வித்துவக்கோட் டம்மா! என்
சித்தம் மிக உன்பாலே
    வைப்பன் அடியேனே (7).

[பைங்கூழ்கள்—பயிர்கள்; மைத்து—கருநிறங்கொண்டு; மெய்த்துயர்—தவறாது அநுபவிக்கும் துன்பம்; சித்தம்—மனம்]

என்பது ஆழ்வார் பாசுரம். இதை வாய்விட்டுப் பாடி அநுபவிக்க வேண்டும். உலகத்து உயிர்கட்கெல்லாம் பரமான்வே வாழ்வின் அடிப்படை என்பது இப்பாசுரத்தால் தெளிவாகின்றது.

நாங்கள் திருக்கோயில் பெருமானைச் சேவிக்கச் சென்ற போது (1968) அருகிலுள்ள பம்பைநதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சி இன்னும் நினைவில் பசுமையாகவே உள்ளது. இந்தக் காட்சி பாசுரப் பொருள் தெளிவாகத் துணை நிற்கின்றது. இந்த ஆறும் இதனைப் போன்ற பல ஆறுகளும் பல இடங்களிலும் பரந்து ஓடி ஆழ்கடலில் சேருமேயன்றி வேறிடத்தே புகா. இந்த ஆறுகள் போலவே இறைவனுடைய அநந்த

கல்யாண குணங்கள் தவிர மற்றொன்றை தம் மனம் அநுமதியாத நிலையை வேண்டி நிற்கின்றார் ஆழ்வார். இந்த உணர்வுடன் பாடுகின்றார் ஆழ்வார்:

> தொக்கிலங்கி யாறெல்லாம்
> பரந்தோடித் தொடுகடலே
> புக்கன்றிப் புலம்நிற்க
> மாட்டாத மற்றவைபோல்
> ..................................
> புக்கிலங்கு சீரல்லால்
> புக்கிலன்காண் புண்ணியனே (8).

[தொக்கு—திரண்டு; தொடுகடல்—ஆழ்கடல்; சீர்—கல்யாண குணங்கள்.]

என்று பாடுகின்றார் ஆழ்வார். இதனால் பரமான்மாவின் பெருமையும் சீவான்மாவின் சிறுமையும், இறுதியில் சீவான்மா பரமான்மாவை அடைதலும் புலனாவதை அறியமுடிகின்றது.

அன்பர்களே, இப்போது கூறப்போகும் பாசுரம் என்றும் நினைவிலிருத்த வேண்டியதொன்று. இகத்தில் நாட்டம் செலுத்துபவர்கள் அனைவரும் இதனை நடைமுறைப் படுத்த வேண்டும். எம்பெருமானிடத்தில் அன்பைச் செலுத்தினால் அதனால் செல்வத்தை வெறுக்கின்றவர்களிடம் அவர்களின் நல்வினைப் பயனால் அச்செல்வம் அவர்களை விடாது விரும்பி வலியத் தொடர்ந்து சேர்தல் இயல்பு. இதனை நாம் அறிந்தாலும் இஃது இறைவனது திருவுள்ளப்படி அமைகின்றது என்பதை நாம் உணராமல் இல்லை. ஆன்மாக்கள் இறைவனுடைய உடைமை என்பதை நாம் அறிவோம். இது வைணவ சித்தாந்தம். இந்த உடைமையை இறைவன் வெறுத்தொதுக்கினாலும் ஆன்மாக்கள் இறைவனையே பற்றி நிற்கும். இந்த உணர்வை எழுப்பும் நிலையில் ஆழ்வார் பாசுரம் அமைகின்றது.

நின்னையே தான்வேண்டி
　　நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும்
　　செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி
　　வித்துவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி
　　நிற்பன் அடியேனே (9).

*[நீள் செல்வம்—அதிக செல்வம்; திகிரி—சக்கராயுதம்.]* என்பது பாசுரம். இதனைப பாடிப் பாடி உள்ளம் உருக வேண்டும். இதில் 'சிவான்மா பரமான்மாவின் உடைமை' (ஸ்வஸ்வாமி சம்பந்தம்) என்ற உண்மை வெளிப்படுவதை அறிகின்றோம்.

அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டிற்கு வந்த அடியேனை (1969) கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் அழைத்து ஆழ்வார் பற்றிப் பேசப் பணித்தமைக்கு என் மனம் கனிந்த நன்றி. இதனால் கரும்பு தின்னக் கூலி தருவது போல் இந்த வாய்ப்பு பாசுரங்களை உரக்கச் சிந்திக்க வாய்ப்பளித்தது. இத்தகைய பெருமை வாய்ந்த குலசேகரப் பெருமாளை,

அஞ்சனமா மலைப்பிறவி யாதரித்தோன் வாழியே!
　　அணியரங்கர் மணத்தூணை யடைந் துய்த்தோன் வாழியே!
வஞ்சிநக ரந்தன்னில் வாழவந்தோன் வாழியே!
　　மாசிதனிற் புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே!
அஞ்சலெனக் குடம்பாம்பில் அங்கையிட்டான் வாழியே!
　　அநவரதம் இராமகதை அருளுமவன் வாழியே!
செஞ்சொல்மொழி நூற்றஞ்சும் செப்பினான் வாழியே!
　　சேரலர்கோன் பசங்கமலத் திருவடிகள் வாழியே![33]

என்று வாழ்த்துகின்றது வைணவ உலகம் என்று கூறி இப்பொழிவைத் தலைக்கட்டுகின்றேன். நன்றி; வணக்கம்.

---

33. அப்புள்ளை; வாழித்திருநாமம் - 6

## பின்னிணைப்பு—1

# பயன்பட்ட நூல்கள்

### (அ) தமிழ் நூல்கள்


அண்ணங்கராசாரிய சுவாமிகள், பி. ப. : திவ்வியார்த்த தீபிகை (கிரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம்).

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு (திருவேங்கடத்தான் திருமன்றம், 19-B, பெருமாள் முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014).

ஆழ்வார்கள் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (மர்ரே கம்பெனி, ராஜம் பதிப்பு).

இளங்கோஅடிகள் : சிலப்பதிகாரம், ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை (கழக வெளியீடு, சென்னை -600 108).

கம்பர் : சடகோபர் அந்தாதி (வை. மு. சடகோப இராமாநுசாச்சாரியார் உரை).

கிருஷ்ணவேணி அம்மையார், எஸ். : செம்பொருள் (திருமலை-திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி -517 501).

கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை. மு. : கம்பராமாயணம் — உரை (தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005).

கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை. மு. : அஷ்டப் பிர பந்தம்—உரை (டி. சென்னை-5).

சஞ்சீவி, ந. (பதிப்) : தெய்வத்தமிழ் (சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை-600 005).

ஸ்ரீராமதேசிகாச்சாரியார் : தேசிகப் பிரபந்தம் — உரை (ஒப்பிலியப்பன் சந்நிதி, கும்பகோணம்).

சுந்தர ராமாநுச சுவாமிகள் : தத்துவத்திரயம் — விளக்க வுரை (வேலூர் வைணவ சித்தாந்த மகா சங்கம், வேலூர்).

சுப்பு ரெட்டியார், ந. : பாண்டி நாட்டுத் திருப்பதிகள் (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, 6, பீலிப்ஸ் தெரு, சென்னை-600 001) — 1977.

சுப்பு ரெட்டியார், ந. : தொண்டைநாட்டுத் திருப்பதிகள் (பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108) — 1973.

சுப்பு ரெட்டியார், ந. : முத்தி நெறி (பாரி நிலையம், சென்னை-600 108).

திருவள்ளுவர் : திருக்குறள் — பரிமேலழகர் உரை (கழக வெளியீடு).

(ஆ) ஆங்கில நூல்கள்

Subbu Reddiar, N. : Religion and Philosophy of Nalayira Divya Prabandham with Special Reference to Nammalvar (Sri Venkateswara University, Tirupati-2. 1978).

Subbu Reddiar, N. : Collected Papers (Pari Nilayam, 184, Prakasam Saalai, Madras-600 108) — 1985.

## பின்னிணைப்பு — 2

# ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்கள்

### 1. ஆண்டாள்

| தி. தே. | திருப்பாவை | நாச். திரு | தொகை |
|---|---|---|---|
| அரங்கம் (சோ. தி.) | ............ | 11 | 10 |
| ஆய்ப்பாடி (வ. தி.) | ............ | 12:2; 13:10 | 2 |
| கண்ணபுரம் (சோ. தி.) | ............ | 4:2 | 1 |
| குடந்தை (சோ. தி.) | ............ | 13:2 | 1 |
| துவரை (வ. தி.) | ............ | 4.8; 9:8; 12:9 | 3 |
| பாற்கடல் (வ. தி.) | 2 | 2.3; 5.7 | 3 |
| மாலிருஞ்சோலை (பா. தி.) | ............ | 4:1; 9 (10) | 11 |
| வடமதுரை (வ. தி.) | 5 | 4:5, 6; 6:5; 7:3 12:1 | 6 |
| வில்லிபுத்தூர் (பா. தி.) | ............ | 5:5 | 1 |
| வேங்கடம் (வ. தி.) | ............ | 1:1; 1:3; 4:2; 5:2; 8 (10) | 14 |

### 2. குலசேகராழ்வார்

| தி. தே. | பெருமாள் திருமொழி | தொகை |
|---|---|---|
| அயோத்தி (வ. தி.) | 8:6, 7; 10:1, 8 | 4 |
| அரங்கம் (சோ. தி.) | 1 (10), 2 (10), 3 (10), 8:10 | 31 |

| | | |
|---|---|---|
| ஆலி (சோ. தி.) | 8:7 | 1 |
| கண்ணபுரம் (சோ. தி.) | 8 (10) | 10 |
| சித்திரக்கூடம் (சோ. தி.) | 10 (10) | 10 |
| வித்துவக்கோடு (ம. தி.) | 5 (10) | 10 |

## 3. திருமழிசையாழ்வார்

| தி. தே. | நான். திருவந். | திருச். விருத். | தொகை |
|---|---|---|---|
| அரங்கம் (சோ. தி.) | 3, 30, 36, 60 | 21, 49, 50, 51, 52, 53, 54, 55, 93, 119 | 14 |
| அல்லிக்கேணி (தொ. தி.) | 35 | ............ | 1 |
| அன்பில் (சோ. தி.) | 36 | ............ | 1 |
| ஊரகம் (தொ. தி.) | | 63, 64 | 2 |
| எவ்வுள் (தொ. தி.) | 36 | ............ | 1 |
| கவித்தலம் (சோ. தி.) | 50 | ............ | 1 |
| குடந்தை (சோ. தி.) | 36 | 56, 57, 58, 60, 61 | 6 |
| குறுங்குடி (பா. தி.) | | 62 | 1 |
| கூடல் (சோ. தி.) | 39 | ............ | 1 |
| கோட்டியூர் (பா. தி.) | 34 | ............ | 1 |
| துவரை (வ. தி.) | 71 | ............ | 1 |
| பாடகம் (தொ. தி.) | | 63, 64 | 2 |
| பாற்கடல் (வ. தி.) | 3, 36 | 17, 18, 23, 28, 29, 48, 81, 92, 95 | 11 |
| பேர்நகர் (சோ. தி.) | 36 | ............ | 1 |
| வெஃகா (தொ. தி.) | 36 | 63, 64 | 3 |

| | | | |
|---|---|---|---|
| வேங்கடம் (வ. தி.) | 34, 39, 40<br>41, 42, 43<br>44, 45, 46<br>47, 48 | 60, 81, 90 | 14 |
| வைகுந்தம் (தி. தி.) | 95 | 48 | 2 |

## 4. தொண்டரடிப் பொடியாழ்வார்

| தி. தே. | திருமாலை | திருப்பள்ளி எழுச்சி | தொகை |
|---|---|---|---|
| அரங்கம் (சோ. தி.) | 1 — 45 | 1 — 10 | 55 |

## 5. திருப்பாணாழ்வார்

| தி. தே. | அமலனாதிபிரான் | தொகை |
|---|---|---|
| அரங்கம் (சோ. தி.) | 1 — 10 | 10 |

## 6. முதலாழ்வார்கள்

| தி. தே. | பொய்கை மு. தி. | பூதம் இ. தி. | பேய் மூ. தி. | தொகை |
|---|---|---|---|---|
| அட்டபுயகரம் (தொ. தி.) | ......... | ......... | 99 | 1 |
| அத்திகிரி (தொ. தி.) | ......... | 95, 96 | 26 | 3 |
| அரங்கம் (சோ. தி.) | 6 | 28, 46, 70, 88 | 62 | 6 |
| அல்லிக்கேணி (தொ. தி.) | ......... | ......... | 16 | 1 |
| கடல்மல்லை (தொ. தி.) | ......... | 70 | ......... | 1 |
| கடிகை (தொ. தி.) | ......... | ......... | 61 | 1 |
| குடந்தை (சோ. தி.) | ......... | 70, 97 | 30, 62 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| கோவலூர் (ந. தி.) | 77, 86 | 70 | ......... | 3 |
| தஞ்சை (சோ. தி.) | ......... | 70 | ......... | 1 |
| தண்கால் (பா. தி.) | ......... | 70 | ......... | 1 |
| திருவிண்ணகர் (சோ. தி.) | ......... | ......... | 61, 62 | 2 |
| நீர்மலை (தொ. தி.) | ......... | 46 | ......... | 1 |
| பாடகம் (தொ. தி.) | ......... | 94 | 30 | 2 |
| பாற்கடல் (வ. தி.) | 25 | 3, 28 | 11, 31 | 7 |
| மாலிருஞ்சோலை (பா, தி.) | ......... | 46, 48, 54 | 32, 61 61 | 4 |
| வெஃகா (தொ. தி.) | 77 | ......... | 26, 62, 64, 76 | 5 |
| வேளுக்கை (தொ. தி.) | ......... | ......... | 26, 34, 62 | 3 |
| வேங்கடம் (வ. தி.) | 26, 37, 38, 39, 40, 68, 7[illegible], 77, 82, 99 | 25, 28, 33, 45, 46, 53, 54, 72, 75 | 14, 26, 30, 32, 39, 40, 45, 58, 61, 62, 63, 68, 69, 70, 71, 72, 73, 75, 89 | 38 |
| வைகுந்தம் (தி. தி) | 68, 77 | ......... | 61 | 3 |

**குறிப்பு :** சோ. தி: சோழநாட்டுத் திருப்பதி; பா. தி: பாண்டிநாட்டுத் திருப்பதி; ந. தி: நடுநாட்டுத் திருப்பதி; வ. தி: வடநாட்டுத் திருப்பதி; ம. தி: மலை நாட்டுத் திருப்பதி; தி. தி: திருநாட்டுத் திருப்பதி.

## பின்னிணைப்பு—3

# 108—வைணவ திவ்விய தேசங்கள்

ஈரிருப தாம்சோழம்;
    ஈரொன்ப தாம்பாண்டி;
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு;
    ஓரிரண்டாம்—சீர்நடுநா(டு)
ஆறோ(டு) ஈரெட்டுத்தொண்டை
    அவ்வடநா(டு) ஆறிரண்டு
கூறுதிரு நாடாகக்
    கொள்.[1]

— *பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்*

## சோழநாட்டுத் திருப்பதிகள்—40

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையி
லேணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.[2]

1. *திருவரங்கம் பெரிய கோயில்*
2. *திருவுறையூர்*
3. *திருத்தஞ்சை*
4. *திருவன்பில்*
5. *திருக்கரம்பனூர்*
6. *திருவெள்ளறை*
7. *திருப்புள்ளம்பூதங்குடி*
8. *திருப்பேர் நகர்*
9. *திருஆதனூர்*
10. *திருவழுந்தூர்*
11. *திருச்சிறுபுலியூர்*
12. *திருச்சேறை*
13. *திருத்தலைச்சங்க நாண்மதியம்*
14. *திருக்குடந்தை*

---

1. *நூற். திருப். அந்.* 6.
2. *ஓர் பழம் பாடல்*

15. திருக்கண்டியூர்
16. திருவிண்ணகர்
17. திருக்கண்ணபுரம்
18. திருவாலி
19. திருநாகை
20. திருநறையூர்
21. திருநந்திபுர விண்ணகரம்
22. திருவிந்தளூர்
23. திருச்சித்திரகூடம்
24. திருச்சீராம விண்ணகரம்
25. திருக்கூடலூர்
26. திருக்கண்ணங்குடி
27. திருக்கண்ணமங்கை
28. திருக்கவித்தலம்
29. திருவெள்ளியங்குடி
30. திருமணிமாடக் கோயில்
31. திருவைகுந்த விண்ணகரம்
32. திருஅரிமேய விண்ணகரம்
33. திருத்தேவனார் தொகை
34. திருவண் புருடோத்தமம்
35. திருச்செம்பொன் செய்கோயில்
36. திருத்தெற்றியம்பலம்
37. திருமணிக்கூடம்
38. திருக்காவளம்பாடி
39. திருவெள்ளக்குளம்
40. திருப்பார்த்தன்பள்ளி

## பாண்டி நாட்டுத் திருப்பதிகள்—18

**வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்**
**தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளாரா**
**வாண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்**
**பாண்டிநாட் டெல்லைப் பதி.**[3]

1. திருமாலிருஞ்சோலை மலை
2. திருக்கோட்டியூர்
3. திருமெய்யம்
4. திருப்புல்லாணி
5. திருத்தண்காலூர்
6. திருமோகூர்
7. திருக்கூடல்
8. ஸ்ரீவில்லிபுத்தூர்
9. திருக்குருகூர்
10. திருத்தொலைவிலி மங்கலம்
11. ஸ்ரீவரமங்கை
12. திருப்பேரை
13. ஸ்ரீவைகுண்டம்
14. திருப்புளிங்குடி
15. திருவரகுண மங்கை
16. திருக்குளந்தை
17. திருக்குறுங்குடி
18. திருக்கோளூர்

---

3. ஓர் பழம் பாடல்

## மலை நாட்டுத் திருப்பதிகள்—13

வடக்குத் திசைப்பழநி வான்கீழ் தென்காசி
குடக்குத் திசைகோழிக் கூடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட்டிற் கெல்லையெனச் செப்பு.[4]

1. திருவனந்தபுரம்
2. திருவண்பரிசாரம்
3. திருக்காட்கரை
4. திருமூழிக்களம்
5. திருப்புலியூர்
6. திருச்செங்குன்றூர்
7. திருநாவாய்
8. திருவல்லவாழ்
9. திருவண்வண்டூர்
10. திருவாட்டாறு
11. திருவித்துவக்கோடு
12. திருக்கடித்தானம்
13. திருவாறன்விளை

## நடுநாட்டுத் திருப்பதிகள்—2

1. திருவயிந்திபுரம்
2. திருக்கோவலூர்

## தொண்டை நாட்டுத் திருப்பதிகள்—22

மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு.[5]

1. திருக்கச்சி-அத்திகிரி
2. திருஅட்டபுயகரம்
3. திருத்தண்கா
4. திருவேளுக்கை
5. திருப்பாடகம்
6. திருநீரகம்
7. திருநிலாத்துண்டம்
8. திருவூரகம்
9. திருவெஃகா
10. திருக்காரகம்
11. திருக்கார்வானம்
12. திருக்கள்வனூர்
13. திருப்பவளவண்ணம்
14. திருபரமேச்சுர விண்ணகரம்
15. திருப்புட்குழி
16. திருநின்றவூர்
17. திருஎவ்வுளூர்
18. திருநீர்மலை
19. திருஇடஎந்தை
20. திருக்கடல்மல்லை
21. திருவல்லிக்கேணி
22. திருக்கடிகை

---

4. ஓர் பழம் பாடல்
5. ஓர் பழம் பாடல்

## வடநாட்டுத் திருப்பதிகள்—12

1. திருவேங்கடம்
2. திருச்சிங்கவேள்குன்றம்
3. திருஅயோத்தி
4. திருநைமிசாரணியம்
5. திருச்சாளக்கிராமம்
6. திருவதரியாச்சிரமம்
7. திருக்கங்கைக் கரைக் கண்டம்
8. திருப்பிருதி
9. திருவடமதுரை
10. திருத்துவாரகை
11. திருவாய்ப்பாடி
12. திருப்பாற்கடல்

## திருநாட்டுத் திருப்பதி—1

1. திருநாடு

இதுவே வைகுந்தம். திருமாலின் ஐவகை நிலைகளுள் பரத்துவம் விளங்கும் தானம்.

குறிப்பு: இந்த 108 திருப்பதிகளைப் பேராசிரியர் ரெட்டியார் சேவித்து மலைநாட்டுத் திருப்பதிகள், தொண்டைநாட்டுத் திருப்பதிகள், பாண்டிநாட்டுத் திருப் பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், சோழநாட்டுத் திருப்பதிகள் —முதற்பகுதி, சோழநாட்டுத் திருப்பதிகள்—இரண்டாம் பகுதி என்ற 6 நூல்களை வெளியிட்டுள்ளார். இதில் திருப்பதி கட்குச் செல்லும் வழி, திருப்பதிகளில் தங்கும் வசதிகள், ஆழ்வார் பாசுரங்களின் அநுபவம் முதலியவை விளக்கப் பெற்றுள்ளன. திருத்தலப் பயணிகட்கும் ஆழ்வார்ப் பாசுரங்களை அநுபவிக்க விரும்புபவர்கட்கும் பயன்படும் நூல்கள் இவை.

## பேராசிரியர்
## டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

ஆசிரியம் :

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

இலக்கியம் :

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

சமயம், தத்துவம் :

(அ) விளக்க நூல்கள் :

17. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
18. சிலநோக்கில் நாலாயிரம்
19. வைணவமும் தமிழும்
20. சைவசமய விளக்கு
21. ஆன்மிகமும் அறிவியலும்
22. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
23. கலியன் குரல்
24. கீதைக் குறள் (பதிப்பு)
25. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
26. கீதைப் பொழிவுகள்

(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :

27. மலைநாட்டுத் திருப்பதிகள்
28. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
29. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
30. வடநாட்டுத் திருப்பதிகள்
31. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)
32. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (ஷை)
33. தம்பிரான் தோழர்
34. நாவுக்கரசர்
35. ஞானசம்பந்தர்
36. மாணிக்கவாசகர்

திறனாய்வு :

37. பாட்டுத் திறன்
38. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
39. அகத்திணைக் கொள்கைகள்
40. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
41. கண்ணன்பாட்டுத் திறன்
42. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
43. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
44. குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு
45. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
46. ஆழ்வார்களின் ஆரா அமுது
47. விட்டுசித்தன் விரித்த தமிழ்

வரலாறு, தன் வரலாறு :

48. நினைவுக் குமிழிகள் - முதற்பகுதி
49. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
50. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
51. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
52. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
53. வேமனர்
54. குரஜாட
55. மேகாணி
56. சி. ஆர். ரெட்டி
57. தாயுமான அடிகள்
58. பட்டினத்தடிகள்
59. வடலூர் வள்ளல்
60. பிரதிவாதி பயங்கரம்


அறிவியல் :

61. மானிட உடல்
62. அணுவின் ஆக்கம்
63. இளைஞர் வானொலி
64. இளைஞர் தொலைக்காட்சி
65. அதிசய மின்னணு
66. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
67. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
68. அம்புலிப் பயணம்
69. தொலை உலகச் செலவு
70. அணுக்கரு பௌதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
71. இல்லற நெறி
72. வாழையடி வாழை
73. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
74. வானமண்டலக் காட்சி

ஆராய்ச்சி :

75. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
76. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
77. Studies in Arts and Sciences (61st Birth Day Commemoration Volume)
78. Collected Papers.

## இந்நூலாசிரியரைப் பற்றி. . .



பிறப்பு : 27 - 8 - 1916

70-அகவையை எட்டும் இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி.ஏ., எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும் (1941-1950), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் (1960-77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்பிரவரி-1979 ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (11), சமயம் (20), திறனாய்வு, (11) அறிவியல் (14), ஆராய்ச்சி (4), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு (13) — என்று 78 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும் அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசும்- ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இனிமை, எளிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.

---

Wrapper Printed at Eskay Art Printers, Madras-5
Phone : 844727